# தொல்காப்பிய ஆராய்ச்சி

ஆக்கியோர் :

பேராசிரியர் **சி. இலக்குவனார்**, M. A., M. O. L.,

தமிழ்த் துறைத் தலைவர்,

தியாகராசர் கல்லூரி,

மதுரை.

வெளியிட்டோர் :

வள்ளுவர் பதிப்பகம்,

புதுக்கோட்டை.

வெளியீடு—5

முதற் பதிப்பு—1961

உரிமை பதிப்பகத்தார்க்கு

விலை ரூபாய் 5

**VALLUVAR PATHIPPAHAM,**
NORTH MAIN STREET, PUDUKKOTTAI.
Tiruchirappalli District,
*MADRAS STATE.*

அச்சிட்டோர்: மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை—1454.

# பொருள் அடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | படையல் | ... | 4 |
| 2. | பதிப்புரை | ... | 5 |
| 3. | முன்னுரை | ... | 9 |
| 4. | எழுத்து | ... | 33 |
| 5. | சொல் | ... | 81 |
| 6. | பொருள் | ... | 121 |
| 7. | குறிப்பு அகராதி | ... | 287 |

# அன்புப் படையல்

கல்விப் பணியே கடவுட் பணியென
அன்புடன் ஆற்றும் அண்ணலார் தம்பி ;
புன்னகை தவழும் இன்முகம் கொண்டே
எவர்க்கும் உதவும் இனிமை நண்பர் ;
செல்வர்க் கழகாம் செழுங்கிளை தாங்கும்
பண்பின் புகலிடம் ; பணிவின் புகழிடம் ;
திருக்குறட் கழகச் சீர்மிகு செவிலி ;
பிறர்க்கென வாழும் பெற்றிமை போற்றி
ஒல்லும் வகையால் உயர்பணி புரியும்
**கோவிந்த சாமியாம்** குணன்உயர் குரிசிற்கு
இன்புறு படையலாய் இந்நூலை
அன்புடன் அளிப்பல் ; அடைகபல் புகழே.

— **ஆசிரியர்.**



## பதிப்புரை

தமிழர்களின் இரு கண்களெனப் போற்றற் குரியன திருக்குறளும் தொல்காப்பியமும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அறம் பொருள் இன்பம் அடைதற்குரிய வழிகளை அழகுற நுவல்வது திருக்குறள். பண்டைத் தமிழர்கள் தூய நல்லறத்தைத் துணையாகப்பெற்று வாழ்ந்த முறையையும், வாழ்வின்பம் துய்த்தற்குச் சிறப்புறு கருவியாய்த் துணைபுரிந்த தமிழ் மொழியின் இயல்பையும் எடுத்துக்காட்டி இசைப்பது தொல்காப்பியம். திருக்குறளை மூல நூலாகவும், எளிய பொழிப்புரையுடன் பொருந்திய நூலாகவும் முதற்கண் வெளியிட்டோம்.

திருக்குறளைப் பலர் பல முறைகளில் வெளியிட்டு வந்திருக்கின்றனர்; இன்று திருக்குறள் மக்களிடையே செல்வாக்குப் பெற்று உலவி வருகின்றது.

ஆனால் திருக்குறளுக்கும் அன்னையாய் விளங்கும் தொல்காப்பியத்தைப் புலவர் அல்லாதார் இன்னும் அறிந்திலர். தொல்காப்பியம் இலக்கணமாக இலங்குவதோடு, மொழி நூலாகவும், இலக்கிய ஆராய்ச்சிக் கருவி நூலாகவும் அமைந்துள்ளது. இது தமிழர்களும், தமிழர்களைப்பற்றி அறிய விரும்புவோரும் தவறாது கற்றறிய வேண்டிய தனிப்பெரும் நூலாகும்.

இந்நூலறிவு தமிழர்கட்கு உண்டாக வேண்டும். இந்நூலைப் போற்றிப் படிக்கும் ஆர்வம் தமிழர் உள்ளத்தில் நிலைபெற்றோங்க வேண்டும். 'தொல்காப்பியத்தைப் பல்காற் பயின்றும் பயனிலவே' என்று எண்ணும் நிலை மாறுபடல் வேண்டும்.

ஆதலின் தொல்காப்பியத்தை மக்களிடையே உலவச் செய்யும் நோக்கத்துடன் "தொல்காப்பிய ஆராய்ச்சி" யெனும் இந்நூலை வெளியிட முற்பட்டுள்ளோம்.

தொல்காப்பியத்தைப் புலவர்கள்தாம் படித்தற்குரியர் எனும் கருத்தை மாற்றிப் பொது மக்களும் படித்தற்குரியது என்று எண்ணுமாறு இவ்வாராய்ச்சி நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலால் தொல்காப்பியத்தின் சிறப்பையும் பயனையும் அறிந்து தொல்காப்பியத்தை விரிவாக ஆழ்ந்து கற்றல் வேண்டும் என்ற ஆர்வம் கற்போர் உள்ளத்தில் உண்டாகும். ஆதலின் தொல்காப்பியத்தைக் கற்பதற்கு வழிகாட்டும் முன்னுரையாக இவ்வாராய்ச்சி நூலைக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாராய்ச்சி நூலை ஆக்கித் தந்துள்ள பேராசிரியர் சி. இலக்குவனர் அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். தொல்காப்பியத்தில் ஆழ்ந்த புலமையும் ஆராய்ச்சித் திறமையும் உடையவர்கள். தொல்காப்பியத்தைப் பொது மக்களிடையே அறிமுகப்படுத்தி அதனைத் தமிழராய்ப் பிறந்தார் யாவரும் தவறாது படிப்பதற்குத் தம்மாலியன்ற வரையில் உழைத்து வருகின்றார்கள். அவர்கள் மிக எளிய நடையில் இனிமை பொருந்த தூய தமிழில் குறைந்த தமிழ்க் கல்வியுடையோரும் விளங்கிக் கொள்ளுமாறு இதனை எழுதியுள்ளமை போற்றற் குரியது.

இந்நூல் நல்ல முறையில் அச்சிடப்படுவதற்குப் பல வகையாலும் துணை புரிந்தோர் பலர். அவருள் புலவர் திரு. நடராசனாரும், தமிழண்ணல் எம். ஏ., அவர்களும், அச்சுப்பிழை முதலியன திருத்தி அழகுற வெளிவர அயராது உதவினர். அவர்கட்கும் ஏனையோருக்கும் நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த ரிப்பன் அச்சுக் கூடத்தாருக்கும் எம் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்துறை எமக்குப் புதிது. தமிழர்க்குப் பயன்படும் தமிழர் சிறப்பினை உலகுக் கறிவிக்கும் உயரிய நூல்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். எம் திட்டம் நிறைவேறுவது தமிழக மக்களின் அன்பைச் சார்ந்துள்ளது. அன்பால் எம் நூல்களைப் பெற்றுக் கற்றுத் தமிழர் தம் பெருமையை அறிய முற்படுவார்களாக.

வணக்கம்.

*வள்ளுவர் பதிப்பகம்,*
*புதுக்கோட்டை,*
*25—6—61*

**பு. அ. சுப்பிரமணியன்,**
*உரிமையாளர்.*

# முன்னுரை

**காலவரையறை :**

தமிழகம் மிகவும் தொன்மை வாய்ந்த வரலாற்றினையுடையது. ஆனால் வரலாற்றாசிரியர்கள் தமிழகத் தொன்மையை நன்கு ஆராய்ந்து வரையறுத்து எழுதுவதில் கருத்துச் செலுத்திலர். இந்திய வரலாற்றாசிரியர்களில் பெரும்பான்மையினர் தமிழகத்தைப் பற்றிய நினைவே கொண்டிலர்.[1] வட இந்தியாவினும் தென்னிந்தியாவே மிகவும் தொன்மை வாய்ந்தது. வரலாறு மிகத் தொன்மையான காலத்திலிருந்தே எழுதப்பெறுவது மரபென்றால் இந்திய வரலாறு குமரி நாட்டிலிருந்தே தொடங்கப்பெறுதல் வேண்டும். குமரி ஆறும் குமரி மலையும், பனி மலையினும் கங்கையாற்றினும் மிக மிகத் தொன்மை வாய்ந்தனவாம். "மன்பதை முதலில் தோன்றிய இடமே குமரி நாடாகும்". என்பது வரலாற்றாசிரியர் சிலரின் உறுதியான கொள்கையாகும்.

1 Hitherto most historians of ancient India have written as if the south did not exist–Vincent A. Smith

--The Oxford History of India-Page-15.

ஒரு நாட்டின் வரலாற்றை அறிவதற்குரிய சான்று கள் எனக் கருதப்படுவன, இலக்கியம், கல்வெட்டு, கட்டிடங்கள், நாணயங்கள், உள் நாட்டாரும் வெளி நாட்டாரும் எழுதி வைத்த குறிப்புகள் முதலியனவாம். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டுள்ள தமிழக நிலையை அறிவதற்குத் துணையாகக் கிடைத் துள்ளது இலக்கியம் ஒன்றேயாகும். ஆகவே தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய வேண்டியது இன்றியமை யாதது ஆகும்.

தமிழ் மொழியில் நமக்குக் கிடைத்துள்ள நூல் களில் மிகப் பழைமையானது தொல்காப்பியம் என்று கூறப்படுகின்றது. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள் நமக்குக் கிடைத்தில. ஆதலின் தொல் காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள் இல்லையென்று கூறிவிட இயலாது. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாகும். எம்மொழியிலும் இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்னரே இலக்கணம் தோன்றும், இதற்குத் தமிழ்மொழியும் புறம்பன்று. தமிழிலும் இலக்கியங் கள் தோன்றிய பின்னரே இலக்கணங்கள் தோன்றி யுள்ளன. தொல்காப்பியமும், இலக்கியங்கள் மட்டு மன்றி இலக்கணங்களும் பல தோன்றிய பின்னரே இயற்றப்பட்டுள்ளது என்பதைத் தொல்காப்பியமே தெற்றெனப் புலப்படுத்துகின்றது. ஆதலின் தொல் காப்பியம் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் முற்பட்டதேயன்றி, அதுதான் தமிழின் முதல் நூல் என்று கருதிவிடுதல் கூடாது.

தமிழிலக்கியக்கடலின் காலம்எனும் கரையை எய்துவதற்குத் தொல்காப்பியரும் திருவள்ளுவருமே கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றனர். இவ்விரு வரின் காலங்களை வரையறை செய்து தெரிதல்

வேண்டும். இவ்விருவருள் எவர் முற்பட்டவர்? தொல்காப்பியரா? திருவள்ளுவரா?

தமிழக ஆராய்ச்சியாளருட் சிலர் திருவள்ளுவரைத் தொல்காப்பியர்க்கு முற்பட்டவர் என்று கூறுகின்றனர். அங்ஙனம் கூறுவது உலகப் பெரும் புலவர் வள்ளுவர்பாற் கொண்டுள்ள பற்றுதலால்தான் என்று கருத வேண்டியுளது. உயர் அறங்களை உலகுக்கு அறிவிப்பதில் முதற் பாவலராய் இருப்பவர் காலத்தானும் முற்பட்டவராகத்தான் இருத்தல் வேண்டும் என்று எண்ணி விட்டனர் போலும். காலத்தால் முற்பட்டவர் என்பதால் பெருமையும் பிற்பட்டவர் என்பதால் சிறுமையும் உண்டு என்று கருதுவது மிக மிகத் தவறேயாகும். இரு பெரும் புலவர்களும் இரு வேறு துறைகளில் இணையற்றவர்கள் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. முற்பட்ட காலத்தின் துணைகொண்டு முற்பட்டவராக விளங்க வேண்டிய நிலையில் இருவரும் இலர். ஆதலின் காய்தல் உவத்தல் இன்றி இருவருள் எவர் காலத்தால் முற்பட்டவர் என்று ஆராய்தல் நமது கடனாகும்.

தொல்காப்பியர், திருவள்ளுவருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பதனை இருவர் நூல்களுமே எடுத்துக் காட்டுகின்றன. தொல்காப்பியர், "வடவேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தின் வழக்கும் செய்யுளும்" ஆராய்ந்து இலக்கணம் கூறப் புகுந்தார். இலக்கண ஆசிரியர் இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் இயம்புவார். இலக்கண ஆசிரியர் கூறியுள்ள இலக்கண வரம்பைக் கடந்து செல்லும் உரிமையும் இயல்பும் உடையவர் இலக்கிய ஆசிரியர். இலக்கிய ஆசிரியரால் வளம்பெறும் மொழி என்றும் ஒரே நிலையானதாக இராது. காலந்தோறும் மாறுதலடையும். இலக்கண வரம்புக்குட்பட்டு மாறுத

லடைதல் மொழி வளர்ச்சியின் இன்றியமையாத நெறியாகும். இலக்கண ஆசிரியராம் தொல்காப்பியர் இம் மொழியியல்பை நன்கு அறிந்த மொழி நூற் புலவராவார். அதனால் தாம் கூறும் இலக்கண வரம்புகட்கு விதிவிலக்களிக்கும் புறனடை நூற்பாக்களை ஆங்காங்கே புகன்றுள்ளார்.

திருவள்ளுவர், சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற மெய்ந்நெறியாளர் மட்டுமல்லர்; நவில்தொறும் நவில்தொறும் இன்பம் பயக்கும் இலக்கியப் புலவருமாவார். தமிழ்மரபைத் தழுவி, இலக்கண வரம்புக்குள் நின்று தமது இறவாப் புகழ் நூலாம் தமிழ்மறையை இயற்றியுள்ளார். ஆயினும் தம்காலத்து வழங்கும் மொழிமரபைப் புறத் தொதுக்கிச் செல்லும் ஆற்றல் பெற்றாரிலர். மக்கட்குப் பயன்பட விரும்பும் மக்கட் புலவர் என்றும் அவ்வாறு செல்ல விரும்பார். ஆதலின் மக்கட்புலவராம் வள்ளுவர் பெருமான் சிற்சில இடங்களில் பழைய இலக்கண வரம்பைக் கடந்து புதிய இலக்கண நெறிக்குக் கால் கோள் செய்துள்ளார். தொல்காப்பியர்க்கும் இஃது உடன்பாடே என்பது அவர் கூறியுள்ள 'கடிசொல் லில்லைக் காலத்துப் படினே' என்ற நூற்பாவால் அறியலாம். ஆகவே திருவள்ளுவர் தொல்காப்பிய நெறியைப் புறக்கணித்துச் சென்றாரிலர் என்று அறியலாம்.

தொல்காப்பியர் "கள்" என்னும் ஈறு பலவின் பாலை உணர்த்தவரும் என்று கூறியுள்ளார். ஆனால் திருவள்ளுவர் 'கள்' ஈற்றை உயர்திணைப் பன்மையை உணர்த்தவும் பயன்படுத்தியுள்ளார்.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்."

என்னும் குறட்பாவில் மற்றையவர் என்பதே பன்மைச் சொல்லாக நிற்கஅமையும். ஆயினும் 'மற்றையவர்கள்' எனக் 'கள்' ஈறும் சேர்க்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் திருவள்ளுவர் காலத்துக்குப் பிற்பட்டவரா யிருப்பின் 'கள்' ஈறு,

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே" என்று

அஃறிணைப் பன்மையை மட்டும் உணர்த்தும் என்று கூறி இரார் அன்றோ? இலக்கியப் புலவர் இலக்கணக் கூற்றைக் கடந்து மொழி வழக்கைத் தழுவும் உரிமை யுடையார். ஆனால் இலக்கணப் புலவர் இலக்கிய உண்மையை விடுத்து இலக்கணம் கூறும் இயல்பினர் அல்லர். ஆதலின் தொல்காப்பியர் திருவள்ளுவர்க்கு முற்பட்டவர் என்று தெள்ளிதில் அறியலாம்

தொல்காப்பியர் உவமஉருபுகளைத் தொகுத்துக் கூறியுள்ள பட்டியலில் 'அற்று.' அனைய' என்பவைகளும் அவற்றின் அடியாகப் பிறந்தவைகளும் சேர்க்கப்பட்டில. திருவள்ளுவர் 'அற்று' என்பதைப் பதினேழு இடங்களி லும், அனைய என்பதைப் பதினாறு இடங்களிலும் பயன் படுத்தியுள்ளார். தொல்காப்பியர், திருவள்ளுவருக்குப் பின் வாழ்ந்தவராயிருப்பின் திருக்குறளில் பயின்றுள்ள உவம உருபுகளைக் கூறாது விட்டுவிடுவரா? ஆகவே தொல்காப்பியர், திருவள்ளுவர்க்குக் காலத்தால் முற்பட்டவர் என்பது உறுதியான உண்மையென்று உணரலாகும்.]

திருவள்ளுவர் தமது நூலில் 'ஆல்' என்பதனை மூன்றும் வேற்றுமை உருபாக ஐம்பத்தேழு இடங்களில் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியர், மூன்றும் வேற்றுமை யுருபாக 'ஆன்' என்பதனைக் கூறினரே

யன்றி 'ஆல்' என்பதனைக் கூறினாரிலர். தொல்காப்பியர் திருவள்ளுவர்க்குப் பிற்பட்டவராயிருப்பின் 'ஆல், என் பதனை மூன்றும் வேற்றுமை உருபாகக் கூறியிருப்பர். அன்றியும் சொல்லாராய்ச்சி முறைப்படி நோக்கு மிடத்தும் 'ஆன்' அடியாகவே 'ஆல்' தோன்றியுள்ளது என்று அறியலாகும், ஆதலின் தொல்காப்பியர் திருவள்ளுவர்க்குக் காலத்தால் முற்பட்டவர் என்று கூறுவது மறுக்க முடியாத உண்மையாகும்.

இனி இப்பெரும் புலவர் வாழ்ந்த காலத்தை ஆராய்வோம்.

## தொல்காப்பியர் காலம்:

தமிழகப் புலவர்கள் தமிழை நினைந்து தமிழுக்காக வாழ்ந்தனர்; தம்மை மறந்தனர். தம்மைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை எழுதி வைப்பதும் தம் ஆன்றவிந்து அடங்கிய வாழ்வுக்குப் பேரிழுக்காகும் எனக் கருதினர்போலும். பெரியோர் வாழ்க்கைக் குறிப்புகளையும் மறத்தற்கரிய நிகழ்ச்சிகளையும் குறித்து வைப்போரும் நம் நாட்டில் சிலராயினர். நாடாண்ட அரசர்களைப்பற்றிய நல் வரலாறுகளையே நாம் அறியக் கூடிய நிலையில் இல்லாத போது புலவர்களைப்பற்றிய வரலாறுகளை எப்படிப் பெறமுடியும்?

தம்மைப் புகழ்ந்துகொள்ளக் கூசுதலும், பிறரைப் புகழ உளங்கொள்ளாமையும், இன்றைய தமிழர் களிடையே காணக்கூடிய இயல்புகளாகும். பண்டைய புலவர்கள் தன்மைப் புகழ்ந்து கொள்ளாது போயினும், பிறரை உளமாரப் புகழ்வதில் அளவுகடந்து சென் றுள்ளனர். ஆகவே அப்புகழுரைகள் அனைத்தும் வரலாற்றுக்குப் பயன்படுவனவாக அமைந்தில.

பிற்காலப் புலவர்கள் தம் முன்னோரின் வரலாறுகள் கிடைக்கப்பெறாத குறையைத் தம் கற்பனைத் திறனால் நிறைவு செய்யத் தொடங்கினர். இல்லாத வரலாற்றினைப் பொல்லாத முறையில் புனைந்து கூறி மகிழ்ந்தனர். ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியரும் உலகம் புகழும் பொருளுரை புகன்ற பொய்யில் புலவரும், பிற்காலப் புலவர்களின் நாவில், குயவனார் கைப்பட்ட குழைமண் ஆகிவிட்டனர். கற்பனை சென்ற வாறு கதைகளைக் கற்பித்தனர். காலப்போக்கில் கற்பனைக் கதைகளே உண்மை வரலாறுகளாக உருக் கொண்டன. காலவரையறை எனும் கரை காண முயல்வோரைக் கலங்க வைக்கின்றன; கண்ணிழக்கச் செய்கின்றன.

தமிழ்த் தொல்காப்பியரை ஆரியச் சமதக்கினியின் புதல்வராக்கினர். அகத்தியரின் மாணவர் எனக் கூறி அகம் மகிழ்ந்தனர். இக்கூற்றுகளால் தொல்காப்பியர் இராமன் காலத்தவர் என்று கூறுவதற்கு இடமேற்பட்டு விட்டது.

"சமதக்கினி, பரசுராமர் தந்தை, பரசுராமர் இராமர் காலத்தவர்; ஆகவே தொல்காப்பியரும் இராமர் காலத்தவர். தொல்காப்பியர், அகத்தியர் மாணவர்; அகத்தியர் இராமர் காலத்தவர்; ஆகவே தொல்காப்பியரும் இராமர் காலத்தவர். இராமர் காலம் கி. மு. 2000க்கு முற்பட்டது. தொல்காப்பியர் காலமும் கி. மு. இரண்டாயிரத்துக்கு முற்பட்டதாகும்." இவ்வாறெல்லாம் கூறுவதற்குக் காரணம் தொல் காப்பியரைப்பற்றி வழங்கும் கதைகளே. தொல் காப்பியர், சமதக்கினி முனிவரின் புதல்வர் என்பதும், அகத்திய முனிவரின் மாணவர் என்பதும் சான்று களுடன் நிறுவமுடியாத கற்பனையாம். "அகத்தியர்

என்பவர் கற்பனையால் தோற்றுவிக்கப்பட்டவர்'' என்று ஆராய்ச்சியாளரில் சிலர் கூறுகின்றனர். அவருடைய வாழ்க்கைச் செய்திகள் அவ்வாறு கூறச்செய்கின்றன. இல்லாத அகத்தியருக்குத் தொல் காப்பியரைப் பொல்லாத மாணவராக்கிவிட்டனர். தொல்காப்பியரோ தமது நூலில் தம் ஆசிரியராம் அகத்தியரைப்பற்றியோ தந்தையாம் சமதக்கினி பற்றியோ ஒன்றுமே கூறினரிலர். ஆகவே அகத்தியர், சமதக்கினி முதலியோரின் தொடர்புகொண்டு தொல் காப்பியரின் காலத்தை நிறுவுதல் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பொருந்துவதின்று.

இனித் தொல்காப்பியர் நூலுக்குப் பனம்பாரனர் கூறியுள்ள சிறப்புப்பாயிரம் கொண்டு தொல்காப்பியர் காலத்தை அறுதியிட்டுரைத்துள்ளதை ஆராய்வோம்.

பனம்பாரனர் கூறியுள்ள பாயிரமாவது :—

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
அறம்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசாற்கு அரில்தவத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

பாயிரம் செய்வார் யாவர்? நச்சினார்க்கினியர் கூறுகின்றார்:—"பாயிரம் செய்வார் தம் ஆசிரியரும் தம்மொடு ஒருங்கு கற்ற ஒரு சாலை மாணாக்கரும் தம் மாணாக்கரும் என இவர். அவருள் இந் நூற்குப் பாயிரம் செய்தார் தமக்கு ஒரு சாலை மாணாக்கராகிய பனம்பாரனார்".

ஆதலின் பனம்பாரனார் தொல்காப்பியருடன் பயின்ற ஒரு சாலை (கல்விக்கூட) மாணாக்கர் ஆவார். உடன் காலத்தவரான பனம்பாரனார் கூறியுள்ள செய்திகள் வரலாற்றுண்மைக்குப் பொருந்துவனவாய் இருத்தல் வேண்டும். இப்பாயிரத்துள் கூறப்பட்டுள்ள முந்துநூல், நிலந்தருதிருவின் பாண்டியன், நான்மறை முற்றிய அதங்கோட்டாசான், ஐந்திரம் என்பவற்றின் உண்மை வரலாறு அறியப்படின், தொல்காப்பியர் காலத்தை எளிதில் வரையறுத்துக் கூறிவிட இயலும். எனவே இவை பற்றி உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் கூறியுள்ளனவற்றை நோக்குவோம்.

**முந்து நூல் :**

"அகத்தியமும், மாபுராணமும், பூத புராணமும் இசை நுணுக்கமும்". இவை பற்றிய பிற செய்திகள் விளக்கமாகக் கிடைத்தில. ஆதலின் இங்குப் பயன் படா.

**நிலந்தருதிருவின் பாண்டியன் :**

"மாற்றாரது நிலத்தைக் கொள்ளும் போர்த் திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி அவையின் கண்ணே" என்று பொருள் கூறி, "பாண்டியன்

மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தா னுதலின் அவனும் அவன் அவையில் உள்ளோரும் அறிவு மிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப'' என்று விரிவுரையும் கூறுகின்றார். ஓர் அரசன் இருபத்து நாலாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் என்று கூறுவது உண்மைக்கு மாறுபட்ட செய்தியாகும்; கற்பனை அதன் வரம்பைக் கடந்துவிட்டது என்று கருத வேண்டியுளது. ஆகவே இங்கும் நச்சினார்க்கினியர் உரை நமக்குப் பயன்படாது கழிகின்றது. **நான்மறை முற்றிய** அதங்கோட்டாசான்: ''நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் நான்மறை என்றார். அவை தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாம வேதமும் ஆம். இனி இருக்கும், யசுவும், சாமமும், அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாட் பல்பிணிச்சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராகலின்'' எனும் உரை உண்மை யாயின் தொல்காப்பியர் வேதவியாசர்க்கு முற்பட்டவர் என்று கருதலாம்.

ஆனால் (Dr. P. S.) சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் இக்கூற்றை மறுக்கின்றார். ''தைத்திரியம் பௌடிகம், தலவகாரம், சாம வேதம் என்ற பிரிவு கி. பி. ஆறு, ஏழு நூற்றாண்டுகட்குப் பிற்பட்ட சாசனங் களிலும் காணப்படுதலானும், பௌடிகம் என்பது ரிக் வேதத்தைக் குறிக்கும் பஹ்வ்ருச்சியம் என்ற வட மொழியின் தற்பவமாகலானும் அச்சொல் நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களில் வழங்கப்படுகின்ற தானும், தலவகாரம் என்பது ஸாம வேதத்தின் ஒரு சாகையாதலானும், பாயிரத்துள் உள்ள நான்மறை என்பது அவற்றைக் குறிக்கும் என்றும், அக் காரணம்

பற்றி வேதவியாசர் காலத்துக்கு முற்பட்டவர் தொல்காப்பியனார் என்றும் கூறுதல் பொருத்தமின்று". [1] ஆகவே நச்சினார்க்கினியர் கூற்று இங்கும் பயன்படாது.

'அதர்வண வேதம்' ஒரு வேதமாக ஒப்புக்கொள்ளப்பட்டு, நான்கு வேதங்கள் என்ற எண்ணிக்கை கொண்டது மிக மிகப் பிற்பட்ட காலத்தில்தான் என்று வரலாற்றாசிரியர் தத்தர் கூறுகின்றார் [2] ஆதலின் மிக முற்பட்ட நூலான தொல்காப்பியப் பாயிரத்தில் நான் மறை என்று சுட்டப்பட்டது ஆரிய நான்கு வேதங்களாக இருத்தல் இயலாது. அன்றியும் தென்னாட்டுத் தமிழர் ஒருவர் வடநாட்டு ஆரிய மொழியில் உள்ள நான்கு வேதங்களையும் முற்றக் கற்றல் அவ்வளவு எளிதன்று. ஆரிய மொழியில் நல்ல பயிற்சியும் புலமையும் உடைய ஆரியரே, வேதம் ஒன்றினை முழுவதும் கற்று முற்றுப்பெற்ற புலமையுடையராதல் எளிதன்று, அங்ஙனமாகவும், ஆரிய மறைகளைக் கற்பதற்கு உரிமையற்றிருந்த தமிழர் கூட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் ஆரிய நான் மறைகளை முற்றக் கற்றார் என்று கூறுதல் முற்றும் பொருந்தாது. ஆதலின் நான் மறை என்பது தமிழ் நான்மறையாகத்தான் இருத்தல் கூடும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. ஆதலின் ஆரிய மறைகள் நான்காக வகுக்கப்பட்ட பின்னரே தொல்காப்பியர் வாழ்ந்திருத்தல் வேண்டும் எனக் கருதி அவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்று முடிவு கட்டுதல் தவறுடைத்தாகும்.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்: "ஐந்திர வியாகரணத்தை நிறைய அறிந்த பழைய காப்பியக் குடியினுள்ளோன்" என இத் தொடர்க்குப் பொருள்

---

[1] Dr. P. S. S. சாஸ்திரியார் தொல்-எழுத்ததிகாரம் முகவுரை பக்கம்-1.
[2] R. C. Dutt. Early Hindu Civilization. Page 116.

கூறப்பட்டுள்ளது. ஐந்திர வியாகரணமென்பது வடமொழியில் முதன் முதற்றோன்றிய இலக்கண நூல் என்பர். அது இந்திரனால் செய்யப்பட்டதால் ஐந்திரம் எனப் பெயர் பெற்றது என்பர்.

"ஆசிரியர் (தொல்காப்பியர்) நூல் செய்கின்ற காலத்து வழங்கிய வடமொழி இலக்கணம் ஐந்திரம் எனப்படுதலாலும், பாணினீயம் கேட்கப்படாமையாலும், வடமொழிக்கு முதலிலக்கணம் ஐந்திரமெனவும் அதற்குப் பின்னேயே பாணினீயம் தோன்றியதெனவும் வடமொழியாளர் கொள்ளுதலாலும் தொல்காப்பிய நூலானது வடமொழிப் பாணினீயத்திற்கு முற்பட்டதென்பது தானே போதரும்" இவ்வாறு பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை, M. A., M. L. கூறுகின்றார். [1] இக் கருத்துடையோர் பலராவார்.

மகா வித்துவான் பாஷா கவி சேகரர் இரா. இராகவையங்கார் தமது தமிழ் வரலாற்றில் (பக்கம் 351) கூறுகின்றார்: "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனப் பாயிரத்துக் கூறலான் இத் தொல்காப்பியனார் காலத்தே ஐந்திர வியாகரண வுணர்ச்சி சிறந்ததாக மதிக்கப்பட்டதென நினைதல் தகும். பரணர் பாடிய ஐந்தாம் பத்துக்கொண்ட செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகள் காலத்தே இவ் வைந்திர வியாகரணம் வழக்கற்று அருகியதென்பதும், அவர் காடுகாண்காதைக்கண்,

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்"

எனவும்

---

1 தொல் - எழுத்து - நச்சினார்க்கினியர் உரை - முகவுரை பக்கம் - 3. இலக்கிய வரலாறு - பக்கம் - 59.

"கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணுய்"

எனவும்

கூறுதலான் அறியப்படும். இதனுல் ஐந்திரம் வழங்கிய காலத்திற்கும், ஐந்திரம் அருகிய காலத்திற்கும் இடையிட்ட காலம் பேரளவினதேயாக வேண்டப்படும். ஆதலானும் தொல்காப்பியர் காலம் பிந்தியது ஆகாது என்று ஒரு தலையாகக் கொள்க".

பாணினீயின் காலம் கி. மு. 350. அதற்கு முன்னரே தொல்காப்பியர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பர் சிலர். [1] பாணினீய ஆராய்ச்சியாளராம் காத்தியாயனர் மார்க்ச்முல்லர் கருத்திற்கேற்ப கி. மு. நான்காம் நூற்றுண்டில் வாழ்ந்திருக்க வேண்டுமென்றும், பாணினி அவர்க்குச் சில நூற்றுண்டுகட்கு முன்னராவது வாழ்ந்திருக்க வேண்டுமென்றும் கூறுவர். [2] ஆகவே பாணினியின் காலம் கி. மு. எட்டாம் நூற்றுண்டு என்போரும் உளர். இவ்வாறு தொல்காப்பியரின் காலத்தைப் பாணினியின் காலத்துக்கு முற்பட்டதென்று ஆராய்ச்சியாளர் பலரும் கூறியுள்ளனர்.

ஆனுல் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இக் கருத்துக்கு மாறுபடுகின்றனர். [3]

"தொல்காப்பியத்தின் பாயிரத்தில் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என வருகின்றது. பாணினீயத்தைக் கூருது ஐந்திரத்தைக் கூறினமையாலும், இரண்டனுள் ஐந்திர வியாகரணம் முந்தியது

1 Tholkappiyar must have lived antenior to B. C. 350 which is the date assigned to Panini by the best authorities Tamil Studies-Page 17.

2 R. C. Dutt-Early Hindu Civilization-Page-203.

3 இலக்கியச் சிந்தனைகள்-பக்கம்-56-57.

ஆதலானும், தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முன் தோன்றியது; எனவே பாணினீயத்தின் காலமாகிய கி. மு. 450க்கு முற்பட்டது .... .... .... பாணினீயத்தைத் கூறுதது தொல்காப்பியம் அதற்கு முற்பட்டது எனத் துணிதற்கு ஒரு காரணமாகமாட்டாது என்பதனை மட்டும் இங்கே தெளிவுறுத்த விரும்புகின்றேன். முதலில் இவ்வாறு கூறுதல் தருக்க நெறியோடு பொருந்துவதன்று. தற்காலத்து ஓர் ஆசிரியன் நன்னூலைப் பின்பற்றி ஓர் இலக்கண நூல் இயற்றுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு அளித்த சிறப்புப் பாயிரத்தில்,

"நன்னூல் உணர்ந்த மன் பேராசான்" என வருகின்றதென்றும் கருதிக்கொள்வோம். இப் பாயிரம் தொல்காப்பியத்தை உணர்ந்தானுகக் கூறுமையினலே இவ்வாசிரியன் தொல்காப்பியருக்கு முற்பட்டவன் என்று துணிதல் சரியாகுமா? இது போன்றதேயாகும் மேலே குறித்த ஆராய்ச்சியாளர் கூற்று". வையாபுரியின் இக் கூற்றின் மெய்யாம் தன்மையை ஆராய்வோம். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் எஞ்ஞான்றும் தமிழ் நூல்களின் காலத்தைப் பின் நூற்றுண்டுகட்குக் கொண்டுவருவதில் தனி முயற்சியும் உழைப்பும் உடையவர்கள் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். ஆராய்ச்சியாளர் பலரும் உண்மை நெறியில் ஒரு வழியிற் சென்றால், வையாபுரியார் அதற்கு எதிர் வழியில் சென்று நடுநிலையாளர் என்று தம்மை நாட்டிக்கொள்ள முயலும் இயல்பினர். அவ்வியல்பிற்கு ஏற்பவே தொல்காப்பியர் காலத்தையும் மாற்றிக் கூற முற்பட்டுள்ளனர் போல் தோன்றுகின்றது. ஆனல் உண்மைச் சான்றுகள் அவர்க்குத் துணை செய்யவில்லை. அவர் கூறியுள்ள எடுத்துக்

காட்டே அவர் கருத்துக்கு அரண் செய்யவில்லை என்பதை அவர் அறிந்திலர் போலும்.

ஐந்திரம் முற்பட்ட நூல், பாணினி [1] அதற்குப் பிற்பட்ட நூல். பாணினி தோன்றிய பின்னர் ஐந்திரம் வழக்கு இழந்துவிட்டது. பாணினிக்குப் பின்னர் தொல்காப்பியர் தோன்றியிருப்பின் செல்வாக்கில் உள்ள பாணினியையே கற்றிருப்பர். பாணினி நிறைந்த தொல்காப்பியன் என அழைக்கப்பட்டிருப்பர். பாணினி தோன்றப் பெருததனல் அப்பொழுது வழக்கிலிருந்த எல்லோராலும் பயிலப்பட்ட ஐந்திரத்தைக் கற்றுப் புகழ் அடைந்தார் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இங்ஙனம் கூறுவதின் தருக்க நெறிப் பொருத்தத்தை வையாபுரியார் அறியத் தவறி விட்டார்'' அங்ஙனம் அவர் தவறியுள்ளமையை அவர் காட்டும் சான்றே அவர்க்கு அறிவுறுத்தி நிற்கின்றது.

தொல்காப்பியம் முற்பட்ட நூல். நன்னூல் அதற்குப் பிற்பட்ட நூல். ''நன்னூல் உணர்ந்த மன் பேராசான்'' என்ருல், அவன் தொல்காப்பியர் நூலைக் கற்றிலன் என்று எங்ஙனம் கூற முடியும். ஆனுல் நன்னூலுக்குப் பின் தோன்றிய தொன்னூலைப் பயின்றிலன் என்பது தானே போதரும் அன்ருே? ''தொல்காப்பியன் உணர்ந்த தொல் பேராசான்'' என்ருல் தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய நன்னூலைக் கற்றிருக்க முடியாது என்ற கருத்து புலப்படுமன்ருே?

அன்றியும் எடுத்துக்காட்டே பொருத்தமற்றது. தொல்காப்பியம் நன்னூலைக் காட்டிலும் பல வகையானும் சிறப்புடையது. ஆதலின் நன்னூல் தோன்றிய

1 பாணினி இயற்றிய நூலைப் பாணினி யென்றே அழைப்பது ஆகு பெயர்.

தால் தொல்காப்பியம் வழக்கற்றுப் போகவில்லை. ஆரிய மொழி நூல்களின் இயல்பு அங்ஙனமன்று. பாணினீயம் தோன்றியதும் ஐந்திரம் வழக்கற்றுவிட்டது. ஐந்திரத் தினும் பாணினீயம் சிறப்புடைத்தாகக் கருதப்பட்டது. ஆதலின் ஐந்திரத்தைக் கற்றுள்ளமையால் சிறப்புப் பெறுதல் பாணினீய காலத்திற்கு முன்னர்தான் இயலும். இங்ஙனம் கூறுவது தான் தருக்க நெறிக்கு ஒத்ததாகும்.

பேராசிரியர் வையாபுரியார் படைத்து மொழிந் துள்ள "நன்னூல் உணர்ந்த மன் பேராசான்" என்னும் தொடர் தொல்காப்பியமும் நன்னூலும் தோன்றிய காலங்கள் வரையறுக்கப்படாமல் இருந்தால், ஒருகால் கற்போர் உள்ளத்தைத் தடுமாறச் செய்யலாம். நன் னூலுக்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பது யாவரும் அறிந்துள்ள நிலையில் இங்ஙனம் கூறினல், 'தொல்காப்பியத்தைத் தொட்டும் பாராதவன்' என்று இகழப்படுவானேயன்றித் தொல்காப்பியத்திற்கு முற் பட்டவன் என்று கூறப்படான்.

அன்றியும், ஐந்திரம் பாணினீயம் என்ற நூல் களின் கால வரையறை நன்கு அறியப்பட்டு பாணினியத்திற்கு ஐந்திரம் முற்பட்டது என்று நிலை நாட்டப்பட்ட பின்னர்தான், 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' என்பதனுல் பாணினீயம் அறியாதவர் என்று கூற முடிகின்றது என்பதையும் ஊன்றி நோக்கல் வேண்டும்.

ஆதலின் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்ற தொடர், தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட் டவர் என்பதனை ஐயம் திரிபற நிலை நாட்டுகின்றது

என்னும் கூற்று தருக்க நெறிக்கு ஒத்த உண்மை யாகும்.

சிலர் 'ஐந்திரம்' என்பதனை 'ஐந்திறம்' என்று கொண்டு 'எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்தின் தன்மைகளையும் கற்றுத்துறைபோகிய தொல்காப்பியர் என்று கூறுவர். தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் முப் பிரிவுகளே கொண்டனர் என்பது, "எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" என்ற சிறப்புப் பாயிரத் தொடராலும், எழுத்து, சொல், பொருள் என்ற முப்பிரிவு கொண்டே தொல்காப்பியர் தம் இலக்கணத்தை யாத்துள்ளமை யாலும் நன்கு உணரலாகும். யாப்பும் அணியும் பொருளின் உட்பிரிவுகளாகக் கொள்ளப்பட்டன. ஆதலின் பனம்பாரனார் கூறும் 'ஐந்திரம்', ஐந்திறம் என மாற் றப்படுதல் பொருத்தமுடைத்தன்று; அம் மாற்றம் உண்மைச்சான்றுக்கு மாறுபட்டதாகிவிடும் என்ப தனைத் தேர்ந்து அறிவார்களாக.

"தமிழ் மொழி வல்லார் வடநூற் புலமை பெறுவது எற்றுக்கு? தமிழ் இலக்கண நூல் யாக்கப் புகுந்த தமிழ்ப் புலவர் ஆரிய மொழி இலக்கணத்தைக் கற்க வேண்டிய இன்றியமையாமை யாது? அங்ஙனம் கற் றாலும் அதனைப் பெரும் சிறப்பாகக் கொள்ளல் வேண்டுமோ?" என்றெல்லாம் வினவுவோரும் உளர். ஒரு மொழியில் வல்லார் பிற மொழிகளிலும் வல்லு நராயிருத்தலால் ஒப்புமைப் படிப்பின் பயன்பெற்று அறிவிற் பரந்து சிறந்து விளங்குவர் என்பது பொது விதியாகும். பிற மொழிகளில் மிளிரும் பொதுவியல்பு

களைத் தம் மொழிக்கு ஊறு பயவாது நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்துதல் கூடும். பிற மொழிகளைக் கற்றல் தொல்காப்பியர்க்கும் உடன்பாடே என்பது வழி நூல் வகைகளுள் மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தலையும் சேர்த்திருப்பதனால் அறியலாகும். பிற மொழிப் புலமை என்றும் பெருமைப்படுத்தப்பட்டு வருகின்றது யாவரும் அறிந்ததே. தம் மொழியில் புலமை கொள்ளாமல் பிற மொழிப் புலமையை விரும்புதலும், தம் மொழி மறந்து பிற மொழி போற்றிக் கற்றலும் வெறுக்கத்தக்கன. பிறர் கட்டாயமின்றி தம்மியல்பால் வேட்கை மிகுந்து பிற மொழிகளைக் கற்றலும் அவற்றுள் புலமை பெறுதலும் வரவேற்கத்தக்கனவே. ஆகவே தொல்காப்பியரின் ஆரிய மொழிப் புலமை வரவேற்கப்பட்டுப் பாராட்டப்பெற்றுள்ளது என்று அறிதல் நன்று.

தொல்காப்பியர் காலத்தில்தான் ஆரியம் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கி இருக்க வேண்டும். தமிழகத்தில் முதன் முதலாகக் குடியேறிய வேற்று நாட்டார் வட ஆரியரே. அவருள்ளும் மொழிநூற் புலமையும் ஒழுக்க மேம்பாடும் பிறர்க்கென வாழும் பெற்றிமையும் கொண்ட ஆரியரே தமிழகச் சான்றோருடனும் அரசர்களுடனும் தொடர்பு கொண்டனர். ஆரிய மொழிப் புலவரும் தமிழ்மொழிப் புலவரும் நட்புடன் அளவளாவி உறவாடினர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" அன்றோ? எவரையும் வரவேற்று இன்ப வாழ்வு நல்கும் பண்டைத் தமிழர் வட ஆரியப் புலவரை வரவேற்று வாழ்வளித்ததில் வியப்பின்று. தமிழரையடிமை யாக்கித் தமிழ் மொழியை ஒழிக்கும் உள்ளத்துடன்

அன்று வடவாரியர் இங்கு வந்திலர். ஆதலின் புகலிடம் தேடி வந்த ஆரிய மொழிச் சான்றோரிடம் பொல்லாங்கு காட்டாது முகமன் கூறி வரவேற்று அகமகிழ ஆகும் உதவிகளைச் செய்தனர். அதனால் இருசாராரும் நெருங்கிப் பழகி ஒருவர் மொழியை ஒருவர் பயின்றனர். ஓரினத்தார் மற்றோரினத்தாருடன் கலந்து உறவாடுங்கால் இரு சாராரின் மொழிகளும் பண்பாடுகளும் கலைகளும் ஒன்றினுள் ஒன்று கலப்புறுவது இயற்கையே; தடுக்க முடியாததும் ஆகும். ஆதலின் ஆரியர்கள் தமிழர்களின் மொழி பண்பாடு கலை முதலியவற்றைத் தமதாக்கிக் கொண்டது போலவே, தமிழர்களும் ஆரியர்களின் மொழி பண்பாடு கலை முதலியவற்றைத் தமதாக்கிக் கொண்டனர். ஒருவரை ஒருவர் அடிமை கொள்ளல் வேண்டும் என்ற எண்ணம் இல்லாததால் பிற மொழி வெறுப்பும், பகைமையுணர்ச்சியும் தோன்றவில்லை. ஆரியர்கள் தமிழகத்தில் செல்வாக்குத் தேட வேண்டிய நிலையில் இருந்ததால், தம் ஆரிய நூல்களைத் தமிழர்கள் கற்கலாகாது என்று தடுக்கும் கொள்கையை அஞ்ஞான்று மேற்கொண்டிலர். தமது மொழியில் புலமை பெற்ற தமிழர்களும் வேற்றுப் புதுமொழியாம், ஆரியத்தை விரைந்து கற்றனர். புதிய மொழியில் புலமை பெறுதலைப் பெருமையாகக் கருதுதல் என்றும் உள்ள இயல்பு. ஆதலின் தொல்காப்பியரைச் சிறப்பித்துக் கூறப் புகுந்த பனம்பாரனர் தொல்காப்பியரின் வடமொழிப் புலமையை எடுத்துக்காட்டிச் சிறப்பித்துள்ளார். தொல்காப்பியரின் நூல் இலக்கணமாதலால் தொல்காப்பியரின் வடமொழி இலக்கணப் புலமையைச் சுட்டிக்காட்டுவான் வேண்டி ''ஐந்திரம்'' நிறைந்த 'தொல்காப்பியன்' எனக் கூறியுள்ளார் என்று கருதுதல் வேண்டும்.

ஆதலின் தொல்காப்பியர் காலம் வடமொழி ஐந்திரத்திற்குப் பிற்பட்டதே என்று கொள்ளுதல் மிகவும் ஏற்புடைத்தே. [1]

அன்றியும் வடமொழியாளர் தென்னாட்டில் குடிபுகத் தொடங்கிய காலமே தொல்காப்பியர் காலமென்றும் கொள்ளலாம்.

தொல்காப்பியர் நூலுள் அவரே கூறுவனவும் பிறர் கூற்றை எடுத்துக் கூறுவனவும் ஆய இருவகை நூற்பாக்களைக் காணலாம். தம் காலத்திற்கு முன்பேயுள்ள பிறர் நூல்களிலிருந்து வரும் விதி முறைகளைக் கூறுங்கால், 'எனப்படுப,' 'என்ப' 'என்மனார்' என்று கூறியுள்ளார். தாமே வகுக்கும் விதி முறைகளை அங்ஙனமின்றித் தாமே கூறுவதுபோல் கூறியுள்ளார். எடுத்துக் காட்டாக முதல் இரண்டு நூற்பாக்களை நோக்குவோம்.

முதல் நூற்பா :—

"எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப ;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே."

இந் நூற்பாவால், தமிழ் எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே படைக்கப்பட்டு, முப்பதாக எண்ணப்பட்டன என்றும், அவ்வ 'அ'வை முதலாகவும் 'ன'வை இறுதியாகவும் கொண்டிருந்தனவென்றும்

---

1 பாணினிக்கு முன் 64 வடமொழி இலக்கண நூல்கள் இருந்தன வென்றும் அவற்றுள் ஐந்திரம் முதலாவது என்றும் கூறுப. அங்ஙனமாயின் ஐந்திரம் பாணினிக்கு நெடுநாள் முன்னரே வழக்கிலிருந்திருக்க வேண்டும். பாணினீயம் தோன்றியது கி. மு. ஏழாம் நூற்றாண்டில் என்றால் அதற்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்னேயே, ஐந்திரத்தின் காலத்தில் தொல்காப்பியம் தோன்றியிருத்தல் வேண்டும். இலக்கிய வரலாறு பக்கம்-66.

அங்ஙனம் வழக்கில் உள்ளதைத் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார் என்றும் அறிகின்றோம்.

இரண்டாம் நூற்பா :—

"அவைதாம்,
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன."

இந் நூற்பாவால், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பெழுத்துக்களையும் தொல் காப்பியரே மொழி வழக்கில் காணப்படும் எழுத்தொலி நுட்பத்தை அறிந்து கூறியுள்ளார் என்றும் அறி கின்றோம்.

இனி வடமொழிச் சொற்களை (பெயர்களை)த் தமிழில் எடுத்தாளுங்கால் எவ்வாறு கூற வேண்டு மென்று ஆணையிடுகின்ற நூற்பாவை நோக்குவோம்.

"வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே".

வடமொழிப் பெயர்களைத் தமிழில் எடுத்தாளும் இன்றியமையாத நிலை ஏற்பட்டால், அப் பெயரின் வட மொழி எழுத்துக்களை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்து ஒலி யால் சொல்லுதலும், தமிழ் எழுத்தால் எழுதுதலும் செய்தல் வேண்டுமென்று இந் நூற்பாவால் தொல்காப்பியர் விதி செய்துள்ளார்.

'லக்ஷ்மண' என்பதனை 'இலக்குவன்' என்றே எழுதுதலும் சொல்லுதலும் வேண்டும் என்பதாம். தொல்காப்பியர்க்கு முற்பட்டகாலத்தில், வடசொற்கள் தமிழில் எடுத்தாளப்படுவதற்கு எவரேனும் விதி கூறி யிருப்பரேல் அவ் விதியைச் சுட்டி 'என்ப' என்றோ,

'என்மனோர்' என்றே கூறியிருப்பர். அங்ஙனம் கூறாத தனால், தொல்காப்பியரே இப்புது விதியை வகுத் துள்ளார் என்று உணரல் வேண்டும். தொல் காப்பியர்க்கு முன்பு பல இலக்கண நூலாசிரியர்கள் இருந்துள்ளமை தொல்காப்பியத்தாலேயே நன்கு உணரலாகும். அவருள் எவரும் வடமொழிச் சொற்கள் தமிழில் புகுவதற்கு விதி வகுத்துக் கூறினரிலர். ஆகவே தொல்காப்பியர்காலத்தில்தான் வடமொழிச் சொற்கள் தமிழில் புகத் தொடங்கின என்று உய்த்துணரலாகும். ஆதலின் தொல்காப்பியர் காலத்தில்தான் வடமொழி யாளர் கூட்டுறவு தமிழர்க்கு ஏற்பட்டு வடமொழிச் சொற்கள் தமிழில் புகத் தொடங்கி இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. எனவே வடமொழியாளர் தமிழகத்திற்கு வந்த காலத்தைத் தெரியின் தொல்காப் பியர் காலத்தையும் எளிதில் தெரியலாகும்.

வடமொழியாளர் தமிழகத்தின்மீது படையெடுத்து வந்து தமிழரசர்களை வென்று தமிழகத்தில் குடியேறின ரிலர். ஒரே முறையில் பெருங்கூட்டமாய்த் தமிழகத்தில் புகுந்து குடியேறித் தங்கினர் என்றும் கூறுதல் பொருந்தாது. ஆரியர்கள் வடநாட்டில் குடியேறி வாழ்ந்த காலத்தில் தமிழகம் பலவகையானும் சிறப் புற்று விளங்கியது. ஆதலின் தமிழகச் சிறப்பைக் கேள்வியுற்ற புலவர்களும் கலைஞர்களும் அறிஞர்களும் தமிழகத்திற்கு வந்து அரச அவைகளில் வீற்றிருக்கும் பேறு பெற்றிருத்தல் வேண்டும். பின்னர்ப் பிழைப் பிற்குப் புகலிடம் தேடியோர் தமிழகத்தை நாடியிருத்தல் வேண்டும். ஆகவே சிறு சிறு கூட்டமாக வந்து அரச ரிடமும் புலவர்கள் முதலியோரிடமும் உறவுகொண்டு வாழ்ந்திருத்தல் கூடும். அங்ஙனம் வந்து கலந்தமை புத்தர் தோன்றுவதற்கு முன்பாகத்தான் நிகழ்ந்

திருத்தல் வேண்டும். புத்தர் தோன்றிய பின்னர் புத்தமதத்தைப் பரப்புவான் வேண்டி வடநாட்டிலிருந்து பலர் வந்துள்ளனர். அவர்கள் தொல்காப்பியர் காலத்தில் வந்திருப்பின், புத்தமதத்தைப்பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் காணக் கிடைக்கும். அங்ஙனம் ஒன்றும் கிடைக்கப் பெறுமையால், புத்தர் காலமாம் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன்னரே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். ஆரியர் தமிழகத்திற்கு வந்தகாலம் கி.மு. ஏழாம் நூற்றுண்டு ஆகலாம் எனப் பேராசிரியர் வி. அரங்காச்சாரியார் கருதுகின்றனர்[1]. ஆதலின் தொல்காப்பியர் காலமும் கி.மு. ஏழாம் நூற்றுண்டாக இருக்கலாம் என்று முடிவு கட்டுவதில் தவறின்று. இக்காலம் பாணினிக்கு முற்பட்டதும், ஐந்திரத்திற்குப் பிற்பட்டதும் ஆகின்றது.

ஆரியர்கள் வடஇந்தியாவில் நிலைத்து நாளடைவில் இந்தியா முழுதும் பரவித் தெற்கே வாழ்ந்த திராவிடர்களுடன் தொடர்புகொண்டு தம் கலையையும் நாகரிகத்தையும் அவர்களிடையே பரப்பி வெற்றிகொண்ட காலம் கி.மு.1030-320 என்று ஆர். சி. தத்தர் கூறியுள்ளமை[2] நோக்கத்தக்கது. ஆதலின் தொல்காப்பியர் காலத்தை நாம் கி. மு. ஏழாம் நூற்றுண்டு என்று கொள்வது முற்றிலும் பொருந்தும். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்புள்ள தமிழக நிலையை அறிவதற்குத் தொல்காப்பியம் மிகவும் துணையாய் உள்ளது.

---

1 Educational Review-Ocoter 1928.

2 Early Hindu Civilization Pages 12. 13. 24. 212. 213.

ஆகவே தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் வாழ்வு என்பனபற்றி இக்கால மொழிநூல் இலக்கிய ஆராய்ச்சி, வாழ்வியல் முதலியவற்றுடன் பொருத்தி ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டதாகும்.

இன்று நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களுள் தொல்காப்பியமே தமிழர் வாழ்வின் பல்துறைப் பற்றி அறிவதற்குத் துணைபுரிவதாகும். இதனை தமிழ்ப்புலவர் மட்டுமே தேர்வுகருதிக் கற்று வருகின்றனர். இஃது இலக்கண நூல் தான் என்றாலும் ஏனைய மொழிகளில் உள்ள இலக்கண நூல் போன்றதன்று; அண்மை நூற்றாண்டில் தோன்றி வளர்ந்து வரும் மொழியாராய்ச்சியும், மேலை நாட்டவரால் விரும்பிப் போற்றப்பட்டுவரும் இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக் கலைகளாம் உயிரியல், உளவியல், வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றது.

உயர் கலைகளுக்கெல்லாம் பிறப்பிடமாகக் கிரேக்க நாட்டையே கூறுவர். ஆனால் தொல்காப்பியத்தை ஆராய்ந்து கற்போர் அவ்வாறு கூறார்; பல உயர் கலைகளுக்குப் பிறப்பிடம் தமிழகமே என்று தலை நிமிர்ந்து சாற்றுவர்.

ஆகவே தொல்காப்பியர் வழி நின்று எழுத்தும் சொல்லும் பொருளும் (இலக்கியமும்) ஆராய்ந்து தமிழகத்தின் ஏற்றம் கண்போம்.

# எழுத்து

# I

# எழுத்து

'மொழி' மக்களின் அறிவாற்றல் வளர்ச்சியால் மக்களின் கூட்டு வாழ்விற்கு இன்றியமையாத தாகப் படைத்துக்கொள்ளப்பட்ட கருவியாகும். மொழியே மக்களை மாக்களிலிருந்து வேறுபடுத்தி உயர்த்தியதாகும். மொழியின்றேல், மக்கள் வாழ்வு விலங்கின் வாழ்வாகவே இருக்கும் என்பதில் எள்ள ளவும் ஐயமின்று. நாடு நகரங்கள், அரசு ஆட்சிகள், சமயக் கோட்டங்கள், கலைபயில் கழகங்கள், செய்தி இதழ்கள், தொலைபேசிகள், வானொலிகள் முதலிய மக்கள் பண்பாட்டு விளக்கக் கருவிகள் மொழியால் விளைந்தனவே.

மக்களினம் மொழியின்றிப் பல நூறுண்டுகள் வாழ்ந்திருக்கக்கூடும். மொழியால் உரையாடிக் கருத்துக்களை அறிவிக்கப் பழகிய பல நூறுண்டுகட் குப் பின்னரே எழுத்துக்களை அமைக்கும் ஆற்றலைப் பெற்று, எழுத்து மொழியை உருவாக்கி இருத்தல்

வேண்டும். ஆகவே முதலில் தோன்றியது உரையாடும் மொழியே. 'மொழி' என்ற சொல்லே அதனை நன்கு விளக்குகின்றது. மொழியப்படுதலின் மொழி எனக்கூறினர் நம் முன்னோர். உரையாடி உள்ளக் கருத்தை அறிவிப்பதற்குப் பயன்பட்ட மொழியானது முகத்துக்கு முகமாக நேர்நின்று கருத்தறிவிக்கும் கருவியாக மட்டுமே பயன்பட முடிந்தது. சேய்மையில் உள்ளோர்க்கு அறிவிக்கவும், நிகழ்காலத்தில் நடந்ததை வருங்காலத்திற்கு அறிவிக்கவும் எழுத்து மொழி இன்றியமையாததாய்விட்டது.

உரையாடும் சொற்களில் உள்ள ஒலிக்கூறுகளை உற்று நோக்கினர். ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு வடிவத்தை உண்டுபண்ணினர். தமிழில் வழங்கும் தமிழ்ச் சொற்களை ஒலி நுட்பம் வாய்ந்தார் உற்று நோக்கினர். முப்பது முதன்மை ஒலிகள் பின்னிப் பிணைந்து சொற்களாக வழங்குதலைக் கண்டனர். தமிழில் வழங்கும் சொல்லாக்கத்திற்குப் பயன்படும் ஒலி வடிவங்கள் முப்பது என்று கண்டு அவற்றை எழுதுவதற்குத் தனித்தனி வடிவங்கள் அமைத்தனர். தமிழில் எழுத்து என்னும் சொல் ஒலி வடிவத்தையும் குறிக்கும்; வரி வடிவத்தையும் குறிக்கும்.

'அவன்', 'அவள்', 'அவர்' என்னும் சொற்களை ஒலிக்கூறு படுத்திக் காணுங்கால், 'அ', 'வ', 'ன்', 'ள்', 'ர்' என ஒலிகள் வேறுபடுதலைக் கண்டனர். 'அகம்', 'அறம்', 'அரண்' எனும் சொற்களை நோக்குங்கால் க், ற், ர் எனும் ஒலிகளோடு 'அ' எனும் ஒலி இணைந்து ஒலிப்பதை அறிந்து, க், ற், ர் போன்றவற்றை உடல் என்றும், 'அ' போன்றதை உயிர் என்றும் அழைத்தனர். முப்பது ஒலிகளில் பன்னிரண்டு உயிர் எனவும் பதினெட்டு மெய் (உடல்) எனவும் அழைக்கப்பட்டன. 'உடல்' உயிர்

ரால்தான் இயங்குகின்றது. உயிரின் சேர்க்கையில் லையேல் உடல் இயங்குவதில்லை. அதுபோல் உயிர் எழுத்தின் சேர்க்கை இல்லையேல் உடல் எழுத்து இயங்காமையை அறிந்து 'உயிர்' என்றும், 'மெய்' (உடல்) என்றும் பெயரிட்டனர் நம் முன்னோர். இப் பெயரீடு வேறு எம்மொழிகளிலும் காணப்படாத ஒன்றாகும். இவ்வாறு பெயரிட்ட நம் தமிழ் முன்னோர்களின் மெய்யுணர்வாற்றலை அறிந்து மகிழ்ந்து பெருமிதம் கொள்ளலாம். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலாசிரியர் அருட்டிரு. கால்டுவெல் அவர்களும் இதனை அறிந்து பாராட்டியுள்ளனர்[1].

தமிழ் எழுத்துக்களை வகுத்துப் பெயரிடும் காலத்தில் நம் தமிழ் முன்னோர் வாழ்வியல் மெய்யுணர்வில் சிறந்திருந்தனர் என்பதற்கு உயிர், மெய் என்ற எழுத்துக்களின் பெயரீடே சிறந்த சான்றாகும். பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கும் காலத்தில்தான் மொழிக்குரிய எழுத்துக்களைப் படைத்துக் கொள்ள இயலும் எனும் உண்மையும் வெளிப்படுகின்றது. மக்களினங்களில் தமிழினம், தொன்மையான நாகரிகத்தையும் பண்பாட்டையும் கொண்டிருத்தலால் எல்லா இனங்களுக்கும் முன்பே தன் மொழிக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டது. இதனாலேயே தமிழே உலக முதன் மொழி என்றும் உலக மொழிகளின் தாய் என்றும் அறுதியிட்டுக் கூற இயலும்.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழில் எழுத்துக்கள் அமைக்கப்பட்டுவிட்டன என்பதை தொல்காப்பியர் நூற்பாவே தெற்றென அறிவிக்கின்றது.

---

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.

"எழுத்தெனப் படுப
அகரம் முதல்
னகர இறுவாய் முப்ப∴து என்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே"-

தொல்காப்பியர் இந்நூற்பாவில் "முப்பஃது என்ப" என்பதனுல் அவர் காலத்திற்கு முன்பே எழுத்துக்கள் உருவாக்கப் பெற்று வகைப்படுத்தப்பட்டு விட்டன என அறியலாம்.

தொல்காப்பியர் தமக்கு முன் நிலவி வந்தனவற்றைக் குறிப்பிடுங்கால் பிறர் கூற்ருகவே குறிப்பிடுவார். 'என்ப', 'என்மனுர்', 'ஆசிரியர்க்க' என்று கூறி முன்னேர் கூற்று என்பதனைப் புலப்படுத்திச் செல்லும் உயர் பெருந்தன்மையைக் காணலாம். ஆதலின் தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டு தமிழ் எழுத்துக்களின் தோற்றக் காலத்தை அறுதியிட்டு உரைக்கலாம். வேற்று மொழியாளர் கூட்டுறவு ஏற்படுவதற்கு முன்பே, தமிழ் மொழியாளர் தமக்கென எழுத்து முறையை வகுத்துக் கொண்டனர் என வாய்மை நெறியில் கூறலாம்.

தமிழ் நெடுங்கணக்கைக் கண்ட ஆரிய மொழியினர் தமது மொழிக்குத் தமிழை யொட்டியே எழுத்துக்களைப் படைத்துக் கொண்டனர். சேர்க்கை ஒலிகட்குத் தமிழில் வரி வடிவங்கள் இல்லை. ஆரிய மொழியினர் சேர்க்கை ஒலிகளுக்கும் வரி வடிவங்களை அமைத்துக் கொண்டனர். இவ்வுண்மையறியாத மொழி ஆராய்ச்சியாளர் சிலர், "ஆரியத்தைக் கண்டே தம் மொழிக்கு நெடுங்கணக்கை அமைத்துக் கொண்டனர் தமிழர்" என்று கூறிவிட்டனர். "அசோகன் கல்வெட்டுக்களில் வழங்கப்பெற்றனவும் சமசுகிருத மொழிகளை வழங்க மேற்கொள்ளப் பெற்றனவுமாகிய மிகப் பழைய வரி வடிவெழுத்துக்

கள் திராவிட மொழி இயல்பை அடிப்படையாகக் கொண்டன" என்று திரு. எட்டுவர்டு தாமசு கூறுகின்றார்.

"பிராமணர்கள், தமிழ் நாட்டில் குடியேறுவதற்கு முன்னரே தமிழர்கள் எழுத்துக் கலையினை அறிந்திருந்தனர். பிராமணர்கள் அப்போது அங்கு வழக்கத்திலிருந்த தமிழ் வரி வடிவெழுத்துக்களோடு சமசுகிருத ஒலிகளை வெளியிடக் கூடிய சில வடிவெழுத்துக்களையும் சேர்த்துத் தமிழ் வரி வடிவெழுத்துக்களைத் திருத்தி அமைத்தனர்" என்று திரு. எல்லிசு கூறுகின்றார். ஆனால் கால்டுவெல் அவர்கள் இக்கூற்றுக்களில் ஐயப்பாடு கொள்கின்றார்.

"தமிழ் மொழியில் எழுத்தையும் நூலையும் குறிக்க வழங்கும் தனித் தமிழ்ச் சொற்கள் உள்ளன என்பது உண்மையே எனினும், பிராமணர்கள் இந் நாட்டில் முதன் முதலாகக் குடியேறியதற்கு முற்பட்ட காலத்தில் தமிழில் வரி வடிவெழுத்துக்கள் இருந்தன என்பதைக் காட்டவல்ல அகச் சான்றுகள் கிடைத்தில" என்று கால்டுவெல் கூறுகின்றமை, கால்டுவெல் தொல்காப்பியத்தைக் கற்கும் வாய்ப்புப் பெறாததனால்தான். கால்டுவெல் காலத்தில் தொல்காப்பியம், புலவர் வீட்டுப் பரண்களிலிருந்து விடுபட்டு வெளிப் போந்திலது. அதனால் அப்பொழுது தமிழ்ப் புலமைக் காகப் பயிலப் பெற்ற நன்னூலையே கற்றார். அதுவே தமிழில் உள்ள பழமையான இலக்கண நூல் என்று குறிப்பிட்டார். தொல்காப்பியத்தைக் கற்றிருப்பின் அவ்வாறு கூறியிரார் அன்றோ?

## ஒலி வடிவங்களும் வரி வடிவங்களும்

தமிழில் ஒலி வடிவ எழுத்துக்கள் முப்பத்து மூன்றும் வரி வடிவ எழுத்துக்கள் முப்பத்தொன்று

மேயாம். குற்றியலிகரம், குற்றியலுகரம் என இரண்டிற்கும் தனியான வரி வடிவங்கள் இல்லை. தொல்காப்பியர், பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யும் என முப்பது முதன்மை ஒலி வடிவங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் சொற்களுள் எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேருங்கால் சில ஒலி வடிவங்கள் உருவாகின்றன.

க, ச, ட, த, ப என்பனவற்றிற்கு முன்னால் அவைகளுக்குரிய மெய்யெழுத்துக்கள் வருங்கால் வேறுபட்ட ஒலியை அடைகின்றன. பக்கம்-பங்கு. கச்சு—கஞ்சி, கட்டு—கண்டு, பத்து-பந்து, அப்பன்-அம்பு என்பனவற்றுள் இவ்வொலி வேற்றுமையைக் காணலாம், ங்கு (g), ஞ்சி (j), ண்டு (d), ந்து (dh), ம்பு (b) எனும் ஒலிகட்கு வரி வடிவங்கள் இல்லை.

'க': அகம், முகம், ஆகம் எனும் சொற்களில் வரும் காவும் 'எஃகு' போன்ற சொற்களில் ஆய்த எழுத்தை அடுத்துவரும் காவும் ஒருவித மெல்லோசை பெறுகின்றது. இது ஆங்கில 'h'க்கு ஒப்பாகும்.

'ச': பசி, ஊசி போன்ற சொற்களுள் 'ச' மெல்லோசை பெற்று ஆங்கில 's'க்கு ஒப்பாகும். 'ட்'க்குப்பின் எழுதப் பெற்றால் 'sh' ஒலியைப் பெறுகின்றது: காட்சி.

'ட்': கட்டி, பட்டி போன்ற சொற்களுள் ஆங்கில 't'க்கு ஒப்பான ஒலி பெறுகின்றது,

'ப்': ஆய்தத்திற்குப் பின் எழுதப்படின் ஆங்கில 'f' ஒலியைப் பெறுகின்றது: அஃப. இவைகட்கும் வரிவடிவங்கள் இல்லை. இருபத்தெட்டு (18+10) ஒலி வடிவங்கட்குப் பதினெட்டு வரி வடிவங்களே மெய்யினத்தில் இருக்கின்றன. இவ்வகையில், தமிழ் குறைபாடுடையதுதான் என்று கூறுவாருமுளர்.

ஒரு வரிவடிவம் ஒரே ஒலியைத்தான் குறிக்க வேண்டு மென்றும் அவ்வாறு பெற்றுள்ள மொழியே குறை பாடற்ற நெடுங் கணக்கைப் பெற்றதாகும் என்றும் குறிப்பிடுவர். ஆனால் உலகில் எம்மொழியுமே அவ் வாறு குறைபாடற்ற நெடுங்கணக்கைப் பெற்றிருக்க வில்லை. பெறவும் முடியாது. ஒலி வடிவங்கள் மிகுதி யாகவும் அவற்றை அறிவிக்கும் வரி வடிவங்கள் குறைவாகவும் இருப்பதுதான் உலகில் உள்ள மொழி களில் காணப்படுவதாகும். "ஒரு மொழியின் ஒலி வடிவங்களை அதன் நெடுங் கணக்கில் உள்ள எழுத் துக்களைக் கொண்டு கணக்கிடமுடியாது. பொது வாக மொழிகள் எல்லாம் தம் வரி வடிவங்களைவிட மிகுதியான ஒலி வடிவங்களைப் பெற்றுள்ளன. பிரெஞ்சு, இத்தாலியன், ஆங்கிலம், செர்மன் ஆகிய மொழிகளில் இந்நிலைமையைக் காணலாம்" என்று வெண்டிரீசு தமது 'மொழி' என்னும் நூலில் கூறு கின்றார்.[1] ஆகவே முப்பத்தொரு வரிவடிவங்களைக் கொண்டுள்ள தமிழை வரிவடிவக் குறைபாடுடைய மொழியென்று இகழ்தல் ஏற்புடைத்தன்று.

ஆரிய மொழியாம் சமசுகிருதத்தின் நெடுங்கணக் கில் உள்ள எழுத்துக்களுக்கும் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களுக்கும் ஒற்றுமை காணப்படு கின்றது. பத்து உயிர் எழுத்துக்களும், ஐவருக்கங் களிலுள்ள முதலும் கடையுமாயுள்ள எழுத்துக்களும் ய, ர், ல, வ முதலியனவும் இரண்டிலும் அமைந் துள்ளன. இதைக் கண்ணுற்ற அறிஞர் கால்டுவெல்

---

1. Language—Page—34: The number of phonemes in a language cannot, of course. be calculated by the number of signs in its alphabet. Languages generally have more sounds than signs. This is the case in French, Italian, English and German.

"தமிழ் நெடுங்கணக்கு ஆரிய நெடுங்கணக்கைப் பின்பற்றியே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்டகாலை அது தமிழ் ஒலி நுட்பத்திற்கேற்ப ஐவருக்க முதல் கடைகளை மட்டும் ஏற்று, நடுவில் உள்ள மூன்று எழுத்துக்களை விட்டுவிட்டது[1]" என்று கருதிக் கூறியுள்ளார். ஆரியம் தமிழ் வழியில் நெடுங்கணக்கை அமைத்ததா? தமிழ் ஆரியத்தின் வழியில் நெடுங்கணக்கை அமைத்ததா? என்று அறிய ஆராயப் புகுந்தால் அறிஞர் கால்டுவெல் கருதுவது போல் தமிழ் ஆரியத்தைப் பின்பற்றி நெடுங்கணக்கை அமைத்துக்கொண்டுள்ளது என்று கூறுவதைவிட ஆரியம் தமிழைப் பின்பற்றி நெடுங் கணக்கை அமைத்துக் கொண்டது என்று கூறலே வலியுடைத்து. நெடுங்கணக்கை அமைத்துக் கொண்டது மட்டுமன்றி, நெடுங்கணக்கின் எழுத்துக் களைப் படைத்துக் கொண்டதும் ஆரியர் தமிழர் களின் கூட்டுறவைக் கொண்ட பிறகே, தமிழ் நெடுங் கணக்கை அறிந்த பின்னரே, நிகழ்ந்த தொன்றாகும் என்று கூறுவதற்கு இரண்டு நெடுங்கணக்குகளையும் ஒப்பு நோக்கி ஆராயுங்கால் சான்றுகள் புலப்படு கின்றன.

நன்னூலியற்றிய பவணந்தியார் காலத்தில் ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொதுவாக இருபத்தைந்து எழுத்துக்கள் அமைந்துள்ளன என்று அவர் கூறும் நூற்பாவால் அறியலாம்.[2] அவர் கூற்றுப்படி உயிர் எழுத்துக்களுள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனப் பத்தும், மெய் எழுத்துக்களுள் கங, சஞ, டண, தந, பம எனவரும் ஐவருக்க முதல் கடை எழுத்துக்களாம் பத்தும் ய, ர, ல, வ, ள எனும்

---

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.
2. நன்னூல்—பதவியல்—சூ.16

ஐந்துமாக இருபத்தைந்து எழுத்துக்கள் இரண்டிலும் உள்ளனவாம். இவ்வொற்றுமை எவ்வாறு ஏற்பட்டுள்ளது? இரண்டும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்த மொழிகள்; வெவ்வேறு இலக்கண மரபை உடையன. அங்ஙனமாகவும் இரண்டிலும் இருபத்தைந்து எழுத்துக்கள் ஒன்றாக அமைந்த தன்மை வியத்தற்குரியது. ஒன்று பிறிதொன்றிலிருந்து கடன் பெற்றிருந்தாலன்றி இவ்வாறு ஒற்றுமையாக அமைதல் இயலாது. எது எதிலிருந்து கடன் பெற்றுள்ளது?

தமிழில் உள்ள எழுத்துக்கள் தொல்காப்பியர் கருத்துப்படி முப்பத்துமூன்றே. அந்த முப்பத்து மூன்றில் இருபத்தைந்து ஆரியத்தில் உள்ளவாறே உள்ளன. உயிரில், எ, ஒ, என இரண்டும் மெய்யில் ற, ன, ழ என மூன்றும் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் எனச் சார்பெழுத்து மூன்றும் ஆக எட்டெழுத்துக்களே தமிழுக்கே உரியவாய் உள்ளன. ஆரியர் தமிழரோடு கூட்டுறவு கொள்வதற்கு முன்பே, தமிழர் பண்பட்ட இலக்கண அமைப்பை உடைய மொழியைப் பெற்றிருந்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்; தொல்காப்பியமே தக்க சான்றாகும். ஆதலின் தமிழ் ஆரியத் தொடர்பு கொள்வதற்கு முன்பு எ, ஒ, ற, ன, ழ, ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் எனும் எட்டெழுத்துக்களையே பெற்றிருந்தது. ஆரியத் தொடர்பு கொண்ட பின்னர் தான் எஞ்சிய இருபத்தைந்து எழுத்துக்களையும் ஆரியத்திடமிருந்து கடன்பெற்றுக் கொண்டது என்று கூறுவது நகைப்புக்குரியது.

அன்றியும் தமிழ் ஆரியத்தைத் தழுவி தன் எழுத்தமைப்பைப் படைத்து உருவாக்கியிருந்தால், பிற்காலத்தில் தெலுங்கு, மலையாளம் செய்து

கொண்டது போல், ஆரியத்தினை முழுதும் பின்பற்றி அமைத்துக் கொண்டிருக்குமே. அவ்வாறு செய்து கொள்ளவில்லையே. ஆதலின் அறியக் கிடப்பது என்ன? ஆரியம்தான் தமிழை நோக்கித் தன் எழுத்தமைப்பை ஆக்கிக்கொண்டிருக்க வேண்டுமே யன்றி, தமிழ், ஆரியத்தை நோக்கி அமைத்துக்கொண்டது அன்று எனும் உண்மையே. தமிழ் எழுத்தமைப்பைக் கண்ணுற்ற ஆரியர் தம் மொழியின் ஒலிக் கூறுகட் கேற்பப் புதிய வடிவங்களையும் படைத்துத் தம் நெடுங்கணக்கை அமைத்துக் கொண்டனர் என்று கூறலே உண்மைக்குப் பொருந்துவதாகும். அவ்வாறு அவர்கள் திருத்தி அமைத்துக்கொண்டது தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர்தான். ஏனெனில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே இது நிகழ்ந்திருப்பின் பவணந்தியார் சுட்டிக் கூறியிருப்பதுபோல் தொல்காப்பியரும் சுட்டிக் கூறியிருப்பர். தொல்காப்பியர் காலத்தில் ஆரிய மொழியின் ஒலிக்கூறுகள் தமிழ் மொழியினின்றும் வேறுபட்டிருந்தமையால்தான் அவை தமிழில் பயிலுங்கால் தமிழோசை பெற்றே பயில வேண்டும் என்று விதித்தனர்.[1]

**வரி வடிவங்கள்**

தமிழ் நெடுங்கணக்கின் வரி வடிவங்கள் காலந்தோறும் மாறுபட்டே வந்து இன்றுள்ள நிலையை அடைந்துள்ளன. இன்றும் எழுதுவோர் போக்கிற் கேற்பவும் அழகுணர்ச்சிக் கேற்பவும் வரிவடிவங்கள் தோற்றமளிக்கின்றன. அச்செழுத்துக்களில்கூட வரி வடிவ வேற்றுமைகளைக் காணலாம். தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களின் தோற்றம் வளர்ச்சிபற்றிப்

1. வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. — தொல். நூற்பா:-401

பல கருத்துக்கள் நிலவுகின்றன. வெளி நாட்டாரின் வாணிகத் தொடர்பால் தமிழர் வரிவடிவ எழுத்தை அறிந்தனர் என்பர் ஒரு சிலர். அசோகன் கல்வெட்டு எழுத்துக்களைக் கொண்டே அவற்றிலிருந்து தமிழ் வரிவடிவ எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டனர் என்பர் ஒரு சாரார். இவையெல்லாம் பொருந்தாக் கூற்றுக்கள். உண்மைக்கு மாறுபட்டன. தமிழ் மொழி நூலார், வரி வடிவம் ஒலி வடிவம் எனும் இரண்டனையுமே எழுத்து என்று அழைப்பதால் மொழி உருவாக்கப்பட்டபோதே வரி வடிவ எழுத்தும் படைத்துக் கொள்ளப்பட்டது என்று அறியலாம். எழுத்தில் கொணர்ந்த பின்னர்தான் மொழியின் பயன் விரிவடைந்து நிலைத்த தன்மையைப் பெற்றது. ஆதலின் தமிழ் வரி வடிவத் தோற்றக் காலம் வரையறுத்து உரைக்க முடியாத மிகப் பழங்காலம் என்றுதான் கூறலாம். தொல்காப்பியர் காலமாம் கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்பே தமிழ் மொழிக்கு வரி வடிவம் ஏற்பட்டு இலக்கியங்களும் இலக்கணங்களும் பெருகத் தலைப்பட்டுவிட்டன என்பதைத் தொல்காப்பியமே மலை விளக்காய் அறிவுறுத்தி நிற்கின்றது. இந்திய மொழிகளின் வரி வடிவத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முதற் காரணமாய் இருந்தது தமிழ் வரிவடிவங்களே. **ஆகவே இந்திய மொழிகளின் வரி வடிவ எழுத்துக்களின் தாய் தமிழ் நெடுங்கணக்கின் வரி வடிவமே எனில் மிகையாகாது.** ஆரியக் குடும்பத்தைச் சார்ந்ததெனக் கூறப்படும் வட மொழியின் எழுத்தமைப்பு ஏனைய மேலை ஆரிய மொழிகளின் எழுத்தமைப்பு முறை போன்று அமையவில்லையே, ஏன்? அது தன் முறையை மாற்றித் தமிழ் முறையைப் பின்பற்றி அமைத்துக் கொண்டமையால்தான். தமிழ் எழுத்தமைப்பு

முறைக்கும் மேலை நாட்டு மொழிகளின் எழுத்தமைப்பு முறைகளுக்கும் உள்ள முதன்மையான வேறுபாடு உயிரையும் மெய்யையும் சேர்த்து எழுதும் முறையில்தான் காணலாம். உயிரையும் மெய்யையும் சேர்த்து எழுதும் இடங்களிலும் மேலை நாட்டு மொழிகள் உயிரையும் மெய்யையும் தனித்தனியேதான் எழுதுகின்றன. 'Talk' என்ற ஆங்கிலச் சொல்லில் 'T' என்ற மெய்யும் 'a' என்ற உயிரும் தனித்தனியே எழுதப்பட்டுள்ளன. 'தாக்கு' என்ற தமிழ்ச் சொல்லில் 'த்' என்ற மெய்யும் 'ஆ' என்ற உயிரும் தனித்தனியாக எழுதப்படாமல் சேர்த்தே எழுதப்பட்டுள்ளன. 'முருகன்' என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கில முறைப்படி எழுத வேண்டுமென்றால் 'ம் உ ர் உ க் அ ன்' (M u r u k a n) என்று எழுதவேண்டும். இவ்வாறு எழுதுவதால் காலச் செலவும் இடப் பெருக்கமும் மிகுதியாக வேண்டப் படுகின்றன. ஆகவே உயிரையும் மெய்யையும் ஒன்றாக்கி 'உயிர்மெய்' எனப் பெயரும் கொடுத்தனர். உயிர்மெய்க்குப் புதிய வடிவம் படைக்காமல், மெய்யின் வடிவில் சிறு சிறு மாற்றங்களைச் செய்துகொண்டனர். ஆகவே உயிர்மெய் வடிவங்களைப் புதியனவாகக் கொண்டு கணக்கிடுதல் தவறு. அவ்வாறு கணக்கிடுவதனால் பன்னிரண்டு உயிர்களும் பதினெட்டு மெய்களுடன் சேர இருநூற்றுப் பதினாறு ($12 \times 18$) வடிவங்கள் உண்டாகின்றன எனக் கூறவேண்டியுளது. இம்முறையில் கணக்கிட்டுத்தான் தமிழின் வரிவடிவங்கள் இருநூற்று நாற்பத்தேழு என்கின்றனர். (உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1, உயிர் மெய் $216 = 247$). இவ்வாறு கூறுதல் தொல்காப்பியர் நெறிக்கு முரண்பட்டது. சிறு சிறு மாறுதல்களைக்

கொண்டுள்ள வரிவடிவங்களைப் புதியனவாகக் கணக்கிடுதல் பொருந்தாது. அவ்வாறு கணக்கிடுவதானால் ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறு என்பதற்கு மாறாக 'நூற்று நான்கு' என்று கூறுதல் வேண்டும். (சிறிய எழுத்து 26, பெரிய எழுத்து 26, அச்செழுத்து 26, கையெழுத்து 26) ஆதலின் வரிவடிவங்களில் ஏற்படும் சிறு சிறு மாற்றங்களைக் கொண்டு புதிய வரிவடிவங்கள் என்று கருதி தமிழ் வரிவடிவங்கள் இருநூற்று நாற்பத்தேழு என்பதனை விட்டொழித்தல் வேண்டும்.

இத்தமிழ் முறையால் எவ்வளவோ நன்மைகள் உள. காலம், இடம், முயற்சிகளில் சிக்கனமும் கற்பதில் எளிமையும், ஒலிப்பு முறையில் ஒற்றுமையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

மெய் எழுத்துக்கள் புள்ளி பெற்று நிற்கும்; புள்ளி நீங்கினால் அகர உயிரோடு கூடிய மெய்யாகும்.

தொல்காப்பியர் காலத்தில் எ, ஒ புள்ளி பெற்றே நின்றன. புள்ளியில்லையேல் ஏ, ஓ என நெடில்களாயின. மகரக்குறுக்கம் 'ம்' என உட்புள்ளியும் பெற்று நின்றது. இப்பொழுதுள்ள எ, ஒ, ஏ, ஓ முறை வீரமாமுனிவரால் ஆக்கப்பட்டது என்பர்.

**மாத்திரை :** எழுத்துக்களை ஒலிப்பதற்கு வேண்டிய கால அளவைக் கணித்தறிந்திருந்தனர் நம்முன்னோர். அடிப்படை அளவை மாத்திரை என்று அழைத்தனர். ஒரு முறை கண்ணிமைப்பதற்கு வேண்டிய காலமோ கை நொடிப்பதற்கு வேண்டிய காலமோ ஒரு மாத்திரையின் அளவுக் கூறாகும். மெய்யெழுத்திற்கு அரை மாத்திரை உண்டு. ஆனால் அது உயிரோடு சேருங்கால் தன் அளவை இழந்துவிடுகின்றது. உயிர்க்குரிய அளவே உயிர்மெய்க்குரிய

அளவாகும். குறில் எழுத்து ஒரு மாத்திரையும் நெடில் எழுத்து இரண்டு மாத்திரைகளும் பெறும்: மூன்று மாத்திரைகள் பெறும் ஓரெழுத்துத் தமிழில் இல்லை. வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் ஓரெழுத்து இரண்டு மாத்திரைகளுக்கு மேலும் ஒலித்தலை விரும் பினால் எவ்வளவு மாத்திரை வேண்டுமோ அவ்வளவு மாத்திரைகட்கு ஓரளவுள்ள அதற்கினமான குறில் எழுத்தினைக் கூட்டி எழுதுதல் வேண்டும். 'கா' எனும் எழுத்திற்கு இரண்டு மாத்திரை உண்டு. நான்கு மாத்திரை அளவுள்ளதாக ஒலிக்க வேண்டு மானால் 'காஅஅ' என இரண்டு அகரங்களைச் சேர்க்க வேண்டும்.[1]

பிற்காலத்தில் பவணந்தியார் வேறு விதமாகக் கூறியுள்ளார் "நெட்டெழுத்தேழும் தத்தமக்குரிய இரண்டு மாத்திரையில் மிக்கு ஒலிக்கும். அவ்வாறு மிகுந்து ஒலிப்பதைக் காட்டுவதற்கு அடையாளமாக அவற்றிற்கினமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் வரும்" என்று கூறுகின்றார். (நன்னூல் எழுத்தியல் சூ - 36). 'கா அஅ' என்பதில் 'கா' வே நான்கு மாத்திரை ஒலிக்கும். 'கா'வுக்கு இயல்பாக இரண்டு மாத்திரையுண்டு. எஞ்சிய இரண்டு மாத்திரைகளை அறிவிப்பதற்கு இனமாம் குறில் 'அ' இருமுறை எழுதப்பட்டுள்ளது. இங்கு 'அ' அடையாளமாக மட்டுந்தான் வந்துள்ளது. தனக்குரிய ஒரு மாத் திரையை இழந்து நிற்கின்றது. இவ்வாறு கூறுவதி னும் தொல்காப்பியர் கூறும் முறையே சிறப்புடைய தாக இருக்கின்றது. எழுத்துக்களைக் குறில் என்றும் நெடில் என்றும் பிரித்து குறில் ஒரு மாத்திரையும், நெடில் இரண்டு மாத்திரையும் பெறும் என்று

---

1. நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர் — தொல். நூற்பா:- 6.

வகுத்துவிட்டு, நெடில் எவ்வளவு மாத்திரை வேண்டு மாயினும் பெறலாம் என்பது பொருத்தமின்று அன்றோ ?

குற்றிய லிகரமும், குற்றிய லுகரமும், ஆய்தமும் ஒவ்வொன்றும் அரை மாத்திரையே பெறும். எழுத் துக்கள் தமக்கு வரையறுக்கப்பட்ட மாத்திரையைக் கடந்து ஒலிப்பதற்குரிய இடம் இசைத் தமிழின் கண்ணதாகும். இசைத் தமிழ் இலக்கணத்தைத் தொல்காப்பியர் 'நரம்பின் மறை' என்று குறிப்பிடு கின்றார். இசைக் கருவிகளுள் நரம்புக் கருவியும் ஒன்று. இசைத் தமிழ் இலக்கணத்தை நரம்பின் மறை என்று கூறுவதால் நரம்புக்கருவி (யாழ்) அக் காலத்து மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற் றிருந்ததென்றும், இசைக் கருவிகளுள் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது நரம்புக் கருவியாய் இருத் தல் வேண்டுமென்றும் கருத இடமுண்டு.

**எழுத்தின் வகைகள் :**

எழுத்துக்களை முதல் என்றும் சார்பென்றும், உயிர் என்றும், மெய் என்றும், குறில் என்றும், நெடில் என்றும் வகைப்படுத்தினர். மெய் யெழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று பாகுபடுத்தினர். பின்னர் பயன்படும் தன்மை கருதி 'சுட்டு' என்றும், 'வினா' என்றும் பெயரிட்டுப் பிரித்துக் காட்டினர். சுட்டு என்பன 'அ, இ, உ' வாம். அந்த, இந்த, உந்த என்பன அவற்றின் பொரு ளாம். வினாவைக் குறிப்பன ஆ, ஏ, ஓ என்பனவாம். எ, யா, கூறப்படவில்லை. அவை (ஆ, ஏ, ஓ) போன்று சொற்களில் தனித்துச் சேர்ந்து வினாப்பொருளை யுணர்த்தாமையாலும், எகரம் வினாப்பொருள் மட்டு மன்றிப் பிற பொருளும் தருகின்றமையானும் என்று அறியற் பாற்று. அன்றியும் தொல்காப்பியர் காலத்

தில் எ, யா இரண்டும் தனித்து வினாப் பொருளைத் தரும் வகையில் இருதிணை ஐம்பால்களிலும் பயிலவில்லை யென்றும் அறியலாம்.

உரையாசிரியர்கள் "தன்னினம் முடித்தல்' என்பதனால் எகரமும் யகர ஆகாரமும் வினாப்பெறும் எனக் கொள்க" என்றனர்.

ஐ, ஔ, இவை இரண்டும் ஒவ்வொன்றும் இரண்டு ஒலிகளால் ஆனவை. 'ஐ' என்று ஒலிப்பதற்கு 'அ இ' என்றோ, 'அய்' என்றோ எழுதி ஒலிக்கலாம். ஔ என்று ஒலிப்பதற்கு 'அ உ' என்றோ, 'அவ்' என்றோ எழுதி ஒலிக்கலாம். தொல்காப்பியரே இவ்வாறு கூறுகின்றார். பாடல்களில் எதுகை நோக்கி 'அய்யன்' என்றும் 'அவ்வை' என்றும் பயின்றிடக் காணலாம். ஆகவே சிலர் 'ஐ' 'ஔ' என்ற இரு எழுத்துக்களும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து அகற்றப்பட்டு விடலாம் என எண்ணுகின்றனர்.

தமிழ் நெடுங்கணக்கில் அ, இ, உ, எ, ஒ என்ற குறில்களும், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்ற அவற்றிற்கொத்த நெடில்களுமே முதலில் தோன்றியிருக்கலாம். ஐ, ஔ என்ற இரண்டும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் பிற்கால மென்பது, தொல்காப்பியர் காலத்திற்கு மிக முற்பட்ட காலமாகும். தமிழ் மொழி நூலார் ஐ, ஔ என்ற இரண்டின் இன்றியமையாமையை அறிந்து படைத்துக் கொண்டனர். இவை இரண்டையும் பகுதிகளாகக் கொண்டு பல சொற்கள் உருவாகியுள்ளன. ஆதலின் இவை இரண்டையும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து இனி அகற்றல் முடியாது.

இவ்விரண்டு எழுத்துக்களும் ஆரிய மொழியைப் பின்பற்றி அமைத்துக் கொள்ளப்பட்டன என்று

சிலர் கருதுவர்; அது தவறு. தமிழ் நெடுங்கணக்கைக் கண்டு ஆரிய மொழி நெடுங்கணக்கு, திருத்தி அமைக்கப்பட்டது என்று முன்பே கூறியுள்ளோம். ஆகவே ஆரியம்தான் தமிழைக்கண்டு இவையிரண்டையும் தன் நெடுங்கணக்கில் சேர்த்திருக்கவேண்டும்.

இன்னும் சிலர் தமிழ் நெடுங்கணக்கில் எழுத்து மிகுந்துள்ளதாகக் கருதி 'ஐ,' 'ஔ,' என்ற உயிர் எழுத்துக்களை அகற்றுவதோடு, ண, ந என்பனவற்றுள் ஒன்றையும், 'ற, ர' என்பனவற்றுள் ஒன்றையும் அகற்றிவிடலாம் என்பர். "ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துக்களே இருப்பதுபோல் தமிழிலும் இருக்கவேண்டும்; கற்போர்க்கு எளிமையாய் இருக்க வேண்டும்" என்று கருதி மேற்கூறியவாறு தமிழ் எழுத்துக்களைக் குறைக்கவேண்டும் என்று கூறுகின்றனர். ஆங்கில மொழியில் இருபத்தாறு எழுத்துக்களே இருப்பதனால், ஓர் எழுத்தே இரண்டு மூன்று ஒலிகளைக் குறிக்கவேண்டியுள்ளது. அதனால் அம்மொழியைப் புதிதாகக் கற்போர் அடையும் இடர்ப்பாடு அளவிட்டுரைத்தல் ஆகாது. தமிழ் மொழியைப்போல் அம் மொழியில் நெடில்கள் இல்லாக் குறையாலும் எவ்வளவோ இடர்ப்பாடுண்டு. ஆங்கில மொழியின் குறைபாட்டை அறிந்த ஆங்கில மொழி நாடகப் பெரும்புலவராம் பெர்னட்சா, அதனைத் திருத்தி யமைப்பதற்கெனத் தம் பெரும் பொருளில் ஒரு பகுதியைச் செலவழிக்க அறக்கொடை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் ஆங்கிலேயர்களோ தம் மொழிப்பற்று மிகுதியால் அதனைப் புறக்கணித்து விட்டனர். 'ஐரிசுக்காரராம் பெர்னட்சா ஆங்கில மொழி நுட்பம் அறியவல்லாரோ' என அப்பெரும் புலவரை இகழ்ந்துவிட்டனர். ஆனால் நம் தமிழர்களோ தமிழ் மொழியின் ஒலி நுட்பத்தையும் எழுத்

தமைப்பையும் ஆராய்ந்து அறியாது மேற்போக்காக அறிந்த அளவிலேயே, தமிழ் மொழி எழுத்துக் குறைபாடுடையது; அதனைத் திருத்தவேண்டும் என்று வாய் கூசாது கூறிவருகின்றனர். தமிழ் மொழியின் எழுத்தமைப்பு முற்றிலும் செப்பமுற்ற வகையில் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே அமைந்து விட்டது. அவ்வமைப்பில் ஒன்றைக் கூட்டவோ, குறைக்கவோ இயலாத நிலையில் திருத்தமுற்று விளங்குகின்றது.

F, h, z போன்ற எழுத்துக்கள் தமிழில் உண்டா? இவை இல்லாமை தமிழுக்குக் குறைபாடன்றோ என்பர் சிலர். இவ்வொலிகளைக் குறிக்கத் தனியான வரிவடிவங்கள் தமிழில் இல்லை என்பது உண்மையே. ஏன் இல்லை? தமிழ் மொழியில் அவ்வொலிகள் இல்லை. ஒலிகள் இல்லாதபோது அவற்றைக் குறிக்க வரிவடிவங்கள் எவ்வாறு தோன்றும்?

வேற்று மொழிகளில் உள்ள ஒலிகளைத் தமிழில் அவ்வாறே ஒலிக்க வேண்டுமன்றோ? அவ்வாறு ஒலிக்க விரும்புங்கால் முடியவில்லையே. அவ்வாறு ஒலிப்பதற்காகத் தமிழ் மொழியில் இல்லாத பிற மொழிகளின் ஒலிகட்கு வரிவடிவங்கள் படைத்துக் கொள்ள வேண்டுமன்றோ? என வழக்காடுபவர் உளர். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் இருக்கின்றன. அவ்வந்நாட்டுத் தட்ப வெப்பச் சூழ்நிலைக்கேற்ப மொழி ஒலிகள் உருவாகி அவற்றிற்கு வரிவடிவங்கள் உண்டாகியுள்ளன. உலகின் ஒரு பகுதியில் உள்ள மொழியின் ஒலிகட்கு, இன்னொரு பகுதியில் உள்ள மொழியில் உள்ள வரிவடிவங்கள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தல் கூடாது. வேற்று மொழி ஒலிகளைத் தம் மொழியில் கூறுங்கால் தம் மொழிக் கேற்பவே திருத்தி வழங்குவர். ஆங்கிலத்

தில் 'ழ்' இல்லை. ஆங்கிலேயர் 'தமிழ்' என்ற சொல்லைத் 'தமில்' (Tamil) என்றுதான் ஒலித்தனரே யன்றித் தமிழ் ஒலியைத் தம் மொழியில் ஏற்றுக் கொண்டு புதிய வரிவடிவம் படைத்தாரிலர். தம் மொழியைக் குறைபாடுடையதென்று கூறினருமிலர். அங்ஙனமாகவும் நந்தமிழர் மட்டும் பிறமொழி ஒலி கட்குத் தமிழில் வரிவடிவங்கள் இல்லை என்று குறை பட்டுக் கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும்?

தொல்காப்பியர் நமக்கு வழிகாட்டிச் சென்றுள் ளார். அவ்வழி உலகில் உள்ள பிறமொழியாளர் கடைப் பிடிக்கும் வழியோடு ஒத்துளது. தமிழர் களோடு முதலில் தொடர்பு கொண்ட வேற்று மொழி யாளர் வடமொர்ழியாளர் ஆவார். ஒரு மொழியாளர் இன்னொரு மொழியாளரோடு கூட்டுறவு கொள் ளுங்கால் இருவர் மொழிச் சொற்களும் ஒன்றினில் ஒன்று கலக்க நேரிடுதல் இயல்பு. ஆகவே வட மொழிச் சொற்கள் தமிழிலும், தமிழ்மொழிச் சொற்கள் வடமொழியிலும் கலந்துள்ளன. அவ்வாறு கலக்குங்கால் நாம் கொள்ள வேண்டிய முறைபற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

வடமொழிச் சொற்களின் வடமொழி எழுத்துக் களை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்துக்களால் தமிழ் ஒலி களோடு கூறவேண்டும் என்பதே அவர் காட்டும் நெறி.[1] வடமொழிக்குக் கூறிய விதியே பிறமொழி கட்கும் பொருந்தும். இந் நெறியே எல்லா நாட்டு மொழியினராலும் பின்பற்றப்படும் ஒன்றாகும். மொழி நூல் முறைக்கும் ஒத்ததாகும். ஆங்கில மொழியிலும், ஃபிரெஞ்சு மொழியிலும், செர்மன் மொழியிலும் வரிவடிவங்கள் பெரும்பாலும் ஒத்துள்ளன. ஆயினும் அவ்வம்மொழிச் சொல்,

1. தொல்: நூற்பா 401.

வேற்று மொழியில் ஆளப்படுங்கால் ஒலி வேறுபாட்டுடன்தான் ஆளப்படுகின்றது. ஆங்கில மொழிச் சொல் ஒன்று ஃபிரெஞ்சிலும் செர்மனியிலும் பயிலுங்கால், வரிவடிவ ஒற்றுமையிருந்தும், பிரஞ்சு ஒலி நுட்பமும், செர்மன் ஒலி நுட்பமும் வேண்டுமளவுக்கு ஒலி மாறுபாடடைந்தே பயில்கின்றது. ஆதலின் தமிழில் வேற்று மொழிச் சொற்கள் தமிழில் இல்லா ஒலியுடன் பயிலத் தொடங்குங்கால் தமிழோசை கொடுத்துத் தமிழாக்கியே கூறல் வேண்டும். தமிழ் வரிவடிவ (எழுத்து)க் குறைபாடுடையது என்று கூறல் கூடாது.

**பொது எழுத்து :**

பாரத நாட்டு மக்களிடையே ஒற்றுமை வேண்டும் என்பதன் பேரால் பாரத நாட்டு மொழிகட்கெல்லாம் ஒரே வரிவடிவம் (எழுத்து) இன்றியமையாதது என முழக்கமிடுகின்றனர் சிலர். எழுத்தொற்றுமையால் கருத்தொற்றுமை ஏற்படும் என்பது வெறும் கற்பனைத் தோற்றம். இன்று எழுத்தொற்றுமையுடைய ஒரே மொழி பேசும் மக்களிடையே பூசலும் போரும் நிகழாமல் இல்லையே. ஆதலின் ஒற்றுமையின் பேரால் இந்திய மொழிகட்கெல்லாம் ஒரே வரிவடிவத்தை ஏற்படுத்த முனைவது இயற்கையொடு முரண்பட்ட செயலாகும். ஒரே மொழிச் செல்வாக்கை விரிவு படுத்தி நிலைபெறச் செய்வதற்குரிய மறைமுக ஏற்பாடென்றே தெளிதல் வேண்டும். பொது வரிவடிவ முயற்சி வெற்றிபெறுமேல் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும், தேவார திருவாசகங்களும் தமிழர்க்குப் பயன்படாமல் மறைந்து ஒழியும். தமிழும் உலக வழக்கிலிருந்து ஒழிந்து இறந்து விடும். ஆரிய மொழி வரிவடிவத்தைப் பெற்றிராத பிற மொழிகளின் நிலையும்

அஃதேதான் என்பதில் ஐயமின்று. தொல்காப்பியர் தமிழர்க்கு அளித்து, இன்று உலக மொழி நூல் அறிஞர்களால் வியந்து பாராட்டப்பெறும் தமிழ் எழுத்திலக்கணம், தமிழர்க்குப் பயன்படாது அழிவுற்று மறையும் நிலைக்குக் கொண்டு செல்லும் எச்செயலிலும் தமிழர்கள் ஈடுபடுதல் தம்மைத் தாமே மாய்த்துக்கொள்ளும் செயலுக்கொப்பாகும் என்று உணர்தல் வேண்டும், தமிழகப் பெரியோர்.

**சொற்களில் எழுத்து நிலை :**

எழுத்துக்களால் ஆக்கப்பட்டது சொல். உள்ளக் கருத்தை வெளிப்படுத்துவதற்கு, உருவாக்கப்பட்ட சொற்களைப் பகுத்து எழுத்துக்களை உருவாக்கி வகைப்படுத்தினர். பின்னர்தான் சொற்களில் உள்ள எழுத்துக்களை ஆராயத் தொடங்கினர். இவ்வாராய்ச்சி அண்மையில்தான் தொடங்கப்பட்டுள்ளது மேலை நாடுகளில். தமிழில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தொடங்கப் பட்டுவிட்டது. தமிழர்களின் மொழி நூலறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது இவ்வெழுத்து நிலை ஆராய்ச்சி. நூற்றாண்டுதோறும் மொழி அடைந்துள்ள மாறுபாட்டைக் கணித்தறிவ தற்கும் துணைபுரிகின்றது இவ்வாராய்ச்சி.

**மொழி முதல் எழுத்துக்கள் :**

பன்னிரண்டு உயிரும் மொழி முதலாக வரும். மெய்யெழுத்துக்கள் உயிர்களோடு சேர்ந்துதான் மொழி முதலாக வரும். தனிமெய், மொழி முதலாக வராது. தனி மெய், மொழிக்கு முதலில் வந்துள்ள சொல் தமிழ் வழக்கில் இடம் பெறுமேல் அச்சொல் தமிழ்ச் சொல் அன்று என்று தெள்ளிதில் உணரலாம். 'ஸ்தலம்' என்ற சொல் சிலர் உரையாடலில் இடம் பெறுகின்றது. இது

தமிழ்ச் சொல்லன்று. மெய்கள் உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வருங்கால், எல்லா மெய்களும் எல்லாவுயிர்களோடும் சேர்ந்து வாரா. க், த், ந், ப், ம் என்னும் ஐந்து மெய்களும் பன்னிரண்டு உயிர்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். பிறமெய்கள் எல்லாம் சிற்சில உயிர்களோடு தான் சேர்ந்து வரும்.

'ச்' என்ற மெய் அ, ஐ, ஔ எனும் மூன்று உயிர்களோடு அன்றிப் பிற உயிர்களோடு சேர்ந்து வரும் என்று கூறுகின்ற நூற்பா காணப்படுகின்றது.

'சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ, ஐ, ஔ எனும் மூன்றலங் கடையே"

என்பது அந்நூற்பா. ஆனால் 'ச'வை முதலாகவுடைய தனித் தமிழ்ச் சொற்கள் எண்ணற்றன தமிழில் உள்ளன. சட்டி, சட்டம், சண்டை, சணல், சமட்டு, சமம், சரடு, சருகு, சழக்கு என்பன அவற்றுள் சில. இவை யெல்லாம் தொன்றுதொட்டு வருவனவே யன்றி இன்று நேற்றுத் தோன்றியன அல்ல. அங்ஙனமிருக்கவும் தொல்காப்பியர் அவ்வாறு கூறியிருப்பாரா என்று ஆராய்தல் வேண்டும். இந்நூற்பாவை ஏடு பெயர்த்து எழுதியோர் திருத்தி இருக்கவேண்டும் என்பர். ஈற்றடிக்கு "அவை" 'ஔ' என்னும் ஒன்றலங் கடையே" என்ற பாட வேறுபாடும் காட்டுவர். ஆதலின் இந்நூற்பா

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அவை 'ஔ' என்னும் ஒன்றலங் கடையே"

என்றிருத்தல் வேண்டும் என்பர். ஆனால் நூற்பா அமைந்துள்ள நிலைமையில், சகரத்தை முதலிலே கொண்டுள்ள சொற்கள் தமிழில் தோன்றுவதற்கு முன்னர் தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று கொள்ளுதலே ஏற்புடைத்து. 'ஐ'

யோடு சேர்ந்து 'சை' என்று வெறுப்பை அல்லது மாறுபாட்டை உணர்த்தும் ஒலிக்குறிப்பாக வழங்கி வருவதை நாம் அறிவோம். 'ச்' ஔவோடு மட்டும் தான் சேர்ந்து வராது. 'சௌ' முதலாக வரும் சொற்கள் எல்லாம் வேற்றுமொழிச் சொற்களே. சௌக்கியம், சௌபாக்கியம், சௌந்திரியம் என்பனவெல்லாம் இன்று சிலர் பயன்படுத்தினாலும் தமிழ்ச் சொற்கள் அல்ல. இவைகளால் நலம், செல்வம், அழகு முதலிய நற்றமிழ்ச் சொற்கள் வழக்கிழக்கும் நிலையை அடையத் தொடங்கின.

'வ்' எனும் மெய் எழுத்து உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு உயிர்களுடன்கூடி மொழிக்கு முதலாக வருவதில்லை. வு, வூ, வொ, வோ என்பன ஒலிப்பதற்கு எளிதாக இன்மையின் இவைகளை முதலாகக் கொண்டு சொற்கள் தோன்றவில்லை போலும்.

'ஞ்' எனும் மெய் ஆ, எ, ஒ எனும் மூன்று உயிர்களுடன் கூடி மொழிக்கு முதலாக வரும் என்றனர் தொல்காப்பியர். ஆனால் 'ஆ' வருகின்ற 'ஞாலம்' என்ற சொல் இலக்கிய வழக்கில்மட்டும் உளது. 'எ' வருகின்ற 'ஞெண்டும்', 'ஒ' வருகின்ற 'ஞொள்கிற்றும்' வழக்கிழந்து விட்டன. பவணந்தியார் காலத்தில் 'ஞமலி' என்ற சொல் வழக்கிலிருந்திருக்க வேண்டும். அதனால் 'அ' என்பதனுடனும் 'ஞ்' மொழி முதலாகும் என்றார்.

'ய்' எனும் மெய் 'ஆ' வோடுதான் கூடிவரும் அ (யவனர்), உ (யுக்தி), ஊ (யூகம்), ஓ (யோகம்), ஔ (யௌவனம்) என்னும் உயிர்களோடு கூடிவரும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல. பிற மெய்கள் (ங, ட, ண, ர, ல, ழ, ள, ற, ன.) மொழிக்கு முதலில் வாரா. ஆயினும் தம்மைப்பற்றிக் குறிப்பிடும் போது முதலாக வரும்.

**மொழி இறுதி எழுத்துக்கள் :**

ஒளகாரம் ஒழிந்த ஏனைய பதினொரு உயிர்களும் சொற்களின் இறுதியில் வரும். ஒளகாரமும் 'க்' 'வ்' எனும் மெய்களோடு ஓரெழுத்து ஒரு மொழியாக வரும். 'எ' எம்மெய் யோடும் கூடி ஈறுகாது. 'ஒ' 'ந்' எனும் மெய்யோடு மட்டும்தான் ஈறுகும். 'ஏ' 'ஓ' எனும் இரண்டும் 'ஞ்' எனும் மெய்யோடு வாரா. 'உ', 'ஊ' எனும் இரண்டும் 'ந்', 'வ்' எனும் மெய்களோடு வருதல் இல்லை. 'உ, எனும் உயிர் 'ச், எனும் மெய்யோடு கூடிவருங்கால் இரண்டே சொற்களில்தான் வரும் என்றார். "உச்சகாரம் இருமொழிக் குரித்தே". உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'உசு' 'முசு' எனும் இரண்டு சொற்களை மட்டும் எடுத்துக் காட்டி "பசு" என்பதோ எனின் அஃது ஆரியச் சிதைவு" என்றார். 'பசு' எனும் சொல் தமிழ் மக்கள் அனைவரும் வழங்கிவரும் சொல்லாகும். 'ஆ', 'ஆன்' என்பன இலக்கியச் சொற்களாகவே உள்ளன. 'பசு' என்பது தமிழ்ச் சொல்லே 'பசுமை' என்பதனடி யாகத் தோன்றியிருத்தல் வேண்டும். 'பு' ஈரெழுத்து ஒரு மொழியில் வருங்கால் ஒரே சொல்லில்தான் ஈறுக வரும். அச்சொல் 'தபு' என்பதாகும். 'தபு' தன் வினையாகவும் பிறவினையாகவும் இருபொருளில் வரும். 'தபு' என்று படுத்துக்கூற (மெதுவாகச் சொல்ல) 'நீ சா' என்னும் பொருளதாய்த் தன் வினையாகும். 'தபு' என்று எடுத்துக்கூற (உரப்பிச் சொல்ல) 'சாவப்பண்ணு' என்னும் பொருளதாய்ப் பிறவினை யாகும். அசையழுத்தத்தால் (Accent) பொருள் வேறு படும் முறை தமிழிலும் உண்டு என்பதற்கு இஃ தொரு சான்றாகும்.

மெய்யெழுத்துக்களில் வல்லினம் ஆறும் மொழிக்கு இறுதியாக வருதல் இல்லை. மெல்லினத்

திலும் 'ங்' வருதல் இல்லை. ஏனைய பதினொரு மெய் களாம் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்பன சொல்லிறுதியில் வரும். அவ்வாறு வருங்கால் 'ங்' இரண்டே சொற்களிலும், 'ஞ்' ஒரே சொல்லிலும் 'வ்' நான்கே சொற்களிலும் வரும் என்று அறுதி யிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர்.

'ம்', 'ன்' என்பன சில சொற்களில் ஒன்று வந்த இடத்தில் இன்னொன்று வந்து வழங்கும். நிலம் - நிலன், கலம் - கலன், நலம் - நலன் என்பன போன்று வருதல் காண்க. இவ்வாறு மயங்கி வராத னகர ஈற் றுச் சொற்கள் ஒன்பது என்று கூறுகின்றார். அவை, எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என்பன என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறெல்லாம் வரையறுத்துத் துணிந்து கூற வேண்டுமெனின், தொல்காப்பியரின் அளப் பரும் தமிழ்ப் புலமையும் ஆராய்ச்சியும் எவ்வளவு பரந்து விரிந்து ஆழ்ந்து நுணுகிச் சென்றிருக்க வேண்டும் என்று உய்த்துணரலாம்.

**மொழியின் நடுவில் வருவன :**

சொற்களின் முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்களை ஆராய்ந்தோம். இனிச் சொல்லின் நடுவில் வருவன யாவையென ஆராய்வோம். சொல்லின் நடுவில் வருவன எல்லாம் மெய்களும் உயிர் மெய்களும் ஆம். அளபெடைச் சொற்களில் மட்டுமே உயிர் சொல்லின் இடையில் வரும். மெய் களும் உயிர் மெய்களும் எவ்வாறு இணைந்து வருகின்றன என்பதை நன்கு ஆராய்ந்து கூறி யுள்ளார்.

ர், ழ், என்ற இரண்டும் தம்முன் தாம் வருதல் இல்லை. பிற மெய்கள் எல்லாம் தம்முன் தாம் வரும்.

ர், ழ் எனும் இரண்டும் பிற மெய்களோடு வரும் (ஆர்ப்பு, வாழ்க்கை)

க், ச், த், ப் என்பன பிற மெய்களோடு வருதல் இல்லை. தம்மோடு தாம் தான் வரும்.

ங, ஞ, ண, ந, ம, ன எனும் மெல்லின மெய்கட்குப் பின்னர் அதனதனுக்குரிய வல்லின மெய்கள் வரும் (அங்கு, அஞ்சு, கண்டு, பந்து, அம்பு, கன்று)

ட், ற், ல், ள், என்னும் மெய்களுக்குப் பின்னர் க, ச, ப எனும் மூவெழுத்துக்களும் வரும்.

ட் : கட்கம், கட்சி, தட்பம்
ற் : கற்க, முயற்சி, வெற்பு
ல் : செல்க, வல்சி, செல்ப
ள் : கொள்க, நீள்சினை, கொள்ப

ல், ள், என்பவற்றின் பின்னர் ய, வ, என்பனவும் வரும். கொல்யானை, செல்வம், வெள்யாது, கள்வன், ண, ன என்பவற்றின் பின்னர் க, ச, ஞ, ப, ம, ய, வ என ஏழும், ஞ, ந, ம, வ என்பனவற்றின் பின்னர் 'ய' வும், ம் என்னும் மெய்யின் பின்னர் 'வ' வும் வரும்.

ய், ர், ழ் என்னும் மெய்யின் பின்னர், க, த, ந, ப, ம, ச, வ, ஞ, ய என்பன வரும். இவ்வாறு கூறப்பட்டுள்ளனவற்றுள் சில இக்காலத்து வழக்கில் இல்லை. எடுத்துக்காட்டுகளை இலக்கண நூல்களால் அறியலாம்.

**சார்பெழுத்துக்கள் :**

குற்றிய லிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் என்ற மூன்றும் சார்பெழுத்துக்கள் எனப்பட்டன. குற்றிய

லிகரமும் குற்றிய லுகரமும் தனி வரிவடிவங்கள் அற்றன. சொற்களிடையே பிற எழுத்துக்களைச் சார்ந்தே இவை தோன்றுவன.

குற்றியலிகரம் கேண்மியா, சென்மியா போன்ற சொற்களில் வந்துள்ள மியா என்னும் முன்னிலை அசைச் சொல்லின் 'ம்' மெய்யைச் சார்ந்துவரும். குற்றிய லுகரம் வந்துள்ள சொல்லை அடுத்து யகரத்தை முதலாகவுடைய சொல் வந்தால் குற்றிய லுகரம் குற்றிய லிகரமாகத் திரியும். விறகு+யாது= விறகியாது. 'கி' யில் வந்துள்ள 'இ' குறைந்த ஓசையை உடையது.

குற்றிய லுகரம் நெட்டெழுத்தை யடுத்தும் இரண்டு எழுத்துக்களையும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களையும் அடுத்தும் வல்லின மெய்களை ஊர்ந்து வரும்.

ஆறு : நெட்டெழுத்தையடுத்து வந்துள்ளது.
விறகு, பந்து } இரண்டெழுத்தை அடுத்து வந்துள்ளது.
குரங்கு : இரண்டுக்குமேற்பட்ட எழுத்துக்களை அடுத்து வந்துள்ளது.

'படு' என்பது போல குற்றெழுத்தை யடுத்தும், செலவு, உருமு, நாலு என்பன போல் இடையின, மெல்லின மெய்களை ஊர்ந்தும் வரும் உகரம் ஓசை யிற் குறையாது. ஆகவே இவை முற்றுகரம் எனப் பட்டன. 'நுந்தை' என்ற சொல்லின் முதலில் வரும் உகரமும் குற்றிய லுகரமாகக் கருதப்பட்டது தொல்காப்பியர் காலத்தில்.

'ஆய்தம்' என்பது நுட்ப வொலியை உடையது. மூன்று புள்ளி வடிவினையுடையது. அதனாலேயே

ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் என்றார் ஆசிரியர். இது இயற்கையாக மூன்றெழுத்துச் சொற்களிடையேயும் செயற்கையாக ல், ள் என்பன இரண்டும் மாறுதலுற்றும் வரும். எஃகு, கஃசு என்பனவற்றுள் இயற்கையாக வந்துள்ளது.

கல் + தீது = கஃறீது என்றும், முள் + தீது = முஃடீது என்றும் வருங்கால் செயற்கையாக வந்துள்ளதாம். இவ்வாய்த எழுத்தால் புது ஒலிகளை நாம் உண்டுபண்ணிக் கொள்ளலாம். அஃப, என்பதில் 'ப' வும், 'கஃசு' என்பதில் 'சு'வும், 'எஃகு' என்பதில் 'கு' வும் ஒலிக்கும் முறையைக் கூர்ந்து நோக்கி உணரலாம். தமிழில் இல்லாத 'F' (யப்) ஒலியை ஆயுத எழுத்தின் துணைகொண்டு அமைத்துக்கொள்ளலாம். [ஃபோர்டு (Ford)] 'H' ஒலியை 'ஃக' என்று அமைக்கலாம். இவ்வாறு வேண்டியாங்குப் பயன்படுத்திப் புதிய ஒலிகளைப் படைத்துக் கொள்ளவும் இவ்வெழுத்து நற்கருவியாக இருப்பதால்தான் இதற்கு "ஆய்தம்" என்று பெயரிட்டனர் போலும்.

**அளபெடை :**

எழுத்துக்களை ஒலிப்பதற்குரிய நேரத்தையும் குறிப்பிட்டிருப்பது மொழியைப் பயன்படுத்தும் வகையில் அடைந்துள்ள முன்னேற்றமேயாகும். எழுத்தொலி நேரத்தைக் கணக்கிடுவதற்கு அடிப்படை அளவாகக் கண்ணிமைப் பொழுதையும் கைந் நொடிப் பொழுதையும் கொண்டனர். ஒரு முறை கண்ணிமைப்பதற்கோ கையை நொடிப்பதற்கோ எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரத்தை மாத்திரை என்றனர். குற்றெழுத்தை ஒலிப்பதற்குரிய நேரம் ஒரு மாத்திரை என்றும் நெட்டெழுத்தை ஒலிப்பதற்கு இரண்டு மாத்திரை என்றும் வரையறுத்தனர். ஓர் எழுத்து இரண்டு

மாத்திரைகட்கு மேலும் நீண்டு ஒலிக்க வேண்டு மென்றால் வேண்டிய மாத்திரைகளின் அளவுகட் கேற்ப நெட்டெழுத்துகட்கு இனமான குற்றெழுத்துக்களைக் கூட்டிக் கொள்ளல் வேண்டும். 'ஆ' இரண்டு மாத்திரைகளை உடைய நெட் டெழுத்து, நான்கு மாத்திரைகள் அளவு ஒலிக்க வேண்டுமென்றால் 'ஆஅஅ' என இரண்டு குற்றெ ழுத்துக்களைச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். ஓர் எழுத்துத் தனியாக நின்று இரண்டு மாத்திரைகட்கு மேல் ஒலிப்பது இல்லை.

"மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே"

என்றும்,

"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்"

என்றும் கூறினர். ஆனால் பின்னூலாக வந்த நன் னூலை இயற்றிய பவணந்தியாரோ, தொல்காப்பியர் கூற்றினின்றும் மாறுபட்டுக் கூறியுள்ளார். நெட்டெ ழுத்தே தன் மாத்திரையின் மிக்கு ஒலிக்கும் என்றும் அவ்வாறு மிக்கு ஒலித்ததன் அடையாளமாக் நெட்டெழுத்தின் இனமான குறில் எழுத்து வரும் என்றும் கூறியுள்ளார். உயிர் அளபெடைக்கு மூன்று மாத்திரை என்றும் வரையறுத்து விட்டார். இவ்வாறு கூறியதன் காரணம் தமிழ் அளபெடையும் வடமொழிப் புலுதமும் ஒன்று என்று பிறழ உணர்ந் ததனால் ஆகும் என்று சுப்பிரமணிய சாத்திரியார் கூறியுள்ளார். வடமொழிப் புலமை தமிழ் மரபை அழித்துள்ளமைக்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாகும். எழுத்துக்கள் ஓசை குறைந்தும் மிகுந்தும் ஒலிக்கும் இடங்கள் நுண்ணிதின் ஆராய்ந்து வகைப்படுத்திக் கூறியுள்ள தொல்காப் பியரின் மொழி நூற் புலமை யாவரானும் போற்று

தற்குரியது. அப்பழங்காலத்திலேயே தமிழ் மொழி அடைந்துள்ள ஒலி வரையறை மாண்பு உணர்ந்து ஒவ்வொரு தமிழரும் உவகைப் பெருமிதம் கொள்ளு தற்குரியார்.

**எழுத்துக்களின் பிறப்பு :**

எழுத்துக்கள் (ஒலி வடிவங்கள்) எவ்வாறு பிறக் கின்றன? நாம் பேசுகின்றோம்; பேச்சொலி செல் கின்றது; சென்று எதிர் நிற்போர் செவியை எட்டு கின்றது. அவரும் பேசுகின்றார்; நம் செவியை எட்டுகின்றது. இவ்வாறு மொழி உயிருடன் வாழ் கின்றது. நாம் எவ்வாறு பேசுகின்றோம்? இதைப் பற்றிச் சிந்திப்பதுதான் பேச்சொலி தோன்றும் முறையை அறியச் செய்வதாகும். மேனாட்டு மொழி நூலறிஞர்கள் இதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங் கியது அண்மையில்தான்; சென்ற நூற்றாண்டி லிருந்துதான். நம் தமிழ் நாட்டில் கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே பேச்சொலி தோன்றும் முறைபற்றி அறியத் தொடங்கிவிட்டனர். அறிந்து எழுத்துக்கள் பிறக்கும் முறையைத் தெளிவாகக் கூறியுள்ளனர். எழுத்துக்கள் பிறக்கும் முறையை அறிந்தால் எழுத்துக்களை நன்கு ஒலிக்க முடியும்; திருத்தமாகப் பேசுதல் இயலும். திருத்தமாகப் பேசுதலே செந்தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரியும். அதனால்தான் எழுத்துக்களைப்பற்றி அறிவித்த ஆசிரியர் தொல்காப்பியனார் அவை பிறக்கும் முறை பற்றியும் அறிவிக்கின்றார்.

எழுத்துக்கள் தோன்றுவதற்குக் காற்றும் உடலுறுப்புக்களும் இன்றியமையாதன. உந்தியி லிருந்து தோன்றும் காற்று நெஞ்சிலும் மிடற்றிலும் தலையிலும் பொருந்துகின்றது. மிடற்று (குரல்வளை)

வழியாக வாயினுள் செல்லுகிறது. மூக்கின் வழியாகவும் வருகின்றது. நாவும் அண்ணமும் (மேல்வாய்) பல்லும், உதடும் பாங்குறப் பொருந்த எழுத்துக்கள் பிறக்கின்றன. இம்முறை எல்லா மொழிகட்கும் பொருந்தும். ஆங்கிலத்தில் கூறினாலும் ஆரியத்தில் கூறினாலும் பொருள் ஒன்றுதான். இம்முறையன்றி வேறு வழியாக மொழி தோன்றுதல் முடியாது. இப்பொதுஒற்றுமையைக்கொண்டு ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழி கடன் பெற்றது என்றல் பொருந்தாது. ஆசிரியர் தொல்காப்பியனார் கூறும் எழுத்துப் பிறப்புப் பற்றிய கருத்துக்கள் வடமொழி நூல்களுள் கூறப்படும் முறைகளோடு சிற்சில இடங்களில் ஒற்றுமையுடையனவாய்த் தோன்றுதலால் தொல்காப்பியர் அவ்வடமொழி நூல்களைப் பின்பற்றியே தம் நூலை இயற்றியிருத்தல் வேண்டும் என்பது எட்டுணையும் பொருந்தாது.

மேலை நாட்டு மொழியாராய்ச்சியாளர்கள் எழுத்துக்களின் பிறப்புப் பற்றிக் கூறும் கருத்துக்கள் (Modern Linguistics - Simeon Potter - Pages 14—15; Language - Vendryes - Pages 20—21) தொல்காப்பியர் கூறும் கருத்துக்களோடு ஒற்றுமையுடையனவாய் இருக்கின்றன. அதனால் தொல்காப்பியர் மேனாட்டு ஆசிரியர்களைப் பின்பற்றியே கூறினார் என்று கூறல் பொருந்துமா? பொருந்தாதன்றோ? மொழிகள் பலவாக வேறுபட்டிருப்பினும் மொழிக்குரிய எழுத்தொலிகள் பிறக்குமிடங்கள் யாவர்க்கும் உரியனவே. உதடும், பல்லும், நாவும், அண்ணமும், குரல்வளையும், மூக்கும், தலையும், நெஞ்சும் அற்ற மக்களும் உளரோ? ஆதலின் தொல்காப்பியர் வட

மொழி நூலாசிரியரைப் பின்பற்றியே கூறினர் எனும் கருத்து பிழைபட்டது. உண்மைக்குப் புறம்பானது.

> "அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
> அளபில் கோடல் அந்தணர் மறைத்தே"

என்னும் அடிகளில் 'அந்தணர் மறைத்தே' என்பதற்குப் 'பார்ப்பாரது வேதத்து உளதே' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். 'அந்தணர்' என்பது வடமொழியாளர்களையும் 'மறை' என்பது வடமொழி வேதத்தையும்தான் குறிக்கும் என்று உரையாசிரியர்களில் சிலர் கருதியது இமயம் போன்ற பெருந்தவறாகும். தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டோருள் சிலரைத் தவறான முனையில் திருப்பி விட்டதும் இத்தவறான உரையே யாம். தமிழ் நூல்களின் கால வரையறையைப் பிறழ உணரச் செய்ததும் இத்தவறேயாம். 'அந்தணர்' என்போர் தமிழரே; மறை என்பது தமிழ் மறையே. பின்னர் ஆரியர்கள் இந்நாட்டுக்கு வந்த பின்னர் அவருட் சிறந்தோரையும், அவர் உயர்வெனக் கருதிய நூலையும், அந்தணர் என்றும் மறை என்றும் அழைத்துக் கொண்டனர். மேலை நாட்டுக் கிருத்துவர்கள் 'ஐயர்' என்றும் 'சாஸ்திரி' யென்றும் அழைத்துக்கொண்டனர் அன்றோ? ஆகவே தொல்காப்பியத்தில் கூறப்படும் அந்தணர் தமிழர்க்குரியவர்; மறை தமிழர்க்குரியது எனத் தெளிதல் வேண்டும். அங்ஙனம் தெளியுங்கால் தொல்காப்பியர் கூறும் எழுத்துக்களின் பிறப்பியல் வடமொழி நூல்களிலிருந்து எடுக்கப்பட்டது அன்று என்றும் அறிய இயலும்.

**உயிர் எழுத்துக்கள் பிறக்கும் முறை :**

பன்னிரண்டு உயிர்களும் மிடற்றின்கண் தோன்றிய வளியான் ஒலிக்கும் எனப் பொதுப் படக் கூறி விட்டுப் பின்னர் வகைப் படுத்திக் கூறு கின்றார். 'அ, ஆ' என்ற இரண்டு உயிர்களும் வாயைத் திறப்பதனால் ஒலிக்கும்.[1] மேலைநாட்டு மொழியாராய்ச்சியாளரும் 'a' பிறக்கும் முறைபற்றி இவ்வாறே கூறுகின்றனர். ஆனால் அங்கு 'a' ஒன்றே இருப்பதனால் சொற்களுக்கேற்ப மாறுதல் உற்று ஒலிக்கும். தமிழில் குறிலும் நெடிலுமாக அமைந்து ஒலிக்கும் முறையில் இரண்டும் ஒரு நிலைத்த தன்மையை அடைந்துவிட்டன.

இ, ஈ, எ, ஏ, ஐ எனும் ஐந்து உயிர்களும் வாயைத் திறத்தலோடு மேல் வாய்ப் பல்லோடு அடிநா விளிம்பு உறுவதனால் பிறக்கும் (நூற்பா-பிறப்பியல்-4). உ, ஊ, ஒ, ஓ, ஔ எனும் ஐந்து உயிர் எழுத்துக்களும் இதழை (உதட்டை)க் குவித்துக் கூறப் பிறக்கும். (நூற்பா-பிறப்பியல் 5)

**மெய்யெழுத்துக்கள் பிறக்கும் முறை :**

தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. 'க' வும் 'ங' வும் நாவின் அடிப்பாகமும் மேல் வாயின் அடிப்பாகமும் துணை புரியப் பிறக்கும். மொழியா ராய்ச்சியாளர் மிடற்றினம் (Guttural) என்று அழைப்பர். 'ச' வும் 'ஞ' வும் நாவின் இடைப் பகுதியும் மேல் வாயின் இடைப் பகுதியும் துணை புரிய உண்டாகும். அண்ண இனம் (Palatals) என்று அழைப்பர். 'ட' வும் 'ண' வும் நாவின் நுனிப் பாகமும் மேல் வாயின் முற்பகுதியும் பொருந்தப் பிறக்கும். நாவினம் (Linguals) என்று அழைப்பர்.

---

1. 'அவற்றுள்
அ ஆ ஆயிரண்டும் அங்காந்து இயலும்.' (தொல். எழுத்து-சூ. 85.)

'த' வும், 'ந' வும் நாவின் நுனி விரிந்து மேல் வாய்ப் பல்லின் (முன்வரிசையில்) அடிப் பகுதியை ஒற்ற உண்டாகும். பல்லினம் (Dentals) என்று அழைப்பர். 'ற' வும் 'ன' வும் நாவின் நுனி மேனோக்கிச் சென்று மேல் வாயைத் தொட முயலப் பிறக்கும். இவ்வெழுத்துக்கள் மேலை நாட்டு மொழி களில் இல்லை. இவைகளையும் அண்ண இனத்தில் சேர்க்கலாம். 'ர, ழ' என்ற இரண்டும் நாவின் நுனி மேனோக்கிச் சென்று மேல் வாயைத் தடவப் பிறக்கும். ய, ர, ல, ழ, வ, ள எனும் இடை யினம் ஆறையும் அரை உயிர் என்பர் கால்டுவல். நாவின் நுனி மேல் வாய்ப் பல்லின் அடியைப் பொருந்தி ஒற்றுவதனுல் 'ல' வும், தடவுவதனுல் 'ள' வும் பிறக்கும். உதடுகள் பொருந்துவதனுல் 'ப, ம' என்ற இரண்டும் பிறக்கும். இதழினம் (Labials) என்பர். மேற்பல்லும் கீழுதடும் பொருந்த வகரம் பிறக்கும். இதழ்ப் பல்லினம் (Labio-dentals) என்பர். மிடற்றிலிருந்து உண்டாகும் காற்று அண்ணத்தைப் பொருந்த 'ய' பிறக்கும். ஆங்கில 'ஒய்' (y) இவ்வாறு பிறப்பதாகவே கூறியுள்ளார் கிளீசன் என்பார். (English 'y' is any mid or high palatal resonant functioning as a consonant. An Introduction to Descriptive Linguistics-Page 198)

மெல்லினம் ஆறையும் அதனுக்குரிய வல்லெழுத் துக்களோடு சேர்த்துக் கூறினுலும், மூக்கின் வளியால் உறுதி பெறத் தோன்றும்,

> "மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கம்
> சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
> மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்."[1]

என்று கூறியுள்ளார்.

1. தொல். எழுத்து-சூ. 100.

மொழியாராய்ச்சியாளர் மெல்லின எழுத்துக்களைப் பிறப்பிடத்தால் மூக்கினம் என்று அழைப்பர் (Nazals). தொல்காப்பியர் கூறியுள்ள பிறப்பிடங்களுக்கு ஏற்ப மொழிநூலார் இட்டுள்ள பெயர்கள் அமைந்துள்ளமை தொல்காப்பியரின் மொழி நூல் புலமையை வெளிப்படுத்துகின்றது. இற்றை நாள் மொழி நூலார், எழுத்துக்களின் ஒலிப்பு முறையை ஆராய்ந்து பேச்சியல் ஒலிப்பு முறை (Articulatory Phonetics) என்றும், இசை இயல் ஒலிப்பு முறை (Acoustic Phonetics) என்றும் இருவகைப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியரும் இவ்விரு வகை ஒலிப்பு முறைகளையும் ஆராய்ந்தறிந்து பேச்சியல் ஒலிப்பு முறையைப் பிறப்பியலில் கூறி இசையியல் ஒலிப்பு முறையை இசை நூலில் காண்க என்று கூறியுள்ளார்.[1] அவர் கூறியுள்ள முறையை நோக்குங்கால், இவ்வகை ஆராய்ச்சி தொல்காப்பியர்க்கு முன்பே தமிழகத்தில் இருந்துள்ளது என்று அறியலாம்.

**புணரியல் :**

மொழி யென்பது உள்ளத்தெழும் எண்ணங்களைப் பிறர்க்கு அறிவித்தற்கென உருவாக்கப்பட்டதாகும். மொழி சொற்களால் ஆகியது. சொல் ஒலிகளால் ஆகியது. எண்ணங்களைப் பிறர்க்கு வெளிப்படுத்த முயலுங்கால் நாவினின்றும் சொற்கள் வெளிப்படுகின்றன. விரைவு, உணர்ச்சி, முயற்சிச் சுருக்கம், எளிமை, இனிமை, மடிமை முதலிய காரணங்களால் சொல்லொலிகள் மாறுபடுகின்றன.

1. 'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.' (தொல்- எழுத்து-சூ. 33.)

உரையாடுங்கால் சொல்லோடு சொல் தொடர்ந்து செல்கின்றன. சொல்லோடு சொல் சேரும்போது தான் மேற்கூறிய ஒலி மாற்றங்கள் மிகுதியாக உண்டாகின்றன. இவைகளைப் பற்றி ஆறு இயல் களில் தெளிவுறக் கூறியுள்ளார், ஆசிரியர் தொல் காப்பியர். சொற்கள் ஒன்றோடொன்று சேருங்கால் உண்டாகும் மாறுதல்களைக் கூறுவதனால் பொது வாகப் புணரியல் என்று பெயரிட்டார். இவ்வாறு விரிவாக எம்மொழியினும் சொற் புணர்ச்சியால் உண்டாகும் ஒலி மாற்றங்கள் கூறப்படவில்லை என்பது தேற்றம்.

சொற்கள் ஒன்றோடொன்று இணைந்து புணருங் கால் இனிமையும் எளிமையும் பொருந்த அமைதலைக் குறிக்கோளாகக் கொண்டு சொற்றொடர்கள் அமைத் தனர் தமிழ் முன்னோர். ஆகவே இவ்வளவு விரிவாகத் தொல்காப்பியரும் கூறியுள்ளார்.

மேலைநாட்டு மொழி ஆராய்ச்சியாளர் மொழி களில் ஏற்படும் ஒலி மாற்றங்களை ஏறத்தாழப் பத்து வகைகட்குள் அடக்கிவிட்டனர் என்று கூறலாம். அவையாவன :—

1. மெய்யொன்றுதல் (Assimilation): மண் + குடம் = மட்குடம். வருமொழி முதலில் உள்ள 'கு' என்ற வல்லெழுத்திற் கேற்ப நிலைமொழி யிறுதி மெல்லின 'ண்' வல்லின 'ட்' ஆக மாறியுள்ளது.

2. மெய்ம் மிகுதல் (Insertion) நும் + ஐ = நும்மை. நுமை என்பது நும்மை எனத் தோன்றியுள்ளது.

3. மொழி முதல் தோன்றல் (Prosthesis) ராமன்; இராமன்.

4. மொழி இடை தோன்றல் (Epenthesis) ஆய் தல்; ஆராய்தல்.

5. வேறினப்படுதல் (Dissimilation) முள்+தீது : முஃடீது.

6. ஓரின ஒலிகுன்றல் (Haplology) ஆதன் + தந்தை : ஆந்தை.

7. ஒலியிடை மாறுதல் (Metathesis) சிவிறி : விசிறி.

8. தடுமாறு புணர்ச்சி ((Metanalysis) அவனு மக்கு : அவன் நுமக்கு என்று பிரித்தற்கு மாருக அவன் உமக்கு என்று பிரித்து விட்டனர்.

9. ஒலி நயம் குறித்து உயிர் ஒருவகைப் படுதல் (Harmonic sequence of vowels): உப்பின்றி புற்கை உண்க : உப்பின்று புற்கை உண்க : 'இன்றி' என்பதன் இறுதியில் உள்ள 'இ' முன்னும் பின்னும் வந்துள்ள உகரங்களால் 'உ' வாக மாறி விட்டது.

10. மொழி இறுதி தோன்றல் (Paragoge) ஏழ் : ஏழு. இவைகள் எல்லாம் தமிழினும் உண்டு. இவை யன்றிப் பிறவும் உண்டு. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தின் வழக்கும் செய்யுளும் ஆராய்ந்து வகையுறக் கூறியுள்ள அழகே அழகு.

சொற்ருெடர்களில் சொற்கள் ஒன்ருேடொன்று சேர்வதனுல் உண்டாகும் ஒலி மாற்றங்களை ஆறு இயல்களால் விரித்துக் கூறுகின்ருர்.

புணரியல் என்ற தலைப்பில் சொற்புணர்ச்சி பற்றிய பொது விதிகளை அறிவுறுத்துகின்ருர். ஒரு சொற்ருெடரில் பல சொற்கள் இருப்பினும் இவ் விரண்டாகவே சொற்கள் சேரும். முதலில் நிற்பது நிலைமொழி என்றும் அதனுடன் வந்து சேர்வதை

வருமொழி என்றும் அழைப்பர். நிலை மொழியை 'நிறுத்த சொல்' என்றும் வருமொழியைக் 'குறித்து வருகிளவி' என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் அழைப்பர். சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் உயிரோ மெய்யோ வரும். சொல்லுக்கு முதலில் தனி மெய் வாராது. உயிர் மெய்தான் வரும். 'கடவுள்' என்ற சொல்லின் முதலில் வந்திருப்பது 'க' என்ற உயிர் மெய்தான் என்றாலும் அதனைப் பிரிக்குங்கால் (க்+அ) முதலில் நிற்பது மெய்தான். ஆதலின் இச்சொல்லின் முதல் எழுத்து 'மெய்' என்றுதான் கூறல் வேண்டும். இவ்வாறுதான் 'மெய்' மொழியின் முதலெழுத்தாக வரும். தனி மெய்யாகவோ இரண்டு மூன்று மெய்கள் சேர்ந்தோ மொழிக்கு முதலில் வருதல் இல்லை. சொல்லின் இறுதியில் தனிமெய்வரும்; உயிர்மெய் வரும். அளபெடையில்தான் உயிர் வரும் (ஏஎ). 'அரசி' என்ற சொல்லில் 'சி' என்ற உயிர் மெய் வந்திருப்பினும் சொல்லின் இறுதி 'இ' என்றுதான் கொள்ள வேண்டும். 'சி' யைப் பிரிக்குங்கால் (ச்+இ) இறுதியில் நிற்பது 'இ' ஆகும். ஆதலின் 'உயிர் மெய்' சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வந்தால் சொல்லுக்கு முதலில் மெய் என்றும், இறுதியில் உயிர் என்றும் கொள்ளல் வேண்டும்.

சொற்கள் ஒன்றோடொன்று சேருங்கால் மூன்று வகையான ஒலி மாற்றங்கள் நிகழக் காணலாம். அவையாவன மெய் பிறிதாதல் (பொன்+குடம்= பொற்குடம்), மிகுதல் (யானை+கோடு=யானைக் கோடு), குன்றல் (மரம்+வேர்=மரவேர்) என்பன வாம்.

சொற்கள் இலக்கண முறையிலன்றி மாறியும் நிற்கும். 'இல்முன்' என்பது 'முன்றில்' என்றும், 'நகர்ப்புறம்' என்பது 'புறநகர்' என்றும் வருகின்றன. இவை வழக்காற்றில் பன்னெடுங் காலமாகப் பயின்று வந்துள்ளமையால் இலக்கண நெறியில் பொருந்தியனவாகவே கருதுதல் வேண்டும். மரூஉ மொழிகள் என்று அழைப்பர். சொற்கள் சேருங்கால் வேற்றுமைப் பொருளுடையனவா? அல்வழிப் பொருளுடையனவா? என்று அறிந்து கொள்ளல் வேண்டும். வேற்றுமைப் பொருளுடையனவாய் இருப்பின் வேற்றுமையுருபுகள் இடையே வந்து சேரும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய ஐ, ஒடு, கு, இன், அது, கண் எனப்படும் வேற்றுமை உருபுகள் பெயர்களுடன் வந்து சேரும். தமிழில் வேற்றுமையுருபுகள் பெயர்க்குப் பின்தான் வருமே யன்றிப் பெயர்க்கு முன் வாராது. பெயர்களோடு வேற்றுமையுருபுகள் சேருங்கால், தனி எழுத்தோ சாரியையோ ஓசை இனிமைக்காகச் சில இடங்களில் வரும்.

சொற்களின் தொடர்ச்சிக்கண் உயிருக்கு முன்னல், உயிரும் மெய்யும், மெய்க்கு முன்னல் மெய்யும் உயிரும் வரும். அவ்வாறு வருங்கால் உயிருக்கு முன் உயிர் வந்தால் இரண்டையும் ஒன்று சேர்க்க இடையில் சில மெய்கள் வரும். இம்மெய் களுக்கு உடம்படுமெய்கள் என்று பெயர். இரண்டு சொற்களை இன்னேசை பட ஒன்று படுத்துவதால் இப்பெயர் பெற்றன. மிதி+அடி=மிதியடி. இங்கு 'ய்' வந்துள்ளது. திரு+அடி=திருவடி. இங்கு 'வ்' வந்துள்ளது. செய்கு+அர்=செய்குநர். இங்கு

'ங்' வந்துள்ளது. கட்டி+அ=கட்டின. இங்கு 'ன்' வந்துள்ளது.

பிற்கால இலக்கண நூலார் யகரம் வகரம் இரண்டுமே உடம்படு மெய்களாக வரும் என்றும் யகரம் இ, ஈ, ஐ க்குப் பின்னும், வகரம் ஏனை உயிர் கட்குப் பின்னும், 'ஏ' க்குப் பின்னல் இவ்விரண்டு மெய்களும் வரும் என்றும் கூறிச் சென்றனர். 'ங்' அல்லது 'ன்' தோன்றுதலை எழுத்துப் பேறு என்றும் சாரியை என்றும் குறிப்பிட்டனர். ஆசிரியர் தொல்காப்பியர் இவ்வாறெல்லாம் வகை செய்யாமல்

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்"

என்று விதித்துள்ளார்.

நிலைமொழி இறுதியினும் வருமொழி முதலினும் உயிர் எழுத்துக்கள் அமைந்து சொற்றொடர் ஆகுங் கால் இன்னோசையின்றி விட்டிசைக்க நேரிடும். 'வழி அன்று' என்பதனையும் உடம்படு மெய் பெற்ற 'வழி யன்று' என்பதனையும் ஒலித்துப் பார்த்து வேறுபாடு அறியலாம். இரண்டு உயிர்கள் சேர்ந்து வருங்கால் எளிதாக ஒலிக்க முடியாத இடர்ப்பாட்டைத் தவிர்க்கவே மெய்யெழுத்துக்களைக் கூட்டி ஒலிக்கும் முறையைத் தமிழ் நூலார் மேற் கொண்டனர். தொடக்க காலத்தில் பல மெய்களைப் பயன்படுத்தி யிருத்தல் கூடும். காலப் போக்கில் 'ய்' 'வ்' என்ற இரண்டுமே நிலைத்து விட்டன. இவ்விரண்டு மெய்களும் இன்னின்ன இடங்களுக் குரியன என வரன் முறையும் ஏற்பட்டு விட்டது. "இத்தகு வரன் முறை, மொழி வளர்ச்சிப் பண் பாட்டின் பயனாகவே தோன்றியுள்ளது" என்று அறிஞர் கால்டுவெல் குறித்துள்ளார். (This use of 'v' in one conjunction of vowels, and of 'y' in another is

doubtless a result of the progressive refinement of the language - Comparative grammar—page 174) இன்று இம்முறை தமிழ் மொழிக்குரிய இயற்கை இயல் பாகிக் கல்லாதாரும் உடம்படு மெய்யுடன் உரையாடக் காண்கிறோம். வ ர வி ல் லை (வர+இல்லை), செய்யவில்லை (செய்ய+இல்லை) என்பனவற்றை நோக்குங்கள்.

சொற்களைச் சொல்லுங்கால் குரல் வேறுபட்டால் பொருள் உணர்த்தும் முறை எல்லா மொழிகளிலும் காணப்படும். 'நீ உண்பாய்' என்னுங்கால் எடுத்தலோசை படக் கூறினால் கட்டளைப் பொருளும் படுத்தலோசையாற் கூறினால் வேண்டுதல் பொருளும் வெளிப்படுவதைக் காணலாம். 'அசை யழுத்தம்' (Accent) தமிழிலும் உண்டு.

சொற்றொடர்களில் எழுத்துக்கள் ஒரேவகையாக அமைந்திருந்தாலும் ஓசை வேறுபாட்டால் பொருள் வேறுபடும்.

> "எழுத்தோர் அன்ன பொருள் தெரிபுணர்ச்சி,
> இசையில் திரிதல் நிலைஇய பண்பே"

'செம்பொன் பதின் தொடி' என்ற தொடரினை 'செம்பு ஒன்பதின் தொடி' எனவும் 'செம்பொன் பதின்தொடி' எனவும் ஓசையறுத்துக் கூறுங்கால் பொருள் வேறுபடுவதை அறியக்கூடும்.

'குன்றேறுமா' என்பதனைக் 'குன்று ஏறு மா' எனப் பிரிப்பின் 'மலையின் மீது ஏறுத விலங்கு' எனவும் 'குன்றேறு மா' எனப் பிரிப்பின் 'விலங்குகள் (இப்பொழுது) மலையின் மீது செல்லா' எனவும் பொருள்படும்.

'தொகை மரபு' என்ற இயலில் பின்வரும் இயல்களில் கூறவேண்டுவனவற்றுள் பொதுவான

நெறி முறைகளைக் கொண்டனவற்றை யெல்லாம் தொகுத்துக் கூறுகின்றார்.

உருபியலில், சொற்களோடு உருபுகள் வந்து சேருங்கால் உண்டாகும் மாற்றங்களை விளக்கு கின்றார். பெயரும் வேற்றுமையுருபும் சேருங்கால் இரண்டும் ஒற்றுமையுறப் பொருந்தி இன்னோசை பட ஒலிப்பதற்கு எழுத்தோ சாரியையோ இடையில் சேர்தல் வேண்டியுள்ளது.

மரம்+ஐ=மரத்தை (மரம்+அத்து+ஐ). மரம் என்ற பெயருடன் இரண்டாம் வேற்றுமையுருபு 'ஐ' சேருங்கால் 'மரமை' என்று கூறுதல் இல்லை. 'மரத்தை' என்றுதான் கூறுகின்றோம். இடையில் 'அத்து' என்ற சாரியை வந்துள்ளது. இவ்வாறு வரும் சாரியைகளைப் பற்றியும் வேற்றுமையுருபுகளை ஏற்குங்கால் பெயர்கள் அடையும் மாற்றங்களையும் தெளிவுறக் கூறுவதே உருபியல் என்று உணர்தல் வேண்டும். உயிர் மயங்கியல், நிலைமொழியிறுதியில் உயிர் எழுத்துக்கள் நிற்குங்கால் வருமொழி முதலில் மெய் எழுத்துக்கள் இருந்தால் சொற்றொடரில் உண்டாகும் மாற்றங்களை அறியலாம். உயிர்களோடு மெய்யெழுத்துக்கள் கலந்து தொடர் அமைவதால் உயிர் மயங்கியல் என்று பெயரிடப்பட்டுள்ளது. மயங்குதல் என்றால் கலத்தல் என்று பொருள் தரும். இங்கு 'அ' விலிருந்து 'ஔ'காரம் இறுதியாக ஒவ்வொரு உயிர்க்குப்பின்னால் சொற்கள் வந்து சேருங்கால் எவ்வாறு சேருகின்றன என்பது தெளிவுறக் கூறப்பட்டுள்ளது.

உயிர்க்குப் பின்னால் உயிர் வந்தால் உடம்படு மெய் பெறும் என்று புணரியலில் கூறிவிட்டமையான் இங்கு உயிர்க்குப் பின்னால் மெய்கள் வரும் முறை பற்றியே ஆராய்ந்து கூறப்படுகின்றது.

வருமொழி முதலில் நிற்கக் கூடிய மெய்கள் வல்லினத்தில் க, ச, த, ப ; மெல்லினத்தில் ஞ, ந, ம ; இடையினத்தில் ய, வ ; பிற மெய்கள் மொழிக்கு முதலில் வாரா. இங்ஙனம் வாரா என ஒதுக்கப் பட்டவற்றுள் சில வருமேல், அவை ஊர்ந்து வரும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல என அறியலாம்.

'புள்ளி மயங்கியல்' என்பது நிலைமொழி யிறுதியில் மெய்யெழுத்து நின்று வரு மொழியுடன் தொடர்புகொள்ளும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவ தாகும். மெய்யெழுத்தைப் 'புள்ளி' என்று அழைக் கின்றார். புள்ளி பெற்று வருவதே மெய்யெழுத்தின் தன்மையதாகும்.[1] புள்ளி பெறும் எழுத்தைப் புள்ளி என்றே அழைப்பது ஆகு பெயர்.

'ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள' என்ற பதினொரு மெய்களே சொல்லின் இறுதியில் நிற்கும் என்று மொழி மரபில் கூறினார்.[2] அவ்வரிசையிலேயே 'ஞ' முதலாகத் தொடங்கி ஒவ்வொரு மெய்யிறுதி யும் கூறிச் செல்கிறார்.

அகர வரிசை பற்றிக் கூறும் முறை தொல் காப்பியர் காலத்திலேயே தமிழர் அறிந்திருந்தனர் என்பது தொல்காப்பியத்தால் அறியக் கிடக்கின்றது. உயிர் மயங்கியலும் புள்ளி மயங்கியலும் தெற்றெனக் காட்டி நிற்கின்றன. 'குற்றியலுகரப் புணரியல்' என்பது நிலைமொழி இறுதியில் குற்றியலுகரம் நின்று வருமொழிகளோடு சேருங்கால் உண்டாகும் மாறுதல்களைக் கூறுகின்றது. தமிழ்ச் சொற்களி னிறுதியில் வல்லெழுத்தாறும் வருதல் இல்லை. ஆனால் அவை உகரத்தோடு சேர்ந்து சொல்லிறுதியில்

1. "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" (தொல். எழுத்து-சூ. 15)

2. "ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் அப்பதினொன்றே புள்ளி யிறுதி" (தொல். எழுத்து-சூ. 78.)

வரும். இரண்டெழுத்தாலான சொற்களில் நகு, புகு, படு போல் வனவற்றுள் 'உ' வந்திருப்பினும் குற்றிய லுகரம் எனப்படாது. இரண்டெழுத்தால் ஆன சொல்லாயிருப்பின் முதலெழுத்து நெடிலாயிருந்தால் அதனோடு வந்துள்ள உகரம் குற்றிய லுகரமாகும். 'நாகு' 'ஆடு' என்பனவற்றுள் வந்துள்ள உகரம் குற்றிய லுகரம் எனப்படும். இவ்வாறு நெட்டெ ழுத்தோடுசேர்ந்து வந்துள்ள குற்றியலுகரம் நெடிற் றொடர் குற்றிய லுகரம் எனப்படும். தொல்காப்பியர் ஈரெழுத்தொருமொழித் தொடர் என்பர். ஏனைய, உயிர்த் தொடர், இடைத் தொடர், ஆய்தத் தொடர், வன்றொடர், மென்றொடர் எனப்படும். இவை குற்றிய லுகரத்திற்கு அயலே வந்துள்ள எழுத்தால் பெயர் பெற்றுள்ளன.

விறகு: உயிர்த்தொடர், 'கு'வுக்கு அடுத்த எழுத்து உயிர் மெய்யாக இருப்பினும் அதையும் பிரிப்பின் (ற்+அ) உயிர் எழுத்தே அயலிலிருப்பதை அறியலாம். ஆதலின் உயிர்த் தொடரில் குற்றிய லுகரத்துக்கு அயலெழுத்து உயிர் மெய்யாகவே இருக்கும்.

சார்பு: இடைத் தொடர், 'பு'வுக்கு அடுத்த எழுத்து இடையின எழுத்தாம் 'ர்' ஆகும். ஆதலின் இடைத் தொடர்.

எஃகு: ஆய்தத்தொடர். 'கு'வுக்கு அடுத்திருப் பது ஆய்த எழுத்து. ஆதலின் ஆய்தத்தொடர்.

கொக்கு: 'கு'வுக்கு அடுத்த எழுத்து வல்லி னம் 'க்' ஆதலின் வன்றொடர்.

குன்று: 'று'வுக்கு அடுத்த எழுத்து மெல்லி னம் 'ன்' ஆகவே மென்றொடர்.

குற்றியலுகரத்துக்கு அடுத்துவரும் எழுத்துக்களைக் கொண்டே அவைகளுக்குப் பெயரிடப்பட்டுள்ளன. இவ்விடங்களில் வரும் உகரம் பிற இடங்களில் வரும் உகரத்திலும் ஓசை குறைந்திருப்பதால் குற்றியலுகரம் எனப்பட்டது.

வல்லின மெய்கள் சொல்லினிறுதியில் வருங்கால் ஒலிப்பது எளிதாக இன்று, ஆதலின் உகரத்தைச் சேர்த்து ஒலித்தனர் போலும், அவ்வுகரமும் தனக்குரிய மாத்திரையினைப்பெறாது அதனினும் குறைந்து ஒலிக்கின்றது. இன்று ஏனைய மெய்களில் முடியும் சொற்களிலும் உகரம் சேர்த்து ஒலிக்கக் காண்கின்றோம். நானு; கேளு; நெல்லு. தெலுங்கு மொழியில் எல்லா மெய்களும் இறுதியில் உகரத்தைச் சேர்த்துத் தான் ஒலிக்கப்படுகின்றன. இவ்வாறு உகரம் சேர்த்து எளிதாகக் கூறப்படுவதினாலேயே தெலுங்கு இன்னோசையுடைய மொழியெனக் கூறப்படுகின்றது. இவ்வாறு வல்லின மொழிந்த ஏனைய மெய்களிலும் உகரம் சேர்ந்த காலம், தெலுங்கு தமிழினின்றும் பிரிந்த காலத்திற்கும் பிறகுதான் என்று அறியலாம்.

மலையாள மொழியில் இக் குற்றியலுகரம் வருமிடங்களில் குறில் அகரம் இடம் பெறுகின்றது. வடமலையாளத்தில் இக் குற்றியலுகரம் இன்னும் குறியதாக்கப்படுகின்றதாம். ஆங்கு இதனை வரிவடிவில் காட்டாமல் ஈற்றெழுத்தின்மீது சிறுபுள்ளி இடப்பட்டுக் காட்டப்படுகின்றதாம்: கிழக்கு — கிழக்க்.

இக் குற்றியலுகரத்தை 'ஒலிப்பு உகரம்' என்று அழைக்கலாம் என்றும், இதனைப் பயன்படுத்தும் முறையும் செயலும் இந்திய ஐரோப்பிய மொழி வழக்கிற்குப் புறம்பானவை என்றும், இது வடமொழியிலிருந்து கொள்ளப்பட்டது அன்றென்றும், வட

மொழியின் ஒலிமுறை விதிக்கே மாறுபட்டதென்றும் அறிஞர் கால்டுவெல் கூறியுள்ளார் (ஒப்பிலக்கணம் பக்கம் 135). தமிழ் மொழி நூலார் குற்றியலுகர ஒலி நுட்பத்தை நன்கு அறிந்திருந்தனர் என்பது தொல்காப்பியர் இதற்கெனத் தனியியல் வகுத்து விரித்துக் கூறியிருப்பதிலிருந்தே நன்கு தெளியலாகும்.

இற்றை நாள் மொழி நூலறிஞர்கள் சொற்களில் தோன்றும் ஒலிகளை (Phonemes) வகைப்படுத்தி ஆராய்ந்து வருவதுபோல் ஆசிரியர் தொல்காப்பியர் தமிழ்மொழி ஒலிகளை ஒன்பது இயல்களால் நானூற்று எண்பத்து மூன்று நூற்பாக்களால் தெளிவு பெற ஆராய்ந்து கூறியிருக்கும் சீர்மை கற்று மகிழ்வதற்குரியது. அங்ஙனம் விரிவாக ஆராய்ந்தும் உயிர் உள்ள மொழி, மாற்றத்திற்குரியதாகும் என்ற உண்மையை ஓர்ந்து,

> "கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்
> வழங்கியல் மருங்கில் மருவொடு திரிநவும்
> விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
> வழங்கியல் மருங்கில் உணர்ந்தனர் ஒழுக்கல்
> நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்"

என்றும் கூறியுள்ளார். சொற்களின் ஒலிக் கூறுகளைப் பற்றி அறிந்த நாம் இனிச் சொற்களைப் பற்றி அவர் கூறும் கருத்துக்களை அடுத்த இயலில் ஆராய்வோம்.

# சொல்

6—1454

# II

## சொல்

சொல்லே மொழியின் தோற்றமாகும். "ஆதியில் இருந்தது சொல்; அச்சொல் கடவுளோடு இருந்தது; அச்சொல்லே கடவுள்" என யோவான் (St. John) என்பவர் கூறியுள்ளார். நம் கருத்தை வெளிப் படுத்தும் கருவியாம் சொல் இன்றெனின் உலகமே இன்றெனக் கூறிவிடலாம். நாம் நினைக்கத் தொடங்கும்போதே சொற்றொடர்களில்தான் நினைக் கின்றோம். (We think in Sentences - Language by Vendryes - Page 73) தொல்காப்பியர் இதனை உணர்ந்தே சொற்படலத்தின் முதலியலாகக் 'கிளவி யாக்கம்' என்பதைக் கொண்டு சொற்றொடர் ஆகும் மரபுகளை ஆராய்ந்துள்ளார்.

சொல் உருவாக்கப்பட்டது பொருளை அறிவிக் கவே. எவ்வகையானும் பொருளை அறிவியாத நிலையில் சொல் தோன்றாது. ஆதலின் தொல்காப்பியர் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்றார். இது உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் உலகப் பொது உண்மையாகும். இதனையே வடமொழியாளர் 'அர்த்த பதம்' என்றும் 'சப்தம் பதம்' என்றும் கூறிப் போந்தனர்.

'சொல்' பொருளையும் விளக்குகிறது. தன்னையும் அறிவிக்கின்றது. 'உலகம்' என்ற சொல் 'உலகம்' எனும் ஒரு பொருளை அறிவிக்கின்றது. 'உலகம்' எனும் சொல் என்ன சொல் என்பதனையும் அறிவிக்கின்றது. ஆகவே,

> "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லி னாகும் என்மனார் புலவர்"

என்றார் தொல்காப்பியர்.

சொல், பொருளை விளக்குங்கால் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளக்கும்.

'அவன் சோறுண்டான்' என்பது வெளிப்படை. 'கால் கழுவி வந்தான்' என்பது குறிப்பு. "சொற்களின் வகைகளைப் பாகுபடுத்துவது என்பது எளிதன்று" என்றார் மேலை நாட்டு மொழிநூலார், ஒருவர். (The difficulty of classifying the parts of speech is so great that no satisfactory arrangement has yet been made - Language Page—115.) தொல்காப்பியர் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காக வகுத்துக் கொண்டார். ஆயினும் பெயர், வினை என்ற பெரும் பிரிவினுள் எல்லாச் சொற்களையும் அடக்கலாம் என்று கூறினார்.

> "சொல்லெனப் படுப பெயரே வினையென்று
> ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே"

இக்கருத்தினையே பிரஞ்சு நாட்டு மொழி நூலறிஞ

ராம் வெண்டிரிசும் கூறியிருப்பது தொல்காப்பியரின் மொழி நூற் புலமையைப் புலப்படுத்துவதாகும்.

(Pursuing the process of elimination, we end by leaving intact only two parts of speech the noun and the verb)

இச்சொற்கள் பற்றிய வரலாறு திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் என்பனவற்றுள் அடங்கும்.

திணை என்ற பிரிவு தமிழுக்கே உரியது; வேறு எம்மொழியினும் காணப்படாதது; திணை இரண்டு வகைப்படும்; உயர்திணை, அஃறிணை. மக்கள் உயர் திணை; மற்றவை அஃறிணை.

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே."

பால் ஐந்து வகைப்படும்; ஆண், பெண், பலர் என்பன மூன்றும் உயர்திணைக்குரிய; ஒன்று பல என்பன இரண்டும் அஃறிணைக்குரியன.

தமிழில் திணை, பால் கொள்ளும் முறை மிக எளிமையானது; இயற்கை நெறியை ஒட்டியது. இந்தோ ஐரோப்பிய மொழிகள் பல, உயிருள்ளன, உயிரில்லன அனைத்தையும் உயர்திணையாகவே கொண்டு ஆண் பெண் என்ற இரு பிரிவுக்குள் அடக்கி விட்டன. சித்திய மொழிக்குழுவினுள் பல எல்லாவற்றையும் அஃறிணையாகவே கொண்டு ஒன்று, பல என்ற இரு பாலுக்குள் அடக்கிவிட்டன. தமிழ் ஒன்றுதான் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து அதனையுடைய மக்களை உயர்திணையெனக்

கூறியுள்ளது. திணை பால்களை வினைச் சொல்லின் ஈற்றெழுத்தால் அறியலாம். 'ன்' ஆண்பாலையும், 'ள்' பெண்பாலையும், 'ர், ப, மார்' என்பன பலர் பாலையும், து, று, டு என்பன ஒன்றன் பாலையும், 'அ, ஆ, வ' என்பன பலவின் பாலையும் அறிவிக்கும். இவ்வாறு ஒழுங்குறத் திணை பால் அறிவிக்கும் முறையை நம் தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே பெற்றுள்ளது.

பெயர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன. உயர்திணைக்குரியன; அஃறிணைக் குரியன; இருதிணைக்குரியன.

இரு திணைக்கும் உரிய பெயரை விரவுப் பெயர் என்பர். சாத்தன் வந்தான் என்பது உயர்திணை ஆண்பால்; சாத்தன் வந்தது என்பது அஃறிணை ஒன்றன்பால். அஃறிணைக்கும் பெயரிட்டு அழைக்கும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் இருந்தது என் பதை இவ்விரவுப் பெயர்ப் பகுப்பால் அறியலாகும்.

யான் யாம் நாம் என்னும் தன்மைப் பெயர்களை உயர்திணைக்குரியன என்று கூறிய தொல்காப்பியர் நீ, நீயிர் என்னும் முன்னிலைப் பெயர்களை விரவுத் திணைக்குரியன என்று கூறியுள்ளார். அஃறிணைக் குரியன யான், யாம் எனக் கூறிக்கொள்ளும் ஆற்றல் அற்றன. ஆகவே யான், யாம் என்பனவற்றை அவை களுக்கு உரியன அல்ல என்று விளக்கியுள்ளார். ஆனால் அவைகளை நோக்கி நீ, நீயிர் என்று விளிக்க லாம். அவ்வாறு விளிப்பதை அவை அறிய முடியாது போயினும், விளித்துக் கூறுவது புலவர்கள் மரபு. ஆகவே நீ, நீயிர் எனும் முன்னிலைப் பெயர்களை இருதிணைக்கும் உரியனவாக்கியுள்ளார்.

தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் ஆண் பெண் எனும் இருபால்களுக்கும் பொது வானவைகளே. சில மொழிகளில் உள்ளவாறு ஆணுக்கு வேறு; பெண்ணுக்கு வேறு கொள்ள வில்லை.

அஃறிணைப் பெயர் பன்மை எண்ணைச் சுட்டுகின்ற போது 'கள்' விகுதி பெற்றுவரும்.

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே."

இக் கள் விகுதி தொல்காப்பியர் காலத்தில் அஃறிணைப் பன்மையை அறிவிப்பதற்கு மட்டும் பயன் பட்டு வந்துள்ளது. பின்னர் உயர்திணைப் பலர்பாலை அறிவித்தற்குப் பயன்பட்டது: தமர்கள், அரசர்கள், அவர்கள். பின்னர் பலர்பால் வினையிலும் பயன் படுத்தப்பட்டது: அவர்கள் சொன்னார்கள். பலர் பால் வினையைப் பெயராக ஆக்கிய போது கள் விகுதி சேர்த்தே கூறப்பட்டது. ஆகவே வினையா லணையும் பெயரிலும் இணைந்து நின்றது. இன்று 'கள்' விகுதி, அஃறிணைப் பன்மையோடு, உயர் திணைப் பன்மையையும், உயர் சொற் கிளவியை (மரியாதைப் பன்மை)யும் அறிவிக்கின்றது.

அஃறிணை இயற்பெயர், 'கள்' விகுதியைப் பொருந்தாமல், வினையாலும் பன்மையை உணர்த் தின: குதிரை வந்தன.

"தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே"

என்று தொல்காப்பியர் கூறியுள்ளமையின் அவர் காலத்திலேயே இம்முறை வழக்கத்தில் இருந் துள்ளது என்று அறியலாம்.

அஃறிணையில் ஒருமை பன்மை உண்டு. பெயரைப் பன்மைப் படுத்துங்கால் 'கள்' விகுதி சேர்த்தல் வேண்டும். 'கள்' விகுதி சேர்க்கவில்லையேல் பன்மையை வினையைக் கொண்டு அறிய வேண்டும்.

"பால் பகா அஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய" என்று நன்னூலாசிரியர் பவணந்தியார் கூறிவிட்டார். நன்னூலை மட்டும் அறிந்த கால்டுவெல் அவர்கள் "தமிழ்ப் பெயர்ச் சொற்களின் எண், சிறப்பாக அஃறிணைப் பெயர்களின் எண், வரையறுக்கப் படுவதில்லை; ஒரு பெயர் பன்மையா அல்லது ஒருமையா என்பது அப்பெயர் வரும் இடத்தையும் அது குறிக்கும் பொருளையும் நோக்கியே கொள்ளப் படும்" என்று கூறியிருப்பது உண்மை நிலைக்கு மாறானது. மக்கள் - கல்லாதவர் - பேச்சு வழக்கு அவ்வாறு கூறும்படி செய்துவிட்டது.

பெயர்களும் திணை பால் எண் அறிவிக்கும் விகுதிகளைப் பெற்று வருவதே தமிழ் இலக்கண மரபாக இருந்தது. ஆயினும் காலப் போக்கில் அம் மரபு சிதைந்து விட்டது. 'அலவன்' என்ற சொல்லில் ஆண்பாலை அறிவிக்கும் 'ன்' இருப்பினும், அச்சொல் உயர்திணை ஆண்பாலுக்குரியது அன்று; அஃறிணை ஒன்றன் பாலுக்குரியது. 'மக்கள்' என்பதில் 'ள்' இருப்பினும் பெண் பாலன்று. 'நம்பி' என்பதில் னகர ஒற்று இல்லையாயினும் உயர்திணை ஆண்பாலுக்குரிய சொல்லாகும். ஆகவே தொல்காப்பியர்

> "இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
> ஈற்றில் நின்றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
> தோற்றம் தாமே வினையொடு வருமே."

என்று கூறியுள்ளார்.

**வேற்றுமை :**

பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. ஆகவே வேற்றுமை பெயர்க்குரிய இயல்புகளுள் ஒன்றெனக் கருதப்பட்டது. சொற்றொடர் (Syntax) மரபுகளைக் கிளவியாக்கத்தில் கூறிய தொல்காப்பியர், சொற்றொடர் அமைப்புக்குப் பெரிதும் இன்றியமையாததான வேற்றுமையை அடுத்துக் கூறுகின்றார்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு தமிழில் ஏழு வேற்றுமைகளே கொள்ளப்பட்டன. விளி வேற்றுமையை (எட்டாம் வேற்றுமையை)த் தனியாகக்கொண்டு ஆராய்ந்து வந்துள்ளனர். தொல்காப்பியர்தாம் விளியையும் சேர்த்து வேற்றுமை எட்டெனக் கூறியுள்ளார்.

> "வேற்றுமை தாமே ஏழென மொழிப"
> "விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே"

என்ற நூற்பாக்கள் தெள்ளிதின் உணர்த்துகின்றன. தொல்காப்பியர் விளி மரபு என்ற பெயரால் தனி இயலில் எட்டாம் வேற்றுமையை விளக்குவதிலிருந்து அது தமிழில் பெற்றிருந்த முதன்மையை அறியலாம். வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு என மூன்று இயல்களால் வேற்றுமை ஆராயப்படுவதிலிருந்து மொழி அமைப்பிற்கும் வழக்கிற்கும் வேற்றுமை எவ்வளவு வேண்டற்பாலது என்பதனைத் தெள்ளிதின் அறியலாகும். மொழியின் செம்மைக்கும் கருத்து விளக்கத்திற்கும் துணையாய் உள்ள வேற்றுமை பற்றிய ஆராய்ச்சி தமிழில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தோன்றி ஒழுங்குற வளர்ந்துள்ளது.

முதல் வேற்றுமையைப் பெயர் வேற்றுமை என்றும் எழுவாய் வேற்றுமை என்றும் அழைத்துள்ளனர். ஏனை வேற்றுமைகளை அவ்வவற்றின் உருபுகளாலேயே அழைத்தனர். அவை, ஐ வேற்றுமை, ஒடு வேற்றுமை, கு வேற்றுமை, இன் வேற்றுமை, அது வேற்றுமை, கண் வேற்றுமை எனப்பட்டன.

தொல்காப்பியர் "இரண்டாகுவதே, ஐயெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி", "மூன்றுகுவதே, ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" எனக் கூறிச் செல்கின்றூர். பவணந்தியார் தம் நன்னூலில் 'பெயரே ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி யென்ருகும் அவற்றின் பெயர் முறை" என்று கூறி விட்டு, "இரண்டாவதன் உருபு" 'மூன்ருவதன் உருபு', 'நான்காவதன் உருபு' என்று கூறிச் செல் கின்ருர். இதனைக் கண்ணுற்ற கால்டுவல், திராவிட இலக்கண ஆசிரியர்கள் தம் மொழி பெயர்ச் சொற் களின் வேற்றுமைகளைச் சமசுகிருத முறையினைப் பின்பற்றி வரிசைப்படுத்தி யிருப்பதாகக் கருதி விட்டார்.

அறிஞர் சுப்பிரமணிய சாத்திரியார், பாணினியையும் அவர்க்கு முன்புள்ளவர்களையும் பின்பற்றித் தொல்காப்பியர், தமிழ் வேற்றுமைகட்கு இரண்டாம் வேற்றுமை, மூன்ரும் வேற்றுமை எனப் பெயரிட்டார் என்று கூறுகின்ருர் (History of grammatical Theories in Tamil - Page 109). தொல்காப்பியர் இரண்டாகுவதே, மூன்றுகுவதே என வரிசைப் படுத்திக் கூறியுள்ளாரே யன்றி இரண்டாம் வேற்றுமை, மூன்ரும் வேற்றுமை எனக் கூறினாரிலர். அன்றியும், ஐ எனப் பெயரிய வேற்றுமை, ஒடுவெனப் பெயரிய

வேற்றுமை என்றும் குறிப்பிட்டுள்ளமையை நோக்குதல் வேண்டும். பாணினி தொல்காப்பியர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பதனையும் அறிதல் வேண்டும். ஆகவே கால்டுவல் அவர்களும் சாத்திரியார் அவர்களும் கருதுவது போன்று வடமொழியைப் பின்பற்றித் தமிழ் இலக்கண நூலார் தமிழ் வேற்றுமைகளை வரிசைப் படுத்தினுர் என்றலோ, தொல்காப்பியர் வேற்றுமைகட்குப் பெயரிட்டனர் என்றலோ பொருந்தாது.

வேற்றுமைகட்குப் பெயரிடுதல் இரண்டாவது மூன்ருவது என வரிசை முறையிலும், செயப்படுபொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை எனப் பொருள் அடிப்படையிலும், ஐ வேற்றுமை ஒடு வேற்றுமை என உருபுகளை ஒட்டியும் நிகழ்ந்துள்ளது. வரிசை முறைப் பெயர் வடமொழியிலும், பொருள் அடிப்படைப் பெயர் ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மொழிகளிலும், உருபை ஒட்டிய பெயர் பழந்தமிழிலும் காணுதல் கூடும். வரிசை முறையில் பெயரிடுதல் மொழி வளர்ச்சியின் தொடக்க காலத்தில் இயலாது. உருபுகளைக் கொண்டு சொற்ருெடர் அமைத்துக் கருத்தினைப் புலப்படுத்தும் முறை வளர்ச்சியுற்று நிலைபெற்ற பின்னரே இயலும். தமிழில் அவ்வாறு தான் நிகழ்ந்துள்ளது. பொருள் வகையில் வேற்றுமைகளைக் கூறவேண்டுமென்ருல் வேற்றுமைகள் பல்கிப் பெருகும். ஒடுவேற்றுமையைக் கருவி வேற்றுமை யென்றும், வினைமுதல் வேற்றுமை யென்றும், உடனிகழ்ச்சி வேற்றுமை யென்றும் மூன்ருகக் கணக்கிடல் வேண்டும். கால்டுவல் அவ்வாறுதான் கருதுகின்ருர். "திராவிட மொழிகளில் உடனிகழ்வுப் பொருள் இன்றியமையாச் சிறப்பு வாய்ந்த ஓரிடத்தைப் பெற்றுள்ளதாகவும்,

வடமொழி கருவிப் பொருளின் வேருக உடனிகழ்வுப் பொருள் என்ற ஒன்றை அறியாது என்ற காரணத் தால் திராவிட மொழி ஒவ்வொன்றிலும் வேற்றுமை வரிசைக்கண் தனியிடம் தரப்பெருது தள்ளப் பெற்ற தோடு கருவிப் பொருள் உணர்த்தும் மூன்ரும் வேற்றுமையோடு ஒருங்கு வைத்து மதிக்கப்பட லாயிற்று" என அறிஞர் கால்டுவல் கருதுவதுபோல் பொருள் அடிப்படையில் வேற்றுமைகளை மதிக்கத் தொடங்கினுல், ஒடு வேற்றுமையை அதனின் இயறல், அதன் வினைப்படுதல், அதனிற் கோடல் முதலிய ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வேற்றுமையாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே பொருள் அடிப்படை யில் வேற்றுமைகளை வகுத்தல் பொருத்தமின்று.

பழந்தமிழில் உள்ளவாறு உருபுகளைக் கொண்டு வேற்றுமைகளை எண்ணினுல் ஒரு வேற்றுமைக்கே பல உருபுகள் தோன்றியுள்ளனவே! எவ்வுருபால் அழைப்பது என்று வினவலாம். ஆம்; மூன்ரும் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்று பவணந்தியார் கூறுகின்ருர். ஏன் தொல்காப் பியர் காலத்திலேயே மூன்ரும் வேற்றுமையில் ஆனும் இன்னும் பயின்றுள்ளன. பின்னர் 'ஒடு' 'ஓடு' வாகி விட்டது, ஆன், ஆல் என உருமாறியது. 'உடன், கொண்டு' முதலிய சொல்லுருபுகளும் தோன்றி யுள்ளன. ஆயினும் ஒடு வேற்றுமை என்று அழைத்தல்தான் மரபு. தொல்காப்பியர் காட்டிய வழியும் அதுதான். மூன்ரும் வேற்றுமையை அறிவிக்க ஆன் உருபை அவரே பயன்படுத்தி யிருந்தும், "ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" என்று தானே கூறியுள்ளார். ஆகவே உருபு களின் துணை கொண்டு பழந்தமிழில் உள்ளவாறு

வேற்றுமைகளை அமைத்தல் வேற்றுமைகள் பல்கிப் பெருகாமல் இருப்பதற்குத் துணை செய்யும்.

இன்று வேற்றுமை உருபுகளை விடுத்து எண் வரிசையில் பெயரிட்டு எட்டு வேற்றுமைகட்குள் அடக்கி விட்டனர். தொல்காப்பியர் காட்டிய நெறியைப் பவணந்தியார் மேற்கொள்ளாததன் விளைவே இது.

இனி தமிழிற்குள்ள பிறிதொரு இயல்பாவது வேற்றுமை யுருபு இன்றியும் வேற்றுமைப் பொருளை உணர்த்தலாகும். 'நிலம் கடந்தான்,' என்பதில் 'ஐ,' உருபு மறைந்து நிற்கின்றது. 'நிலத்தைக் கடந்தான்' என்று கூறுதலின்றி 'நிலம் கடந்தான்' என்று கூறுவதை வேற்றுமைத் தொகை என்பர்.

வேற்றுமை உருபு பெயர்க்கிறுதியில் வெளிப்பட்டும் மறைந்தும் பொருளைத் தருங்கால் சாரியை பெற்றும் பெறுதும் வரும். 'நிலத்தைக் கடந்தான்' எனற்பாலது 'நிலத்தினைக் கடந்தான்' எனவரும், 'நிலத்தினை' என்பதில் 'இன்' சாரியை வந்துள்ளது. இன்னோசை பயத்தற்கு இச்சாரியை வந்துள்ளது. 'நிலம் கடந்தான்' என்பது 'நிலத்தைக் கடந்தான்' என வருங்கால் 'அத்து' சாரியையாக வந்துள்ளது. இச்சாரியை தொடர் அமைப்புக்குத் துணையாக வந்துள்ளது. சில பெயர்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்குங்கால் சாரியைகளைப் பெற்றுத்தான் ஏற்கும். அங்ஙனம் வரும் சாரியைகளைப் பற்றியும், அவை ஏற்கும் முறைகளைப் பற்றியும் எழுத்துப் படலத்தில் உருபியலில் விரிவாகக் கூறியுள்ளார். ஒவ்வொரு வேற்றுமைக்கும் இன்னின்ன பொருள் என வரையறுத்துக் கூறியுள்ளார்.

எழுவாய் வேற்றுமை (முதல் வேற்றுமை) பெயர் தோன்றும் நிலை என்றார். அந்நிலையாவது உருபும், எட்டாம் வேற்றுமை எனப்படும் விளியும் ஏலாது வருவதாம்.

இரண்டாவதாகிய 'ஐ' வேற்றுமை வினையும் வினைக் குறிப்பும் ஆகிய அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றுமவை பொருளாக வரும்.

'குடத்தை வனைந்தான்': வனைந்தான் என்பது தெரிநிலை வினை. குழையை உடையான்: உடையான் என்பது குறிப்பு வினை. காலத்தை வெளிப்படையாக உணர்த்துவதனைத் தெரிநிலை என்றும், குறிப்பாக உணர்த்துவதனைக் குறிப்பு வினை என்றும் அழைப்பர். இவ்வாறு வருவன இருபத்தெட்டுப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு வரும் என்றார். வினையும் வினைக் குறிப்பும் செயப்படு பொருள் கொண்டு வருவனவே - இரண்டாம் வேற்றுமையாக இருத்தலின் இதனைச் செயப்படு பொருள் வேற்றுமை என்று அழைப்பதும் மரபு.

மூன்றாவதாகிய 'ஒடு' வேற்றுமை வினை முதலும் கருவியும் ஆகிய இரண்டு முதலையும் பொருளாக உடையது.

வினைமுதல் என்பது கருவி முதலாயின காரணங்களைத் தொழிற்படுத்துவது.

கருவி என்பது வினைமுதல் தொழிற் பயனைச் செயப்படு பொருட்கண் செலுத்துவது. ஒன்று நிகழ்வதற்குக் கருவியாக இருக்கும் நிலையை உணர்த்துவதே மூன்றும் வேற்றுமையாகும். மாந்தர் கருவியாக இருப்பின் அவரைக் கருத்தா என்றும், மாந்தரல்லாப்

பிற கருவியாக இருப்பின், கருவியென்றும் பின்னர் வகைப்படுத்தினர். முருகனுன் கொல்லப்பட்டான் என்பதில் முருகன் கருவியாக இருப்பினும் 'கருத்தா' என்று கூறப்பட்டது; வாளால் வெட்டினுன் என்பதில் வாள் கருவியாக இருப்பது வெளிப்படை. ஒன்று நிகழ்வதற்குத் துணையாய் நிற்கும் கருவி உயர்திணையாயின் கருத்தா என்றும், அஃறிணையாயின் கருவி என்றும் கூறும் வழக்கம் பின்னர் ஏற்பட்டு விட்டது. தொல்காப்பியர் காலத்திலேயே இவ்வேறுபாடு உணரப்பட்டு விட்டதால் அவரே வினைமுதல் (கருத்தா) என்றும் கருவி என்றும் இரண்டன் அடிப்படையில் தோன்றும் என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு வருவதன் வகைகளை 'அதனின் இயறல்' முதலாக விரித்துரைத்தார்.

'ஆசிரியனேடு மாணவர் வந்தார்' என்பது அதனேடு இயைந்த ஒரு வினைக்கிளவியாகும்; மாணவர் வருவதற்கு ஆசிரியன் கருவியாக அமைந்துள்ளான். ஆகவே அவர் வருகைக்கு ஆசிரியன் வினைமுதல் ஆனுன். பின்னர் வருகைத்தொழில் இரு சாரார்க்கும் ஒரு சேர நிகழ்வதனுல் இதனை உடனிகழ்ச்சிப் பொருள் என்றனர். பவணந்தியார் மூன்றும் வேற்றுமைப் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்வு எனக் கூறினுர். கால்டுவல் அவர்கள் "இவ்வாறு மூன்று வகைப் பொருள்களை ஒரு வேற்றுமைக்கண் அடக்குதல் பொருந்தாது; இவ்வாறு தமிழிலக்கண நூலார் செய்தது வடமொழியைப் பின்பற்றியே யாகும்," என்று கூறியுள்ளார்.

மூன்றும் வேற்றுமை உருபுகளும் ஒடு, ஓடு, ஆன், ஆல் எனப் பல்கிவிட்டன. ஒடுவிலிருந்து ஓடுவும், ஆனிலிருந்து ஆலும் தோன்றிவிட்டன. ஆசிரிய

ளுெடு எனற்பாலது ஆசிரியனேடு என எளிதாக வரும். 'சாத்தனுன் முடியும்' என்பதைச் 'சாத்தனுல் முடியும்' எனவும் பிரித்து விட்டனர். தொல்காப்பியர் 'ஒடு' உருபைக் கூறினுர். ஆன் உருபை பயன்படுத்தி யுள்ளார். ஆகவே மூன்ரும் வேற்றுமைக்கு உரிய உருபாக முதலில் தோன்றியது. 'ஒடு'வே எனல் அறியலாம். 'ஆன்' உருபு பின்னர் தோன்றி ஒடு வின் பொருளிலேயே வழங்கியிருத்தல் வேண்டும் என அறியலாம்.

நான்காவதாகிய 'கு' வேற்றுமையின் பொருள், 'எப்பொருளாயினும் கொள்ளும் அது' என்ருர்.

"பிற பொருளும் உளவாயினும் கோடற் பொருள் சிறந்தமையின் எப்பொருளாயினும் கொள் ளும் என்ருர்," என்று கூறினுர் சேனுவரையர். ஆசிரியர் தொல்காப்பியர் அதனை விரித்துரைக் குங்கால்,

"அதற்கு வினை உடைமையின், அதற்கு உடம்படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கு யாப்பு உடைமையின் அதன் பொருட்டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பின் என்று
அப்பொருள் கிளவியும் அதன்பால என்மனுர்"

என்று கூறினுர்.

பவணந்தியார் "நான்காவதற்கு உருபு ஆகும் குவ்வே, கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல் பொருட்டு முறை ஆதியின் இதற்கு இது எனல் பொருளே" என்று தொல்காப்பியர் கூறியனவற் றைத் தொகுத்துக் கூறினுர். "எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே" என்றதை, 'இதற்கு இது எனல்' என்று வேறு சொற்களால் கூறியுள்ளார்.

நான்காம் வேற்றுமையின் உருபாகிய 'கு' பிற திராவிட மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் அயல் நாட்டு மொழிகளிலும் சிறிது வடிவ வேறு பாட்டுடன் பயிலக் காணலாம்.

| | | |
|---|---|---|
| இந்தி—மொழியில் | | கோ, கௌன் |
| தாத்தாரி | ,, | கெ |
| ஐரிஷ் | ,, | க |
| சர்குடின் | ,, | க |
| ஒஸ்டியாக் | ,, | க |

சித்திய மொழிக் கல்வெட்டில் இக்கி, இக்க. தமிழில் பேச்சு வழக்குகளில் 'கு' கோ, கெ, கி, எனத் திரிந்து வழங்குவதைக் காணலாம்.

உனக்கோ கொடுத்தான்; அவனுக்கிக் கொடு; எனக்கே கொடுத்தான் முதலியனவற்றை நோக்குக. நான்காம் வேற்றுமை உருபை பிறமொழிகட்கு அளித்த பெருமை தமிழுக்கே உண்டு.

ஐந்தாவதாகிய 'இன்' வேற்றுமை, 'இதனின் இற்று இது' என்னும் பொருளையுடையது.

'இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள்' என்பது வண்ணம் முதலாகப் பற்று விடுதலீறுகச் சொல்லப்பட்டனவும் (நூற்பா 78), பிறவும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தன என விரித்துக் கூறியிருப் பதை நோக்குதல் வேண்டும். அவைகளைத் தொகுத்து நீக்கல், ஒப்பு, எல்லை, ஏது எனும் பொருள்களில் வரும் ஐந்தாம் வேற்றுமை என்றார் பவணந்தியார். உருபுகள் இன், இல் என்பன என்றார். 'இன்' என்பதனைப் பிரித்து எழுதுங்கால் 'இல்' என எழுதி விட்டனர். இதனிற் றண்ணிது இது; 'இதனின்

தண்ணிது' என்றே, இதனில் தண்ணிது என்றே பிரிக்கலாம். ஆதலின் 'இன்' உருபிலிருந்தே 'இல்' உருபு தோன்றியுள்ளது என அறியலாம்.

ஆருவதாகிய 'அது' வேற்றுமை, கிழமைப் பொருளை - உரிமைப் பொருளை உடையது. தற்கிழமையும் பிறிதின் கிழமையும் என இருவகைப்படும். தன்னோடு பிரிக்க முடியாத தொடர்பினையுடையதைத் தற்கிழமை என்றும், பிரிக்கக்கூடிய தொடர்புடையதைப் பிறிதின் கிழமை என்றும் கூறுப. இக்கிழமைப் பொருள் இயற்கை முதலாகப் பல்வேறு வகைப்படும் (நூற்பா 80).

நன்னூலார் ஆறும் வேற்றுமை ஒருமைக்கு அதும், ஆதும் என்றும், பன்மைக்கு 'அ' என்றும் கூறியுள்ளார். வடமொழியில் உள்ளதுபோல் ஒருமை எண்ணுக்கு ஒரு வகையான உருபுகளும் பன்மை எண்ணுக்கு இன்னொரு வகையான உருபுகளும் தமிழிலும் உண்டு போலும் என்று கருதுமாறு நன்னூலார் கூறியிருப்பினும் உண்மை நிலை அவ்வாறு அன்று. ஒருமை பன்மை என்பது வேற்றுமை உருபை ஏற்கும் பெயர்களைக் குறிப்பது அன்று. தழுவும் பெயர்களைக் குறிப்பதாகும். தனது கை, தனது கைகள், தன கைகள் என்ற எடுத்துக் காட்டுகளை நோக்குக. தழுவும் பெயர் உயர்திணையாய் இருப்பின் 'அது' முதலிய உருபுகள் வாரா என்றும் 'உடைய' எனும் சொல் உருபு வரும் என்றும் நன்னூல் உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.

"அஃறிணை ஒருமை பன்மைகட்கு இயைந்த உருபு இங்ஙனம் கூறவே, உயர்திணை ஒருமை பன்மையாகிய கிழமைப் பொருட்கு இவ்வுருபுகள் ஏலா என்பது பெற்றும். அவை வருங்கால் அவனுடைய

விறலி, அவனுடைய விறலியா என மூன்று சொல்லாய் இரண்டு சந்தியாய், முன்னது எழுவாய்ச் சந்தியும் பின்னது பெயரெச்சக் குறிப்புச் சந்தியுமாமென்க'' (நன்னூல் விருத்தியுரை பக்கம் 207).

தொல்காப்பியர்க்கும் அதுவே கருத்தென்பது 'அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின் அதுவென் உருபுகெடக் குகரம் வருமே'' என்பதனால் அறியலாகும். 'நம்பியது மகன்' என்று விரித்தலாகாது. 'நம்பிக்கு மகன்' என்றே விரித்தல் வேண்டும்.

சேனாவரையர்க்கும் இக்கருத்து உண்டென்பது ''உயர்திணைத் தொகைவயின் ஆறுவதனை விலக்கி நான்காவதே சேறலின் 'இதனதிது விற்று' என்னும் சூத்திரத்தால் கூறப்படும் பொருளோடு உடன் வையாது இதனை வேறு கூறினார்,'' என்று கூறுவதால் அறியலாகும்.

ஏழாவதாகிய 'கண்' வேற்றுமை இடப்பொருளை உணர்த்தும். இடம் என்பது நிலமாகிய இடமட்டுமின்றி வினை நிகழ்ச்சியிலும் காலத்திலும் சுட்டப்படும். கல்விக் கூடத்தில் என்பது இடத்தைக் குறிக்கும்; கற்றலில் என்பது வினை நிகழ்ச்சியைக்குறிக்கும், கற்கும் காலத்தில் என்பது காலத்தைக்குறிக்கும், இவ்விடப் பொருளைச் சுட்ட பல உருபுகள் தொல்காப்பியர் காலத்திலேயே பயின்றுள்ளன.

கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தேம், முன், இடை, கடை, தலை, வலம், இடம் முதலியனவற்றைக் குறிப்பிட்டுவிட்டு அன்னபிறவும் அதன்பால என்றும் கூறியுள்ளார். இவைகளைச் சேனாவரையர் பொருள்வகை என்று கூறுகின்றார். இளம் பூரணரும் நச்சினார்க்

இனியரும் உருபு வகை என்று கூறுகின்றார்கள். உருபுகள் என்றலே பொருத்த முடைத்து. ஆனால் ஏனை வேற்றுமைகளைப் பற்றிக் கூறிய விடத்து முதலில் வேற்றுமை இலக்கணத்தைக் குறிப்பிட்டுவிட்டு அடுத்த நூற்பாவில் அதற்குரிய பொருளை விரித்துக் கூறி வந்துள்ள முறைமையைக் கருதி சேனாவரையர் அவ்வாறு கருதிவிட்டனர் போலும்.

நன்னூலாசிரியர் "ஏழன் உருபு கண் ஆதியாகும்" என்று கூறிவிட்டு அடுத்த நூற்பாவில் "கண், கால் ...... இடப்பொருளுருபே" என்று கூறியிருப்பது சேனாவரையர் கொள்கைக்கு மாறுபட்டு ஏனையோர் கொள்கையோடு பொருந்தியுள்ளது.

அறிஞர் சுப்பிரமணிய சாத்திரியார் சேனாவரையர் கருத்தே ஏற்புடைத்து என்று கூறியுள்ளார். அவ்வாறு கூறுவதற்குச் சாத்திரியார் அவர்கள் தரும் காரணங்களுள் முதன்மையாவன: "ஏழாகுவதே, கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" என்று கூறியவர் மீண்டும் "கண், கால், புறம், அகம்" எனக் கண் உருபைக் கூறியிருத்தல் வேண்டாம்.

அகம் என்பது உருபு எனக் கொண்டால் "ஊரகத்திருந்தான்' 'என்பது போன்ற இடங்களில் 'அத்து'ச் சாரியை வருதல் கூடாது. ஏனெனில் பெயருக்கும் வேற்றுமையுருபுக்கும் இடையில் தான் சாரியை வரும். உருபால் தொடரப்படும் பெயருக்கும் வினைக்கும் இடையில் வருதல் இல்லை.

இரண்டு காரணங்களும் ஏற்புடைத்தல்ல. 'கண்' எனப் பெயரிய வேற்றுமை என்று குறிப்பிட்டுவிட்டு அதன் உருபுகள் யாவை எனக் கூறுமிடத்தும் கண் உருபையும் கூறுதல் தெளிவுதரற்பொருட்டேயாகும்.

இல்லையேல் 'கண்' என்பது உருபோ இல்லையோ என்று மயங்க வேண்டிவரும். பவணந்தியாரும் "ஏழன் உருபு கண்ணாதியாகும்" என்று கூறினு ரேனும், மீண்டும் "கண், கால், கடை இடை" என்று 'கண்' உருபையும் சேர்த்துக் கூறுதல் காண்க. 'ஊரகத்திருந்தான்' என்பதில் அத்துச் சாரியை உருபின் முன்னர் வாராது உருபின் பின்னர் வினைக்கு முன்னால் வந்துள்ளது பொருத்தமின்று என்று கூறுவதும் பொருத்தமின்று. ஊரகத்தில் உள்ள (ஊர்+அகம்+அத்து+இருந்தான்) அகம் வேற்றுமை உருபு அன்று, உள் என்று பொருள் தரும் பெயர்ச் சொல்லாகும். அகத்தே வா (உள்ளே வா) என்ற வழக்கு நாஞ்சில் நாட்டில் உள்ளது. ஆகவே ஊரினகம் எனற்பாலது ஊரகம் என வந்துளது. 'ஊரகத்தின்கண்' எனக் கூற வேண்டியது 'ஊரகத்து' எனத் தொகையாக வந்துள்ளது. ஆதலின் இக்காரணமும் ஏற்புடைத்தன்று என்று அறியலாகும்.

இவ்வேற்றுமை உருபுகள் எல்லாம் தத்தமக்கு என விதிக்கப்பட்டுள்ள பொருளையன்றிப் பிற பொருளையும் அறிவிக்கும். வழக்கிலிருக்கும் மொழி இலக்கண நூலார் வரையறுக்கும் நெறிக்குள்ளே என்றும் அடங்கியிராது. தொல்காப்பியர் இதனை நன்கு அறிந்தவர். ஆதலின்,

> "கிளந்தவல்ல வேறு பிற தோன்றினும்
> கிளந்தவற்றி யலான் உணர்ந்தனர் கொளலே"

என்று கூறி இலக்கண நெறிக்கப்பால் தோன்றுவன வற்றையும் இலக்கண நெறிக்குட்படுத்துக என ஆணையிட்டார். வேற்றுமையும் உருபினைக்கொண்டு

அறியப்படாமல் பொருளைக்கொண்டே அறியப்பட வேண்டும் என்றார்.

**'யாதன் உருபிற் கூறிற் றாயினும்**
**பொருள் செல்மருங்கில் வேற்றுமை சாரும்.'**

இவ்வாறு ஒரு வேற்றுமையுருபு வேறொரு வேற்றுமைப் பொருளில் வருவது மயக்கம் எனப்பட்டது. ஆகவே வேற்றுமை மயங்கியல் எனத் தனி ஒரு இயல் கொண்டு இம்மயக்கம் பற்றி விளக்குகின்றார்.

எட்டாம் வேற்றுமை எனப்படும் விளிவேற்றுமை பற்றித் தனி இயலில் விளக்குகின்றார். தொல்காப்பியர் காலம்வரை அது வேற்றுமைக் குழுவினுள் சேர்க்கப்படாமல் தனியாகக் கருதப்பட்டு வந்துள்ளது. தொல்காப்பியர்தாம் வேற்றுமைக் குழுவினுட் அதனைச் சேர்த்தவராவர். ஆயினும் அது தொன்று தொட்டு வருவது என்பதனை உணர்த்த 'விளி மரபு' எனத் தனியியலாகக் கொண்டு அதன் விரிவுகளை விளக்குகின்றார். விளித்தல் என்பது அழைத்தல், "படர்க்கையோரைத் தன் முகமாகத் தான் அழைப்பதுவே" என்று பவணந்தியார் கூறியுள்ளார். இன்றும் மலையாள மொழியில் அழைத்தலை விளித்தல் என்றே வழங்குகின்றனர். ஒருவரை விளிக்குங்கால் அவர் பெயர் அடையும் மாறுதல்களை எல்லாம் விளி மரபில் தெளிவுறக் காணலாம்.

வேற்றுமை பற்றி இவ்வளவு விரிவாகவும் தெளிவாகவும் வேறு எம்மொழி நூலாரும் உணர்த்தினாரிலர்.

பெயர் பற்றியும் அதனைச் சார்ந்த வேற்றுமை பற்றியும் ஆராய்ந்த நாம் இனி வினைபற்றி ஆராய்வோம்.

வினை என்றால் என்ன? வினை யென்பது வேற்றுமை ஏலாது; காலங்களை அறிவிக்கும்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்."

இவ்வாறு தொல்காப்பியர் எளிமையும் இனிமையும் பொருந்த வினையை விளக்கினார். ஆங்கில மொழி நூலார் ஒருவர் வினையை விளக்குங்கால் (Words inflected for person, number, tense, mood and voice are called verbs) இடம், எண், காலம், வினை அமைப்புக்களை அறிவிக்கும் சொற்களே வினைகள் என்றார். வினை அமைப்புக்களை (moods) அறிவித்தல் வினைக்குரிய இயல்பாகும். இடமும் எண்களும் பெயர்களாலும் அறிவிக்கப்படும். காலம் அறிவித்தல் ஒன்றே தமிழ் வினைக்குச் சிறப்பாகும். ஆகவே காலமொடு தோன்றும் என்றார். வேற்றுமை ஏற்றல் பெயர்க்குரிய இலக்கணம். வினைச் சொற்களும் வேற்றுமை உருபை ஏற்றால் பெயராய்விடும். வந்தான் என்ற வினை வந்தானை என்று இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்றவுடன் வந்த ஒருவனைக் குறித்துப் பெயர்த்தன்மை அடைந்து விடுகிறது. இம்முறையானது தமிழுக்கே உரிய சிறப்பாகும். வந்தானைக் கண்டேன் என்பதை ஆங்கிலத்தில் சொன்னால் இரு சொற்றொடர் ஆகும் (I saw the man who came).

'காலமொடு' என்பதனால் காலத்துடன் சேர்ந்தே வரும். காலமில்லையேல் வினையில்லை என்பதற்காகவே காலமொடு தோன்றும் என்றார். இதனால் வினைக்குக் காலம் முதன்மை என்று கூறிவிட முடியாது என்று சிலர் கருதுவது தவறுடைத்தாகும். 'நினையுங்காலை' என்று கூறியதனால் அக்கருத்துப் பெறப்படுகின்றது என்றும் கூறுவர். 'வினை'

எப்பொழுதும் காலம் உணர்த்துதல் வேண்டும் என்ற உறுதிப்பாடு இல்லை என்பர் சிலர்.[1] தொல்காப்பியர் கருத்துப்படி வினைகள் இரண்டு வகைப்படும். அவை தெரிநிலை வினை, குறிப்பு வினை. தெரிநிலை வினை என்பது காலத்தை வெளிப்படையாக அறிவிப்பது. குறிப்பு வினை என்பது காலத்தைச் சூழ்நிலையால் முன்பின் தொடரும் சொல்லால் அறிவிப்பது. இரண்டுமே காலம் அறிவிக்கும் என்பதனை,

"குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்"

என்று கூறுவதனால் தெற்றென அறியலாகும்.

'வினை' என்பது காலமொடு வரும். அக்காலம் மூன்றாகும்; இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலமும் குறிப்பு வினையோடும் வரும்[2] என்று தெளிவுறக் கூறியிருப்பதனைத் தெளிந்து கொள்ளாத சிலர், குறிப்பொடு தோன்றுதல் என்பது தெரிநிலை வினைக்கும் கூறப்படும் செய்தியாகும் என்பர். குருடன் என்பது விழிகொண்டு பார்ப்போனுக்கும் பெயர் என்பது போலன்றோ இருக்கின்றது இவர் கூற்று.

"வினையெனப்படுவது" என்று கூறுவதனால் தொல்காப்பியருக்கு முன்பே 'வினை' என்ற பெயர் வழக்கில் இருந்துள்ளதாக அறியலாம். வினைக்குரிய காலங்கள் மூன்று என்ற பகுப்பீடும் தொல்காப்பியர்க்கு முற்பட்டதாகும் என்பதும் "காலம் தாமே மூன்றென மொழிப" என்று கூறுவதனால் அறியலாம்.

---

1 The word Ninaiyunkalai (நினையுங்காலை) suggests that it is not compulsory that the verb should always denote time.

2 "குறிப்பொடு வரூஉம் காலக் கிளவி" என வினையைக் காலக் கிளவி என்பதும் அறிந்திலர் போலும்.

தொல்காப்பியர் 'வினை என்று பெயரிட்டது தத் ஆக்யாதம் என பாவம்' 'கிரியா வாசகம்', ஆக்யாதம்' என்னும் கூற்றுக்களை உளத்திற் கொண்டே என்று சுப்பிரமணிய சாத்திரியார் கூறுவது* உண்மைக்கு மாறானதாகும் என்று உரைக்கவும் வேண்டுமோ?

குறிப்பு வினை தமிழுக்கே உரிய சிறப்பினது. அது தோன்றும் இடங்களையும் கூறியுள்ளார்.

> " அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
> கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
> ஒப்பினானும் பண்பி னானும் என்று
> அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்."

ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட் கண்ணும் ஏழாம் வேற்றுமையது நிலப் பொருட் கண்ணும் ஒப்பின் கண்ணும் பண்பின் கண்ணும் என இவையடிப்படையில் குறிப்பு வினை தோன்றும்.

'பொன்னினன்' என்பது குறிப்பு வினை. முன்பு பொன்னினன் என்றால் இறந்த காலம்; இப்பொழுது பொன்னினன் என்றால் நிகழ் காலம்.

அன்மை, இன்மை, உண்மை, வன்மை முதலிய பண்படிகளிலும் குறிப்பு வினை தோன்றும். இவ்வினைகள் உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, இருதிணைக்குமுரியன என மூவகைப்படும்.

முற்று வினை, எச்ச வினை எனத் தன்மை வகையால் வினை இரு வகைப்படும்.

முன்னிலை வினை, படர்க்கை வினை, தன்மை வினை, என இட வகையால் மூன்று வகைப்படும்.

---

* History of grammatical theories in Tamil: Page—142.

செய்வினை, செயப்பாட்டு வினை, ஏவல் வினை வியங்கோள் வினை, முதல் வினை, சினை வினை, உடன் பாட்டு வினை, எதிர்மறை வினை எனப்பயன் வகையால் பலவகைப்படும். வினைகளைப் பற்றி இவ்வளவு விரிவாக ஆராய்ந்து, சில வினைகளின் விதிகளைக் குறிப்பிட்டுக் கூறிய ஆசிரியர் தொல்காப்பியர் கால இடைநிலைகளைப் பற்றிக் கூறினார் இலர்.

காலங்கள் மூன்றெனவும், அவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும் எனவும் இவை மயங்கி வரும் எனவும் கூறியவர் கால இடை நிலைகளைப் பற்றிக் கூறாது ஒழிந்தமையை நோக்கத் தொல்காப்பியர் காலத்தில் இடை நிலைகளால் மட்டு மின்றி வேறு வகைகளாலும் காலம் உணர்த்தப்பட்டு, காலம் உணர்த்தும் வகை, வரையறைக்குட் படாமல் இருந்திருத்தல் வேண்டும் என்று கருத வேண்டி யுள்ளது. தொல்காப்பியத்திலும் அதற்கு முற்பட்ட பழைய இலக்கியங்களிலும் இடை நிலைகள் ஒழிந்த வற்றாலும் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிஞர் கால்டுவல் அவர்கள் திராவிட மொழி யில் வினைச்சொற் காலங்களின் தோற்றம் என்பது பற்றி ஆராயுங்கால், "திராவிட வினைக்காலங்கள் பல வும் வினையின் எச்ச வடிவங்களிலிருந்தே தோன்று கின்றன" எனக்கூறி வினை முற்று விகுதிகளை வினை யெச்ச வடிவங்களோடு இணைப்பதால் வினைமுற்றுக் கள் உருவாகுவனவாக முடிவுகட்டி யுள்ளார். அவர் கருத்திற்கிணங்க எச்சம் முந்தியது; முற்று பிந்தியது என்பதாகும். ஆனால் தொல்காப்பியர் கருத்து அவ் வாறு இருப்பதாகத் தோன்றவில்லை. முற்றிலிருந்து தான் எச்சம் உருவாகி இருத்தல் கூடுமேயன்றி எச் சத்திலிருந்து முற்று உருவாகியிருத்தல் முடியாது.

ஆசிரியர் தொல்காப்பியர் பெயரெச்ச வாய்பாடு களையும் வினையெச்ச வாய்பாடுகளையும் கூறியுள்ளார். பெயரெச்ச வாய்பாடுகள் செய்யும் செய்த என்பன வாகும். செய்யும் என்பது முற்ருகவும் வரும் வகை யைக் கூறியுள்ளார். முருகன் உண்ணும் என்பதில் உண்ணும் என்பது முற்று. உண்ணும் முருகன் என் ருல் உண்ணும் என்பது எச்சம். இதிலிருந்து அறியக் கூடியது என்னவெனில் முற்றும் எச்சமும் ஒரு காலத் தில் வடிவ வேறுபாடின்றி வழங்கி இருந்திருக்கக் கூடும் என்பதே. அன்றியும் 'எச்சம்' என்ற பெயர் முற்றுக்குப் பின்னர்தான் தோன்ற முடியும். ஒரு வினை தானே முடிவுறுதலின்றிப் பிறிதொன்றை நாடி முடிவுறுவதே எச்சமாகும். ஆதலின் முற்றிலிருந்தே எச்சம் தோன்றியிருத்தல் வேண்டும் என்று கூறு தலே ஏற்புடைத்து.

அறிஞர் கால்டுவல் திராவிட மொழி வினையா னது செயப்பாட்டுப் பொருளை உணர்த்தும் வகை யைப் பெற்றிருக்கவில்லை என்றும், அது எப்பொழு தாவது பெற்றிருந்தது என்று கூறமுடியாது என்றும் கூறியுள்ளனர்.*

"செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே" எனத் தொல்காப்பியரே கூறியுள்ளார். இந்நூற்பாவால் செயப்பாட்டு வினை இருந்தது என்றும், ஆனால் செய் வினையால் செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்து தல் மரபு என்றும் அறியலாம். அன்றியும் தொல் காப்பியர், பல விடங்களில் செயப்பாட்டு வினையைப் பயன்படுத்தி யுள்ளார். முதல் நூற்பாவே 'எழுத்

---

* The Dravidian Verb is entirely destitute of a passive voice properly so called, nor is there any reason to suppose that it ever had a passive — Caldwell–463.

தெனப்படுப' எனச் செய்ப்பாட்டு வினையிலேயே தொடங்கப்பெற்றுள்ளது. ஆகவே தொல்காப்பியர் காலத்திலேயே தமிழில் செயப்பாட்டு வினை இருந் திருக்கிறது என்று அறியலாகும். திராவிட மொழி களில் செயப்பாட்டுப் பொருளை யறிவிக்கும் தனி யமைப்பு இல்லை என்று கூறுதல் பொருந்தாது.

"திராவிட வினைச்சொல் நிகழ்காலம்என்பதொரு காலத்தைப் பண்டு பெற்றிருக்கவில்லை. இறப்பு, எதிர்வு என்ற இரண்டே யிருந்தன என்பதற்கான சான்றுகளும் உள" என்று அறிஞர் கால்டுவல் கூறுவதும் பொருந்தாக் கூற்ருகும்.

"தமிழில் ஒரே எச்சவினைதான் உண்டு, பொது வாக அது இறந்த காலத்தையே குறிக்கும்" என்று அறிஞர் கால்டுவல் கூறுவது அவர் தொல்காப்பி யத்தைக் கண்டு கற்கும் பேறு பெருததனுலேயே. தமிழில் வினைச் சொல்லமைப்புப் பல வகையாலும் வளம் பெற்று, உள்ளக் கருத்துக்களைத் தெள்ளிதில் உணர்த்துவதற்குரிய வகையில் தொல்காப்பியர் காலத்திலேயே அமைந்திருந்தது.

பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் எவ் வாறு உருவாகின்றன? தமிழ்ச் சொற்கள் ஒட்டு நிலையைச் சார்ந்தன. ஒரு சொல்லைப் பகுதி, இடை நிலை, விகுதி என முப்பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். ஒரு சொல்லின் தோற்றத்திற்கு அடிப்படையாயிருப் பதை வேர்ச் சொல் (Root) என்றும் பகுதி யென்றும் அழைப்பர். தொல்காப்பியர் குறைச் சொற் கிளவி என்பர். உரிச் சொல் என்று கூறப்படுவதும் அவ் வேர்ச் சொல்லே. 'உரிச் சொல்' என்ருல் செய்யு ளுக்கு உரிய சொல் என்றனர் பிற்கால உரையாசிரி

யர்கள். அவ்வாறு கூறுவதை விடச் சொல் பிறப்பதற்கு உரிய சொல் என்பது மிகப் பொருத்தமானதாகும். உரிச் சொல் பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் கூறும் நூற்பாவும் இக் கூற்றை வலியுறுத்தி நிற்கின்றது.

**" உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**
**ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்தம் மரபின் சென்று நிலை மருங்கின்**
**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்."**

உரிச் சொல் (வேர்ச் சொல்), இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுள் ஒன்றின் அடிப்படையில் தோன்றும்; தொடக்க நிலையில் பெயராகவும் பயன்படுத்தலாம்; வினையாகவும் பயன்படுத்தலாம். 'கழி' என்பது கழித்தல் என்ற பெயரையும், கழிந்தான் என்ற வினையையும் தோற்றுவிக்கும். ஒரு சொல் பல் பொருட்குரிமையாதல் உண்டு. 'கடி' என்ற உரிச்சொல் வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம் முதலிய பொருள்களைத் தரும். மாந்தர்க்கு அறிவு வளர்ச்சியடையாத நிலையில், புதுச் சொற்களைப் படைத்துக் கொள்ளும் ஆற்றல் அற்ற காலத்தில் ஒரு சொல்லின் அடியைக் கொண்டேதான் பல பொருள்களை விளக்குவதற்குரிய சொற்களைப் படைத்துக்கொள்ள முயன்றிருப்பர். ஒரு பகுதியில் உள்ளவர்கள் இன்னொரு பகுதியில் உள்ளவர்களோடு நெருங்கி உறவாடிப் பழக முடியாத காலத்தில் ஒரே கருத்தை விளக்கவே அவரவரும் தாம் தாம் அறிந்தவாறு சொற்களைப்

படைத்துக்கொண்டிருப்பர். பின்னர் ஒன்று கூடிப் பழகுங்கால் ஒரு பகுதியினர் சொல்லை இன்னொரு பகுதியினரும் ஏற்றுத் தாம் படைத்த சொல்லையும் விட்டுவிடாது வழங்கியிருப்பர். அதனால் ஒரு பொருளை யறிவிக்கப் பல சொற்கள் தோன்றியிருக்கக் கூடும். மிகுதிப் பொருளை உணர்த்த உறு, தவ, நனி என்ற மூன்று சொற்கள் உண்டு என்கின்றனர்.

> "உறு, தவ, நனி யென வருஉம் மூன்றும்
> மிகுதி செய்யும் பொருள வென்ப."

மூன்று சொற்களும் மூன்று வேறுபட்ட சூழ்நிலையில் தோன்றியிருத்தல் கூடுமன்றோ? ஆதலின் சொல் தோற்றத்திற்குரிய சொல்லையே (வேர்ச் சொல்லையே) உரிச் சொல் என்றார் ஆசிரியர் என்பது பொருந்தும் கூற்றேயாகும். அவ்வாறு தோன்றி வளர்ந்துள்ள சொற்கள் எல்லாவற்றையும் கூறுவது என்றால் இய லக்கூடிய செயலன்று, ஆதலின் யாவராலும் எளி தில் அறியக்கூடிய உரிச் சொற்களை விட்டுவிட்டு எளிதில் அறிந்துகொள்ள முடியாத சொற்களை மட்டும் எடுத்து விளக்குகின்றார். அவரே கூறுகின்றார்.

> "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
> வெளிப்பட வாரா உரிச்சொல் மேன."

எனவே உரியியலில் சொற்பிறப்புக்கு அடிப்படை யாகிய சொற்பகுதிகளை விளக்கும் பணியை மேற் கொண்டுள்ளார் எனத் தெளியலாம். சொற்களுக்குப் பொருள் கொள்ள வேண்டிய முறைமையினையும் குறிப்பிடுகின்றார். ஒரு சொல்லின் பொருளை அதனை யடுத்து முன்னும் பின்னும் வரும் சொற்களைக் கொண்டுதான் அறிய முடியும். 'செல்லல்' என்னும்

சொல்லுக்கு இன்னல் என்னும் பொருள் உண்டென்பது அகராதியில்லா அக்காலத்தில் எவ்வாறு அறிய முடியும்.

"செல்லல் இன்னல் இன்னுமையே"

என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுகின்றார். எவ்விடத்து இன்னல் என்னும் பொருளது, எவ்விடத்து இன்னுமை என்னும் பொருளது என்பதனைச் சொற்றொடர் வாயிலாகத்தான் அறிய முடியும். அன்றியும் இவ்வாறு சொற்றொடரில் பயின்று வருங்கால் தொல்காப்பியர் கூருத வேறு பொருள் தோன்றினும் அதனையும் ஏற்றுக் கொள்க என்கின்ற பெருந்தகைமையும் மொழி நூலறிவும் பாராட்டப்பட வேண்டியன.

"கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடும் கொளலே"

ஒரு சொல்லுக்குப் பொருள் இது என்று இன்னொரு சொல்லால் அறிவிக்குங்கால் ஒருவனுல் விளங்கிக் கொள்ள இயலவில்லையானுல் மீண்டும் ஒரு சொல்லால் விளக்கத் தொடங்கினுல் வரம்பின்றிச் செல்லும் என்றும், உணர்த்தும் முறையில் உணர்த்த வேண்டும் என்றும், உணர்வோர்க்கே உணர்த்த வேண்டும் என்றும் அறிவுறுத்தும் நுட்பம் அறிந்து மகிழ்தற்குரியது.

"பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே"
"பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்"
"உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே"

இவ்வுரிச் சொல் அடிப்படையாகப் பல உறுப்புக்கள் சேர்ந்து ஒரு முழுச் சொல் உருவாகின்றது. முழுச்

சொல்லாக இருந்தாலும் தனி ஒரு சொல்லால் உள்ளக் கருத்தை விளக்கமாக அறிவித்தல் இயலாது. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்றே கருத்தை விளக்குகின்றன. 'முருகன் தமிழ் மொழியைக் கற்ருன்' என்ற சொற்ருெடரில் மூன்று முழுச் சொற்கள் இருக்கின்றன: முருகன், தமிழ் மொழி, கற்ருன் என்பன. முருகன் கற்ருன் என்று சொல்லப்படுகின்றபோது முருகன் என்பது எழுவாய், கற்ருன் என்பது பயனிலே. 'முருகன்' உயர்திணை ஆண்பால் என்பதற்கு ஏற்பக் கற்ருன் என்பது பயனிலையாம். கற்ருன் என்றசொல்லிலும் உயர்திணை ஆண்பால் உணர்த்தும் கூறு இருத்தல் வேண்டும். அதனை அறிவிப்பது ஆன் என்ற கூருகும். 'தமிழ் மொழியை' என்பது செயப்படு பொருளாக வந்துள்ளது. அதனை அறிவிப்பது 'ஐ' என்பதாகும். இலக்கண நூலார் வேற்றுமை உருபு என்பர். 'கற்ருன்' என்பது இறந்தகால வினை. கல்+த்+ஆன் என்று பிரித்தால் 'த்' இறந்தகாலத்தை உணர்த்தும் இடைநிலையாகும். சொற்ருெடர்களால் உள்ளக் கருத்தை அறிவிக்கத் தொடங்கும்போது பகுதிகளும் பல கூறுகளும் வேண்டப்படுகின்றன. பகுதியை உரிச் சொல் என்ருர் ஆசிரியர் தொல்காப்பியர். பிற கூறுகளை இடைச் சொல் என்று குறிப்பிடுகின்ருர். 'இடைச் சொல்' என்ருல் பெயரிடையேயும் வினை இடையேயும் சொற்ருெடர் இடையேயும் பொருந்தி நின்று பொருள் விளக்கத்திற்கு துணை புரிவது என்று பொருளாகும்.

"இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் : தமக்கியல்பு இலவே."

அவைதாம் :

"புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பில் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியால் பொருள்செய் குநவும் என்று
அப்பண் பினவே நுவலுங் காலை."

அவைதாம் :

"முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதுஅவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய என்ப."

இடைச் சொற்கள் யாவை? அவை எவ்வாறு சொற்றொடரில் நின்று கருத்தை விளக்கப் பயன்படுகின்றன என்பனவற்றைத் தெளிவுறக் கூறுகின்றார் ஆசிரியர். மேலை நாட்டு மொழி நூலறிஞர்கள், 'Semantemes and morphemes' என்னும் தலைப்பில் ஆராய்கின்றனவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் உரிச்சொல் இடைச் சொல் என்ற தலைப்புகளில் ஆராய்கின்றார். சொல் உருவாகுங்கால் பகுதி, இடைநிலை, விகுதி ஆய இவையன்றிப் பிறவும் வேண்டப்படுகின்றன. அவற்றைச் சாரியை என்றும் சந்தி என்றும் அழைப்பர் இலக்கண நூலார். தொல்காப்பியர் "புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதவுந" என்றார். இந் நூற்பாவில் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ள கால இடை நிலை, வேற்றுமை விளக்கும் உருபுகள், அசை நிலை, இசை நிறைக்கும் கூறுகள், குறிப்பால் பொருளுணர்த்துவன, உவமை உருபுகள் ஆகியவை ஒழிந்த பிறவற்றைப் "புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதவுந" என்றும் சுட்டியுள்ளார்.

சாரியைபற்றி (புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுவன) உருபியலிலும் (எழுத்ததிகாரம்), வினை செயல் மருங்கின் காலமொடு வருவனபற்றி வினையியலிலும், வேற்றுமைப் பொருள்வயின் உருபு ஆகுந பற்றி, வேற்றுமையியல், வேற்றுமை மயங் கியல், விளிமரபு முதலிய இயல்களிலும், உவம உரு புகள் (ஒப்பில் வழியான் பொருள் செய்குந) பற்றி உவம இயலிலும் (பொருளதிகாரம்) விளக்குகின்றார். எஞ்சியனவாம் அசை நிலைக்கிளவி இசை நிறைக் கிளவி, தத்தம் குறிப்பால் பொருள் செய்குந ஆகிய மூன்று பற்றி இடையியலில் ஆராய்கின்றார்.

இவ்வாறு தமிழுக்கே உரிய இடைச்சொல் உரிச் சொற்களை ஆராய்கின்ற முறைமை வடமொழி நூலாராம் யாசுகருடைய நிருத்தத்தில் காணப்படு கின்றதாம். ஆகவே யாசுகரைப் பின்பற்றித் தொல் காப்பியர் கூறியிருப்பர் என அறிஞர் சுப்பிரமணிய சாத்திரியார் கருதுகிறார். (History of grammatical theories in Tamil : Pages 198, 301) யாசுகருடைய காலம் தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டமையின், அவ் வாறு கருதுதல் பொருந்தாது. யாசுகர் தொல்காப்பி யரைப் பின்பற்றி நூல் செய்திருத்தல் கூடும் என்று கூறினால் மிக மிகப் பொருந்துவதாகும். ஆனால் சாத் திரியார் அவர்கள் வடமொழிப் பற்றின் காரணமாக இவ்வுண்மையை உணர்ந்திலர் போலும், வடமொழி யாளர் பிறரால் பின்பற்றப்பட வேண்டியவர்களே யன்றிப் பிறரைப் பின்பற்ற மாட்டார்கள் என்ற துணிபு பல நூல்களையும் கற்றறிந்த சாத்திரியாரை யும் விட்டிலை போலும், சாத்திரியார் நினைப்பது போல் ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறு வட மொழிப் பிராதி சாக்கியங்களையும், யாசுகருடைய நிருத்தத்தையும் பாணினியினுடைய இலக்கணத்தை

யும் பின்பற்றித் தம் நூலே அமைத்திருப்பின் வெளிப் படையாகக் குறிப்பிட்டுக் கூறியிருப்பர். அவ்வாறு கூருததனுல் சாத்திரியார் கருத்து ஆய்வு முறைக்குப் பொருத்தமற்றது என அறிதலே ஏற்புடைத்து, இந்திய மொழிகளின் தாயாம் தமிழ், ஆரியத்திற்கும் தாயாம் என்ற உண்மை அறியப்படும் காலம் சேய்மையில் இன்று.

"சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழி நீ அனுதியென மொழிகுவதும் வியப்பாமே"

என்ற பேராசிரியர் சுந்தரனர் கூற்றை உன்னுக.

**எச்ச இயல்:** கிளவியாக்கம் முதல் உரியியல் ஈருக எட்டு இயல்களிலும் விளக்கப்பட்டன போக, மொழியைப்பற்றி இன்னும் விளக்கவேண்டியனவாய் எஞ்சி நிற்பனபற்றி இவ்வியலில் ஆராய்வதால் இவ்வியல் எச்சவியல் என்னும் பெயருக் குரியதாயிற்று. மொழி நூலறிஞர்கள் மொழியைப்பற்றி ஆராய்ந்து கூறும் நூலில், மொழி வகை, மொழிக்குரிய சொல்வளம் முதலியன பற்றிய விளக்கமும் இடம் பெற்றிருக் கக் காணலாம். மொழி வகைகளே என்னுங்கால், நூல் மொழி (Literary dialect), கிளே மொழி (dialect), இனமொழி (Cognate Language), வேற்று மொழி (Foreign language) எனப் பல வகைப்படும். உரையும் பாட்டுமாய் அமைந்து கருத்து விளக்கும் கருவியாய் அமைந்துள்ள மொழி பல் வகையாலும் சொல் வளம் பெறுகின்றது. ஒன்ருய்த் தோன்றிய மொழியே காலப் போக்கில் உரை மொழி (Speech dialect) என்றும், நூல்மொழி என்றும், கிளேமொழி என்றும், இனமொழி என்றும் திரிபுபட்டுப் பிரிவுபட்டு விடு கின்றது. இவைபற்றி யறிந்தாலன்றி மொழியறிவு

நிறைவுறாது. ஆசிரியர் தொல்காப்பியர் சிறந்த மொழி நூலறிஞர் ஆதலின் இவைபற்றியும் ஆராய்கின்றார்.

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்னும் நூற்பாவில் இயற்சொல் என்பது உரைமொழிக்குரியது, திரிசொல் என்பது நூல் மொழிக்குரியது, இவையிரண்டும் ஒரு மொழிக்கே யுரியனவாய் அடிப்படையாய் உள்ளன. திசைச் சொல் என்பது ஒரு மொழியிலிருந்து கிளைத்து வேற்று மொழியாகும் நிலையை அடைவதற்குரியதாய் தன்னைச் சுற்றிலும் வழங்குவது. மலையாளம் தமிழினின்று கிளைத்தது. தமிழினின்றும் வேறுபடும் நிலையை அடையுங்கால் அதன் சொல் தமிழின்கண் ஆளப்படுமேல் அது திசைச் சொல் எனப்படும். இதனைக் கொடுந்தமிழ் என்றும் கூறுப. வடசொல் என்பது வேற்றுமொழிக் குரியது. தமிழோடு தொடர்பு கொண்ட முதல் வேற்றுமொழி ஆரியமேயாகும். ஆரியம் வடக்கிலிருந்து வந்து தமிழோடு தொடர்பு கொண்டமையின் அது வடமொழி எனப்பட்டது. இந்நான்கு வகையாலும் சொற்கள் கொள்ளப்பட்டு மொழி கருத்தறிவிக்கும் கருவியாய் விளங்கும். வேற்று மொழிச் சொற்கள் சொல் வளத்திற்கு வேண்டப்படுவனவோ என வினவலாம். ஒரு மொழியாளர் இன்னொரு மொழியாளருடன் கூட்டுறவு கொள்ளுங்கால் இருவர் மொழியும் கலப்புறுதல் இயற்கை. ஆனால் அக்கலப்புக்கு வரையறையுண்டு. பெயர்ச் சொற்களைத்தான் ஏற்றுக் கொள்ளலாம் என்பதே அவ்வரையறை. 'இராமன்' என்பது வடமொழிச் சொல். அதனைத் தமிழில் மொழி பெயர்த்

துக்கூறின் கற்போர்க்குத் தெளிவு தோன்ருது. ஆகவே அதனைத் தமிழில் வழங்குதல் குற்றமின்று. ஆனல் வேற்று மொழிச் சொல் தமிழோசைக்கு மாறுபட்டு இருப்பின் தமிழோசை யூட்டியே சொல்லுதல் வேண்டும். அவ்வாறு சொல்வதனல் அச்சொல் வடிவில் சிதைந்தாலும் குற்றமின்று. 'விபீஷணன்-வீடணன்' என வருதலும், 'கர்ணன்-கன்னன்' என வருதலும் காண்க. "சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' 'என ஆசிரியர் தொல்காப்பியர் ஆணை தந்துள்ளமை அறிக.

வேற்று மொழிப் பெயர்ச் சொல்லைக் கொள்ள வேண்டிய இன்றியமையாத நிலை ஏற்படின் கொள்ளலாம் என்றும், கொள்ளுங்கால் தமிழோசையூட்டியே கொள்ளல் வேண்டுமென்றும் ஆசிரியர் கூறியிருப்பதை அறியாது வரையறையின்றி வேற்று மொழிச் சொற்களை அம்மொழிகளில் உள்ளவாறே தமிழில் எடுத்தாளத் தொடங்குவது தமிழுக்கு அழிவு தேடித் தருவதாகும்; தொல்காப்பியர் கொள்கைக்கு மாறுபட்டதாகும்; மொழி நூலுக்கும் முரண் பட்டதாகும்.

செய்யுட்குரிய சொற்கள் வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் வேறுபாடுகளை அடைந்தும் வரும். சொற்கள் செய்யுளில் நிற்குங்கால் நிரல் நிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என்று சொல்லப்படும் முறையில் நின்று பொருள் தரும்.

வழக்கினுள் ஒரு சொல்லை ஒரு முறைக்கு மேல் சொல்ல வேண்டிய நிலை ஏற்படுவதுண்டு. அவ்வாறு கூறுதலை ஒரு சொல்லடுக்கு என்பர் ஆசிரியர். இவ்வாறு அடுக்கி வரும் இடங்கள் இசை நிறை, அசை

நிலை, பொருளோடு புணர்தல் என மூன்று வகைப்படும்.

தமிழில் அசையழுத்தம் இல்லையென்பாரும் உளர். அசையழுத்தம் என்பது சொற்களின் ஒலி நிலை எனலாம். ஒலி நிலையால் பொருளை வேறு படுத்துதல் தமிழில் உண்டு. ஒரு சொல்லிலும் உண்டு; இரண்டு மூன்று சொற்களால் தொடர்ந்து தொகைச் சொற்களாக வரும் சொற்களிலும் உண்டு.

'செய்யேன்' என்னும் சொல்லுக்கு 'நீ செய்வாயாக' என்ற பொருளும், 'நான் செய்யமாட்டேன்' என்ற பொருளும் உண்டு. எப்பொருளைக் கருதிக் கூறுகின்றோம் என்பதை ஒலி நிலையால்தான் அறிவித்தல் வேண்டும். 'தபு' என்பதைப் படுத்துச் சொன்னால் (மெல்லிய குரலில் கூறினால்) 'நீ சா' என்றும், எடுத்துச் சொன்னால் (உரத்த குரலில் கூறினால்) 'நீ சாவப் பண்ணு' என்றும் பொருள் தரும். இவைகளை எழுத்ததிகாரத்தில் கூறியவர், இங்குச் சொற்கள் தொடர்ந்து தொகையாக நிற்பதையும் அத்தொகைச் சொற்களுள் ஒலி நிற்கும் நிலைகளையும் உணர்த்துகின்றார்.

தொகைச் சொற்கள் வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என ஆறு வகைப்படும். இவைகள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் உருவாகி இருந்தாலும் ஒரு சொல் போன்றுதான் ஒலிக்கப்படல் வேண்டும் என்பதனை "எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய" என்ற நூற்பாவால் அறிவுறுத்துகின்றார்.

அசையழுத்தத்தால் (Accent) பொருள் அறிவிக்கப் படுதலின் அதனைப் பொருள் நிலை என்றே சுட்டு

கின்றார். அப்பொருள் நிலை, முன்னுள்ள சொல்லிலும், பின்னுள்ள சொல்லிலும், இருசொற்களிலும், இருசொற்கு அப்பாலும் நிற்கும் என வரையறுத்துக் கூறுகின்றார்.

சொற்களுள் சில பொருளுணர்த்தும் மரபினையும் புதிய சொற்கள் அவ்வப்போது படைத்துக்கொள்ளப் படலாமெனவும், வழங்கும் சொற்களையே உருக் குறைத்து வழங்குதல் உண்டெனவும், சொல்லுக் குரிய பொருளென்ற குறிப்பால் வேறு பொருள் பெறப்படுதல் உண்டெனவும், ஒரு பொருள் தரும் இரு சொற்களைச் சேர்த்துக் கூறல் இயல்பெனவும் வழக்காற்றில் சொல் பயனுறும் முறையைத் தெள் ளிதின் விளக்குவதனுல் ஆசிரியர் மொழி நூற்புலவ ராகவும் விளங்குகின்றார்.

மொழி என்பது மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் கருவி; அக்கருவி வழக்காற்றி னுள்ளும் செய்யுளுள்ளும் எவ்வாறு பயன்பட்டு வருகின்றது என்பதனைப் பதினெட்டு இயல்களால் ஆராய்ந்து கூறியுள்ள சிறப்பு வேறு எம்மொழிக்கும் இல்லாத ஒன்றாகும்.

# பொருள்

# III

# பொருள்

எழுத்தைப் பற்றியும் சொல்லைப் பற்றியும் விரிவாக உரைத்த ஆசிரியர் தொல்காப்பியனார், எழுத்தால் ஆக்கப்பட்ட சொற்றொடர் கருவியாக அறியப்படும் பொருளைப் பற்றி உரைப்பதுவே அவர் நூலின் மூன்றும் பகுதியாகும். எழுத்தும் சொல்லும் மொழியைப் பற்றியன. மொழியைத் திருத்தமாக நன்கு பயன்படுத்த மொழிநூலறிவு வேண்டும். திருத்தமுற்ற மொழியின் செம்மைப் பண்பு நிலைத்திருக்க அம்மொழியில் உரையும், பாட்டும் தோன்றுதல் வேண்டும். அவ்வாறு தோன்றும் உரையும் பாட்டுமே இலக்கியம் எனப்பட்டன. பண்பட்ட மொழியின் செம்மைசால் மலரே இலக்கியமாகும். ஒரு மொழிக்கு வளமும், வாழ்வும் அளிப்பது இலக்கியமே. இலக்கியம் தோன்றப் பெறுத மொழி நூற்றுண்டுதோறும் மாறிக் கொண்டே செல்லும்; ஒன்றே பலவாகப் பிரிந்து அழியினும் அழியும். ஆகவே மொழியின் நிலைத்த வாழ்வுக்கு இலக்கியம் பெரிதும் துணை புரியும்.

அன்றியும் மக்களின் வாழ்வைச் செம்மைப் படுத்துவதும் இலக்கியமேயாகும். இலக்கிய மணமற்ற வாழ்வு இன்பமற்ற வாழ்வாகும். இலக்கியப் படைப்பும் இலக்கியப் பயிற்சியும் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாதன என்பதனை நன்கு தெளிந்த தமிழ்ச் சான்றோர் மொழிநூற் புலமையோடு இலக்கியப் புலமையும் யாவர்க்கும் வேண்டும் என்று கருதி மொழி நூலையும் (Science of Language), இலக்கிய விளக்க நூலையும் (Science of Literature) ஒன்றாக இணைத்து நன்றாகப் பயிலும் முறையை நானிலத்திற்குக் காட்டினர். ஆசிரியர் தொல்காப்பியரும் அவ்வழியைத் தொடர்ந்து எழுத்தும் சொல்லும் அறிந்தார் இலக்கியமும் தெளிதல் வேண்டுமெனப் பொருள் என்ற பெயரால் இலக்கிய இலக்கணம் கூறினார். பொருள் என்ற பெயர் மிகவும் பொருட் செறிவுடையது. இலக்கியத்தின் பொருள் வாழ்வு; வாழ்வின் பொருள் இலக்கியம். இவ்விரண்டு பற்றியும் கூறுவதே பொருட் படலம் (பொருளதிகாரம்).

மேலை நாட்டு மொழிகளில் எல்லாம் இலக்கிய ஆராய்ச்சி (Criticism of Literature) நன்கு வளர்ந்துள்ளது. ஆனால் இலக்கிய இலக்கணம் உருவாகவில்லை. தோன்றிய இலக்கியத்தை ஆராய்ந்தார்கள்; அவ்வாராய்ச்சிக் கலையை நன்கு போற்றினர். ஆனால் இவ்வாறுதான் இலக்கியம் இயற்றப்படல் வேண்டுமென்று வரையறுத்துக் கூறினார் இலர். புலவர் தாம் விரும்பியவாறு புதியன படைத்தலை மேற்கொள்ள உரிமையளித்தனர். ஆனால் தமிழ் முன்னோர்கள் பன்னெடுங்காலப் பயிற்சியின் பயனாக இலக்கியப் படைப்புக்குரிய விதிமுறைகளை அறிந்து இவ்வாறுதான் இலக்கியம் இயற்றப்படல் வேண்டு

மென வரையறை செய்தனர். இவ்வரையறை இலக்கணம், புலவர்க்கு அளிக்கப்பட்ட சிறைக் கூடம் அன்று; உரிமையோடு வாழும் பேரில்லமாகும். இலக்கண நெறியில் நின்று, விரும்பும் உரிமையோடு மரபு நெறி வழுவாது புதியன படைக்கப் புலவர்க்கு வழிகாட்டினர். ஆகவே பொருட் படலம் இலக்கணப் பகுதியின் இணைபிரியாத உறுப்பாக இலங்கியது. தொல்காப்பியப் பொருட்படலத்தால் தமிழிலக்கியம் படைக்கப்பட வேண்டிய முறைமை பற்றியும், தமிழிலக்கிய நிலை பற்றியும், இலக்கியம் தோன்றுவதற்கு அடிநிலமாகும் மக்கள் வாழ்வு பற்றியும் தெளிவுற அறிதல் கூடும்.

இலக்கியம் என்பது தூய தமிழ்ச் சொல். அதன் பொருள் 'குறிக்கோளை இயம்புதல்' என்பதாகும். வாழ்வின் குறிக்கோள் — இலக்கியத்தின் குறிக்கோளை இயம்புதலே பொருட் படலத்தின் நோக்கமாகும்.

வாழ்வின் குறிக்கோள் என்ன? இன்பமாக வாழ்தல். வாழ்வே இன்பத்திற்குரியது. வாழ்வில் ஒரொருகால் துன்ப நிகழ்ச்சிகள் தோன்றினும் அவையும் இன்பத்திற்கு அடிப்படையாகும்; ஆதலின் இன்பமென்றே கருதத் தக்கன. எல்லாம் இன்ப மயம். இன்ப வாழ்வுக்கே இன்ப வாழ்வால் மக்கள் தோன்றியுள்ளனர். உலகில் தோன்றிய பிற நாட்டுப் பெரியார்கள், "உலகம் துன்ப மயம்; துன்ப வாழ்விலிருந்து விடுதலை பெறுவதே வாழ்வின் குறிக்கோள்" என்றனர். தமிழ்ப் பெரியார்கள் அவ்வாறு கருதாது, "வாழ்வு இன்பத்திற்குரியது; இன்பமாக வாழ்தலே வாழ்வின் குறிக்கோள்" என்று

நிலைநாட்டினர். அவ்வின்ப வாழ்வுக்கு அடிப்படை இல்லற வாழ்வு; இல்லறத்திற்கு இன்றியமையாதவர்கள் காதலால் பிணிப்புண்ட தலைவனும் தலைவியும். ஆதலின் தலைவனும் தலைவியும் கொண்டொழுகும் காதல் தொடர்பினை மையமாகக் கொண்டே இலக்கியங்கள் தோன்றி உருவாகி வளர்ந்தன. இலக்கியம் என்பது வாழ்வின் ஓவியம் என்பது மேலை நாட்டறிஞர் கருத்து. அக்கருத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது பண்டைத் தமிழ் இலக்கியமே. தமிழிலக்கியம் தோன்றிப் பன்னூறு ஆண்டுகள் கழிந்த பின்னரே தொல்காப்பியம் தோன்றியது.

தொல்காப்பியம், இலக்கியம் எவ்வாறு இயற்றப்பட வேண்டுமென்பதை இனிது எடுத்தியம்புகின்றது. வாழ்வின் அடிப்படையிலே இலக்கியம் தோன்றுவதால் இலக்கியத்தைப் பற்றிக் கூறுவது வாழ்வுக்கும் பொருத்தமாக அமைந்துள்ளது. பொருட் படலத்தால் இலக்கியத்தைப் பற்றியும் தமிழர் வாழ்வைப் பற்றியும் நன்கு அறிய இயலுகின்றது.

எகிப்தியரும், கிரேக்கரும், சீனரும், தொன்மை வாய்ந்த நாகரிகமும் பண்பாடும் உடையவர் என்று வரலாறுகள் கூறுகின்றன. தமிழரும் மிகமிகத் தொன்மை வாய்ந்த நாகரிகமும், பண்பாடும் உடையவர் என்பதைத் தொல்காப்பியத்தால் அறியலாகும். ஆனால் இத்தொல்காப்பியத்தை உலகம் இன்னும் நன்கு அறிந்திலது. தமிழர்களே அறிந்திலர். தொல்காப்பியப் பொருட் படலம் இலக்கிய விளக்கம் தரும் இன்ப நூலாக மட்டுமன்றி வரலாற்றுக் கருவூலமாகவும் அமைந்துள்ளது.

வரலாற்று நூலாசிரியர்களில் பெரும்பான்மையினர் தொல்காப்பியத்தைக் கற்றறியும் பேறு பெற்றிலர். ஆகவே தமிழர்களைப் பற்றித் தவறான செய்திகளை எழுதிவிட்டனர். தமிழக வரலாறு எழுதுவோர் தொல்காப்பியத்தைக் கற்று அறிதல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களைப் பற்றிய உண்மையான வரலாற்றினை எழுதுதல் கூடும்.

தமிழர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர் என்றும், ஆரியர்களால் நாகரிகர் ஆக்கப்பட்டவர் என்றும், திராவிடம் என்ற சொல்லிலிருந்தே 'தமிழ்' என்ற சொல் தோன்றியது என்றும் உண்மை நிலைக்கு மாறாகக் கூறியவர்களும் உளர். ஆரியர்கள் கலப்பு ஏற்படுவதற்கு முன்னர் இருந்த தமிழகப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் தொல்காப்பியத்தினுல் நன்கு அறியலாகும். அப்பண்பாடும் நாகரிகமும் இக்காலத்திலும் போற்றிக்கொள்ளக் கூடியனவாய் உள்ளன. அங்ஙனமிருந்தும் உலகப் பண்பாடு, உலக நாகரிகம், உலக வரலாறு என்று கூறப்படும் நூல்களில் தமிழகத்தைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் காண இயலாது. கிரேக்க நாட்டுப் பெரியவர்களைப் பற்றி விரித்துக் கூறி, கிரேக்க நாடே உலகப் பண்பாட்டின் பிறப்பிடம் என்று ஓயாது முழங்குகின்றனர். ஆனுல் தொல்காப்பியத்தின் வழியாகத் தமிழகப் பண்பாட்டை அறிந்து அஃதே உலக நாகரிக ஊற்று என அறிகின்றுரிலர்.

மக்கள் வாழ்க்கை அடிப்படையில் இலக்கியம் இயற்றப்படல் வேண்டும் என்று வரையறுக்கும் தொல்காப்பியம், மக்கள் வாழ்க்கையை எவ்வாறு கூறுதல் வேண்டும் என்பதை அகத்திணை இயல்,

புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல் என்பனவாக வகுத்துரைக்கும் நுட்பம் வியக்கத் தக்கது. அவை பற்றி ஒவ்வொன்ருகப் பின்வரும் இயல்களில் ஆராய்வோம்.

# 1. அகத்திணை இயல்

தமிழ் நூலார் இலக்கியங்களை அகம் என்றும் புறம் என்றும் இருவகையாகப் பிரித்தனர். ஆங்கில நூலார் பிரித்துள்ள தன்னைப் பற்றியன (Subjective Poems), பிறரை—பிறவற்றைப் பற்றியன (Objective Poems) என்ற பிரிவினோடு அகம், புறம் என்பன ஒரு வகையில் ஒத்திருப்பதைக் காணலாம். அகம் சிறப்பாகத் தன்னைக் குறியாது போயினும், புறம் பிறரையும்—பிறவற்றையும் குறிக்கும். ஆனால் பழந்தமிழர் 'அகம்' காதல் பற்றியும், 'புறம்' காதலின் தொடர்பாக விளையும் பிறவற்றையும் குறிக்கும் எனப் பொருள் கொண்டு அவ்வகையிலேயே இலக்கியங்களைப் படைத்துள்ளனர். காதலே உலகத்தின் உயிர் என்று கூறலாம். உலகப் பெருக்கத்திற்கும் வளத்திற்கும் காதல்தான் அடிப்படை. காதலின்றேல் சாதல் என்பது காதலர்க்கு மட்டுமன்று; எல்லார்க்கும் பொருந்தும். காதலை இலக்கிய ஊற்று என்றும் கூறலாம். உலக இலக்கியங்களை ஆராய்ந்தால் காதல் அடிப்படையில் தோன்றியுள்ள இலக்கியங்கள் எண்ணற்றனவாய் இருப்பதை எளிதில் தெளியலாகும்.

காதல் என்பது நாகரிகப் பண்பாட்டின் அளவு தெரிவிக்கும் உரைகல் என்றும் உரைக்கலாகும். சாதி மத நிலை வேறுபாடற்ற மக்களின் வாழ்வின் நிலைக்

களமும், ஆண் பெண் சமத்துவ உரிமைப் பண்பும் காதலே. அக் காதல் வாழ்வே இலக்கியத் தோற்றத் திற்கு உரிய விளை நிலமாதலின் அது பற்றி இலக்கி யத்தில் கூறும் மரபுகளைத் தொகுத்துரைப்பதே அகத்திணையியலாகும்.

காதலை 'அகம்' என்றது ஏன்? "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப் படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" என்று நச்சினார்க்கினியர் உரைத் துள்ளமை காண்க. அகத்தே நிகழ்கின்ற காதல் இன்பத்தை அகம் என்றது ஆகு பெயராம்.

இக்காதல் ஒழுக்கம் எழுவகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந் திணை எனப்படும்.

கைக்கிளை என்பது ஆண் பெண் எனப்படும் இரு சாராருள் ஒருவர் மட்டும் காதலித்தல் ஆகும். காதலைப் பற்றி அறிந்து அதன் இன்பம் துய்க்கும் பக்குவம் பொருந்தப் பெறாத இளையாள் ஒருத்தி யிடம் ஒருவன் தன் காதல் குறிப்பை அறிவித்து அவளிடம் அதற்குரிய வாய்ப்பினைப் பெறாது வருந்து வான். வருந்துங்கால், "இவளை யான் தலைவியாகக் கொண்டால்தான் உயிர் வாழ்வேன்; இல்லையேல் என் வாழ்வால் பயனில்லை. என் காதல் நோய்க்கு இவளே மருந்தாவாள். அங்ஙனமிருந்தும் இவளும் விரும்பிலள்; இவள் பெற்றோரும் இவளை எனக்கு

மணம் செய்ய எண்ணிலரே" என வருந்திப் பலவாறு கூறவும், அக்கூற்றுக்கு மாற்ருகக் காதலிக்கப் படுவோளிடமிருந்தோ, அவள் சுற்றத்தாரிட மிருந்தோ எவ்வுரையும் பெருமல் தானே நினைந்து நினைந்து சொல்லி 'அச்சொல்லுதலிலே இன்பம் காணுவான். காதல் எண்ணம் அவனிடம் இருக் கின்றது ; அவளிடம் இல்லை. ஆகவே ஒரு மருங்கு பற்றிய காதல் ஆயிற்று.

காதல் வயது அடைந்துள்ள பெண்களைக் கண்டு விரும்பி அவள் காதலிக்காமல் ஆடவன் மட்டும் காதலித்தாலும் கைக்கிளைதான். பெண் காதலித்து ஆண் காதலிக்காமல் இருந்தாலும் கைக்கிளைதான். ஆனால் இவ்விரண்டு பற்றியும் ஆசிரியர் கூறிஞரிலர். முதலில் காதல் எண்ணம் தோன்ருது போயினும் பின்னர்க் காதல் நிலையை அடைவர். கைக்கிளைத் தன்மை நிலைத்து நில்லாது. காதலியல்பு நிரம்பப் பெருத இளையோளாய் இருப்பின் அவன் என்ன கூறினும் உள்ளம் இரங்காள் அன்ருே ? ஆகவே கைக்கிளைக்குரியவள் காதல் சாலா இளையோள் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்திணை என்பது பொருந்தாத காதல். அது நான்கு வகைப்படும். காதலியைத் தான் விரும்பியவாறு அடையப் பெருமல் மடலேறி அடைய முயலுதல், மணப் பருவத்திற்குரிய இளமை கழிந்த பின்னர் மணக்க விரும்புதல், தெளிவிக்க முடியாதவாறு அடைய முடியாத காதல் வயப்பட்டு வருந்துதல், காதல் மிகுந்து வலிமையால் கட்டாயப் படுத்திக் கூடுதல் என்பனவே அவை நான்கும். இவை ஓரோருகால் ஓரோரிடங்களில் காணப்படும் நிகழ்ச்சிகளே. ஆகவே இலக்கியங்களிலும் இவை பயிலும்.

ஐந்திணை என்பது உளமொத்த காதலாகும். உளமொத்த காதல் உருவாகுங்கால் கூடலும், பிரிதலும், ஊடலும், இருத்தலும், இரங்கலும் நிகழக்கூடியனவாம். தலைவனும் தலைவியும் காதலில் பிணைந்து கூடுதலைக் குறிஞ்சி என்றும், கூடிய பின்னர்ப் பிரிதலைப் பாலை என்றும், தலைவன் பிரிந்த காலத்தில் தலைவன்மீது பொருந்தாதனவற்றைச் சார்த்தித் துயர்கொண்டு ஊடி இருத்தலை மருதம் என்றும், ஊடினாலும் உலகியலை நினைந்து தலைவன் வரும்வரை ஆற்றியிருத்தலை முல்லை என்றும், நாளாக நாளாக ஆற்றாமை மிகுந்து கணவனை நினைந்து இரங்குதலை நெய்தல் என்றும் அழைத்தனர். ஆகவே ஐந்திணை என்பன குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் ஆம்.

திணை என்பது ஒழுக்கத்தையும், இடத்தையும் உணர்த்தும். ஆதலின் குறிஞ்சி என்பது கூடல் ஒழுக்கத்தையும், மலையும் மலைசார்ந்த இடத்தையும் குறிக்கும். பாலை என்பது பிரிவு ஒழுக்கத்தைக் குறிக்கும். அதற்கெனத் தனி நிலம் இல்லை. எல்லா நிலங்களுக்கும் உரியது. இளங்கோ அடிகள் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலையாகும் என்றனர். பாலையொழிந்த ஏனை நான்குமே நிலம் பெற்றிருத்தலின் தமிழர்கள் உலகத்தை நானிலம் (நால் + நிலம்) என்றனர் என்பர். மருதம் ஊடல் ஒழுக்கத்தையும் வயலும் வயல் சார்ந்த இடத்தையும் குறிக்கும். முல்லை இருத்தல் ஒழுக்கத்தையும் காடும் காடு சார்ந்த இடத்தையும் குறிக்கும். நெய்தல் இரங்கல் ஒழுக்கத்தையும் கடலும் கடல் சார்ந்த இடத்தையும் குறிக்கும்.

குறிஞ்சி, மருதம் முதலிய பெயர்கள் முதலில் மரம் செடி கொடிகளுக்கு உரியனவாயிருந்தன.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்கள் குறிஞ்சி மிக்கிருந்த நிலத்தைக் குறிஞ்சியென்றும், மருதம் மிக்கிருந்த நிலத்தை மருதம் என்றும் அழைத்தனர். பின்னர் குறிஞ்சி நிலத்திற்குச் சிறப்பான கூடல் ஒழுக்கத்தைக் குறிஞ்சி என்று அழைத்தனர் ஆதல் வேண்டும்.

ஐந்திணைகளாக உலகத்தைப் பிரித்தனர். ஐந்திணைகளே இலக்கியத்திற்குரியனவாயிருந்தன. இவைகள் முதல், கரு, உரி என முப்பெரும் பிரிவை உடையனவாய் இருந்தன. ஒவ்வொரு திணைக்கும் முதல், கரு, உரி என்பன தனித்தனியே வரையறுக்கப் பட்டன.

முதல் என்பது நிலனும் பொழுதும்.

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" என்பர் ஆசிரியர். உலகத்திற்கு முதன்மையாக இருப்பன இவையே யன்றே! இவை யாரால் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டன என்று வரையறுத்துக் கூற முடியாத இயல்பினவாக இருக்கின்றன. இடமும் காலமும் என்றும் உள்ளனவாதல் வேண்டும். ஆகவே என்றும் உள்ளனவற்றை முதற் பொருள் என்றதன் சிறப்பு நோக்கின் வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தது ஆகின்றது.

நிலம் நால்வகையாகப் பிரிக்கப்பட்டது. காடுறை யுலகம், மைவரை (மலை) உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் என்பனவாக முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லப்பட்டன. உலகம் இந்நால்வகை இயற்கைப்

பிரிவினுள் அடங்கிவிடுகின்றது. பாலையின் தோற்றம் இயற்கையன்று. நிலைத்ததும் அன்று. சோலை நிலம் பாலையாவதும், பாலை நிலம் சோலையாவதும் என்றும் நிகழக்கூடியனவே. ஆதலின் ஆசிரியர் பாலையை நிலப் பகுப்பினுள் சேர்த்திலர். இப்பிரிவு தமிழ் நாட்டுக்கு மட்டும் உரியதன்று; உலகத்திற்கே உரியது என்பதனை உணர்த்தவே காடுறை உலகம், மலை உலகம் என்றும் குறிப்பிட்டனராதல் வேண்டும்.

உலகக் கண்ணோட்டம் உலகில் அண்மைக் காலத்தே தோன்றி வளர்ந்து வருகின்றது. நாடுகள் என்ற நினைப்பற்று உலகம் ஒன்று என்ற எண்ணம் உருப்பெற்று ஓங்க வேண்டும் என்று இந்த நூற்றாண்டில்தான் முழங்குகின்றனர். ஆனால் நம் தமிழ் முன்னோர்கட்குப் பண்டே இவ்வுணர்வு தோன்றி விட்டது என்பதைத் தொல்காப்பியத்தாலும், பிற இலக்கியங்களாலும் அறியலாம்.

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
> சொல்லிய முறையால் சொல்லவும் படுமே."

ஒரு நிலப் பகுதியைக் குறிப்பிடுங்கால் அந்நிலப் பகுதியில் சிறப்பாகக் கிடைக்கும் விளைபொருள் களையோ, செய்பொருள்களையோ எடுத்து மொழிவது தான் இயல்பு. ஆனால் ஆசிரியர் தொல்காப்பியர் அந்நிலத்து மக்களால் வழிபடப்படும் கடவுளினைச் சிறப்பாக எடுத்து மொழிகின்றார். மக்களுக்குக் கடவுள் பற்றும் கடவுள் உணர்வும் இன்றியமைை யாதன என்பதனை வலியுறுத்தவே ஆசிரியர் இவ்வாறு கூறியுள்ளாராதல் வேண்டும்.

இங்குக் கூறப்பட்டுள்ள மாயோன், சேயோன் வேந்தன், வருணன் முதலிய கடவுளர்கள் திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆவார்கள் என்றும், இவர்கள் ஆரியர்களால் வணங்கப்பட்டவர்கள் என்றும், ஆகவே ஆரியர்களின் தொடர்பு தமிழர்கட்கு உண்டான பிறகே இக் கடவுள் வழிபாடு இத்தமிழகத்தில் நிலைபெற்றது என்றும் கருதுவாரும் உளர்.

ஒரு பெயர் ஓருருவம் ஒன்றுமில்லாக் கடவுளுக்குப் பல பெயர்களிட்டுப் பல வழியாக வழிபடுதல் தமிழர் இயல்பு. பெயர் பலவாயினும் கடவுள் ஒருவரே என்ற உணர்வு தமிழர்க்கு என்றும் உண்டு. இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ள மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலியனவும் ஒரு கடவுளைச் சுட்டுவனவே. மாயோன் என்ருல் அழியாதவன்; சேயோன் என்ருல் சேய்மையிலுள்ளவன்; அறிவுக்கு எட்டாதவன்; வேந்தன் என்ருல் தலைவன், விரும்புதற்குரியவன். வருணன் என்ருல் நிறங்களுக்குரியவன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பொருள் கொண்டால் நான்கு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றன என்று தெளியலாம். வடமொழியில் உள்ள புராணநூல்களைக் கற்றறிந்த உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய காலத்து வடமொழிக் கதைகளை உளத்தில் கொண்டு உரையெழுதி விட்டனர். என்றும் அழியாதவன் என்று கருதப்பட்ட இறைவன் பிறந்து இறக்கும்தொழில்களைக் கொண்ட திருமால் என்று கருதப்பட்டு விட்டான். உண்மைப் பற்றில்லார் அறிவினுக்கு எட்டாதவன் எனப்பட்ட இறைவன் முருகனுகி, சிவனின் புதல்வனுகி, இளையோனுகி, கணபதியின் தம்பியாகி விட்டான். யாவர்க்கும் தலைவனுக விரும்பப்படும் இறைவன் (வேந்தன்)

தேவர்கட்கு அரசனும் இந்திரனாகி விட்டான். பெருநிற வண்ணனாய் எல்லா நிறங்களுக்கும் காரணனாகிய இறைவன் (வருணன்) ஆரிய நூல்களில் கூறப்படும் மழைக் கடவுளாம் வருணன் எனப் பட்டான். உரையாசிரியர்களின் உரைப் பொருள் மாற்றம் உண்மையை உணரமுடியாமல் செய்து விட்டது. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலக இயல்பினை விளக்க வந்த ஆசிரியர் பிற நாட்டு மொழியியல்பை உரைத்தனர் என்றல் அறிவொடுபட்ட உரையாகாதன்றோ? ஆகவே இந் நூற்பாவில் கூறப்படும் கடவுட் கொள்கை தமிழர்க்கே உரியதாகும்.

இன்னொரு முதற் பொருளாம் பொழுது பற்றியும் விளக்குகின்றார். பொழுது, பெரும் பொழுது எனவும், சிறு பொழுதெனவும் பிரிக்கப்பட்டிருந்தது. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும் பொழுது. மாலை, யாமம், விடியல், காலை, நண்பகல், எற்பாடு என்பன சிறுபொழுது. சிறுபொழுது ஆறு என்பாரும் உளர்; ஐந்து என்பாரும் உளர். ஆறு என்றலே பொருத்த முடைத்து.

நாழிகை, நாள், வாரம், திங்கள், பருவம், ஆண்டு முதலிய பிரிவுகளைத் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் அறிந்திருந்தனர். இன்னின்ன திணைக்கு இன்னின்ன பொழுது சிறந்ததாகும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முல்லைக்குக் காரும் மாலையும் சிறந்தனவாம். குறிஞ்சிக்குக் கூதிரும் யாமமும் சிறந்தனவாம். ஏன் சிறந்தன என்பது பற்றி நச்சினார்க்கினியர் இனியதோர் விளக்கம் தருகின்றார்.

கார் காலம் என்பது ஆவணியும் புரட்டாசியுமாம். ஒரு காலத்தில் ஆண்டுத் தொடக்கம் ஆவணி முதலாகக் கொள்ளப்பட்டது என்பர். இன்றும் மலையாள நாட்டில் ஆண்டுத் தொடக்கம் ஆவணியிலிருந்தே கொள்ளப்படுகின்றது. இப்பொழுது சித்திரை முதலாக ஆண்டுத் தொடக்கம் கொள்கின்றோம். இம்மாற்றம் என்று உண்டாயிற்று என்பது ஆராய்ந்து காண்டற்குரியது. ஆவணியும் புரட்டாசியும் கார்காலம்; ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர் காலம்; மார்கழியும் தையும் முன் பனிக்காலம்; மாசியும் பங்குனியும் பின் பனிக் காலம்; சித்திரையும் வைகாசியும் இளவேனிற்காலம்; ஆனியும் ஆடியும் முதுவேனிற் காலம். இவ்வாறு காலங்கள் பிரிக்கப்பட்டு எண்ணப்பட்டு வந்தன. பன்னிரண்டு மாதங்களும் தமிழ்ப் பெயர்களே. இவை தொல்காப்பியர் காலத்திலேயே ஆட்சியிலிருந்தன.

நாழிகை வட்டிலால் நாழிகை யறிந்து நாட்கடனாற்றினர் என்பது பண்டைய இலக்கியங்களால் நன்கு அறியலாகும்.

கருப் பொருள் என்பன முதற்பொருளாம். நிலத்திலும், காலத்திலும் தோன்றுவன. மக்களுக்குப் பயன்படுவன. அக்கருப்பொருளாவன தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, தொழில், யாழ் முதலியன.

> "தெய்வம், உணவே, மா, மரம், புள், பறை,
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப."

உலகத்திற்கு முதற் பொருளாயுள்ள கடவுளை முதற் பொருள் என்னாது கருப்பொருள் என்றதன்

நுட்பம் ஆராய்தற்குரியது. மக்கள் கடவுளால் படைக்கப்பட்டிருந்த போதிலும், கடவுள் உணர்வு இன்றி மக்கள் வாழ்ந்த காலமும் உண்டு. காலப் போக்கில் வாழ்க்கை நுகர்ச்சியால் கடவுளை உணர்ந்தனர். தாம் உணர்ந்த கடவுளுக்குப் பெயரும் பிறவும் இட்டனர். கடவுளால் படைக்கப்பட்ட மக்கள் கடவுளைத் தம் அறிவு முதிர்ச்சியால் உணர்ந்து படைத்துக்கொண்டனர். வாழ்க்கை நலனுக்கு உலக ஒழுங்கு முறைக்குக் கடவுட்கொள்கை இன்றியமையாததெனை உளத்திற்கொண்டு போற்றினர். உணவினும் முதன்மையானது என்று கண்டனர். உணவை மறந்தாலும் கடவுளை மறத்தல் ஆகாது என்று உறுதியாகக் கொண்டனர். அதனு லன்றே ஆசிரியர் தொல்காப்பியனாரும் உணவுக்கு முன் தெய்வத்தை வைத்துள்ளனர். சிலர் தெய்வம் வேறு; கடவுள் வேறு என்பர். சிலர் தெய்வம் வட சொல், கடவுள் தென் சொல் என்பர். தெய்வம் என்பது தூய தமிழ்ச் சொல்லே. தெய்வமும், கடவுளும் ஒன்றே. 'தெய்வம்' என்ற சொல் 'தேய்' என்பதினின்றும் தோன்றியிருக்கக் கூடும். உயிர்களின் துன்பத்தைத் தேய்ப்பது தெய்வம். மக்கள் கடவுளை நினைக்கத் தொடங்கியது தம் துன்ப நீக்கத்திற்காகவே. இன்றும் பலர் கடவுளை நினைப்பது தமக்குத் துன்பம் வரும் காலத்தினுல் தான். ஆதலின் 'தெய்வம்' எனும் தமிழ்ச் சொல் 'தேய்' என்ற அடியினின்று தோன்றியதாகக் கொள்ளலாம்.

கருப்பொருளில் யாழும் சேர்க்கப் பட்டுள்ளது. 'யாழ்' இன்னிசைக் கருவி; இன்னிசையில் தமிழர்கள் நன்கு சிறந்திருந்தனர் என்பதற்கும் வாழ்வில் இன்னிசையும் தக்க இடம் பெறுதல் வேண்டும்

என்று கொண்டிருந்தனர் என்பதற்கும் இது சான்ருகும்.

உரிப் பொருள் என்பன புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆம்.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேரும் காலைத் திணைக்கு உரிப் பொருளே."

இவை எல்லாத் திணைகளிலும், நிகழுமென்ருலும் குறிஞ்சிக்குப் புணர்தலும், பாலைக்குப் பிரிவும், முல்லைக்கு இருத்தலும், நெய்தலுக்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலும், சிறந்தனவென்று கொள்ளுதல் வேண்டும்.

புலவர்கள் பாடல் இயற்றுங்கால் முதல், கரு, உரி என்ற மூன்றும் அவ்வத்திணைக் குரியனவாய் இருத்தல் வேண்டும். இவை மூன்றும் பொருந்தப் பாடப் பெற்றனவே சங்க இலக்கியங்கள். குறிஞ்சி என்ற திணைப் பெயரோடு பல பாடல்களிருப்பினும் ஒவ்வொரு பாடலும் தனித்தனி நலம் பொருந்தியன வாய் இலக்கிய இன்பம் ஊட்டுவதில் இணையற்று விளங்கக் காணலாம். கருப்பொருள்கள் மயங்கி வரப் பாடுதலும் உண்டு. ஒரு நிலத்துக்குரியன இன்னொரு நிலத்திலும் தோன்றுதல் இயல்பு. தாமரை மருதத் துக் குரியது. மலையின் சுனையில் காணலும் கூடும். மயில் குறிஞ்சிக்கு உரியது. முல்லைக்குரிய காட்டில் வாழலும் கூடும். ஆதலின் ஆசிரியர் தொல்காப்பியர்,

"எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்"

என்று கூறிப் போந்தார்.

இயற்கையை ஒட்டி இயற்றப் படுவதே இலக்கியம். ஆதலின் இவை மூன்று பற்றியும் தெளிவுறத் தெரிதல் இன்றியமையாதது.

பாடல்களுள் மக்களைப் பற்றியும் குறிப்பிட நேரிடும். மக்களைக் குறிப்பிடுங்கால் அவர்கள் பெயர் களைப் பற்றிச் சில மரபுகளும் உண்டு. அகப் பொருட் பாடல்களுள் இயற்பெயர் கூறப்படுதல் கூடாது. புறப் பொருள் பாடல்களுள் கூறலாம். அகத்திணையுட் புறப் பொருள் கலந்து வருமேல் அப்புறப் பொருளுள் ஒருவரியற் பெயர் சுட்டிக் கூறப்படலாம்.[1]

அகப் பொருளுள் பயிலக் கூடிய பெயர்களை திணைதொறும் மரீஇய பெயர் என்றும், திணை நிலைப் பெயர் என்றும், இருவகையாகக் கூறுவர். அவை பெயர்ப் பெயராகவும் இருக்கலாம்; வினை (தொழில்)ப் பெயராகவும் இருக்கலாம்.

திணைதொறும் மரீஇய பெயராவன வேட்டுவர், குறவர், ஆயர், உழவர் முதலியன.

திணை நிலைப் பெயர்களை உரிப் பொருட் பெயர் கள் என்றும் கூறுவர். அவை வெற்பன், அண்ணல், உழவன் முதலியன.

பாடல்களுள் தலைமக்களாக வருவோர் எல்லா வகையாலும் சிறப்புடையராகவே இருத்தல் வேண்டும். உரிமை வாழ்க்கையுடையராய் மேம்

---

1. "மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி யொருவர் பெயர் கொளப் பெறுஅர்." தொல்: பொருள் சூ.54.
"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுத லிலவே — தொல் : பொருள் சூ. 55

பட்டு வாழ்வாரே காதல் வாழ்விலும் சிறப்புற முடியும். ஆயினும் ஏனையோர்க்கும் காதல் வாழ்வு விலக்கப்பட்டதன்று. பிறர்க்கு அடிமைத் தொண்டு புரிவோரும் குற்றேவல் செய்வாரும் அன்றும் இருந்தனர். அவர்களையும் தலை மக்களாகக் கொண்டு பாடல் இயற்றலாம். அவ்வாறு இயற்றுங்கால் ஒத்த காதலுக்குரிய ஐந்திணையில் வைத்து இயற்றுதல் இயலாது. அதன் புறத்தே உள்ள கைக்கிளை பெருந்திணைகளில் வைத்துத் தான் இயற்றலாம். இவ்வாறு கூறுவதனால் இலக்கியம் உலகியலைத் தழுவித் தான் அமைய வேண்டும் என்பதில் எத்துணை உறுதிப் பாடுடையர் ஆசிரியர் என்று அறியலாம். அங்ஙனமாயின் அடிமைகளும் ஏவலர்களும் காதல் வாழ்வில் வெற்றியுறுதல் இலையோ எனின், ஆம் என்றே கூறுதல் வேண்டும். ஒரொருகால் வெற்றி பெற்றாலும் பல இடர்ப் பாடுகளைக் கடந்தாக வேண்டும். கடந்தாலும் அமைதி வாழ்வு இராது. பணியாள் ஒருவன் அவன் தலைவரின் மகளைக் காதலிக்கலாம். அவள் அவனைப் பொருட்படுத்தாமலிருக்கலாம். அப்பொழுது கைக்கிளையாகி விடுகின்றது. காதலிக்குமவன் காதல் வெறி மிக்கு அவள் துயிலுங்கால் அவளையறியாமல் கூட முயலலாம். அது பெருந்திணையாகி விடுகின்றது. ஒருகால் அவளும் அவனைக் காதலிப்பளேல் உடல் தோற்றம் கண்டு தான் காதலிக்கவேண்டும். உடல் தோற்றம் கெடின் காதலும் மறையத் தொடங்கும். அவளும் வெறுத்துத் தன் அறியாச் செயலுக்குப் பின்னர் வருந்துவாள்.

ஏவலர் காதலும் நிறைவேறாது என்பதற்கு ஒரு சான்று. அரசரின் கீழ்ப் பணிபுரிந்த உயர் அலுவலாளர் ஒருவர் தாம் மணக்க விருக்கும் மங்கையுடன்

அரசரிடம் சென்று வாழ்த்துப் பெற நினைத்து அரசரைக் கண்டார். அரசர் மணமக்களை வாழ்த்த நோக்கினார். நோக்கு மணமகள் பால் சென்று அவள் அழகில் பொருந்தி விட்டது. பருகிய நோக்கைப் பற்று விட்டகலச் செய்ய இயலவில்லை. மணமகனுக்கு வாழ்த்துக் கூறி வேறொரு பெண்ணைத் தேடிக் கொள்ளச் சொல்லிவிட்டார். வாழ்த்துப் பெறச் சென்ற மங்கை வாழ்க்கைத் தோழியாக வேண்டிய நிலை வந்துவிட்டது. இது எகிப்து நாட்டில் அண்மைக் காலத்தில் நடந்த நிகழ்ச்சியாகும். ஆகவே,

**" அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
**கடிவரை இல புறத்து என்மனார் புலவர் "[1]**

என்று ஆசிரியர் கூறுவது எவ்வளவு உலகியலோடு பொருந்தியது என்று அறியலாமன்றோ.

பாடல்கள் இயற்றுவோர் யாப்பிலக்கணம் மட்டும் அறிந்தால் போதாது. நிலநூல், வானநூல், உயிர் நூல், அறநூல், மெய்யறிவு நூல், உழவு நூல், கடவுள் நூல், மக்களின் நூல் முதலியன யாவும் கற்றறிந்து இருத்தல் வேண்டும். அவர்களே வழுவின்றி யாவரும் விரும்ப எக்காலத்தும் நிலைத்து நிற்குமாறு இலக்கியம் இயற்றுதல் இயலும். கற்பித்துக் கூறும் நாடக வழக்காயினும், கண்ணுற் காணும் உலகியல் வழக்காயினும் முற்றும் கற்றுத் துறை போய புலவர்களே செம்மையுற இயற்றுதல் இயலும். தொல்காப்பியர்க்கு முன்னும் பின்னும் வாழ்ந்த புலவர்களில் பலர் அன்ன மாட்சியினை உடையராய் ஆய்தொறும்

1. அடியோர் பாங்கினும் = அடிமைத் தொழில் செய்வோரிடத்தும்: வினைவலர் பாங்கினும் = பிறர் ஏவிய தொழிலைச் செய்தல் வல்லோரிடத்தும், புறத்து = நடுவண் ஐந்திணைப் புறத்து நின்ற கைக்கிளை பெருந்திணைகளுள், கடிவரையில = தலை மக்களாகச் செய்யுட் செய்தல் நீக்கும் நிலை இல,

ஆய்தொறும் அளப்பில் இன்பம் அளிக்கும் செந்தமிழ் இலக்கியங்களை இயற்றினர்.

விரும்பிய பெண்ணை விரும்பிய ஆடவன் மணக்க முடியாதவாறு பெற்றோர்கள் உளநிலை தடையாக இருக்குமேல் காதலன் தன் காதலியை அவள் பெற்றோர்கள் அறியாமல் கொண்டு செல்வான். இவ்வாறு கொண்டு செல்வதைக் 'கொண்டு தலைக் கழிதல்' என்பர். தலைவன் தலைவியைக் கொண்டு சென்ற பின்னர் அவளைக் காணாத நற்றாய் (பெற்ற தாய்) பலவாறு புலம்புவாள்.

பேரூரின் தெருக்களில் தலைவியைத் தேடி அலைவாள் பெற்ற தாய். வளர்ப்புத் தாய் ஊரைக் கடந்தும் சென்று தேடுவாள்.

காதலிக்கு உறுதுணையாய் இருந்து உதவுபவள் அவள் தோழியாகும். தலைவி நிலைமையைத் தலைவனுக்கும் தலைவன் உளநிலையைத் தலைவிக்கும் அறிவிப்பாள். தலைவி தலைவனோடு புறப்பட்டுச் செல்ல ஆகும் உதவிகளைச் செய்வாள்; தலைவி வீட்டை விட்டுச் சென்ற பின்னர் வருந்தும் பெற்ற தாய், வளர்ப்புத்தாய் முதலியோர்க்கு ஆறுதல் கூறிக் காதலால் பிரிந்த தலைவி பொருட்டு வருந்துதல் பொருந்தாது என்று பலவாறு தேற்றுவாள்.

தலைவனும் தலைவியும் காதலே துணையாகப் புறப்பட்டுச் செல்லுங்கால் வழியிற் கண்டோர் கூறுதலும், தலைவன் தலைவிக்குக் கூறலும் சுவை மிக்க இலக்கியத் துறைகளாக அமையும்.

தலைவன் தலைவியை மணப்பதற்கு முன்னும் மணந்த பின்னரும் தலைவியை விட்டுப் பிரிந்து

செல்வதை அடிப்படையாக வைத்து இலக்கியங்கள் இயற்றுவதுண்டு. அவ்வாறு பிரிவதற்குரிய காரணங்கள் ஓதல், தூது, பகை என்பனவாம். உயர் கல்வி கற்பதற்காகவும், சந்து செய்விக்கும் அரசியல் தூதுவராகவும், நாடு காக்கும் போர் மேற் கொண்டும் பிரிதல் ஆடவர்க்கு இயல்பே. நாடு கடந்து வெளி நாடு செல்கின்றவர் நுண் மாண் நுழை புலன் மிக்கோராய் இருத்தல் வேண்டும். தம் நாட்டில் பெற முடியாத கல்வியை வெளி நாட்டில் பெறச் செல்வோர் நாட்டு மக்களில் உயர்ந் தோராகத் தானே இருத்தல் வேண்டும். தூது செல்வோரும் அறிவாலும், உருவாலும், ஆராய்ந்த கல்வியாலும் சிறந்தோராக இருத்தல் இன்றியமை யாதது. ஆகவே இலக்கியங்களில் கல்வியின் பொருட்டுப் பிரிவோரையும், தூதின் பொருட்டுப் பிரிவோரையும் பாடற் பொருளாகக் கொள்ளுங்கால் அவர்கள் எல்லா வகையிலும் யாவரினும் உயர்ந் தோராகக் காட்டுதல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து. ஆதலின்,

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" என்ருர். ஆனுல் உரையாசிரியர்களில் சிலர் உயர்ந்தோர் என்பதற்கு முதல் இரு வருணத்தார் (அந்தணர், அரசர்) என்றும், மூன்று வருணத்தார் (அந்தணர், அரசர், வணிகர்) என்றும் பொருள் கூறியுள்ளனர்.

"உயர்ந்தோ ரெனக் கூறலின் வேளாளரை ஒழிந்தோர் என்றுணர்க" என்று நச்சிஞர்க்கினியர் கூறியுள்ளார். முற்றிலும் பொருந்தா உரை கூறித் தொல்காப்பியத்தை இழி நிலைக்குக் கொண்டு வந்து விட்டனர் உரையாசிரியர்கள். உரையாசிரியர் காலத்தில் ஆரிய முறையாம் நால்வகை வருண நெறி

நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்திருக்கலாம். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் இடம் பெற்றிலது. அன்றியும் தொல்காப்பியர் தமிழக மக்கள் வாழ்வினைக் கூற வந்தனரேயன்றி தமிழர்க்குத் தொடர்பிலாப் பிற நாட்டினர் வாழ்க்கை கூற நூல் செய்திலர். தொல்காப்பியர்க்குப் பிற் பட்டுத் தோன்றிய திருவள்ளுவர் உழவரை உயர்ந் தோரெனச் சிறப்பித்திருக்கவும், அவர்க்கு முன்பு வாழ்ந்த தொல்காப்பியர், உழவரை—வேளாளரை— உயர்ந்தோரல்லர் என ஒதுக்கியிருத்தல் எங்ஙனம் சாலும்? ஆதலின் உரையாசிரியர்கள் நால்வகை வருணம் பற்றிக் கூறுவனவெல்லாம் தொல்காப்பியர் கொள்கைக்கும், காலத்துக்கும் முரண்பட்டன; பொருந்தாதன என்று அறிதல் வேண்டும்.

பிரிவு வகைகளுள் நாடு காவல் பிரிவும், பொருள் ஈட்டும் பொருட்டுச் செல்லும் பிரிவும் உள. நாடு காவல் பிரிவு, அரசர்க்கும், அவர் குடும்பத்தினர்க்கும், அரசின் பணியினை மேற்கொண்டுள்ளோர்க்கும் உரியதாகும். தொல்காப்பியர் காலத்தில் முடி சூடிய மன்னனே ஆண்டான். ஆயினும் அவன் தனி யொருவனுக ஆண்டிலன். நல்ல அரசியல் அமைப் பும், அவ்வமைப்பில் யாவரும் பணி புரியும் வாய்ப்பும் இருந்தன. ஆகவே நாடு காவல் பிரிவு யாவர்க்கும் உரியதாய் இருந்தது. நால்வகை நில மக்களும் நன் முறையில் ஆளப் படவும், நன் முறையில் ஆளவும் உரிமையும் கடமையும் உடையராய் இருந்தனர்.

பொருளீட்டும் பொருட்டும் யாவரும் எங்கும் செல்லலாம். இன்ன இடத்திற்கு இன்னுர் தாம் செல்ல வேண்டும் என்ற வரையறையோ கட்டுப் பாடோ கிடையாது. தொழில் முறையில் இன்ன

சாதிக்கு இன்ன தொழில் தான் என்ற கட்டுப்பாடு கிடையாது. இக் கருத்துக்களை வற்புறுத்துவதே

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே"

எனும் நூற் பாக்கள். இவைகட்குப் பொருள் கூறிய இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், தமிழ் நூல் நெறி முறைக்கு மாறாக ஆரியர் நெறியினைத் தழுவிக் கொண்டுள்ளனர். 'நால்வர்' என்பதற்கு நான்கு நில மக்களும் என்று பொருள் கொள்ளாது நான்கு வருணத்தார் என்றும், மேலோர் என்பதற்கு "மேன்மையுற்றோர்" என்றும் பொருள் கொள்ளாது, இரு பிறப்பினராய மேல் வகுப்பு மூவர் என்றும், அவருள் சிறந்த பிராமணர் என்றும் பொருள் கொண்டு விட்டனர்.

ஆகவே பாலைத் திணையாக இலக்கியம் இயற்றப் படுங்கால் தலைவனுக்குக் கொள்ளப்படும் பிரிவு வகைகள் இவையென அறிவிக்கப்பட்டன. ஓதல், தூது, பகை, காவல், பொருள் என்பது களவு, கற்பு எனப்படும். கைகோள் இரண்டுக்கும் பொது வானமையின் இங்குக் கூறப்பட்டன. பரத்தையிற் பிரிவு என ஒன்றுண்டு. அது மணந்து கொண்டு வாழ்க்கை நடத்துங்கால் மட்டுமே நிகழ்வதற்குரித் தாகலின் கற்பியலில் கூறப்படும்.

களவிலும், கற்பிலும் தன் நாட்டிடத்தே தலைவன் தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் கூடும். ஆனால் கடல் கடந்து வெளி நாடு செல்லுங் கால் மனைவியை உடன் அழைத்துச் செல்லுதல் கூடாது.

"முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை"

(முந்நீர் வழக்கம் = கடலில் செல்லும் செயல், மகடூவோடு = பெண்ணொடு, இல்லை = கிடையாது.)

எல்லா உரிமைகளும் பெற்றிருந்த தமிழக மகளுக்கு இவ்வுரிமை ஏன் மறுக்கப்பட்டது? நாட்டு நலன் கருதியே நாட்டுப் பற்றின் காரணமாக மறுக்கப்பட்டுள்ளது. மனைவி வீட்டிலிருக்கக் கணவன் கடல் கடந்து வெளி நாடு சென்றால், மனைவியை நாடி மீண்டும் நாட்டுக்குத் திரும்பி வருவான். மனைவியும் உடன் இருப்பாளேல், நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் உண்டாதல் இயலாததாகி விடலாமன்றோ? எந்நாட்டில் இருந்தாலும் அந்நாட்டைத் தமதாக்கி வாழ எண்ணி விடச் செய்யலாம். ஆகவே இத்தடையை ஏற்படுத்தி உள்ளனர்.

பண்டைத் தமிழகத்தில் மக்கள் கடல் கடந்து சென்றமையும், கடலைக் கடப்பதற்குரிய நாவாய் முதலியன பெற்றிருந்தமையும், இந் நூற்பாவால் அறியலாம்.

மகளிர்க்கு விதிக்கப்பட்டிருந்த தடை இன்னொன்றும் உண்டு. ஆடவன் ஒருவன் ஒருத்தியைக் காதலித்தால் அவளை இயல்பான முறையில் அடைய முடியவில்லையேல் மடலேறியாவது அவளை அடையலாம். மடலேறி அடைதலாவது:— மடல் என்பது பனங்கருக்கு. பனங்கருக்கால் குதிரை ஒன்று செய்து, அதன் மீது ஏறி, அதனை இழுக்கச் செய்தல். அதனை இழுத்துச் செல்லுங்கால் அவன் கையில்தான் விரும்பிய பெண்ணின் ஓவியம் வரையப்பட்ட துணி கட்டிய கொடி ஒன்றை வைத்திருப்பான். பனங் கருக்கு அவன் உடல் உறுப்புக்களை அறுக்கும்.

செந்நீர் வடியும். இந் நிலையைக் காணும் அந்நாட்டுச் சான்றோர் பெண்ணின் பெற்றோரை நெருங்கி அவனுக்கு அப்பெண்ணை மணமுடித்துக் கொடுக்கு மாறு வேண்டுவர். பெற்றோரும் பெண்ணும் அவன்பால் இரங்கி இசைவு தெரிவிப்பர். மணம் நிகழும். இல்லையேல் உயிரை விட்டுவிடுவான்.

ஆகவே, விரும்பிய பெண்ணை அடைவதற்கு ஆடவன் மேற்கொள்ளுவதாகக் கூறும் இம்முறை மகளிர்க்கு விலக்கப்பட்டுள்ளது. மகளிர் தாம் விரும்பிய ஆடவனை அடைய இம் மடலேறும் முறையை விரும்புவதாகக் கூறல் கூடாது. பெண் மடலேற விரும்புவதாக இலக்கியம் இயற்றுதல் கூடாது. அவ்வாறு இயற்றின் நாணமே நல்லணி யாகக் கொண்ட நங்கையர்க்கு இழுக்குக் கற்பிக்கப் பட்டதாகும். ஆகவே,

> " எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
> பொற்புடை நெறிமை இன்மை யான "

என்றார் தொல்காப்பியர்.

எத்திணை மருங்கினும் = அகத்திணை ஏழனுள் எந்தத்திணையிடத் தும், மகடூஉ = மகள், மடன் மே(வ)ல் = மடலேற விரும்புதல், பொற் புடைய = சிறப்புடைய, நெறிமை = முறைமை. இன்மையான = இல்லை.

ஆடவர் மடலேறலே பொருந்தாக் காதலாம் பெருந்திணை எனக் கூறப்பட்டது. மகளிர்க்கு இது முற்றிலும் பொருந்தாது என வரையறுக்கப் பட்டுள்ளது.

> " கடலன்ன காமம் உழந்தும் மடலேருப்
> பெண்ணின் பெருந்தக்கது இல் "

என்பது தமிழ்மறை.

வடமொழியில் மகளிர் மடலேறுவதாகக் கூறும் மரபு உண்டு என்பது திருமங்கையாழ்வார் பெரிய திருமடலால் தெளியலாம். வருமாறு:

**" அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல்**
**மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்**
**தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்**
**மன்னும் வடநெறியே வேண்டினேம் "**

இலக்கியத்திலும் நங்கையர் நாணிகவா நல்லற நெறியினராகவே கூறப்பட வேண்டியவர் என்பதே ஆசிரியர் தொல்காப்பியர் கொள்கையாம்.

இவ்வியலில் அகப்பொருள் கூறுவதற்குரிய பாக்களையும், பாக்களில் கருத்தை விளக்குவதற்குத் துணையாயுள்ள உள்ளுறை உவமத்தினையும் இன்னவென விளக்குகிறார் ஆசிரியர். கூறும் பொருளுக்கு ஏற்பப் பாக்கள் அமைதல் வேண்டும். அகத்திணைப் பொருளுக்குரிய பல்வேறு உணர்ச்சி நிலைகளைச் சொல் கருவியாக வெளிப்படுத்துவதற்குக் கலியும் கலியுறுப் புக்கள் பொருந்தி வரும் பரிபாடலும் ஏற்றனவாம். இவை இரண்டும் செவ்விய ஓசை வளனும் நடைச் சிறப்பும் பொருந்தியன.

இலக்கியம் உலகியலைத் தழுவியும் உலகியலொடு ஒத்த கற்பனை முறையிலும் இயற்றப்படல் வேண்டும் எனவும் சுட்டுகின்றார்.

மேனாட்டார் இயற்கையைத் தழுவி இயற்றலே இலக்கியம் என்பர். தொல்காப்பியரும் இயற்கையையும் உலகியலையும் தழுவியே இலக்கியம் இயற்றப் படல் வேண்டுமென்று பன்முறையாலும் விளக்குகின்றார். இவ்வாறு இயற்றப்படுதலை 'புலன் நெறி வழக்கம்' என அழைத்துள்ளார். புலமை

நிரம்பிய புலவரால் பாடப்பட்டு வழங்கி வருவது ஆதலின் அப்பெயர் பெற்றது போலும்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்
கலியே பரிபாட்டுஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்"

"என்மனார் புலவர்" என்பதனால் இப் புலன் நெறி வழக்கமாம் இலக்கியப் படைப்பு நெறி இவர்க்கு முன்புள்ள புலவர்களால் கொள்ளப்பட்ட ஒன்றாகும் எனத் தெரியலாம். ஆதலின், கிரேக்க நாட்டு அரித்தாட்டில் காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தில் இலக்கிய நெறி முறைகள் வகுக்கப்பட்டுப் பயிலப்பட்டுப் பாடப் பட்டு வந்தன என அறியலாம்.

கருத்தை விளக்குவதற்குப் பயன்படுவது 'உவமம்'. அறிந்ததைக்கொண்டு அறியாததை விளக்குவதாகும் இவ்வுவமம் யாவரும் எளிதில் உணர்தற்குரியதாகும். ஆனால் அகப்பொருளில் பயன்படுத்தப்படும் உள்ளுறை உவமம் நுண்ணறிவும், நூற்பயிற்சியும் உடையோரால் மட்டும் உணரப் படும் மாட்சியது. உவமம் அடிப்படையில் தான் உள்ளுறை யுவமம் தோன்றும். வெளிப்படையாகத் தோன்றாது பொதிந்து மிளிரும். உள்ளுறை என்ற பெயரே அதன் இயல்பை விளக்குகின்றது.

"வீங்கு நீர் அவிழ் நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந்து ஊர்புகுந்த வரிவண்டு
ஓங்குயர் எழில் யானைக் கனை கடாம் கமழ் நாற்றம்
ஆங்கவை விருந்து ஆற்றப் பகல் அல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழ்நர்ப் புணர்ந்தவர்
தேங்கமிழ் கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதாம் மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர!"

இம்மருதக் கலிப்பாடலின் வெளிப்படைப் பொருள் வருமாறு; 'பெருகுகின்ற நீரில் மலர்ந்த கருங்குவளையை நகரில் கொண்டு வந்து விற்க வருகின்றனர். வயலில் பூத்த அப்பூக்களோடு வண்டுகளும் சூழ்ந்து வருகின்றன. அவ்வண்டுகள் நகரத்தில் உள்ள உயர்ந்த அழகிய யானையின் மத நீரில் மொய்த்துண்டன பகற்பொழுதில்; இரவில் தலைவனுடன் கூடிய தலைவியின் தலையில் சூடப் பட்டிருந்த நறுமண முல்லை மலர்களில் பாய்ந்து நுகர்ந்தன, பின்னர் வேறு பூக்களை நினையாமல் தம் பழைய இருப்பிடத்தையும் மறந்துவிட்டன.'

உள்ளுறை பொருளாவது:—வீங்கு நீர் என்பது பரத்தையர் சேரியாகும். அதண்கண் மலர்ந்த நீல மலர்—கருங்குவளை-காமச் செவ்வி உடைய பரத்தையராவர். மலர்களை விற்பவர் பரத்தையரைத் தேரேற்றிக் கொண்டு வருபவர். அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாவான். யானை மத நீர் சேரிப்பரத்தையர்; இரவு முல்லை — இற்பரத்தை; பழைய இருப்பிடமாம். குளம்—தலைவனது வீடு; குளத்தின் மலர்—தலைவி.

பாணர்கள் தேரேற்றிக்கொண்டு வந்த பரத்தையருடன் உவந்து, சேரிப்பரத்தையுடன் மகிழ்ந்திருந்து விட்டு, இற்பரத்தையுடன் இரவில் கூடி, தலைவியை மறந்து விட்டான் தலைவன் என்பதே இப்பாட்டின் உள்ளுறை பொருளாகும். பரத்தையுடன் கூடிவந்த தலைவனுடன் ஊடல் கொள்ளும் தலைவி, தலைவன் நடத்தையைத் தான் அறிந்திருப்பதை மறை முகமாகக் கூறுகின்ற முறையில் அமைப்பது படிப்போர்க்கு இன்பச் சுவை நல்கும் பெற்றியது.

இவ்வாறு உள்ளுறை உவமம் அமைத்து அகத்திணைப் பாடல்கள் அமைப்பது இலக்கியத்தின் சுவையைப் பெருக்கும். ஆதலின், ஆசிரியர் தொல்காப்பியர் அதனையும் இவ்வியலில் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் அகப்பொருள் பற்றிய பாடல்கள் இயற்றுவாரும் அவற்றுள் உள்ளுறை உவமை பொருந்துமாறு செய்வாரும் இலரே என்று கூறிவிடலாம்.

அகத்திணையின் இலக்கணத்தை அறிவித்த ஆசிரியர் புறத்திணையிலக்கணத்தை அடுத்து வரும் இயலில் கூறுகின்றார். ஆயினும் அகம் பற்றிய களவு, கற்பு, பொருளியல்களை அறிந்து கொண்டு பின்னர் புறத்திணை பற்றி அறிவதும் பொருத்தமாகும். ஆதலின் அடுத்து நாம் எடுத்துக் கொண்டது களவு பற்றியாகும்: களவு என்பது காதல்.

## 2. காதல் இயல்

மக்களினப் பெருக்கம் ஆடவரும் பெண்டிரும் கணவனும் மனைவியுமாய் இணைந்து வாழ்தலைச் சார்ந்தது. இயற்கை நெறியில் இருவரும் தனித்து வாழ்தல் இயலாது. தனித்து வாழ்ந்தால் வாழ்வின் பயன் முற்றுப்பெறாது. ஆணும் பெண்ணும் சேர்ந்து கணவனும் மனைவியுமாய் வாழ்வதற்குத் துணை புரிவதே காதல்.

திருமணங்கள் பல வகையால் நிகழும். நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் வேறுபடலாம். காதல் திருமணமே அனைத்தினும் சிறந்தது; உயர்ந்தது. காதல் திருமணத்தில்தான் சாதி மத மொழி நிற நிலை வேறுபாடுகள் இரா. ஆதலின் காதல் திருமணம் நிகழும் நிலையைக் கொண்டுள்ள மக்களினம் நாகரிகத்தில் உயர்ந்ததாகும். பண்பாட்டில் சிறந்ததாகும்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் காதல் திருமணமே வழக்கில் இருந்துளது. வயது வந்த ஆணும் வயது வந்த பெண்ணும் தம்முள் நட்புக் கொண்டு ஒழுகிக் காதலித்தலைக் 'களவு' என்று அழைத்தனர். இருவரும் காதலித்து ஒழுகுதல், முதலில் பிறர் அறியாமல் நிகழ்தலின் அதனைக் களவு என்று கூறினர்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழர்க்கும் வடமொழியாளர்க்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. வடமொழியாளரை 'மறையோர்' என்று குறிப்பிட்டுள்ளார். வடமொழியாளர் தம் நூல்களுள் சிலவற்றைத் தமிழர்க்குப் புறம்பாக மறைத்து வைத்துக் கொண்டமையின் மறையோர் என அழைக்கப்பட்டனர் போலும். மறையோர் நாட்டில் எட்டு வகை மணமுறை இருந்ததைத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகின்றார்.

எட்டுவகை மணங்களாவன: பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

**பிரமம்:** நாற்பத்தெட்டு ஆண்டுகள் மணமாகாதிருந்து, பன்னிரண்டு வயதுள்ள பெண்ணைப் பூப்பு அடைந்தவுடன் இரண்டாம் பூப்பு வருவதற்கு முன்னர் அணிகலன்களுடன் தானமாகப் பெறுவது. இருவரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமாம்.

**பிராசாபத்தியம்:** மகளைக் கொள்ளுவதற்குரிய கோத்திரத்தார் கொடுக்கின்ற பரிசத்தைப்போல் இரண்டு மடங்கு கொடுத்துத் தம்மகளை மணம் செய்விப்பது.

**ஆரிடம்:** தக்கான் ஒருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற்கொம்பு, பொற்குளம்பு உடையனவாகச் செய்து அவற்றிடை நிறுத்தி பொன் அணிகலன்களைப் பூட்டி நீவிரும் இவைபோல் பொலிந்து வாழ்வீர் என நீர் பெய்து கொடுப்பது.

**தெய்வம்:** பெருவேள்வி செய்கின்றார் பலருள்ளும் ஒத்த ஒருவனுக்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

**ஆசுரம்:** கொல்லேறு தழுவியும், திரிபன்றி எய்தும், வில்லேற்றும் தன் ஆண்மையைக் காட்டி ஒருத்தியை மணப்பது.

**இராக்கதம்:** தலைமகள் விருப்பத்தையும் அவள் பெற்றோர் விருப்பத்தையும் பெருது வலிதிற் கொண்டு சென்று மணப்பது. இம்முறை இக் காலத்தில் சட்டத்திற்கு மாறுபட்டதாகும். பெருந் தண்டனைக்குரியதாகும்.

**பைசாசம்:** வயது முதிர்ந்தோர், கள்ளுண்டு களித் துள்ளோர், உறக்க நிலையில் உள்ளோர் இவர்களைக் கூடுதலும் இழிந்தோளை மணப்பதும் ஆம். இழிந் தோளை மணப்பது ஒழிந்த ஏனையவற்றை எவ்வாறு திருமணம் என்று அழைத்தனரோ? இழிந்தோளை மணத்தலை ஏன் ' பைசாசம் ' என்றனரோ?

**காந்தருவம்:** தேவருலகத்திலுள்ள கந்தருவ குமாரரும் அவர் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டுமணங் கொள்வதுபோலத் தலைவனும் தலைவி யும் சந்தித்துக் கூடுவது.

இக் கந்தருவ முறையே தமிழரின் காதல்முறைக்கு ஒத்துளது. ஆயினும் கந்தருவம் கற்பின்றி அமை யவும் பெறுமாம். ஆனால் தமிழ்க்களவு (காதல்) கற்பின்றி அமையாது என்பர் நச்சினார்க்கினியர்.

இருவரும் தாமே சந்தித்து மணந்து கொள்ளுதல் என்ற அளவில் தமிழ்க் களவு முறையும் வடமொழிக் காந்தருவ முறையும் ஒத்திருப்பதால் வடமொழிக் காந்தருவ முறையைப் போன்றது தமிழ்க் களவுக் கூட்டம் என்று ஆசிரியர் கூறியிருத்தல் வேண்டும். வடநூலாரது எண்வகை மணமுறை காலத்தால் பிற்பட்டது என்பர் ஒருசாரார். மகாபாரதத்தில் இவ்வெட்டு வகை மணமுறையும் கூறப்பட்டுள்ளது.

(The Social Institutions of Ancient Indians-Pages 153-154) ஆரிய மாபாரதம் இயற்றப்பட்டகாலம் கி. மு. பத்தாம் நூற்றுண்டென்பர். கி. மு. ஏழாம் நூற்றுண்டினரான தொல்காப்பியர் தாம் அறிந்த வடநாட்டு முறைகளுடன் தமிழ்நாட்டு மணமுறையை ஒப்பிட்டார். வடநாட்டு முறைகள் தமிழ் நாட்டில் அன்று இடம் பெறவுமில்லை. அவற்றைத் தழுவ வேண்டுமென்று தொல்காப்பியர் கூறவுமில்லை. தமிழ் நாட்டிலுள்ள காதல் முறையைக் குறிப்பிட்டு அம் முறைதான் இலக்கியத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று விதித்துள்ளார். வாழ்வில் எப்படியிருந்தாலும் இலக்கியத்தில் வடநாட்டு மணமுறைகளைத் தழுவிஞல் என்ன? என்று வினவலாம். வாழ்க்கைதான் இலக்கியத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும் என்று கருதிய தொல்காப்பியர் தமிழகக் காதல் முறையையே விரித்துச் சொல்லி இலக்கிய யாப்புக்கு வழி காட்டியுள்ளார்.

புதிதாக வந்துசேர்ந்த வடநாட்டவர் தமிழ்நாட்டு மணமுறையைக்கண்டு தம் நாட்டு மணமுறையோடு வேறுபட்டிருப்பதை அறிந்து காதல் மணத்தை எள்ளி நகையாடியிருக்கலாம். மக்கள் வாழ்வியலுக்கு இடையூறு பயக்கும் என்று கருதி அதனை அகற்றித் தம் நாட்டு முறையைத் தழுவச் செய்ய முயன்றிருக்கலாம். அதனைக் கண்ணுற்ற தொல்காப்பியர் தமிழ் நாட்டுமுறை உலகில் இல்லாத ஒன்று அன்று. வடவர் இலக்கியங்களில் போற்றும் கந்தருவ முறைதான் என்று எடுத்துக் காட்டுவதற்காக இவ்வாறு கூறியிருக்கலாம். "துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" என்று கூறுவதன் பொருளை ஆராய்ந்தால் இக்கருத்து வெளிப்படும். "இலக்கியத்துறைகளில் அமைந்துள்ள நல்ல யாழினையுடையோராம் கந்தரு

வரின் இயல்பாகும்" என்பதே பொருள். "மக்களிலும் உயர்ந்தோராகக் கருதப்படும் தேவருலகக் கந்தருவ மணமுறையே எம் தமிழ் மண முறை" என்று இடித்துக் கூறி அதன் பெருமையை நிலை நாட்டியுள்ளார்.

வடவர்க்குத் திருமணம் என்பது புதல்வரைப் பெறுவதற்காகவே. ஆண் பெண் சேர்க்கையால் புதல்வன் பிறத்தல் வேண்டும். ஆதலின் காதலை அடிப்படையாகக் கொள்ளவில்லை. தமிழர்க்கு மணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பாக நிகழ வேண்டிய வாழ்வின் இன்பக்கூறுகளுள் ஒன்று. வாழ்வின் தலையாய இன்பம் அதுவே என்று கருதினர். ஆதலின் அதனை 'இன்பம்' என்றே அழைத்தனர். தொல்காப்பியரும் இவ்வின்பத்துக்கு முதன்மை கொடுத்து, "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" என்று கூறினர். திருமண இன்பம் தலையாய இன்பம்; அது காதல் நெறியில் தான் அடையப்பெறல் வேண்டும் என்பதே தொல் காப்பியர் துணிபு. காதல் எவ்வாறு உண்டாகும் என்பதை பின்வரும் நூற்பாவால் கூறுகின்றார்.

> **"ஒன்றே வேறே என்று இருபால் வயின்**
> **ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
> **ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
> **மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே."**

நச்சினார்க்கினியர் கூறும் பொருளாவது:- இருவர்க்கும் ஓரிடமும் வேற்றிடமும் என்று கூறப்பட்ட இருவகை நிலத்தின் கண்ணும் உம்மைக்காலத்து எல்லாப் பிறப்பினும் இன்றியமையாது உயிர் ஒன்றி ஒருகாலைக்கு ஒருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணையாலே பிறப்பு முதலிய பத்தும் ஒத்த தலைவனும் தலைவியும்

எதிர்ப்படுப. அங்ஙனம் எவ்வாற்றானும் ஒவ்வாது தலைவன் உயர்ந்தோனாயினும் கடியப்படா என்றவாறு.

ஒரே நிலத்தைச் சேர்ந்த தலைவனும் தலைவியுமோ வெவ்வேறு நிலத்தைச் சேர்ந்த தலைவனும் தலைவியுமோ ஊழின் துணையால் சந்திப்பர் என்றார்.

காதல் தோன்றுவது ஊழினால்தான் என்று நம்புவோர் மேலை நாடுகளிலும் உளர். தம் வாழ்வில் நிகழும் பல நிகழ்ச்சிகளுக்கு ஊழே (விதியே) காரணம் என்று நினைப்போரும் தம் மக்கள் காதல் திருமணம் செய்துகொள்ள ஒருப்படார். எல்லாம் விதியின் செயல் என்று நினைப்போர் இக்காதல் உண்டாவதும் விதியின் செயலால் என்று கருதினால் உண்டாகும் இழுக்கொன்றுமில்லை. ஆனால் சாதி மதம் முதலிய வேறுபாடுகள் நிலைத்திருக்க வேண்டுமென்று கருதுபவர்கள் காதல் திருமணத்தால் அவை அழிந்து விடுமே என்று அஞ்சியே காதல் திருமணத்தை வெறுக்கின்றனர். பண்டைய ஆரியர்களும் வர்ணம் ஆசிரமம் முதலியன அழிந்து விடுமென்று அஞ்சியே காதல் திருமணத்தைக் கடிந்தனர். சாதி மத நிற வேறுபாடுகளைக் கொள்ளாத தொல்காப்பியர் காலத் தமிழினம் காதல்மணத்தைப் போற்றியது. இலக்கியத்திலும் காதல் மணமே காணப்பெறுதல் வேண்டுமென்று கருதினர் ஆசிரியர்.

இந்நூற்பாவுக்கு இன்னொரு பொருளும் கொள்ளலாம். அது வருமாறு:- உலகத்தில் ஆண்பால் பெண்பால் என இரு பிரிவுகள் உள்ளன. ஆணை ஆணும், பெண்ணைப் பெண்ணும் காதலித்தல் இயலாது. ஆணும் பெண்ணும் என்ற வேறுபட்ட இருபாலினரும் தம்முள் காதலித்தல் கூடும். ஆணும் பெண்ணும் இளமை தொட்டு ஒழுக்கக்

கட்டுப்பாட்டுடன் உள்ளத்தைக் கண்டவாறு செல்ல விடாது ஒருமித்த கருத்துடன் உயர்ந்தோராய் வளர்ந்து வருங்கால் பால் உணர்ச்சி தோன்றி மணக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அவ்வாறு மண வாழ்க்கை வேண்டுமென்று எண்ணும் காலத்தில் எல்லாவகையாலும் ஒத்த நிலைமையில் உள்ள மைந்தனும் மகளிரும் தம்முள் காதல் உணர்வு தோன்றுவதை அறிவர். பெண்ணினும் ஆண் சிலவகைகளில் சிறப்புடையோனாக இருந்தாலும் குற்றமின்று.

இவ்வாறு பொருள் கொள்வது எக்காலத்தும் யாவர்க்கும் பொருந்துமன்றோ. எங்ஙனமாயினும் காதல் திருமணமே பண்டைத் தமிழகத்தில் போற்றப்பட்டது என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

காதல் திருமணமே நாகரிகத்தின் உச்சநிலையாகும். ஆதலின் தொல்காப்பியர் காலத் தமிழகம் நாகரிகத்தால் சிறந்திருந்தது என்று தெளியலாம். காதல் திருமணமே பெண் உரிமையை — ஏன் ஆண் உரிமையையும் — நிலைநாட்டக் கூடியது. ஆடை அணிகலன் முதலியவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையளிக்கும் மன்பதை தம் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையளிக்க ஒருப்படாதது கொடுமையினும் கொடுமையன்றோ?

காதல் மணமென்றால் கண்டவன் கண்டவளை மணப்பதாகும் என்பது அன்று. "ஒத்த கிழவனும் கிழத்தியும்" என்று கூறியது எற்றுக்கு? அவர்களிடையே ஒத்த இயல்புகள் வேண்டும் என்பதற்கன்றோ? எவ்வெவ்வகைகளில் ஒத்திருக்கவேண்டுமென்பதை ஆசிரியரே மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார்.

"பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு
உருவு, நிறுத்த காம வாயில்
நிறையே, அருளே, உணர்வொடு திரு என
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே."

*பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, வயது, வடிவம், காதல் உணர்ச்சி, நிறை, அருள், அறிவுடைமை, திரு எனும் பத்திலும் இருவரும் ஒத்திருக்க வேண்டும். பிறப்பு என்பது நல்ல குடியில் பிறத்தலாகும். குடி வேறு சாதி வேறு. அன்று சாதி கிடையாது. ஒவ்வொரு குடிக்கு ஒவ்வொரு பண்பு இருக்கலாம். அக்குடிப் பிறப்பால் ஒழுக்கம் உருவாகும். ஆதலின் அதனை அடுத்துக் குடிமையையும் வைத்தார். "ஒழுக்கமுடைமை குடிமை" என்பது வள்ளுவர் வாய்மொழி. வள்ளுவர் காலத்திலும் ஒழுக்கம் உடைமையே நல்ல குடிப்பிறப்பின் அடையாளமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. 'ஆண்மை' ஆணுக்கு உரியதன்றோ? பெண்ணுக்கு எவ்வாறு பொருந்தும் எனக் கருதலாம். வலிமை இரு சாரார்க்கும் வேண்டியதொன்று. உள்ள வலிமை, உடல் வலிமை, சூழ்நிலைக்கு ஏற்பத் தம்மையும் பிறரையும் ஆளும் தன்மை இருந்தாலன்றி உலக வாழ்வுப் போரில் வெற்றிபெற இயலாது. ஆகவே ஆண்மையிலும் இருசாராரும் ஒத்திருத்தல் வேண்டும். காதலின்பத்துக்கும் ஒத்த ஆண்மையினராய் இருத்தலே சிறப்புடைத்து. அங்ஙனம் இன்மையால் திருமணங்களில் சில முறிவுக்குரித்தாகி இல்லற வாழ்வு துன்பக் களனாக மாறிவிடுகின்றது. ஆண்டில் ஒத்திருத்தல் என்பது பருவ வளர்ச்சியில் ஆணுக்குரிய ஆண்டும் பெண்ணுக்குரிய ஆண்டும் எனக் கொள்ளலாம். அக்காலத்தில் ஆணுக்குப் பதினாறு ஆண்டிலும் பெண்ணுக்குப் பன்னிரண்டு ஆண்டிலும் பருவ*

முதிர்ச்சி யுண்டாகும் என்று கருதினர். இருவர்க்கும் நான்கு ஆண்டுகள் வேறுபாடுறலாம். இருபத்து நான்கு வயதுள்ள ஆடவன் இருபது வயதுள்ள பெண்ணை மணக்கலாம் என்பதே. 'வடிவால் ஒத்தல்' என்பது தோற்றப் பொலிவாலும் உருவமைப்பாலும் ஆகும். குட்டையாய் இருப்பவன் நெட்டைப் பெண்ணையோ, நெட்டையாய் இருப்பவன் குட்டைப் பெண்ணையோ, ஒல்லியாயிருப்பவன் பருத் திருப்பவளையோ, பருத்து இருப்பவன் ஒல்லியாய் இருப்பவளையோ மணத்தல் பொருத்தமன்று என்பது யாவரும் அறிந்ததுதானே. 'காமவாயில்' என்பது காதல் வேட்கையாகும். காதல் வேட்கை அல்லது பாலின்ப விருப்பம் இருவருக்கும் ஒத்திருத் தல் வேண்டும். இல்லையேல் அமைதி வாழ்வுக்குத் தடையுண்டாகும். 'நிறை' என்பது உள்ளத்தை நிறுத்தும் தன்மை. அதுதான் 'கற்பு' எனப்படுவது. இன்று கற்பு, பெண்ணுக்கு மட்டும்தான் வேண்டும் என்று வற்புறுத்துகின்றோம். ஆண் எப்படி வேண்டுமானாலும் உள்ளத்தைத் திரியவிட்டு உடலைக் கெடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணியுள்ளோம். ஆசிரியர் தொல்காப்பியர் கற்பு இருபாலார்க்கும் வேண்டும் என்பது இல்லற வாழ்வின் இனிமை நலத்திற்காகவே. 'அருள்' என்பது பிறர் துன்பம் கண்டு இரங்குதல். இஃதினும் ஒற்றுமை வேண்டும். இல்லையேல் வீட்டில் ஓயாப்போர்தான் நிகழும். 'உணர்வு' என்பது உலகியலால் செய்யத்தகுவதை அறிதலாம். 'திரு' என்பது கண்டாரால் விரும்பப் படும் தன்மையைப் பெற்றிருத்தலையும் குறிக்கும். நச்சினார்க்கினியர் காணும் பொருள் சிந்திக்கத் தக்கது. 'திருவென்பது' பொருளுடைமையும்

பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி" என்று கூறுகின்றார். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு" என்று கொண்டாலும் வாழ்வுக்குச் செல்வம் இன்றியமையாதது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லையன்றோ? பொருள் உடைமையிலும் இருபாலாரும் ஒத்திருந்தால் இருவரும் தன்மதிப்புடன் வாழ இயலும். இல்லையேல் செல்வ மிகுதி செல்வமின்மையைக் கண்டு எள்ளும் நிலை ஏற்படாமலிருக்க வேண்டும். உலகியலில் அது எளிதில் கூடுவதாய் இல்லை. சூழ்நிலையையும் சுற்றுச் சார்பையும் நம்மால் வெல்லுவது என்பது போற்றற்குரியது தான். ஆனால் இயலாதே. ஆகவே திருவினும் ஒத்திருத்தல் நன்றன்றோ? இவ்வாறு ஒத்த நிலையில் ஒருவரை ஒருவர் காணும் வாய்ப்புகள் அன்று இருந்திருக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் வேறுபாடின்றிப் பழகும் சூழ்நிலை உள்ள மக்களினத்தில் சமநிலை உள்ளவர்கள்தான் சந்திக்க இயலும். சந்திப்பு நிகழுங்கால் காதல் உணர்ச்சியால் உந்தப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பத் தொடங்குவர். ஊழ்வினையால் அவர்கள் கூட்டுவிக்கப் பெற்றாலும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள முயலாது இரார். அங்ஙனம் அறிந்துகொள்ள விரும்புங்கால் ஒருவரைப் பற்றி ஒருவர் ஐயம் கொள்ளுதல் இயல்பு. ஐயப்படுதலே அறிவுக்கு அடிப்படை. அறிவுடையோரே எதிலும் ஐயம் கொண்டு தீர உசாவி அறிவர்.

தலைவன், தலைவியாகப் போகின்றவளைக் கண்டவுடன் அவள் தோற்றத்திலோ, பழகும் வகையிலோ மயங்கி விடுதல் கூடாது. பலவகைச் சிறப்புடையவளாகக் காணப்படும் தோறும் ஐயப்பட்டு உண்மை

நிலையை அறிய முற்படுதலே தலைவன் இயல்புக்குச் சிறப்புடைத்தாகும். அங்ஙனமின்றிக் கண்டவுடன் காதலிக்கத் தொடங்கிவிட்டால் தலைவனின் ஒழுக்கத் தாழ்வைத்தான் வெளிப்படுத்தும்.

"சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்ட லான."

தலைவிக்கும் இது பொருந்தும். தலைவியும் தலைவனைப் பற்றி ஐயங்கொண்டு அவன் உண்மை நிலையை அறிந்து காதலித்தலே முறைமை. உலகியலில் இவ்வாறு நடைபெறுதலே இயல்பாய் இருத்தல் வேண்டும்.

ஆனால் இலக்கியத்தில் வரும் தலைவன் தலைவியர்க்குச் சில மரபுகளைக் கொண்டுள்ளனர் புலவர்கள். தலைவன் சிறந்த தலைவியைக் கண்டவுடன் அவளைப்பற்றி அவள் யாரோ என ஐயம் கொள்ளுவான்.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு,"

என அமைப்பது இலக்கியமரபு.

இவ்வாறு தலைவியும் தலைவனைக் கண்டு "முருகனோ இயக்கனோ மகனோ என ஐயம் நிகழின் அதனை நீக்கி உணர்தற்குக் கருவியிலள் ......... தலைவிக்கு ஐயம் நிகழின் அச்சமேயன்றிக் காமக் குறிப்பு (காதல் குறிப்பு) நிகழாதாம்" என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.

ஆனால் சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தில் பரவையார், வன்தொண்டரைக் கண்டு,

"முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே என் மனந்திரித்த இவன் யாரோ? என நினைந்தார்"

என்று கூறி அவள் அவரைக் கண்டு ஐயப்பட்டதாக வரைந்துள்ளமை நச்சினார்க்கினியர் கொள்கைக்கு முரண்பட்டதாகும். நச்சினார்க்கினியர் சேக்கிழார்க்குக் காலத்தால் பிற்பட்டவரே. அங்ஙனம் இருந்தும் பெரிய புராணத்தை அறியாதார்போன்று தலைவிக்கு ஐயம் நிகழக்கூடாது என்று கூறியுள்ளமை வியக்கத் தக்கது. இருபாலார்க்கும் காப்பிய உலகிலும் ஐயம் நிகழலாம் என்பதே சேக்கிழார்க்கும் உடன்பாடாகும்.

ஐயத்தைப் போக்கிக் கொள்வதற்குத் துணையாய் உள்ளனவற்றைக் கூறும் நூற்பா இருபாலார்க்கும் பொருந்த உரைத்துக் கொள்ளலாம்.

காதலர் சந்திப்பில் கண்களுக்குத்தான் முதன்மை இடம். காணும் கருவிகளாக மட்டுமன்றி ஒருவரை ஒருவர்க்கு ஆட்படுத்தும் கருவிகளாகவும் துணைபுரியக் கூடியன. ஆகவே இருவர் அறிவும் ஒன்றுபட்டு ஒன்று கூடி இன்புறுதற்குக் குறிப்பால் உணர்த்துவன கண்களே. கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள் பயனற்று விடுகின்றன. ஆதலின் ஆசிரியர் தொல்காப்பியர்,

> "நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்
> கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்"

என மொழிந்தார். இருவரும் தத்தம் கண்களால் தத்தம் விருப்பத்தை அறிவித்துக்கொள்வது ஏன்? காதல் விருப்பத்தை உரைகளால் வெளிப்படுத்தல் நாகரிகம் அன்று. யாங்கணும் உள்ள உலக மக்களிடையே காணப்படும் பொது இயல்பாகும். குறிப்பாலுணர்ந்து விருப்பம் அறிவிக்கும் நாகரிக மற்று வெளிப்படையாகச் சொல்லின் உண்டாகும் ஏதம் பலவாம். மலரினும் மெல்லிதாகிய

காதலுணர்வை அதன் செவ்வியறிந்தே தலைப்படுதல் வேண்டும்.

அன்றியும் தம் கருத்தை வெளிப்படையாகச் சொல்வதற்குத் தடையாய ஆண் பெண் இயல்புகளும் உள. ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமநிலையில் வாழவேண்டுமென்று எவ்வளவுதான் முழக்கமிட்டாலும் ஆண் ஆண்தான்; பெண் பெண் தான். இருவரும் ஓரியல்பினர் ஆய்விடுதல் முடியாது. "பட்டங்கள் பெறுவோம், சட்டங்கள் செய்வோம், பாரில் எமக்கு ஈடில்லை" என்று கூறும் பட்டம் பெற்று சட்டம் இயற்றும் புதுமைப் பெண்கள் கூட தன் பெண் இயல்பை மாற்றிவிட இயலவில்லை. ஆசிரியர் தொல்காப்பியர் இருபாலாரின் இரு வேறுபட்ட இயல்புகளை எடுத்துக்கூறி, அவை காரணமாகவே அவர்தம் காதல் விருப்பத்தைக் குறிப்பாகவே வெளிப்படுத்துவர் என்றனர்.

ஆண்பாலுக்குரிய இயல்புகள் பெருமையும் உரனும் ஆம். ஆசிரியர்,

**"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"**

என்பர். 'பெருமை' என்பது அறிவும், ஆற்றலும், புகழும், கொடையும், ஆராய்தலும், பண்பும், நண்பும், பழி பாவம் அஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமைப் பகுதியாகும் என்பர் நச்சினார்க்கினியர். 'உரன்' என்பது கடைப்பிடியும், நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலியின் பகுதியும் என்பர் அவர். ஆதலின் இவ்வியல்புகளையுடைய தலைவன் தலைவியின் குறிப்புணராது தன் வேட்கையை உரையால் புலப்படுத்த முற்படான். முற்படின் அவன் பெருமையும் உரனும் என்னும் கொல்?

பெண் ஒருத்தி எவ்வளவுதான் கற்றுப் பட்டம் பல பெற்றுப் பதவிகளில் அமர்ந்து திறம்பட நடத்தினும் காதலில் முந்திக்கொள்ளுதல் பெண்ணியல்பன்று. ஆள்வினைப் பகுதிகளில் ஆண்களோடு சமமாகப் போட்டியிட்டு ஆண்களினும் மேம்பட்டவராக விளங்கும் அரசியரேயாயினும் காதலில் பெண்ணியல்பைக் கடத்தல் இயலாது. பெண்ணியல்புகள் யாவை? அச்சம், நாண், மடன் என்பனவாம்.

> "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
> நிச்சமும் பெண்பாற் குரிய என்ப."

காதலில் தலைப்படும்போது ஆண்களைவிடப் பெண்களே அஞ்சுதற்குரியவர்கள். ஆண்களுக்குக் காதல் முறிவு ஏற்பட்டால் வேறு பெண்களைக் காதலித்துக் கொள்ளலாம். ஆனால் பெண்கள் நிலையோ வேறுபட்டது. அவர்கள் வாழ்வில் ஒருமுறைதான் காதலித்தல் கூடும். காதலில் முறிவு ஏற்படின் வாழ்வே முறிந்துவிடும். ஆதலின் பின் விளைவையறியாது என்ன நிகழுமோ என்று அஞ்சி அஞ்சிக் காதல் துறையில் நுழைய வேண்டியவராவார். 'நாண்' பெண்களுக்கு இயல்பாக உள்ள இனிய சாயல் பண்பு. நங்கையரைக் காட்டி இதுதான் நாண் என்று அவரிடம் தோன்றும் இயல்பால் அறிவித்தல் கூடுமேயன்றி சொற்களால் சொல்ல இயலாது. நச்சினார்க்கினியர் நாண் என்பதற்குக் "காமக்குறிப்பு நிகழ்ந்த வழிப் படுவதோர் உள்ள ஒடுக்கம்" என்றார். காதற் குறிப்பு நிகழ்வதற்கு முன்பும் கணவன் ஒருவனைத் தேடிய பின்பும் இந்நாண் என்னும் நல்லியல்பு நங்கையர்க்கு உரித்தாக இருத்தலின் நச்சினார்க்கினியர் கூறுவது பொருந்தாது. 'மடன்' என்பது அறிந்தும்

அறியாதவள்போல் இருக்கும் இயல்பு. ஆடவன் ஒருவன் தன்னைக் காதலிக்கின்றான் என்பதை அறிந்தாலும் அறியாதாள் போன்று நடித்து உண்மை நிலையறிய முற்படுதலேயாகும். இவ்வியல்பு களுக்கு மாறாகத் தன் காதலை வெளிப்படையாக உரைக்கும் நிலையில் திரைக்காட்சிகளிலும் சில நாடக நூல்களிலும் பெண்களை அமைப்பது தமிழ் மரபுக்கு ஒவ்வாததாகும். நங்கையரினத்தை இழிவுபடுத்துத லாகும்.

குறிப்பால் தம் கருத்தை வெளிப்படுத்திக் கொண்ட காதலர்கள் தம் காதல் நிறைவேறப் பலவகையாலும் முயல்வர். ஒருமுறை சந்தித்த காதலர்கள் மீண்டும் மீண்டும் சந்திக்க முயலல் இயல்பே. முதல் முறை சந்தித்த இடத்திலேயே மறுமுறையும் சந்திக்க நினைந்துவந்து எதிர்ப்பட்டுக் காணலும் இயலும், இவ்வாறு நிகழ்வதை இடந்தலைப்பாடு என்பர். பின்னர்க் காதலன் காதலி நினைவாகவே இருப்பான். காதலியும் காதலன் நினைவாகவே இருப்பாள். தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் விரும்புதலும் நினைத்தலுமே தொழிலாகப் பிறிது தொழிலின்றி இருக்குங்கால் இருவரும் உடல் மெலிந்து காணப்படுவர். இருவரும் தம்மை மறந்து மற்றவர் நினைவாகவே இருந்து வருந்துங்கால் தமக்குத் தம் காதலர் கூட்டத்தால் உண்டாகப்போகும் நன்மையைச் சொல்லிக் கொள்ளுதலும் நிகழும். காதலர் பிரிவை ஆற்றும் துணையும் பொறுத்திருந்து ஆற்றமுடியாத நிலைமை வரும்பொழுது தமக்கு நெருங்கிய நட்பினரானவரிடம் வாய்விட்டுக் கூறிவிடுதலும் உண்டு. தலைவன் தன் தோழனிடமும், தலைவி தன் தோழியிடமும் கூறுதல் கூடும். எங்கு நோக்கினும் தம் அன்பர் தோற்றமே

காணப்பெறும் நிலையை அடைவர். தாம் ஆற்ற வேண்டிய செயல்களையும் கடமைகளையும் மறப்பர். பிரிவுத் துன்பம் மேலிட்டு மயங்கிக் கிடப்பர். தம் காதலரை அடைவதற்கு முயன்று முடியாவிடின் இறப்போம் என்று சாக்காடு மேலிட்டுக் கூறுவர்.

தலைவன் தான் கொண்டுள்ள புதிய நிலையைத் தன் தோழனுக்கு உரைப்பான். உரையாது இருப்பினும் தலைவனிடத்துக் கண்ட மாற்றங்களால் தோழன் அறிந்து கொள்வான். அவ்வாறு அறிந்த தோழன் தன் நண்பன் தான் விரும்பிய காதலியை மீண்டும் காண வேண்டுவன செய்வான். தோழனைக் கண்டு அவன் கூறும் ஆறுதலையும் துணை மொழிகளை யும் பெறும் நிலைமைக்குப் 'பாங்கற் கூட்டம்' என்பர். தலைவி தன் தோழியின் முயற்சியால் ஆறுதல் அடைந்து மீண்டும் தலைவனைக் காணும் நிலை பெறுதலுக்குத் 'தோழியிற் கூட்டம்' என்பர்.

தலைவனும் தலைவியும் பகலிலும் இரவிலும் சந்திப்பர். பகலில் சந்திக்குமிடத்தைப் 'பகற்குறி' என்றும், இரவிற் சந்திக்குமிடத்தை 'இரவுக்குறி' என்றும் அழைப்பர். பகற்குறி நிகழும் இடம் வீட்டுக்கு வெளியே அமையும். இரவுக்குறி நிகழு மிடம் வீட்டின் பகுதியிலேயும் வீட்டில் உள்ளோர் சொல்லைக் கேட்கும் தூரத்திலும் அமையும். இவ் வாறு சந்திக்கவரும் இடங்களில் சந்திப்பு நிகழாமல் இருவரும் ஏமாற்றம் அடைதலும் இயல்பே.

எவருக்கும் தெரியாமல் மறைந்து ஒழுகிவரும் இவ்வறவொழுக்கம் பையப்பைய வெளிப்படத் தொடங்கும். தோழிக்குத் தலைவி குறிப்பாகவேனும் அறிவியாது இருந்தால், தலைவியின் தோற்றத்திலும் செயல் முறைகளிலும் காணப்படும் மாறுபாடுகளைக்

கண்டு, இம்மாறுபாடுகளுக்குக் காரணம் யாதோ என்று எண்ணத் தொடங்குவாள். எண்ணத் தொடங்கிய பின்னர் ஏற்படும் சில குறிப்புகளால் தன் தோழியாம் தலைவிக்குக் காதல் நோய் உண்டாகியிருப்பதை அறிவாள். அறிந்திருக்கும் நிலையில் தலைவன் தலைவியின் கூட்டத்தை விரும்பி அதனை அடைவதற்குத் துணைசெய்யக் கூடியவள் அவள் இன்னுயிர்த் தோழியே என்று அறிந்து அவளிடம் சென்று தன் குறையைக் கூறி வேண்டுவான்.

தலைவியும் தோழியும் சேர்ந்திருக்கும் காலத்தில் தலைவன் வந்துவிடுதலும் உண்டு. ஆகவே எங்ஙனமாயினும் தோழிக்கு இந்நிகழ்ச்சி — தலைவிக்கும் தலைவனுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு — வெளிப்பட்டுவிடும் தோழி உய்த்துணர்தலால் அறிந்துள்ள ஒன்று உறுதிப்பட்டுவிடுதலை 'மதியுடம்படுத்தல்' என்பர்.

தோழியால் செவிலியும், செவிலியால் பெற்ற தாயும், தாயால் தந்தையும் தலைவியின் காதல் பற்றி அறிவர்.

தலைவி தன் காதலைத் தன் காதலனிடமும் உரையால் வெளிப்படுத்துதல் அவள் நாண் ஒழுக்கத்திற்கு ஏற்றது அன்று. ஆனால் அவள் காதல் நிறைவேறாத வகையில் செயல்கள் நிகழத் தொடங்குமேல் நாண் பெரிதென வாளா இருந்து விடமாட்டாள். உயிரை விட நாண் சிறந்ததுதான். ஆனால் நாணத்தைவிட கற்புச் சிறந்தது. காதலித்த ஒருவனைக் கடிமணம் புரிதலே கற்புடைமைக்கு அழகு. அதற்கு இடையூறு நிகழும்போல் தோன்றின் உயிரினும் சிறந்த நாணத்தை விடுத்து எல்லாவற்றினும் சிறந்த கற்பைக்காக்க காதலன் இருப்பிடம் நாடிச் செல்லினும்

*இழுக்கின்று. வாய்விட்டுத் தன் காதலைக் கூறி வெளிப் படுத்தினும் பெண்மை நெறிக்கு மாறு பட்டதன்று.*

**" உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று " என**
**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு**
**காமக் கிழவன் உள்வழிப் படினும்**
**தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்**
**ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே."**

**பொருள் :** உயிரினும் = உயிரைக்காட்டிலும், நாண் சிறந்தன்று = மகளிர்க்கு நாண் சிறந்தது, நாணினும் = நாணத்தைக் காட்டிலும், செயிர்தீர் = குற்றம் நீங்கிய, காட்சி = அறிவால் மதிக்கத்தக்க, கற்பு = கற்பானது, சிறந்தன்று = சிறந்தது என, தொல்லோர் = முன்னுள்ள பெரியோர், கிளவி = கூறிய மொழியினை, புல்லிய நெஞ்சமொடு = ஏற்றுக்கொண்ட உள்ளத்தோடு, காமக்கிழவன் = காதலுக்குரிய தலைவன், உள் வழிப்படினும் = இருக்குமிடம் தேடி அடையினும், தாவில் = என்ன நிகழினும் பொறுத்திருப்போம் என்ற மனவலியில்லாத, நன்மொழி = தனக்கும் பிறர்க்கும் நன்மை விளைக்கும் மொழியினை, கிளப்பினும் = கூறினும், ஆவகை பிறவும் = அக்கூற்றுக்களிலே தோன்றுகின்ற பிற உரைகளும், தோன்று மன் பொருளே = நிலையாகத் தோன்றும் அகப்பொருளே.

*தலைவனும் தலைவியும் நட்புப்பூண்டு ஒழுகி வருவது எவ்வளவுதான் மறைக்கப்பட்டாலும் நாளடைவில் சிறிது சிறிதாக வெளிப்படத்தான் செய்யும். முதலில் சிலர் அறிவர்; நாளாக, நாளாகப் பலர் அறிவர். சிலரே அறிந்துள்ள நிலையை 'அம்பல்' என்றும், பலர் அறிந்துள்ள நிலையை 'அலர்' என்றும் கூறுதல் மரபு. இவ்வம்பலும் அலரும் களவை வெளிப்படச் செய்து விடும். இவ்வாறு வெளிப்படுவதற்குக் காரணமாய் இருப்பவன் தலைவனே. தலைவன் அடிக்கடி தலைவியிடம் வருதலினாலும் தன் காதலைப்*

பிறரறியத் தன் குணம் செயல் மாறுபாட்டினல் வெளிப்படச் செய்தலினுலும் இருவர்க்கும் கூட்ட முண்மை வெளிப்படுதல் இயல்பே. தலைவி என்றும் வீட்டிலே இருப்பவள் ஆதலினுலும் எதனையும் விரைந்து வெளிப்படுத்தா நிலைமை பெண்களுக்குரிய இயல்பாய் இருத்தலினுலும் தலைவனல் வெளிப்படும் என்று ஆசிரியர் கூறினர்.

"அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கு அதன் முதல்வன் கிழவன் ஆகும்."

அம்பலும் அலரும் மிகுதியானவுடன் தலைவி இற் செறிக்கப்படுவாள்; காவல் மிகுதியாகும். திருமணப் பேச்சு ஏற்படும்; தலைவன் வீட்டாரே பெண்கேட்டு வருவர். பெண்ணின் பெற்ருேர் இசைந்து அவனுக்கே இன்னன் என்று தெரியாத நிலையில் கொடுக்க விரும்பினும் விரும்பலாம். விரும்பாது வேருெருவனுக்குக் கொடுக்க விழைந்தாலும் விழையலாம்.

தலைவியின் உடல் வாட்டத்தைக் கண்டு அதன் உண்மைக் காரணம் இன்னது என்று அறியாது கட்டினலும், கழங்காலும் வெறியாட்டத்தாலும் அறிய முயல்வர். இவற்ருல் உண்மை அறிய முடியாது; நோய் தணியாது.

தலைவிக்குக் காதல்நோய் மிக்குக் கனவிலும் அதன் விளைவால் அரற்றலும் ஏற்படும்.

இவ்வாறு பல வகையால் தலைவியின் காதல் வெளிப்பட்டு விடும். அவள் காதலித்த தலைவனுக்கே மணம் செய்து கொடுத்தல் இயலாது போயின் அவள் காதலனுடன் வீட்டை விட்டு வெளியேறி விடுவாள். இவ்வாறு காதலனுடன் காதலி பெற்ருேர் அறியாமல் புறப்பட்டுச் செல்வதை 'உடன்போக்கு' என்பர்,

களவு வெளிப்பட்டுவிடின் கற்பு நிலையை எய்து தல் வேண்டும். அஃதாவது இருவர்க்கும் திருமணம் நிகழ்தல் வேண்டும். திருமணம் நிகழவில்லையேல் இருவரும் உயிர் வாழார். "கரணம் தப்பின் மரணம்" என்ற பழமொழி இதனால் எழுந்ததே. கரணம் என்றால் மணச்சடங்கு; மணச்சடங்கு நிகழும் நிலை இல்லையேல் காதலர் இருவரும் உயிர் வாழார்என்ப தாம். அதனாலேயே களவு கற்பின்றி அமையும்; களவு கற்பின்றி அமையாது என நச்சினார்க்கினியர் கூறியதும் ஆகும். இக்கற்பு பற்றி அடுத்த இயலில் ஆராய்வோம்.

# 3. கற்பு இயல்

கற்பு என்பது பெண்களுக்குரிய தனிமைப்பண்பு என்று இன்று கருதப்படுகின்றது. தான் மணந்து கொண்ட ஆடவன் ஒருவனையன்றி வேறு ஒருவனை உள்ளத்தாலும் விரும்பாத இயல்புதான் கற்பாகும் என்பர். எங்கோ பிறந்த ஆடவனும் எங்கோ பிறந்த பெண்ணும் கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கு உள்ளம் ஒன்றிக் கற்பித்துக் கொள்ளுதலினால் கற்பு எனப்பட்டது. இவ்வாறு கற்பித்துக்கொண்டு ஒழுகுகின்றவர்கள் வேறொருவரைக் காதலிக்கத் தொடங்கினால் இக்கற்பு நிலைக்கு இழுக்கு என்று கருதினர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த கொள்கைவழி வாழும் இக்கருத்தில் இக்கற்பு கணவன் மனைவி இருசாரார்க்கும் இருக்கவேண்டிய இயல்புப் பண்பாகும். பருவம் உற்ற ஆடவன் பருவம் உற்ற பெண்ணைக் கூடி வாழத் தலைப்படுங்கால் இக் கற்புநிலை மேற்கொள்ளப்பட வேண்டியதொன்று.

ஓர் ஆடவன் பல பெண்களை மணக்கும் உரிமையுள்ள காலத்தில் இக்கற்பு ஆடவனுக்கு வேண்டியதின்று. ஒரு பெண் பல ஆடவர்களை மணக்கும் உரிமையுள்ள நாட்டில் இக்கற்பும் பெண்ணிற்கு வேண்டியதின்று. சட்டப்படி ஒருவன் ஒருத்தியைத் தான் மணக்கலாம் என்றாலும் ஒருவன் - ஒருத்தியாக அமைந்து வாழ்கின்றவர்கள் உலகெங்கணும் மிகச்

சிலர்தாம். ஆகவே கற்பென்பது ஏட்டளவில் நின்று விடுகின்றது. பலவிதச் சூழ்நிலைகளினுல் இக்கற்பு நிலை மேற்கொள்ளப்படாது போய்விடுகின்றது. திருமணத்திற்கு வேண்டப்படுவது காதல் என்முல், காதலுக்கு வேண்டப்படுவது கற்பேயாகும். காதலால் கூடிய இருவரும் என்றும் காதலில் திளைத்து வாழக் கற்பு மிகமிக இன்றியமையாதது. ஆதலின் இக்கற்பைப் போற்ருதார் எவரும் இலர்.

தனிமையிற் கூடிப் பிறர் அறியாமல் காதலித்து ஒழுகியவர்கள் அவ்வாறே தொடர்ந்து ஒழுகிய காலமும் இருந்தது. ஆனுல் அத்தொடர்ச்சி நீடியாது இடையறவு பட்டுப் போனதுண்டு. ஒருத்தியைக் காதலித்து ஒழுகி வந்தவன் இன்னொரு அழகியைக் கண்டால் முன்னுல் காதலித்தவளைக் கைவிட்டுப் புதியவளைப் போற்றிக்கொள்ளும் இயல்பும் ஏற்படும். இவர்கள் காதல் பிறரறியாமல் வளர்ந்ததால் கைவிடப்பட்டவள் நிலை இரங்கத்தக்கதாகிவிடும். ஆதலின் மன்பதை ஒழுகலாற்றில் காதலித்த இருவரும் கடிமணம் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாய் விட்டது. பல்லோரறியத் திருமணம் செய்து வாழ்தலே காதலை உறுதிப்படுத்தும் காவலாகிவிட்டது. திருமணத்திற்கு 'வரைதல்' என்றும் பெயருண்டு. 'வரைதல்' என்முல் வரையறுத்துக் கொள்ளுதல், என்று பொருள்படும். பலர்க்கும் உரியளாம் தகுதி வாய்ந்த ஒருத்தியைத் தனக்கே உரிமையாக்கிப் பிறர் உரிமையினின்றும் நீக்கிக் கொள்ளுதல்தான் திருமணம். திருமணமின்றிப் பலருடனும் கூடி வாழும் விலை மகளிரை வரைவில்மகளிர் என்று அழைத்தலும் இதனுலேயேயாகும். 'திருமணம்' என்பது பொருள் பொதிந்த சொல்லாகும். தனித்து வாழ்ந்த ஆடவனும் தனித்து வாழ்ந்த பெண்ணும்

தனித்து வாழும் வரையில் பிறரைப் பற்றிய எண்ணம் கொண்டிரார். இருவரும் காதலால் கூடிய பின்னர் அவன் அவளுக்காகவும் அவள் அவனுக்காகவும் பின்னர் இருவரும் தாம் பெறும் மக்களுக்காகவும் வாழத் தொடங்குகின்றனர். மனைவி, மக்கள், குடும்பம் என்று கருதியவன் அக்குடும்பங்களால் நிறைந்த உலகத்தையும் எண்ணவேண்டியவனாகி விடுகிறான். ஆகவே பிறர்க்கென வாழும் நிலை வந்துவிடுகின்றது. பிறர்க்கென வாழ்ந்தால் புகழ் தானே வந்தடைகின்றது. புகழ் என்பது வாழ்வின் மணம் ஆகும். மணமுள்ள வாழ்வை அளிக்கும் ஒன்றைத் திருமணம் என்பது எவ்வளவு பொருத்தமானது. 'மணம்' என்பதற்குக் கூட்டம் என்ற பொருள் இருந்தாலும், 'வாசனை' என்ற பொருளே யாவரும் அறிந்த தொன்றாகும். ஆதலின் திருமண வாழ்வு — வாசனை வீசும் — புகழ் பரப்பும் — நல் வாழ்வு ஆகும். 'திரு' என்றால் கண்டவரால் விரும்பப்படும் தன்மை. மண வாழ்வு யாவராலும் போற்றப்படும் ஒன்றாகத் திகழ்தல்வேண்டும். 'திருமணம்' என்று பெயரிட்ட நம் முன்னோரின் அறிவு நுட்பத்தின் ஆற்றல்சால் பெருமைதான் என்னே! மணமற்ற வாழ்வு பிண வாழ்வுதான் என்று கருதிய நாடுகளும் உண்டு. இம் மணவாழ்வினையே தொல்காப்பியர் 'கற்பு' என்றனர்.

மணவாழ்வால்தான் கற்பு உறுதிப்படுகின்றது. திருமணம் செய்து கொள்ளாதவரிடையே கற்பு நிலைத்திருப்பது அரிதாகிவிடும் என்று அறிந்தனர் நம் முன்னோர். ஆதலின் திருமணமே கற்பெனப் பட்டது ஆகுபெயராம்.

" கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

(கிழவன்—உரியோன், தலைவன். கிழத்தி—உரியோள், தலைவி.)

தலைவன் தலைவியைக் கொள்ளுவதற்குரிய முறைமைப்படி கொடுப்பதற்குரியவர் கொடுப்பக் கரணத்துடன் பெற்றுக்கொள்வதாகும். இதுவே கற்பெனப் படும்.

'கரணம்' என்பதற்கு வேள்விச் சடங்கு என்று பொருள் கூறுகின்றார் நச்சினார்க்கினியர். வேள்விச் சடங்கு என்பது நெருப்புக் கடவுள் சான்றாகப் புரோகிதர் முன்னின்று நடத்தும் முறையைக் குறிப்பிடுமானால் தொல்காப்பியர் காலத் தமிழர்க்குப் பொருந்தாதாகும். பின்னுள்ள நூற்பாக்களுக்கும் வடமொழி நூல்களைத் தழுவியே உரை கூறிச் செல்கின்றார். ஆதலின் இங்கு வேள்விச் சடங்கு என்பது வடமொழி நூல்களில் சொல்லப்பட்டுள்ள சடங்குகளையே குறிப்பிடுகின்றார் என்று கருதுதல் தவறுடைத்தன்று. ஆயினும் கரணத்திற்குச் சான்றாக அகநானூற்றுப்பாடல் (86) ஒன்றில் வருவதை மேற்கோளாகக் காட்டுகின்றார். அப்பாடலில் வரும் திருமண முறையாவது :—

கோள் கால் நீங்கிய நிறைமதி நன்னாள். விடியற் காலையிலிருந்தே மணவினைக்குரிய ஏற்பாடுகள் தொடங்கப் பெறுகின்றன. வீட்டின்முன் பெரிய பந்தர் இடப்பட்டுள்ளது. புது மணல் பரப்பப் பட்டுள்ளது. மாலைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன. உழுந்துக் களியும் பெருஞ்சோறும் வருவோர்க்கு வழங்க நிறைய உள்ளன. திருமண வீட்டில் ஒரே ஆரவாரம். புதிய

குடத்தினை உச்சியிலே கொண்டுள்ள வயது முதிர்ந்த பெண்கள் வரிசையாக நிற்கின்றனர். குழந்தைகளைப் பெற்றவராய்க் கணவனோடு வாழக்கூடிய பெண்கள் நால்வர் வருகின்றனர். குடங்களைப் பெற்றுத் தண்ணீரைக் கொண்டு மணமகளை முழுக்காட்டுகின்றனர். அத்தண்ணீரில் நெல்லும் மலரும் இடப்பட்டுள்ளன. அத்தண்ணீரைத் தலையில் ஊற்றுங்கால், "கற்பினின்றும் தவறாது, நல்ல பல செயல்களில் கணவனுக்கு உதவியாய் இருந்து அவன் விரும்பும் இணையாக (சோடியாக) இருப்பாயாக" என்று கூறுகின்றனர். இதுவே திருமணச் சடங்காம். பின்னர் பேராரவாரத்துடன் வீட்டிற்குள் வருகின்றனர். "பெருமை மிக்க இல்லாள் ஆவாய்" எனக் கூறிச் சுற்றத்தார் தலைவனிடம் தலைவியைக் கொடுக்கின்றனர். அன்றிரவே இருவரும் ஒரு வீட்டில் ஒன்றாகக் கூடுகின்றனர். மணமகள் புதிய ஆடையால் தன்னை மூடிக்கொண்டு ஓரிடத்தில் படுத்துக் கிடக்கின்றனள். தலைவன் அவளைக் கூடும் விருப்போடு அவள் முகத்தை, மூடப்பட்ட ஆடையிலிருந்து வெளிப்படுத்துகிறான். அவள் அஞ்சியவளாய் பெருமூச்சு விட்டுக்கொண்டு இருக்கின்றாள். "உன் உள்ளத்தில் உள்ளதை அஞ்சாது கூறுவாயாக" என்று தலைவன் உரைக்கின்றான். அவளுக்குப் பின்னால் இருந்து அன்போடு அவன்வினவியவுடன் அவள் அகமகிழ்ச்சி உடையளாய் நாணத்தால் தலைவணங்கி இருக்கின்றாள்.

இக்காட்சி அக்காலத்து மணமுறையை ஓரளவு நமக்கு விளக்குகின்றது. இங்கு நெருப்போ வேள்வி யாசானோ (புரோகிதனோ) இல்லை. கொடுப்பதற்குரியவராய் இருந்தவர்கள் வாழ்வரசிகளே. (கணவனோடு வாழ்பவர்கள் — கணவனை இழந்தவரோ மணமாகாதவரோ அல்லர்).

'கரணம்' என்ற சொல்லுக்கு இன்னொரு பொருளும் கொள்ளலாம். இக்காலத்துங் கரணம் என்று சொல்லப்படுபவர்கள் ஊர்க்கணக்கு எழுதும் கணக்கப்பிள்ளைகள் ஆவார். கரணம், கணக்கு எழுதுவோரைக் குறிப்பதால், எழுதுதலையும் குறிப்பதாகும். ஆதலின் இன்ன ஆடவனுக்கு இன்னபெண் மனைவி என்று எழுதிக்கொள்ளும் பழக்கமும் இருந்திருக்கலாமன்றோ. அவ்வாறு எழுதுதலையே ஆசிரியர் தொல்காப்பியர் கரணம் என்று குறித்திருக்கலாமன்றோ? இன்றும் பழங்கால முறைப்படி திருமணம் கொள்வோர், திருமணத்துக்கு முன்னால் மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் மணமகள் வீட்டில் கூடி இவ்வாறு எழுதி உறுதிப்படுத்திக் கொள்வதைக் காணலாம். இந்நிகழ்ச்சியை மணவோலை எழுதுதல் என்றும், 'நிச்சயார்த்தம்' என்றும், "வெற்றிலை பாக்கு மாற்றுதல்" என்றும் அழைப்பர். தொல்காப்பியர் காலத்து வழக்கமே இன்றும் தொடர்ந்து வந்துள்ளது என்று கொண்டால் குற்றம் என்னை? இப்பழக்கமே பதிவு முறையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

ஆதலின் அன்று எழுத்துச் சான்றுடன் (கரணமொடு புணர) தலைவன் தலைவியைப் பெற்றான் என்று கூறுதல் பொருத்த முடைத்தாகும் என்பதில் தவறில்லை.

களவில் தான் காதலித்த பெண்ணைப் பெற்றோர் அறிய, ஊர் அறிய, உலகம் அறிய மணந்துகொள்ளும் நிகழ்ச்சியைக் கற்பு என்றனர் ஆசிரியர். களவு வெளிப்படாமலும் இவ்வாறு வரைந்து கொள்ளலாம்.

காதலிக்கும் ஒருவன் காதல்மகளை மணந்து கொள்ள முடியாதநிலை ஏற்படுமேல் இருவரும் இக்

காலம் போல வாளா இருந்துவிடார். காதலன் காதலியை அவள் பெற்றோரிடமிருந்து பிரித்துக் கொண்டு சென்றுவிடுவான். இதுதான் உடன் போக்கு என்னும் துறைக்கு உரியதாகும். இவ்வுடன் போக்கு இந்நாட்டில் சிறுவழக்காகவும் பிறநாடுகளில் பெருவழக்காகவும் நிகழக் காண்கிறோம். வயது வந்த பெண் தான் விரும்பிய காதலனுடன் மண வினை நோக்குடன் புறப்பட்டுச் செல்வது சட்டப்படி குற்றமும் ஆகாது. தலைவியின் விருப்பம் அறிந்து அவள் தூண்டுதலால் தலைவன் கொண்டு செல்வதால் வலிதிற் கொண்டு செல்லும் அரக்கர் முறையும் ஆகாது. இவ்வாறு கொண்டு செல்லும் தலைவன் தலைவியைக் கொடுக்கும் தமரின்றியும் மணந்து கொள்வான்.

**"கொடுப்போ ரின்றியும் கரண முண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான"**

தமிழரிடையே பண்டு தொட்டு நடந்துவரும் திருமண முறையில் சாதி வேறுபாடு இல்லாதிருந்தது. சாதிகள் இல்லாத காலத்தில் சாதி வேறுபாடு எங்ஙனம் தோன்றும்? வருண வேறுபாட்டை எங்ஙனம் மேற் கொள்ள இயலும். வருண வேறுபாடு புகுந்த பின்னரும் சாதிகள் நிலைத்த பின்னரும் வருணத்துக்கு ஒருமுறையும் சாதிக்கு ஒரு பழக்க வழக்கமும் ஏற்பட்டு விட்டன. இவை ஏற்பட்ட பின்னர்,

**"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**
**கீழோர்க் காகிய காலமும் உண்டே,"**

என்ற நூற்பாவை இடைச்செருகலாக நுழைத்துள் ளனர். நாலு வருண வேறுபாடும், நால்வருணத் தினருள் மூவர் மேலோர் என்றும், ஒரு வருணத்தினர் கீழோர் என்றும் கொள்ளும் முறையும் தொல்

காப்பியர் காலத்தில் தமிழகத்தில் தலைக்கொள்ள வில்லையே. இந்நூற்பா இயற்றப்பட்டது நால்வருண வேறுபாடு உண்டான காலத்தில்தான் என்பதை இந்நூற்பாவே வெளிப்படுத்துகின்றது. இந்நூற்பா கூறுவது என்ன? "மேலோர் மூவர்க்கும் உரிய கரணம் கீழோர்க்கும் ஒரு காலத்தில் உரியதாய் இருந்தது. ஆனால் இன்று இல்லையே" என்பதன்றோ? கீழ் வருணத்தைச் சார்ந்த ஒருவர் தம் பழமைச் சிறப்பை நினைத்து இரங்குவது போன்று அமைந்துள்ளதேயன்றி இலக்கணம் கூறுவதுபோல் அமைய வில்லையே. ஆசிரியரே கூறியிருப்பின் மேலோர்க்குரிய கரணம் இன்னது, கீழோர்க்குரிய கரணம் இன்னது என்றும் விளங்கக் காட்டியிருப்பர். அவ்வாறு பிரித்துக் கூறுதபோது மேலோர்க்குரிய கரணம் கீழோர்க்கும் உரியதாய் இருந்தது என்று கூறுவதில் பொருள் இல்லையே. ஆதலின் இந்நூற்பா இடைச் செருகல் என்று கொண்டு தள்ளற் பாலதேயாகும்.

இனி இக்கரணம் தோன்றுதற்குரிய காரணம் கூறினர். இல்லறம் என்பது நடைபெறுவதற்குக் கணவனும் மனைவியும் காதலால் கூடுதல் வேண்டும். காதலால் கூடிய ஆடவரும் மகளிரும் கணவனும் மனைவியுமாக இணைந்து என்றும் வாழ்தல் வேண்டும். மறைவாகக் காதல் பூண்டு ஒழுகி மகளிர் நலம் துய்த்துவிட்டுப் பின்னர் மகளிரைக் கைவிடும் ஆடவரும் இருந்திருப்பர். பல பூக்களை நாடும் தேன் வண்டுபோல மகளிர் இளநலம் நாடி ஒருவரை விட்டு ஒருவரைப் பின்தொடரும் ஆடவரும் இருந்திருப்பர். மகளிர் அழகில் மயங்கி அவரைப் பன்முறையில் சிறப்பித்துக் கூறி அவர் காதலைப் பெற்ற பிறகு அவரை மறந்து வேறொரு பெண்ணிடம் காதல் வலை வீசும் ஆடவரும் இருந்திருப்பர். "கூந்தல் நரைப்

பினும் கொங்கை தளரினும் உன்னைக் கைவிடேன்" என்று உறுதிமொழி கூறிவிட்டுப் பின்னர்க் கைவிடும் ஆடவரும் இருந்திருப்பர். ஆதலின் தமிழ் நாட்டுத் தலைவர்கள்—பெரியோர்கள்—சான்றோர்கள் இங்ஙனம் பொய்யும் வழுவும் நிகழாமல் தடுத்தற் பொருட்டுக் காதலிப்போர், பலரும் அறிய கடிமணம் புரிய வேண்டும் என்று விதித்தனர். இதையே ஆசிரியர் தொல்காப்பியரும்,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்று கூறிச் சென்றார். இதற்கு நச்சினார்க்கினியர் உரை விளக்கம் செய்யுங்கால் தம் காலத்து நிலவிய கொள்கைகளையும் தாம் கற்ற வடமொழிக் கருத்துக் களையும் கொண்டுவந்து புகுத்துகின்றார். அதற்கு ஏற்ப நூற்பாவில் வந்துள்ள 'என்ப' என்றது "முதல் நூலாசிரியரை அன்று; வடநூலாரைக் கருதியது" என்று பொருளுரைத்துக் கொண்டார். இவ்வாறு கூறிக் கொண்டதே பெருந்தவறாகும். பனம்பாரனார் பாயிரத்துள் கூறியவாறு வடவேங் கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறும் நல்லுல கத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி முந்து நூற் கண்டு முறைப்படக் கூறினரேயன்றி, வடமொழி நூலைக் கண்டு வடவர் பழக்கங்களை ஏற்றுக் கூறினரல்லர் ஆசிரியர். அவ்வாறு கூறியிருப்பின் தெளிவாகச் சுட்டி யுரைத்திருப்பர். "என்ப" "என்மனார்" என்பன வெல்லாம் தமக்கு முன்னுள்ள தமிழ் நூலார்களைச் சுட்டியனவேயன்றி வட மொழி நூலாரையன்று. "ஐயர் யாத்தனர் கரணம்" என்பதற்கு "இருடிகள் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் வேறுபடக் காட்டினர்" என்று கூறினர். 'ஐயர்' என்னும்

சொல் தூயதமிழ்ச்சொல்; தலைவர், மேலோர், வியத்தகு சிறப்புடையோர் என்று பொருள்படும். இன்று மற்றவரை 'ஐய' என்று அழைப்பது 'ஐயர்' என்பதின் விளிவேற்றுமையாகும். தமிழ் நாட்டுப் பெரியவர்களை 'ஐயர்' என்று அழைப்பதைக் கண்ட வட நாட்டிலிருந்து வந்த பிராமணர் தம்மையும் 'ஐயர்' என்று அழைத்துக் கொண்டனர். பிராமணர் கள் தம்மை 'ஐயர்' என்றும், 'சாத்திரி' என்றும் அழைத்துக் கொண்டதைக்கண்ட ஐரோப்பியக் கிருத் தவப் பாதிரியார் தம்மை 'ஐயர்' என்றும், 'சாத்திரி' என்றும் அழைத்துக்கொண்டனர் அன்றோ? ஆதலின் தொல்காப்பியர் குறிப்பிடும் 'ஐயர்' வேறு, பிராமணர் வேறு. தொல்காப்பியர் நூற்பாவில் உள்ள ஐயர் தமிழ்நாட்டுப் பெரியோர்களையே குறிப்பதாகும்.

நச்சினார்க்கினியர் தாம் அவ்வாறு கூறினார் என்றால் இந்நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பிரா மணப் புலவர் ஒருவரும் இந்நூற்பாவுக்குத் தவறு படப் பொருளுரைத்து விட்டார்[1]. "ஆரிய மே லோர் வந்துதான் தமிழர்க்குத் திருமண ஒழுக்கங் களைக் கற்பித்தனர்" என்று துணிந்து கூறிவிட்டார். 'ஐயர்' என்னும் தமிழ்ச் சொல் 'ஆரிய' என்னும் சொல்லின் மரூஉ என்று கருதி விட்டார் போலும்.

தொல்காப்பியர் காலத்துக்குப் பன்னூறு ஆண்டு கட்கு முன்னர் திருமணச் சடங்கு அல்லது உறுதிச் சான்று இல்லாமல் தம்முள் காதலித்துக் கணவனும் மனைவியுமாய் வாழ்ந்தனர். பின்னர் அவ்வாறு வாழ்ந்து வருவதற்கு இடையூறாகப் பொய்யும் நம்பிக்கைக்கேடும் (வழு) தோன்றவே களவில் காதலித்தோர் கற்பில் திருமணம் செய்துகொள்ள

1. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி — மு. இராகவையங்கார்.

வேண்டுமென்று விதித்தனர் தமிழ்நாட்டு மேலோர் என்பதே இந்நூற்பாவின் நேர்பொருள்.

இனி யார்யார் எவ்வெவ்விடத்தில் எவ்வெப் பொழுதில் கூற்று நிகழ்த்துதற்குரியவர் என்பதனை ஒழுங்குபடத் தொகுத்துரைக்கும் அழகு போற்று தற்குரியது. கற்பில் கூற்று நிகழ்த்துவதற்குரியோர் தலைவன், தலைவி, பாங்கன், தோழி, செவிலி, பார்ப்பான், பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர், காமக்கிழத்தியர் முதலியோர் ஆவர்.

தலைவன் கூறுதற்குரிய நிகழ்ச்சியிடங்கள் முப்பத்துமூன்றைத் தொகுத்து உரைத்துள்ளார். முதலில் கூறப்படுவது,

> "கரணத்தின் அமைந்து முடிந்த காலை
> நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்"

என்பதாகும். இதன்பொருள்:— காதலன் காதலி யோடு பகற்குறியிலும் இரவுக்குறியிலும் கூடிப் பழகி வந்தான். இருவர்க்கும் உள்ளத்தால் கூட்டம் உண்டேயொழிய உடலால் கூட்டம் இல்லை. மணந்த பின்னரே உடற்கூட்டம் கொள்ளல் வேண்டும் என்று கருதிய உறுதியோடு இருவரும் பழகி வந்தனர். இவர்கள் காதல் அம்பலாகிப் பின் அலராகியும் விட்டது. தலைவி இற்செறிக்கப்பட்டுவிட்டாள். இருவரும் கண்டு பேசுதலும் நிகழவில்லை. பின்னர்த் திருமண முயற்சியில் ஈடுபட்டுத் திருமணம் நிகழச் சில நாட்களோ, வாரங்களோ மாதங்களோ கழிந் திருக்கலாம், தலைவனும் தலைவியும் உள்ள உறுதிப் பாட்டோடு இருந்திருப்பார்கள். திருமணமும் நிகழ்ந் தேறியது. இருவரும் முதல் இரவில் கூடுகின்றனர். நெஞ்சுறுதி தளர்கின்றது. இருவரும் கூடி மகிழ்கின்றனர்.

(கரணத்தின் அமைந்து = திருமணச் சடங்கில் பொருந்தி, முடிந்தகாலை = எல்லாம் நன்கு நிறைவேறிய பின்பு, நெஞ்சு தளை அவிழ்ந்த = உள்ள உறுதி நெகிழ்ந்த, புணர்ச்சிக் கண்ணும் = கூட்டத்தின் கண்ணும்.)

*இவ்வாறு கூடி மகிழ்ந்தவுடனே தலைவன் ஒருவன் கூறி மகிழ்கின்றான்: கடலால் சூழப்பட்ட இவ்வுலகினையும், எளிதிற் பெறமுடியாத சிறப்பினை உடைய தேவருலகையும் ஒரு தட்டில் வைத்து, தலைவியோடு கூடிய இந்நாளை இன்னொரு தட்டில் வைத்து நிறுத்தால், இவ்விரண்டு உலகங்களும் இந்த ஒரு நாளைக்கு ஒப்பாகா. தலைவியோடு கூடியிருந்த நாளின் சிறப்புத்தான் என்னே! என்னே! என்று களிப்புக் கடலில் மூழ்குகின்றான்.*

**"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கின் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி யல்குல் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலொடு எமக்கே."**

(குறுந்தொகை — 101)

*இனி நச்சினார்க்கினியருடைய பொருந்தா உரையைக் காண்போம். கரணத்தின் அமைந்து முடிந்த காலை = ஆதிக்கரணமும் ஐயர்யாத்த கரணமும் என்னும் இருவகைச் சடங்கானும் ஓர் குறைபாடின்றாய் மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகிய நான்காம் பகல் எல்லை முடிந்த காலத்து.*

*ஆன்றோராவார், மதியும் கந்தருவரும் அங்கியும். நெஞ்சு தளை யவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும் = களவிற் புணர்ச்சி போலும் கற்பினும் மூன்று நாளும்*

கூட்டமின்மையானும் நிகழ்ந்த மனக்குறை தீரக் கூடிய கூட்டத்தின் கண்ணும்,

அது நாலாம் நாளை இரவின் கண்ணதாம்.

இங்கு மூன்று நாள் கூட்டமின்மை, ஆன்றோர் மதி, கந்தருவர், அங்கி, நாலாம் நாளை இரவு முதலியன வற்றைப் புகுத்தியுள்ளார். வீணே புகுத்தவில்லை. இந்நூற்பாவின் ஆறும் துறையாக.

"அல்லல் தீர ஆர்வமொ டளைஇயச்
சொல்லுறு பொருளின் கண்ணும்."

என்று வருகின்றது. இதற்குப் பொருள் காணும் முகத்தான் தம் திட்டத்தை வெளிப்படுத்துகின்றார். பொருள் என்ன? அவர் கூறுகின்றார்: "வரைந்த காலத்து மூன்று நாட் கூட்டமின்மைக்குக் காரணம் என்னென்று தலைவி மனத்து நிகழா நின்ற வருத்தம் தீரும்படி மிக்க வேட்கையோடு கூடியிருந்து வேதம் சொல்லுதலுற்ற பொருளின் கண்ணும், தலைவன் விரித்து விளங்கக் கூறும்.

அது முதல்நாள் தண்கதிர்ச் செல்வர்க்கும், இடை நாள் கந்தருவர்க்கும், பின்னுள் அங்கியங் கடவுளற் கும் அளித்து, நான்காம் நாள் அங்கியங்கடவுள் எனக்கு நின்னை அளிப்ப யான் நுகர வேண்டிற்று. அங்ஙனம் வேதம் கூறுதலால் எனத் தலைவிக்கு விளங்கக் கூறுதல்.

கணவனையன்றிக் கடவுளைத் தொழுதாலும் கற்புக்கு இழுக்கு என்று கருதி வந்த மகளிர் வாழ்ந்த தமிழ் நாட்டில் மூன்று நாள் இரவிலும் வேறு வேறு மூவரோடு கூடச் செய்துவிட்டு நான்காம் நாள், தான் கூடுவதாகத் தலைவன் கூறுகின்றான் என்று சொல்லு தல் எவ்வளவு பேதைமை! பேதைமை மட்டுமன்று; அறஞ்சாராக் கொடுமையுமாகும். களவுக் காலத்தில்

காதலனோடு கூடினாள். சடங்கு நிகழ்ந்த பின்னர் மூன்று நாள் மூன்று தேவர்களோடு கூடினாள்; நான்காம் நாள்தான் கணவனோடு கூடினாள் என்று கூற அவர் நாக் கூசவில்லையே; எழுதுங்கால் எம்கை நடுங்குகின்றதே! நினைக்க நெஞ்சு நோகின்றதே!

வேதத்தில் உள்ளதைத் தமிழிலும் புகுத்த வேண்டுமென்ற வேண்டா விருப்பத்தினாலன்றோ இந்தக்கேடு. இதைப் படிக்கின்றோர் "தமிழர்க்கு நாகரிகம் என்பதே கிடையாது; வேதநெறியாளரே நாகரிகம் கற்பித்தனர்" என்று பறை சாற்றுவர். தமிழர்க்கு இது புதுமை என்பதனை அவரே கூறி விட்டார், "உதாரணம் இக்காலத்தின்று" என்று கூறியதனால். தன் மனைவியைத் தேவரேயாயினும் பிறர்க்கு அளிக்கும் வழக்கம் கூறும் - அது கற்பனை யாய் இருப்பினும் தமிழில் என்றும் காணலரிது என் பதனை அவர் அறியார் போலும்.

இத்தொடரின் நேர்பொருள்: அல்லல் தீர = இல்லற வாழ்க்கையில் அவ்வப்போது உண்டாகும் துன்பம் நீங்க, ஆர்வமோடு அளைஇ = விருப்பத்தோடு பொருந்தி, சொல்லுறு பொருளின் கண்ணும் = சொல்லுகின்ற பொருளுரையிடத்தும்.

குடும்ப வாழ்வு என்பது இடும்பை நிறைந்த தாகும். "இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு" என்று திருவள்ளுவர் கூறுவதை நோக்குக. ஆதலின் குடும் பங்களில் துன்பம் வருங்கால் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைத் தலைவன் அறிவுறுத் தும் வகையில் துறையமைத்து ஆசிரியர் தொல்காப் பியர் கூறியிருக்க நச்சினார்க்கினியர் தம் நச்சுரையைக் கூறித் தமிழர் இயல்பையே மாற்றித் தலைகுனியச் செய்து விட்டார்.

தலைவன் கூற்றுகளிலிருந்து அக்காலத்தில் மனைவி கருவுற்றிருக்குங்காலும், பிள்ளைப்பேறு நிகழ்ந்த காலத்திலும் சில சடங்குகள் செய்யப்பட்டன என்பதை அறியலாம்.

தலைவி, தோழி, காமக்கிழத்தியர், செவிலி, அறிவர், கூத்தர், பாணர், இளையோர் முதலியோர் கூற்றுக்களிலிருந்து அக்காலத் தமிழர்களின் குடும்ப வாழ்வு முறை பற்றியும், நாகரிகம் பற்றியும், நன்கு அறிதல் கூடும். தலைவன் இரண்டாம்முறை மணந்து கொள்ளுதலும், காமக்கிழத்தி, சேரிப்பரத்தை, இற்பரத்தை முதலியோரைக் கொண்டு இன்பம் துய்த்து ஒழுகி வருதலும் அக்காலத்தில் பெருவழக்காய் இருந்தன என்பதை அறியலாம்.

வீட்டில் பணிபுரியும் தோழி, ஏவலர் முதலியோர் தலைவியைத் தலைவனுக்கு அறிமுகம் செய்து வைக்கும் முகத்தான் கூறும் தலைவியின் பண்புகள் இக்காலத்து இல்லறத் தலைவிக்கும் ஏற்பனவாய் அமைந்துள்ளன.

கற்பும், காதலும், நல்லவித ஒழுக்கமும், அன்போடு கூடிய பொறுமையும், உள்ளத்தை ஒருவழி நிறுத்தும் ஆற்றலுடைமையும், விரைவில் விருந்தினரைப் புரக்கும் இயல்பும், சுற்றத்தாரைப் பேணலும் தலைவிக்குரிய இயல்புகள் எனக் கூறப்பட்டுள்ளன. இவை எக்காலத்திலும் வேண்டப்படுவனவே.

> "கற்பும், காமமும், நற்பா லொழுக்கமும்
> மெல்லியற் பொறையும், நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருதலும், சுற்றம் ஓம்பலும்
> பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
> முகம் புகல் முறைமையின் கிழவோற் குரைத்தல்
> அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய"

(காமம் = காதல்; முகம் புகல் = அறிமுகப்படுத்தல்.)

தலைவன் தலைவி வீட்டிற்கு வருங்கால் தலைவி வீட்டில் உள்ளவர்கள் தலைவியைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுதல் இயல்புதானே. தலைவியைப் பற்றித் தலைவன் ஒருவகையாக அறிந்திருப்பினும் மற்றவர் கூறக் கேட்டலினால் மகிழ்ச்சியும் தலைவியைப்பற்றிய உயர் எண்ணம் உறுதிப்படலும் நிகழுமன்றோ.

கூற்று நிகழ்த்துதற்குரிய வாயில்களுள் பார்ப்பாரும் உள்ளனர். இப் பார்ப்பார் யார்? இக்காலத்தில் பிராமணர் பார்ப்பனர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் பிராமணர் தாம் அவ்வாறு அழைக்கப்படுதலை விரும்பிலர். ஆதலின் பார்ப்பார் வேறு, பிராமணர் வேறு என்று தெளிதல் வேண்டும். தமிழ் நாட்டில் "பார்ப்பார்" என்பது குலம் பற்றி வந்தது அன்று, தொழில் பற்றி வந்தது. 'பார்ப்பார்' என்றால் ஆராய்வார் என்று பொருள் படும். நூல்களை ஆராயும் தொழிலில் ஈடுபட்ட அறிஞர்கள் பார்ப்பார் என்று அழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். அவர்கள் நூல்களை ஆராய்ந்து பழமையை அறிந்து நிகழ்கால நிலையைத் தெரிந்து வருங்காலத்துக்குரியனவற்றை வகுத்துரைக்கும் திறலுடையராய் இருந்திருத்தல் வேண்டும். இவ்வாற்றலுடைய அறிஞர்கள் யாவர்க்கும் இனிய நண்பர்களாய் அறிவுரை கூறி வந்திருந்தல் வேண்டும். பின்னர் ஆராய்ச்சி அறிவற்றோரும் பார்ப்பார் எனும் பட்டத்திற்குரியராய் ஆங்காங்குப் பணி புரிதலை மேற்கொண்டிருக்க வேண்டும். புலமையற்றோரும் பிற்காலத்தில் புலவர் எனக் கூறிக்கொண்டு இரந்து உயிர் வாழ்தலை மேற்கொண்டிருந்ததை அறிவோமன்றோ? அவ்வாறே ஆராய்ச்சி அறிவற்றவர் பார்ப்பார் எனும் பெயரோடு குடும்பங்களில் தங்கியிருந்து தலைவனுக்கு உதவி புரிந்து உயிர் வாழ்ந்தனர்

போலும். அவர்கள் செய்த பணிகள் தலைவனுக்குக் காதல் நிலை உரைத்தல், தேர்நிலை உரைத்தல், தலைவன் குறிப்பை யறிந்து பிறர்க்குக் கூறுதல், ஆ வந்ததனால் உண்டான நன்மை தீமைகளை உரைத்தல், வெளியில் செல்லுதற்குரிய காலத்தை உரைத்தல், செல்லாமல் இருத்தற்குரிய காரணத்தை உரைத்தல் முதலியனவாம். இப்பணிகளைப் பிற்காலங்களில் செல்வர் வீடுகளில் பிராமணர்களும் செய்திருக்கக் கூடும்.

"காமநிலை உரைத்தலும், தேர்நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய."

இவ்வாறெல்லாம் துறைகள் அமைத்து இலக்கியம் இயற்றுதல் மரபு. "இவையெல்லாம் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் செய்த பாடலுட் பயின்ற போலும், இக்காலத்தில் இலக்கியமின்று" என நச்சினார்க்கினியர் கூறுவதால் நச்சினார்க்கினியர் காலத்திலும் இவையனைய இலக்கியங்கள் கிடைத்தில என்று அறியலாம்.

திருமணம் செய்துகொண்ட பின்னர் தலைவன் தலைவியிடமிருந்து பிரிதற்குரிய காரணங்களையும் பிரிந்து இருத்தற்குரிய கால வரையறையையும் குறிப்பிடுகின்றார்.

அக்கால மக்கள் வாழ்வில் பரத்தையர்க்கு இடம் இருந்துள்ளது. அதனாலன்றோ தொல்காப்பியருக்குப் பின்வந்த வள்ளுவர் பெருமான் "வரைவில் மகளிர்" கூட்டுறவைக் கடிந்துரைத்துத் தமிழ் மக்களைச் செம்மைப் படுத்தும் நிலை ஏற்பட்டது. எங்குத்தான் பரத்தையர் இல்லை? உலகெங்கணும் இருந்தனர்;

இன்றும் இருக்கின்றனர். ஆடவர்க்குப் பெண்ணின் கூட்டுறவு வாரத்திற்கு இருமுறையேனும் இருத்தல் வேண்டும் என்பர். மனைவிக்குக் கரு உண்டாய் விட்டால் இரண்டு ஆண்டுகளேனும் அவன் அவளிடம் நெருங்காதிருத்தல் வேண்டும் என்பர். அக் காலங்களில் அவன் என்ன செய்வான்? அதனாலேயே இரண்டாம் மனைவியைக் கொண்டான். அவளுக்கும் வயிறு வாய்ப்பின் வேறொரு பெண்ணை நாட வேண்டியதுதானே. ஆகவே காமக்கிழத்தி யென்றும், இற்பரத்தை யென்றும் சேரிப்பரத்தை யென்றும் கொண்டு வாழ்ந்தான். அக்காலத்தில் நாடுகட்கிடையே அடிக்கடி போர் நிகழும். வயது வந்த ஆடவர் அனைவரும் போருக்குச் செல்லுவதற்குரியர். ஆகவே ஆடவர் தொகை நாளுக்குநாள் குறைந்து வரும். ஓர் ஆடவன் பல மகளிரை மணக்க வேண்டியிருந்துள்ளது. மனைவியாக வாழமுடியாது போனாலும் பரத்தையராகவேனும் வாழ முற்பட்டிருக்க வேண்டும். வினை முயற்சிக்குரிய வாய்ப்புக்களும், பொழுது போக்குதற்குரிய சூழ்நிலைகளும் மிகுதியாகப் பெருகியிராத காலம். செல்வப் பெருக்குடைய ஆடவர் அழகிய இளம்பெண்களுடன் பொழுது போக்குதலைத் தேடிக்கொண்டு விட்டனர். பரத்தைமையின் தோற்றம் இதுதான். இப்பரத்தையர்கள் முதலில் ஒருவனுக்கே உரிமை பூண்ட காதற்கிழத்தியராகத்தான் இருந்தனர். விலைமகளிராக இருந்திலர். ஆனால் காலப்போக்கில் அவரே விலைமகளிராக மாறும் நிலை ஏற்பட்டுவிட்டது. அன்றும் இன்றும் உலகெங்கணும் உள்ள நிலை இதுதான்.

**மேனாட்டுப் பெரியார் ஒருவர் கூறினார் :—**

நாம் கிருத்துமதக் கொள்கைப்படி ஒருவனுக்கு ஒருத்தியென வாழ்வதாகக் காட்டிக் கொள்வோம்.

ஆனால் எந்த ஆடவனும் தன் மனைவியை அன்றிப் பிற பெண்ணை நாடாது இருக்கின்றானா? கடற்கரையிலும், நாடக மன்றங்களிலும், பிற இடங்களிலும் வேறு பெண்ணின் தொடர்பைப் பெற்று மகிழ்ந்து கொண்டுதான் இருக்கின்றான். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கை தோற்றுவிட்டது.

ஆகவே ஆடவர் ஒரே பெண்ணோடு அமைவது என்பது மிக மிக அரிது. பண்டைத் தமிழகத்தில் பரத்தையர் இருந்தனர் என்று எண்ணி நாணமுறுதல் வேண்டாம். வேறு நாட்டில் உள்ளதுபோல் அரசு வருவாய்க்குரியதாகப் பரத்தைமை கொள்ளப் படவில்லை. அரசுரிமை அளித்து வரிப்பெற்று பரத்தையரைத் தொழில் புரியுமாறு நம் முன்னோர் செய்து கொள்ளவில்லை. இப்பரத்தைமையும் இலக்கியங்களில் மருதத் திணையில் ஊடற் பொருளை மிகுத்துக் காட்டக் கொள்ளப்பட்டதேயன்றி வாழ்வில் உண்மையாகக் கொண்டோர் அரசரும், வீரரும் பெருஞ் செல்வருமே.

இப்பரத்தைமை காரணமாகத் தலைவன் பிரிந்தால் வீட்டிற்கு வந்துவிட வேண்டிய காலம் சுட்டியுணர்த்தப்படுகின்றது. அக்காலம் மக்கள் தொகை பெருக வேண்டுமென்று எண்ணிய காலம். இக்காலம் போல் குழந்தைகளைப் பெறாதே என்று கூறினார் இலர். 'குழந்தைகளைப் பெறுக' என வாழ்த்தினர். குழந்தைகளைப் பெற வேண்டுமென்றால் கருத்தரிக்கும் காலத்தில் மனைவியுடன் உறைதல் வேண்டும். கருத்தரிக்கும் காலம் பூப்புத் தோன்றி மறைந்த நாள் முதல் பன்னிரண்டு நாட்களே. இன்றைய ஆராய்ச்சியாலும் இது உறுதிப்படுத்தப்படுகின்றது. பூப்பு வெளிப்பட்ட பத்தாம் நாளிலிருந்து பதினைந்தாம் நாள் வரையில்தான் கருத்தோன்றும் என்பர்

மேரி உடோப்சு. ஆகவே தமிழர்கள் இத்துறையிலும் கருத்துச் செலுத்தியிருந்தனர் என்று அறிகின்ரேம். இக்காலத்தில் தலைவன் தலைவியுடன் இருத்தல் வேண்டும் என்று விதித்தனர்.

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையின் பிரிந்த காலை யான."

இக்காலத்தில் பரத்தைமை கொள்வது சட்டப்படி குற்றமே. பரத்தையின் பொருட்டுப் பிரிய வேண்டாம். ஆனால் குழந்தைபெற வேண்டாம் என்று அரசு அனைவரையும் வேண்டுகின்றது. பொருட் செலவு செய்து பல வகையிலும் குழந்தை வேண்டாக் கொள்கையைப் பரப்பி வருகின்றது. அவ்வியக்கத்திற்கு இந்நூற்பா பெரிதும் துணைபுரியும். அக்காலத்தில் கூடியிருக்க வேண்டும் என்று சொன்ன நாட்களில் இக்காலத்தில் பிரிந்திருக்க வேண்டும் என்று கூறுதல் வேண்டும்.

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்து அகன்று உறைக என்மனார் புலவர்
மக்கள் வேண்டா மனமுடை யோர்கள்,"

என்று முழங்குதல் நன்றன்ரே. தொல்காப்பியர் மொழி நூலறிஞர் மட்டுமல்லர்; உடற்கூற்று அறிஞருமாவார் என்று தெரிந்து மகிழ்க! மகிழ்க!

இனிக் கல்வியின் பொருட்டும் பிரிகின்றமைக்குக் காலவரையறை கூறுகின்ருர். தொல்காப்பியர் காலத்தில் கல்விமுறை எவ்வாறு இருந்தது என்பதனை ஒருவாறு உய்த்துணர இயலுகின்றது.

'வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது,' என்று கூறுவது சிறப்புக் கல்விக்குரிய காலவரையறையாகும். ஆகவே அன்று கல்வி பொதுக் கல்வி

என்றும் சிறப்புக் கல்வி என்றும் இருபிரிவுக்குட்பட்டிருந்திருக்க வேண்டும். பொதுக் கல்வி என்பது யாவரும் பெறவேண்டிய எண்ணும் எழுத்துமாகும். சிறப்புக் கல்வியென்பது ஏதேனும் ஒரு தொழில் பற்றிய கல்வியாகும். திருமணம் ஆன பின்னர் சிறப்புக் கல்வியின் பொருட்டு மூன்று ஆண்டு பிரிந்திருக்கலாம் என்பதனுல் திருமணம் ஆகும் வரையில் தம் ஊரிலேயே பொதுக் கல்வியைக் கற்றிருப்பர். வெளியூர்க்குக் கல்வியின் பொருட்டுப் பிரிவது தம் ஊரில் பெறமுடியாத உயர் கல்வி என்றுதான் கொள்ள வேண்டும்.

இப்பொழுதும் சிறப்புக் கல்வியான மருத்துவம், பொறியியல், மொழி இயல் முதலிய துறைகளில் பட்டம் பெற வேண்டுமெனில் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் பயில வேண்டியுள்ளது. ஓர் ஆண்டில் ஆறு திங்கள்தான் பயிலும் நாட்கள் ஆதலின் இன்றைய ஆறு ஆண்டும் அன்றைய மூன்று ஆண்டும் கால அளவில் ஒத்துள்ளன என்பதை அறியலாம்.

திருமண வயது ஆடவனுக்குப் பதினுறு வயது என்று உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். பதினுறு அல்லது பதினெட்டு வயது வரையில் தம் ஊரில் பயின்றுவிட்டுத் திருமணம் ஆனவுடன் பதினெட்டு வயதுக்கு மேல் வெளியூர்களில் சென்று சிறப்புக் கல்வியாம் உயர் கல்வியைக் கற்றுவந்தனர் போலும்.

அக்காலத்தில் யாவரும் கல்வி கற்றல் வேண்டும் என்பதும், கற்றவாறு ஒழுகல் வேண்டும் என்பதும் வற்புறுத்தப்பட்டுள்ளன. கல்வியைக் கண்ணெனப் போற்றினர்.

இந்நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் கூறும் பொருள் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை :— "கல்வி வேண்டிய யாண்டு இறவாது = துறவறத்தினைக் கூறும் வேதாந்தம் முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது; மூன்று இறவாது = அக் கல்வியெல்லாம் மூன்று பதத்தைக் கடவாது என்றவாறு.

இறவாது என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக. மூன்று பதமாவன : அதுவென்றும் நீயென்றும் ஆனாய் என்றும் கூறும் பதங்களாம். அவை பரமும் சிவனும் அவ்விரண்டும் ஒன்றுதலும் ஆதலின் இம்மூன்று பதத்தின் கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளை உணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்து கொள்க. இது மூன்று வருணத்தார்க்கும் கூறினார். ஏனைய வேளாளரும் ஆகமங்களானும் அப்பொருளைக் கூறிய தமிழானும் 'உயர்ந்தோர்க்குரிய' என்பதனான் உணர்க. இஃது இல்லறம் நிகழ்த்தினார் துறவறம் நிகழ்த்தும் கருத்தினராக வேண்டுதலின் காலவரையறை கூறாராயினார்.

*இவ்வாறு நச்சினார்க்கினியர் கூறுவதற்கும் தொல்காப்பியர் நூற்பாவுக்கும் என்ன தொடர்புளது? வேண்டிய ஆண்டைக் கடவாது என்று கூறிவிட்டுக் காலவரையறை கூறாராயினார் என்று கூறுவது எங்ஙனம் பொருந்துமோ? 'வேண்டிய கல்வி' மிக விளக்கமாக, வாழ்வுக்கு வேண்டிய கல்வி என்று பொருள் படும்போது 'வேதாந்தம் முதலிய கல்வி' என்று கூறுவது அனைவர்க்கும் பொருந்தாது. தொல்காப்பியர் காலத்துத் தமிழர் வேதாந்தம் கற்க விழைந்தனரா? விழைந்தாலும் வேதமுடையார் கற்க விட்டனரா?*

*'மூன்று வருணத்தார்க்கும் கூறினார்' என்று நச்சினார்க்கினியர் கூறுவதிலிருந்து பெரும்பான்மை மக்களாம் வேளாளர் கற்பதற்கு உரிமை பெற்றிலர் என்பது தானே வெளிப்படுகிறதன்றோ? தொல்காப்பியர் தமிழர் அனைவர்க்கும் நூல் செய்தனரே*

யன்றி அவர் காலத்தில் தமிழ் நாட்டில் இல்லாத வருண பாகுபாட்டை உளங்கொண்டு நூல் செய்தார் என்றல் பொருந்துமா? உரையாசிரியர் என்போர் தாம் அறிந்தவற்றையெல்லாம் நூலினுள் புகுத்த முயலுதல் எவ்வளவு பெருந்தவறு என்பதைப், பல நூல்களுக்கு உரை கண்ட பெரும்புலவர் நச்சினார்க்கினியர் உணராது போயினரே. இவ்வளவு வலிந்து புகுத்த விரும்பியது எற்றுக்கோ?

அகத்திணை யியலில், "உயர்ந்தோர்க்குரிய ஓத்தின் ஆன' என்பதற்கும் பொருந்தா உரையே புகன்றுள்ளார். ஓத்தின் ஆன = வேதத்தினால் பிறந்த வட நூல்களும் தமிழ் நூல்களும், உயர்ந்தோர்க்குரிய = அந்தணர் அரசர் வணிகர்க்கும், உயர்ந்த வேளாளர்க்கும் உரிய.

இங்கு 'ஓத்து' என்பதற்கு 'வேதம்' என்று பொருள் கொண்டுவிட்டார். 'ஓத்து' என்ற தமிழ்ச் சொல் ஆராய்ச்சி நூல்கள் என்று பொருள் தரும். இப்பொருள் தருவதை "மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்" என்ற குறளானும் உணர்க. "ஆராய்ச்சி நூல்கள்" என்பன இக்கால பட்டப்படிப்புக்கு மேற்பட்ட படிப்பை (Post-graduate) ஒத்த கல்விக்குரியன. ஆராய்ச்சிக் கல்விக்குரியோர் அறிவாலும் உழைப்பாலும் உயர்ந்தோரே யாவர். முதன்மையாகத் தேர்ச்சி பெறுகின்றவர்களையே இன்றும் ஆராய்ச்சிக் கல்விக்குரியராக்குகின்றனர். அன்றும் இவ்வாறு இருந்துளது. எல்லார்க்கும் உரியதன்று ஆராய்ச்சிக் கல்வி; அறிவாலும் கல்வியாலும் உயர்ந்தோர்க்கே உரியது என்றார் ஆசிரியர்.

தொல்காப்பியர் காலத்தில் பொதுக்கல்வி, சிறப்புக்கல்வி, ஆராய்ச்சிக்கல்வி என மூன்றும் எல்லா

மக்களுக்குமுரியனவாய் இருந்தன. தகுதியுடையோர் பெற்றனர். வருண வேறுபாட்டால் சிலர் விலக்கப்பட்டிலர். அன்று தமிழகத்தில் வருண வேறுபாடும் கிடையாது. இன்ன வருணத்திற்கு இன்ன கல்வி தான் என்று வரையறுக்க வேண்டிய நிலையும் உண்டாகவில்லை.

''வேந்துறு தொழிலே யாண்டினது அகமே'' என்ற நூற்பாவால் அரசியற் பணிக்காக வெளிநாடு சென்றனர் என்பதும் அவ்வாறு செல்வோர் ஓராண்டுக்குமேல் மனைவியைப் பிரிந்திருத்தல் கூடாது என்பதும் அறியக் கூடியன. நிலையாய அரசும், அதில் குடிமக்கள் பங்கு கொள்ளும் இயல்பும், அக்கால நிலையைச் சிறப்பிப்பன. ''ஏனைப்பிரிவும் அவ்வயின் நிலையும்'' என்பதனுல் பொருள்வயின் பிரிவும் ஓராண்டுக்குமேல் நீட்டித்தல் கூடாது என்ற வரையறை இருந்துள்ளது என்று அறியலாம். தூதுவயிற்பிரிவும் அரசியல் பணியின் பொருட்டு உண்டாகும் பிரிவாதலின் வேந்துறு தொழிலில் அடக்கலே சிறப்புடைத்து.

இக்காலத்தில் செல்வர்களும் உயர் அலுவலர்களும் மாணவர்களும் இன்பச் செலவு மேற்கொண்டு சென்று வருவது வழக்கமாய் உள்ளது. பூங்காக்களுக்குச் சென்று பொழுது போக்கலும் நகர மக்களிடையே பெருவழக்காய் உள்ளது. இவையெல்லாம் வெளிநாட்டார் தொடர்பால் நாம் பெற்ற பயன் என்று கருதுவோரும் நம்மில் உளர். ஆனுல் தொல்காப்பியர் காலத்திலே இவை வழக்கில் உள்ளன என்பதை அவர் அறியார். கணவனும் மனைவியுமாக இன்பச் செலவில் ஈடுபட்டுப் பொழுது போக்கினர் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றுர்.

"யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப"

'கா' என்பது பூஞ்சோலை. இக்காலப் பூங்கா (Park) போன்றது. இன்று பணிமனையில் உள்ளோர்க்கு சட்டப்படி வாரத்தில் ஒருநாள் விடுமுறை கிடைத்தாலும், மனைவி மக்களோடு சென்று இன்பப் பொழுது போக்க ஏற்ற வசதிகளைப் பெற்றிலர். வெளி நாடுகளில் அதற்குரிய வசதிகளையும் அரசே செய்து கொடுக்கின்றதாம். நம் நாட்டிலும் அந்நிலை விரைவில் தோன்றுவதாக. உழைப்பும் வேண்டும். ஓய்வும் வேண்டும். ஓய்வில்லா உழைப்பு உயர் பயனை அளியாது. புதியன புனையும் புத்தறிவிற்கு வேண்டப் படுவது பயனுள்ள பொழுது போக்கே. பண்டைத் தமிழர்கள் வாழ்வு முழுதினையும் ஒரே தொடர்ச்சியாகக் கொண்டனர். கல்வி கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் நிகழவேண்டிய ஒன்று எனக் கருதினர். கல்வி கற்றுப் பருவம் எய்தியவுடன் துணைவியை நாடிப்பெற்று இருவரும் இன்பம் துய்த்துக்கொண்டே இல்லறக் கடமைகளை ஆற்ற வேண்டும் என்று எண்ணினர். மணமின்றி வாழும் பிரம்மச்சரிய நிலையும், மனைவியைத் துறந்து வாழும் துறவி நிலையும் தமிழர் வாழ்வியல் நெறிக்குப் புறம்பானவை. கட்டிளமைப் பருவத்தில் காதல் உணர்வு தோன்றியவுடன் கடிமணம் புரிந்து மனைவி மக்களுடன் சுற்றமும் சூழ நல்லனவே — நாட்டு மக்களுக்கு ஏற்றனவே — இயற்றுதல் வேண்டும். ஏன் பிறந்தோம் என்று பிறந்ததன் காரணத்தை ஆராயாது எதற்குப் பிறந்தோம் என்று செய்ய வேண்டியதைச் சிந்தனையில் கொண்டார்கள். எதனால் இறந்தார்கள் என்ற கேள்விக்கு இடமில்லாது, எதற்காக இறந்தார் என்ற கேள்விக்கு விடை

வேண்டினர். பிறந்ததனல் பயன் என்ன? சிறந்தன வற்றைச் செய்து முடித்தலே.

> "காமம் சான்ற கடைக்கோட் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

காதல் நிறைந்த வாழ்விற்குக் கடையாணி போன்ற மனைவியைக் கொண்ட காலத்தில் இன்பமும் துணையும் பொருந்திய மக்களொடு நிறைந்து அறமே செய்கின்ற சுற்றம் சூழத் தலைவனும் தலைவியும் சிறந்த செயல்களைச் செய்தலே இறந்ததன் பயனகக் கொள்ளத்தகும்.

இவ்வாறு நேர் பொருள் காணுவதை விடுத்து நச்சினர்க்கினியர் வடமொழி நூற்பொருளை நச்சி நூற்பாவின் சொற்கோப்பைச் சிதைத்து உளம் போனவாறு உரைகளைக் கூறித் தமிழர் வாழ்வியல் நெறியை மறைத்து வடவர் வாழ்வு முறையே தமிழர்க்கும் என நிலைநாட்டித் தம் வடமொழிப் புலமையை வையம் அறிந்து மகிழ வகை செய்து விட்டார். உரையாசிரியர்களின் உரைகளை ஓர்ந்து உண்மை தெளிதலே கற்போர் கடனகும்.

# 4. பொருளியல்

'பொருள் அதிகாரம்' இலக்கியம் இயற்றுவதற்கு வழிகாட்டும் இலக்கணமாகும் (Science of Literature) என்பதை இவ்வியல் நன்கு விளம்புகின்றது. பொருள் அதிகாரம் முழுதும் பொருளைப்பற்றியே கூறுவதாய் இருந்தும் இவ்வியலுக்கு மட்டும் பொருளியல் என்று பெயரிடுவானேன்? இவ்வினவை நச்சினார்க்கினியர் எழுப்பி அதற்கு விடை கூறுகின்றார்.

"சொல்லதிகாரத்தில் கூறிய சொற்களை மரபியலின் இருதிணை ஐம்பால் இயல் நெறி வழாமைத் திரிபில் சொல் என்பாராதலின் அவை ஈண்டுத் தம் பொருளை வேறுபட்டுரைப்பி னும் பொருளாகுமெனவும் இப்பொருளதிகாரத்து முன்னர்க் கூறிய பொருள்களில் பிறழ்ந்திசைப்பன வும் பொருளாமெனவும் அமைத்துச் சொல்லுணர்த் தும் பொருளும் தொடர் மொழியுணர்த்தும் பொரு ளும் ஒருங்கே கூறலின் பொருளியல் என்றார்."

உள்ளக் கருத்தை வெளிப்படுத்துவதும் அறியச் செய்வதும் மொழி. வாழ்க்கை நுகர்ச்சியை வெளிப் படுத்துவதும் பிறர் அறியச் செய்வதும் இலக்கியம். (Literature exists not only in expressing a thing; it equally exists in the receiving of a thing expressed - Abercrombie - Principles of Literary criticism - page 23) புலவன்

ஒருவன் தான் நுகர்ந்ததை நுகர்ந்தவாறு பிறர் அறிகின்றவகையில் சொல்லோவியப்படுத்தல் வேண்டும். சொல்லோவியப்படுத்துதற்கு இலக்கணத்திற்கு ஏற்பச் சொற்றொடர்களை அமைத்து, யாப்பிலக்கணத்திற் பொருந்த சீர்களைப் பொருத்திவிடும் ஆற்றல் மட்டும் பெற்றிருந்தால் சாலாது. வழக்கு (உரையாடும் மொழி — கருத்து அறிவிக்கும் மொழி) மொழி வேறு; செய்யுள் (இலக்கிய மொழி) மொழி வேறு. செய்யுள் மொழி எண்ணுவதை அறிவித்தலோடு நின்றுவிடுதல் கூடாது. எண்ணத்தைச் சூழும் உணர்ச்சி, புலன் நுகர்ச்சி, உள்ளுநிலை முதலிய பிறவற்றையும் கற்போர் உள்ளத்தில் தோற்றுவித்தல் வேண்டும்.

புலவன் தான் எண்ணுவதை அப்படியே நூலைக் கற்போர் உள்ளத்திலும் தோற்றுவித்தல் வேண்டும். அதற்குத் துணையாகச் சொற்கள் அகராதி அறிவிக்கும் பொருள்களை மட்டும் அறிவித்தலின்றி கற்பனையைத் தோற்றுவிக்கும் ஆற்றலையும் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறுவதற்குச் சொற்கள் அவைகள் அமைவுறும் சொற்கோப்பினுல் வேறு பொருள்களையும் சுட்டுதல் வேண்டும். அவ்வாறு சுட்டுங்கால் எவரும் அறிந்துள்ள இலக்கண விதிகளைக் கடந்தும் சொற்கள் பொருள் விளக்கம் தரும்; நேர் பொருள் மட்டுமன்றி, வேறு பொருளும் தரும். கற்பனையைத் தூண்டும் வகையில் அவை அமைந்து செய்யுள் நலத்தைப் பெருக்கும். (Every individually significant word may have independent of its grammatical force, a peculiar value for imagination derived from its context - Abercrombie - page 40.) இவை பற்றியெல்லாம் இவ்வியலில் ஆசிரியர் தொல்காப்பியர் விளக்குகின்றுர்.

முதல் நூற்பாவில் கூறுகின்றார்:- சொற்கள் இயல்பாகவுள்ள தத்தம் பொருள்களை அறிவியாமல் வேறு பொருள்களை நிகழ்விடத்திற்கேற்ப அறிவித்தாலும் அவைகட்குள்ள பொருள்கள் என்றே கருதுதல் வேண்டும். பொருள் வேறுபட்டிருந்தால் சொல் அசை வேறுபட்டுவிடாது, சொல் வடிவில் அவ்வாறுதான் இருக்கும். ஆனால் பொருள் மட்டும் யாரும் இயல்பாக அறியும் பொருளினும் வேறுபட்டிருக்கும். ஆபர் குரோம்பி தமது "இலக்கிய ஆராய்ச்சிக் கொள்கைகள்" என்னும் நூலில் கூறியுள்ளவாறு தொல்காப்பியர் கூறியிருப்பது மிகமிகப் போற்றற்குரியது அன்றோ? அந்நூற்பா வருமாறு :

"இசைதிரிந்து இசைப்பினும் இயையும் மன்பொருளே
அசைதிரிந்து இயலா என்மனார் புலவர்."

காதல் பற்றிக் கூறுவது என்றால் இன்ப நிலையும் உண்டு, துன்ப நிலையும் உண்டு; இரண்டு நிலைகளிலும் நெஞ்சை நோக்கிக் கூறுவது போன்று உரைக்கும் ஆற்றலில்லா உயிருள்ளனவும் உயிரில்லாதனவும் உரைப்பன போன்றும், கேட்கும் ஆற்றலில்லா அவை கேட்பன போன்றும், உறுப்பற்றனவும் உணர்வற்றனவும் அவை பெற்றிருப்பன போன்றும், செய்யும் ஆற்றல் அற்றனவற்றைச் செய்வன போன்றும், அறிவு வேறாகவும், புலன் வேறாகவும் தெரிதற்படும் முறையில் நிறுத்தி எட்டு வகை மெய்ப்பாடுகளும் தோன்ற உயர்திணைக்குரிய ஆண்பால், பெண்பால், பலர்பால் மூன்றையும், அஃறிணை இருபியலிலும் தோன்றக் காதலர்கள் கூறுதல் இலக்கியத்திற்கு உரியதாகும்.

ஒரு தலைவன் கூறுகின்றான் :-

இனிய சொற்களை உடைய என் தலைவியைக் கூடச் சென்ற என் நெஞ்சு, கைகளைக் கவிழ்த்துக்

கொண்டு அவள் பின்னால் சென்று, பெண் யானையின் கை போன்ற பின்னலுற்ற சடையைப் பொருந்தி அவள் கண்களைக் கைகளால் மறைத்து, அவள் கைகளால் மென்மையாகத் தடவப்பெறப் பொருந்தியதோ?

"கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகம் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீம் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறல்நசைஇச் சென்றஎன் நெஞ்சே!

அக. நானூ. (9)

நெஞ்சை உயிருடையதாகவும், கைகள் பெற்றிருப்பதாகவும், தலைவியைச் சென்று கூடியதாகவும் கூறப்பட்டிருப்பது வழக்காற்றுக்கு மாறுபட்டிருப்பினும் படிப்போர்க்குச் சுவை விளைப்பது மட்டுமன்றி தலைவன் எண்ணத்தை அப்படியே சொல்லோவியப்படுத்தியுள்ளதன்றோ?

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ!

என்னுங்கால் ஒன்றுமறியாத தும்பியை நோக்கி "நடுநிலை தவறாது கூறுக" என்பதும் கற்பனைதானே! காதலர்கள் கனவுலகில் திளைப்பதும் இயல்பு. அவர்கள் கனவுகளை அடிப்படையாக வைத்து செய்யுட்கள் சீர்பட யாக்கலாம். தலைவி துணைவனுடன் புறப்பட்டுப்போன செய்தியைக் கூறுமிடத்து செவிலி கனவு கண்டதாகக் கூறலாம். செவிலியை ஆசிரியர் தாயெனவே கூறுவார். பெற்ற தாயை நற்றாய் என்பர்.

அஃறிணையை உயர்திணையாக்கிக் கூறும் கற்பனை முறைமை தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் என்னும் நால்வர்க்கும் உரித்தாம்.

உயிர், நாண், அறிந்தும் அறியாது போலிருக்கும் இயல்பு (மடன்) எனும் மூன்றையும் அடிப்படையாக வைத்துக் கூற்றுகள் நிகழும். இக்கூற்றுகள் நற்றாய், செவிலி, தோழி, தலைவன் எனும் நால்வர்க்கும் உரிய என்பர். இவை தலைவிக்குக் கெடாமல் காத்தல் இவர் கடமையாகும். காதலால் தலைவி உயிரை இழத்தலோ, நாணை விடுதலோ, மடன் அகற்றலோ நிகழ்ந்து விடாதவாறு அறத்தோடு நின்று காத்தல் வேண்டும் என்பதாம். தலைவியின் காதலைப் பெற்றோர்க்கு அறிவித்து உரியவனை மணக்குமாறு செய்தலை அறத்தொடு நிற்றல் என்று அழைப்பர். காதல் வயப்பட்டு வாடும் தலைவியின் மேனியில் பசப்பு எனப்படும் நிற மாற்றம் தோன்றுவதுண்டு. அதனால் வாடுங்காலத்துத் தன் உறுப்புக்கள் உணர்வு பெற்றுள்ளனபோல் உருவகப்படுத்திக் கூறுவதுண்டு.

> "கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவை என்னைத்
> தின்னும் அவர்க்காண லுற்று." (குறள் 1244)

ஏ! நெஞ்சே! நீ தலைவரிடம் செல்லும்போது கண்களையும் உடன் கொண்டு செல். இல்லையேல் அவரைக் கண்ட அவைகள் மீண்டும் காணல் வேண்டும் என்று விரும்பி என்னை வாட்டுகின்றன.

திருவள்ளுவர் "நெஞ்சொடு கிளத்தல்" என்று ஒரு இயல் வைத்திருப்பது நோக்கத் தக்கது. நெஞ்சொடு கூறுவனவாக அமைந்துள்ள குறட்பாக்கள் இலக்கியச் சுவை மிகுந்தன எனக் கூறலும் மிகையன்றோ?

காதல் நோயால் தலைவிக்கு உடல் வாடினாலும் உயிர் வருந்தினாலும் இவைகளைப் பொருட்படுத்தாதவள்போல் என்ன நிகழ்ந்துவிட்டன? ஏன் என்று கூற உரியவளேயன்றித் தலைவனைச் சென்று அடைவதற்கு உரியவள் அல்லள். தலைவிக்கு "மடன்" வேண்டும். மடன் என்றால் அறியாமையன்று. அறிந்தும் அறியாள் போன்றிருக்கும் நிலை. இல்லறம் இனிது நடைபெறத் தலைவனின் தவறுகளை அறிந்து இருப்பினும் அறியாள் போன்று ஒழுகுதல் தலைவிக்குரிய இயல்பு. இம் மடன் எப்பொழுதும் கொள்ளப்பட வேண்டியதன்று. தலைவன் தான்வேறு ஒருத்தியை நாடவில்லையென்று பொய் கூறுங்காலும், தலைவிக்கு வேட்கை மிகுந்தாலும் மடன் வேண்டியதன்று. மடனை விடுத்துத் தலைவி கூறுவது போல் இலக்கியம் இயற்றலாம்.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. (குறள் 1314)

இக்குறட்பாவில் மடன் நீங்கியுள்ளமை காண்க.

அறத்தொடு நிற்றல் வேண்டுமென்று தலைவி விரும்புங் காலத்தில்தான் தோழி அறத்தொடு நிற்றல் வேண்டும். அஃதாவது தலைவியின் காதலைப் பெற்றோர்களுக்கு அறிவித்தல் வேண்டும். காதலைப் பற்றி அறிவித்தலை அறத்தொடு நிற்றல் என்றது ஏன்? காதலித்தவனை மணத்தலே அறத்தின்பாற் பட்டது. அவனையின்றி வேறொருவனுக்கு மணம் செய்யப் பெற்றோர்கள் கருதுவரேல் அவ்வொழுக்கம் இழுக்கின்பாற்படும். ஆதலின் பெற்றோர்கள் வேறொருவனுக்கு மணம் பேசுதலையறிந்த தலைவி தன் காதல் எவன்பால் பட்டது என்பதை அறிவிக்கச் செய்து அவனையே மணப்பாள். அவ்வாறு மணத்தல் தான் அறத்தின்பால் பட்டதாகும்.

ஆதலின் அதனை அறத்தொடு நிற்றல் என அழைத்தனர். இவ்வறத்தொடு நிற்றல் எழு வகைப்படும். அவையாவன :- எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல், கூறுதல், உசாதல், ஏதீடு, தலைப்பாடு, உண்மை செப்பல்.

இவ்வெழுவகைக் கூற்றால் அறத்தொடு நிற்கும் பொழுது தலைவியின் விருப்பத்தைக் குறிப்பாலறிந்து தோழி சொல்லற்பாலள், தலைவி எளிதில் மறையை வெளிப்படுத்த மாட்டாள். பெண்களுக்குரிய சிறப்புக் குணங்கள் அடக்கமும் மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளமும், நடுநிலைமையும், உரியகாலத்தில் உரியன கூறலும், அறிவுடைமையும், உள்ளக் கருத்தை எளிதில் அறிவியாமையும் ஆம். பெண்களைப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் இவ்வளவு உயர்வாக கூறியிருத்தலை பெண்களே அறியார். நமது நாட்டில் பெண்களை இழிவு படுத்தும் உளப்பாங்கு இடைக் காலத்தில் தோன்றியது "எண்ணறக் கற்று எழுத்தற ஓதினும் பெண் புத்தி என்பது பெரும் பேதைமைத்தே" என்றனர் 'பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்' என்றனர். 'ஆழாழி யன்ன அளவுபடா வஞ்ச நெஞ்சப் பாழான மாதர்' என்றனர். "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு" என்பனவே அவர்க்கியல்பாக உள்ளன என்றனர். ஆனால் ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவதென்ன?

> **"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
> **அறிவும் அருமையும் பெண்பா லான"**

இவ்வளவு உயர்த்திக் கூறும் ஆசிரியரைப் பெண்ணுலகம் நாளும் போற்றுதல் வேண்டுமன்றோ? தம் குழந்தைகளுள் ஒன்றினுக்கு அவர் பெயரை இட்டு வழங்கித் தம் நன்றியறிதலை வெளிக்காட்டல் வேண்டாமா?

இவ்வருங் குணங்களைப் பெற்றுள்ள பெண்ணினத்தைச் சேர்ந்துள்ள தலைவியின் உள்ளக் கருத்தை எளிதில் அறிதல் இயலுமா? இயலாதன்ருே?

தன்னைக் காதலிப்பவன் விரைவினில் மணந்து கொள்ள வேண்டுமென்று தலைவி விரும்புவாள். ஆயினும் அவ்விருப்பத்தை வெளிப்படையாகக் கூறி விடமாட்டாள். "நீ என்னை விரைவில் மணந்து கொள்" என்று வெளிப்படையாகச் சொல்ல மாட்டாள். சொல்வது போல் இலக்கியம் அமைதல் கூடாது. திரைக் காட்சிகளில் பெண்ணியல்புக்கு மாருகப் பெண்கள் நடப்பதைக் காண்கின்ருேம். அதைக் கண்ணுறும் பெண்களும் அவ்வாறு நடக்க முற்பட்டு விடுகின்றனர். தமிழ்ப் பெண்ணியல் நுட்பம் அறியாதார் திரைக்காட்சியியக்குநராக இருத்தலினுல் தான் இத்தாழ்வு என்பர்.

தலைவன் தன்னை விரைவில் மணந்து கொள்ள வேண்டுமென்று விரும்புங்காலத்தில் தலைவியும் தோழியும் குறிப்பாகக் கூறுவர் "நீ வரும்பொழுதும், வரும்வழியும் தீமை பயப்பன. காவல் மிகுதி. உன் வருகை உனக்குத் தீங்கு பயப்பது மட்டுமின்றி எனக்கும் தீங்கு பயக்கும். உன் தீங்கு என் தீங் கன்ருே, பகலில் வாரற்க" என்பர். பின்னர் இரவி லும் வாரற்க என்பர். பகலிலும் வாரேல், இரவிலும் வாரேல் என்ருல் என்ன? விரைவில் மணந்து கொண்டுவிடு என்பது தானே?

அக்காலத்தில் ஊர்திகளாக இருந்தன தேரும், யானையும், குதிரையும் கோவேறு கழுதையும் பல் லக்குமாம். இவ்வாறு விரைந்து வரும் தலைவன் காவல் மிகுதியால் தலைவியைக் காண முடியாத நிலை

ஏற்படுங்கால் தலைவி வருந்துவாள். திருமணம் செய்து கொள்ளாது காலத்தைக் கடத்துதல் ஏன் என்று வருந்தும் காலத்துத் தோழி, "பொருள் வேண்டிச் சென்றுளான் விரைவில் வருவான்" என்று கூறலும் உண்டு. காப்புக்காலத்து அன்பு, அறன், இன்பம், நாண், முதலியன நீங்கி ஒழுகினாற் போல புலனெறி வழக்கம் செய்தலும் உண்டு. உலக வழக்கிற்குப் பொருத்தமில்லாதன அகப் பொருளை விளக்க வருமாயின் புலனெறிக்கு ஏற்றதாகக் கொள்ளுதலால் குற்றமின்று. அன்புரிமையைக் காட்டும் பொதுச் சொல்லாக 'எல்லா' என்பது பயின்று வந்துள்ளது. தலைவியும் தோழியும் வேறுபாடற்றவர்களாய் ஒழுகுவர். இவ்வாறு ஒழுகுவதால் அவர்களின் கூற்றுக்கள் யாவருடையன என்று அறியமுடியாமல் அமைதலும் உண்டு. தலைவி தோழியைப் போலவும், தோழி தலைவியைப் போலவும் கூறுதல் உண்டு.

ஆண்பாலுக்குக் கூறியது பெண்பாலுக்கும், பெண்பாலுக்குக் கூறியது ஆண்பாலுக்கும் பொருந்துவது வழக்காகும். இன்பம் என்பது யாது? தான் விரும்பியதைப் பெற்று மகிழ்தலே. காதலின்பத்திற்கு மிகமிக வேண்டப்படுவது விரும்பியவரை மணத்தலே. ஆதலின் ஆசிரியர்,

> "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"

என்றார்.

மக்களுக்கு மட்டுமின்றி உயிர்கள் எனப் பொதுப் படக் கூறினர். பிற உயிர்கள் விரும்பியவாறு கூடி மகிழ்கின்றன. நாகரிகமிக்க மக்கள் உலகில் மட்டும் அவ்வாறு விரும்பியவரைக் கூட முடியாது. இடர்ப் படும் நிலை ஏற்படுகின்றது. இவ்வேறு பாட்டைச்

சுட்டவே ஆசிரியர் பொதுப்பட மொழிந்தார் எனில் பொருந்தும். தலைவனும் தலைவியும் சமமாகக் கருதப்பட்டாலும் தலைவனே உயர்ந்தவனாகக் கருதப் படுதல் எல்லாக் காலத்திலும் எல்லா நாட்டிலும் உண்டு. சமத்துவக் கொள்கை வற்புறுத்தும் பொது உடைமை நாட்டிலும் ஆண்களே தலைமை இடம் பெறுகின்றனர். கணவனே உயர்வுக்குரியவனாக இருக்கின்றான். மனைவியை உயர்த்திக் கூறலும் பணிதலும் காதல் நிகழ்ச்சிகளில் காணலாம். ஊடல் காலத்தில் மிகுதியாக நிகழும். ஆதலின் "மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நினையுங் காலைப் புலவி யுள் உரிய" என்றார் ஆசிரியர். தலைவியின் பணிதலே யன்றி, இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்ளு தலேயன்றி இகழ்தலும் உண்டு. ஊடல் காரண மாகத் தலைவிதான் தலைவனை இகழ்வாளேயன்றித் தலைவன் தலைவியை இகழ்ந்ததாகப் புலனெறி வழக்கம் கிடையாது. தலைவி இகழுங்கால் வெளிப்படையாக இகழாமல் மறை பொருளாகத் தான் இகழ்வாள். குறிப்பாக பொருள் புலப்படுமாறு அகத்துறைப் பாடல் அமையுமேல், அப்பாடல் குறிப்பாகப் பொருள் தரும் முறையை இறைச்சி என்பர். இவ் விறைச்சியை அறிந்து விளங்கிக் கொள்ளும் திறனில்லார்க்கு இது ஒரு தனி மொழி போல் தோன்றும்.

> **" இலங்கு மருவித்தே ! இலங்கு மருவித்தே**
> **வானின் இலங்கும் அருவித்தே ! தான் உற்ற**
> **சூள்பேணான் பொய்த்தான் மலை "** (கலி-41)

தோழி ! தான் கூறிய உறுதி மொழியைக் கூறிய வாறு காப்பாற்றாதவன் மலை விளங்கும் அருவியைப் பெற்றிருக்கின்றதே ! மழை பெய்தலால் விளங்கும் அருவியைப் பெற்றிருக்கின்றதே !

இவ்வாறு கூறியதன் கருத்தென்னவெனில் தலைவன் தான் கூறிய மொழியில் தவறிவிட்டான். பொய் கூறியவனாகிவிட்டான். பொய் கூறியவன் நாட்டில் மழையும் பெய்யுமா? அருவியும் ஓடுமா? என்பதே.

> "இளமழையாடும்! இளமழையாடும்
> வளமழைவைகலும் ஆடும் என் முன்கை
> வளைநெகிழ வாராதோன்குன்று" (கலி — 41)

தோழி! தலைவன் வாராமல் மெலிந்து விட்டேன். வளைகள் கழன்றோடுகின்றன. வருவேன் என்று கூறிய மொழியை மறந்தவன் மலையில் மழை பெய்ய வருகின்றதே! இஃது என்ன வியப்பு! என்று பொருள் தோன்றுவதுதான் "இறைச்சி." இவ்வாறு அமைத்துப் பாடும் ஆற்றல் நுண்மாண் நுழை புலனும், இலக்கியப் பயிற்சியும், இயற்கைப் பொருள் அறிவும் மிகுதியுமுடையார்க்கே சாலும். இவ்வாறு பாடுவோர் இக்காலத்து அரியர் ஆய்விட்டார்.

தலைவன் தலைவியைப் பாராட்டுவான், அவ்வாறு பாராட்டுவானேல், தலைவன் தலைவியை விட்டுப் பிரிவான் என்பதனை அறிதல் வேண்டும். தான் பிரிந்து சென்று செய்வினை ஆற்றுவதற்குத் தலைவி இசையாளோ என்று ஐயுற்றுத் தான் தலைவியைப் புகழத் தொடங்குவான். புகழ்வதுமட்டுமன்றி அவள் விரும்பும் வகையில் அவள் அணிகலனைத் திருத்துவான்; கூந்தலை நீவுவான்.

> "முள்ளுறழ் முளையெயிற்று அமிழ்தூறும் தீநீரைக்
> கள்ளினும் மகிழ்செயும் எனஉரைத்தும் அமையார்
> என்
> ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர்
> உள்ளுவ தென்கொல் அறியேன் என்னும்"

தலைவன் தலைவியிடம் அவள் வாயில் ஊறும் நீரை (எச்சிலை)கள்ளைவிட மகிழ்ச்சியளிக்கும் என்று கூறி அவள் நகைகளையும் சீர்படுத்தினான். அதனால் தலைவி ஐயங் கொண்டுவிட்டாள். தலைவன் நினைப்பது என்ன என்று கேட்கிறாள். ஆதலின் தலைவன் தலைவியைப் புகழத் தொடங்கின் தலைவன் தலைவியை விட்டுப் பிரியத் திட்டமிட்டுள்ளான் என்று தோழியும் தலைவியுமறிந்து தலைவனிடம் நெருங்கி அவன் பிரிந்து செல்லாவகையில் வேண்டுவன கூறுவர். இவ்வாறு எல்லாம் இயற்றப்பட்டுள்ள இலக்கியங்களாகக் கிடைத்துள்ள பாட்டிலும் தொகையிலும் காணலாம்.[1]

தலைவன் பரத்தைமை ஒழுக்கத்தை அறிந்து தலைவி அவனைப் பழியாது புகழ்வாள். கற்பு வழிப் பட்ட அவள் புகழ்ந்தாலும் அவள் உள்ளத்தில் ஊடல் உண்டு என்று அறிதல் வேண்டும். பரத்தையைப் பாராட்டித் தலைவன் உள்ளக் குறிப்பினை அறியவும் முயலுவாள்.

தோழிக்கும் தலைவிக்கும் தலைவனை வாழ்த்தவும் வையவும் பழிக்கவும் உரிமையுண்டு. இவைகளை எல்லாம் வெளிப்படையாகக் கூறாது, குறிப்பாகவே கூறுவர்.

காதலைச் சிறப்பித்துக் கூறுவதற்குச் சினன், பேதைமை, பொருமை, நல்குரவு முதலியன பயன் படும். இவை வெறுக்கத் தக்கன என்றாலும் இவைகளால் காதல் சிறப்புறும் வகையில் பாடல் இயற்றுதல் உண்டு.

கண்ணால் கண்டு அறிய முடியாத பண்பு நலன் களைச் சொல்லால்தான் அறிய முடியும். அவை

1. பாட்டு = பத்துப்பாட்டு. தொகை = எட்டுத்தொகை.

ஒப்பும், உருவும், வெறுப்பும், கற்பும், ஏரும், எழிலும், சாயலும், நாணும், மடனும், நோயும், வேட்கையும், நுகர்வும் என்பனவாம். இவைகளை உள்ளத்தில் பதியுமாறு விளக்குதல் புலவர் கடமையாகும். இவையெல்லாம் அகப் பொருள் பற்றிப் பாடுங்கால் மிகுதியும் பயிலக்கூடியன. இவைகளின் பொருளை நன்கு உணர்ந்து தெளிதல் வேண்டும். இவ்வாறு எல்லாம் அகப் பொருள் மரபை அறிந்து உலக வழக்கத்தைத் தழுவிப் புலனெறி வழக்காம் இலக்கியம் இயற்றுதல் வேண்டும்.

## 5. புறத்திணை இயல்

அகப் பொருள் பற்றி இலக்கியம் படைத்தற்குரிய மரபுகளை அறிந்தோம். இனிப் புறப் பொருள் பற்றி இலக்கியம் படைத்தற்குரிய மரபுகளை அறிவோம்.

"புறம்" என்பது, அகத்திற்கு மறுதலையானது. "ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கும் துய்த்து உணரப்படுதலானும், அவை இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அவை புறமெனவே படும்" என்று நச்சினர்க்கினியர் கூறியுள்ளார். "அகம்" என்பது காதல் பற்றி எழும் இலக்கியம் என்றால் "புறம்" என்பது காதலுக்குத் துணையாக வீட்டிற்கு வெளியே நிகழக் கூடிய போரும், பொருளீட்டலும், அரசியலும், அறப்பணிகளும் என்று கூறலாம். அகத்திணை ஏழு என்றாற் போல புறத்திணையும் ஏழு என்றார். ஒவ்வொரு அகத்திணைக்கும் ஒவ்வொரு புறத்திணை உண்டு. அகத்திணையும் புறத்திணையும் வருமாறு:— 1. குறிஞ்சி-வெட்சி, 2. முல்லை-வஞ்சி, 3. மருதம்-உழிஞை, 4. நெய்தல்-தும்பை, 5. பாலை-வாகை, 6. பெருந்திணை-காஞ்சி. 7. கைக்கிளை-பாடாண்.

இன்ன அகத்திற்கு இன்ன புறம் என்று ஆசிரியரே குறிப்பிட்டுச் செல்கின்றார்.

1. வெட்சிதானே குறிஞ்சியது புறனே.
2. வஞ்சிதானே முல்லையது புறனே.
3. உழிஞைதானே மருதத்துப் புறனே.
4. தும்பைதானே நெய்தலது புறனே.
5. வாகைதானே பாலையது புறனே.
6. காஞ்சிதானே பெருந்திணைப் புறனே.
7. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே.

குறிஞ்சி காதல், வெட்சி போர். போர் செய்யும் ஆண்மையும் வீரமும் உள்ள இடத்தில் காதல் ஆட்சி புரியும். காதலனுக்கு வீரம் இன்றியமையாதது. காதல் துய்க்கப்படுவது பிறர் அறியாமல். களவொழுக்கத்துக்கு ஏற்றது கங்குலே. வெட்சி யென்பதும் களவின்கண் பிறர் அறியாமல் ஆநிரை கொள்ளுதலே. களவில் காதல் கொள்வது இல்லத் திற்குத் துணையாவது. களவில் ஆநிரை கொள்வது அறத்தை நிலைநாட்ட ஆதலின் ஒன்றுக்கொன்று அகமும் புறனுமாயின. தமிழகத்தில் பேரரசு நிலை பெற்றகாலம் இன்னது என வரையறுத்துக் கூறுதல் இயலாது. சேர சோழ பாண்டியர் எனப்படும் மூவேந்தர்கள் மரபு என்று தோன்றியது என்பது எவராலும் வரையறுத்துக் கூறப்படவில்லை. வரலாற்றுக் காலத்துக்கு மிக மிக முற்பட்ட கால மாகும். வெட்சிப் போர் முறையும் மிக மிகப் பழங் காலத்தது ஆகும்.

இரு பெருவேந்தர்கள் போர் புரியக் கருதினரேல் ஒருவர் ஒருவர் நாட்டு வாழும் ஆவும் அந்தணரும் காப்பாற்றப்படவேண்டுமென்று கருதுவர். அந்தணர் என்போர் அறவோர், பிறர்க்குத் தண்ணளி பூண்டு ஒழுகி என்றும் நன்மையே கொள்வோர். ஆவும் மக்களுக்குப் பலவகையிலும் பயன்படும் உயிராகும். போர் செய்யத் தொடங்கும் ஒருவன்

பகை நாட்டுக்கு "யான் போர் செய்ய வருகிறேன் ஆவும், ஆவைப்போன்று பிறர்க்கு நன்மை செய்யும் அந்தணர்களும், பெண்களும், பிணியுடையோரும் குழந்தைகளும் வெளியேறட்டும்" என்று அறிவிப்பான். ஆக்கள் தாமே செல்லும் ஆற்றல் அற்றன ஆகையால் அவற்றைப் போர்க்கள நாட்டினின்றும் அப்புறப்படுத்த வருவான். உண்மையாகவே ஆக்களைக் காக்க வேண்டுமென்று வருவதால் பிறர் அறியாமல் ஆநிரையைக் கொண்டு செல்ல முயல்வான். ஆனால் ஆநிரைக்குரிய நாட்டானும் விழிப்போடு இருந்து பகையைத் தடுக்க முயல்வானுகையால் பகையரசன் கருதுவதுபோல் ஆவினைக் கொண்டு சென்றுவிடல் முடியாது. ஆதலின் இருசாரார்க்கும் போர் தொடங்கும்.

ஆவைக் காக்க வேண்டும் என்று எண்ணியது அறநோக்கு. "போருக்கும் காதலுக்கும் புகழ் அறநெறி வேண்டாம்" என்று பிறநாட்டார் கூறினும், தமிழர்கள் இரண்டுக்கும் அடிப்படையாக அறத்தையே கொண்டனர். ஆநிரை கவர்தல் அறத்தின் பொருட்டேயன்றிப் பிறிதின் பொருட்டன்று. ஆதலின் ஆசிரியர் வெட்சி இன்னது என இலக்கணம் கூறுமிடத்து, "ஆதந்து ஓம்பல்" என்றார். "ஆநிரையைக் கொண்டு போந்து பாதுகாத்தல்" வேண்டுமென்ற அறநோக்கத்தாலேயே ஆநிரையைக் கவரக் களவில் செல்வர்.

**"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந் தோம்பல் மேவற் றாகும்"**

வேந்துவிடு முனைஞர் = வேந்தனால் விடப்பட்ட பணித் தலைவர், வேற்றுப் புலம் = வேற்றரசன் இடத்தில், களவின் = களவினாலே, ஆதந்து ஓம்பல் = ஆநிரையைக் கொண்டு போந்து பாதுகாத்தலை, மேவற்று = பொருந்துதலையுடையது.

நிரை கவர்தல் மிகமிகப் பழங்காலத்ததாயினும் அறநெறியின் பாற்பட்டது. ஆதலின் வழிவழியாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. புலவர்களும் நிரை கவரும் நிகழ்ச்சியைப் பல துறைப்படுத்தி வகுத்து இலக்கியப் படைப்புக்கு நிலைக்களன் ஆக்கியுள்ளனர். ஐம்பத்தொரு துறைகள் உள்ளன. இவற்றுள் கவர்ந்த நிரையை மீட்டற்குரியனவும் அடங்கும். கவர்ந்த நிரையை மீட்டல் கரந்தை எனப்படும்.

இத்துறைப் பெயர்களை ஆராயுங்கால் பண்டைத் தமிழர்களின் வரலாற்றுச் செய்திகள் சில புலப்படும்.

பகை நாட்டில் சென்று பகைவர் அறியாவகையில் அவர் நாட்டுச் செய்திகளை அறியும் "ஒற்று" முறை அக்காலத்திலேயே இருந்துள்ளது. வெற்றிக்காகக் கடவுளை வேண்டியுள்ளனர். வெற்றிக்காக வேண்டும் கடவுளைக் "கொற்றவை" என அழைத்தனர். கொற்றம் என்றால் வெற்றி.

மூவேந்தர்களும் தங்களுக்கென அடையாளப் பூக்களைக் கொண்டிருந்தனர். மிகப் பெரிய படைகளைக் கொண்டிருந்தனர்.

> "ஏந்து புகழ்ப் போந்தை, வேம்பே, ஆர் என
> வருஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்"

போந்தை = பனம்பூ, (சேரர்க்குரியது); வேம்பு = வேப்பம் பூ (பாண்டியர்க்குரியது); ஆர் = ஆத்தி (சோழர்க்குரியது).

மாண்ட வீரர் பொருட்டுக் கல் நட்டு வழிபடும் முறையும் சுட்டப்பட்டுள்ளது. பண்டைத் தமிழகத்தில் வீரர் வழிபாடு மிகவும் சிறந்தோங்கி இருந்தது. இவ்வீரர் வழிபாடுதான் கோயில்களின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்பர் ஆராய்ச்சியாளர்கள். போரில் மாண்ட வீரர்க்குக் கல் நட்டு வழிபாடு செய்த மக்கள் வீர மங்கையர்க்கும் கல்

நட்டனர். பின்னர் புகழெய்தி மாண்டோர்க் கெல்லாம் அவர் பீடும் பெருமையும் எழுதிக் கல் நட்டனர். அக்கல் நடு விழாவே இன்று இறந்துபோன வர்க்குப் பத்தாம் அல்லது பதினாறும் நாளில் கல்லிடும் சடங்காக மாறுதல் பெற்றுள்ளது. பொருளறியாது செய்யப்பட்டு வருகிறது.

அக்காலத்தில் கல் நடும் விழா அறுவகைப் பிரிவினையுடையதாக இருந்துள்ளது.

> "காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல்
> சீர்த்தகு மரபின் பெரும்படை, வாழ்த்தல் என்று
> இருமூன்று மரபின் கல்லொடு புணர."

"காட்சி" என்பது உருவம் சமைப்பதற்குத் தக்க கல்லைக் காண்டலும், சமைத்த பின்னர் அதனை நாட்டிக் காண்டலும் ஆம். "கால் கோள்" என்பது கல்லறுத்து இயற்றுதற்குக் கால் கோடலும் நாட்டிய பின்னர் அவன் ஆண்டு வருதற்குக் கால் கோடலும் ஆம்.

"நீர்ப்படை" என்பது கண்டு கொண்ட கல்லினை நீர்ப்படுத்தித் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெய ரும் பீடும் எழுதி நாட்டியவழி நீராட்டுதலும் ஆம்.

"பெரும்படை" என்பது அவன் செய்த புகழ்ச் செயல்களைத் தகும்படிப் பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெரும் சிறப்புக்களைப் படைத்தலும் ஆம்.

"வாழ்த்தல்" என்பது கால்கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும், பின் னர் நட்டப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்த லும் ஆம். இங்குக் கூறப்பட்டவை எல்லாம், கோயில் எடுக்குங்கால் கொள்ளப்பட்டு வருகின்றன. வீரர்

வழிபாட்டிடங்களே கோயில்களாக மாறியுள்ளன என்பதின் உண்மை ஆராயத் தக்கது.

"வஞ்சி" என்பது ஒருவர் மேல் ஒருவர் போர் கருதிப் படையெடுத்துச் செல்லுதல், முல்லைக்குப் புறனாகக் கருதப்பட்டது, இரண்டுக்கும் முதல் கரு, உரி ஒத்திருப்பதனால் என்பர். அக்காலத்தில் போர் நடப்பது மக்களில்லாக் காட்டிடத்தேயாம். முல்லைக்கும் முதல் பொருளாம் நிலன் காடும், காடு சார்ந்த இடமுமாகும். கார்காலத் தொடக்கத்தில் போர் நின்றுவிடும். முல்லைக்கு உரிய காலம் கார் காலம். காட்டில் உள்ள விலங்கும் பறவையும் மரம் செடி கொடி முதலியன பிறவும் இரண்டுக்கும் ஒத்தன. முல்லையில் தலைவி தலைவனைப் பிரிந்திருக்கின்றாள். வஞ்சியில் தலைவன் தலைவியைப் பிரிந்திருக்கின்றான். ஆதலின் முல்லைக்கு வஞ்சி புறம் என்றனர் என்பர்.

போர் கருதிப் படையெடுத்தல் எப்பொழுது? காரணமின்றி வீரம், படைப் பெருக்கம் முதலியன காட்டுவான் வேண்டியோ நாடுகளை அடிமைப்படுத்தும் பெரு வேட்கை கொண்டோ படையெடுத்தலை ஆசிரியர் குறிப்பிட்டாரிலர்.

ஓர் அரசன் நாடுகளை அடிமைப்படுத்தித் தன் ஆட்சிப் பரப்பைப் பெருக்குவதில் தணியாத வேட்கையுடையவனாக இருப்பானானால் அவன் அஞ்சி நல்வழியடையப் படையெடுத்தல் வேண்டும். நாடு பெருக்கி வல்லரசாக வையகம் போற்றப் படையெடுத்தலை ஆசிரியர் போற்றினாரிலர்.

இவ்விருபதாம் நூற்றாண்டில் நாகரிகமுற்ற நல்லரசுக் கொள்கையாக விளங்கும் ஒன்று ஆசிரியரால் கூறப்பட்டிருப்பது, தமிழினத்திற்குப் பெருமை தருவதன்றோ - போர்-போர்க்காக அன்று; நாட்டை

விரிவுபடுத்த அன்று; பிறரை அடிமை கொள்ள அன்று - விரிவுபடுத்தவும் அடிமைப்படுத்தவும் போர் தொடுக்கும் எண்ணம் கொண்டுள்ள அரசு மீது போர் தொடுப்பது எனின் அப்போர் அமைதிப் போர், அறப்போர் என அழைக்கப்படும் தகுதி யுடையது அன்றோ?

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"

எஞ்சா = குறையாத, மண் நசை = மண்ணாசையுடைய வேந்தனை = அரசனை, வேந்தன் = நல்லறம் கருதும் அரசன், அஞ்சுதக = மண்ணாசை மன்னன் அஞ்சுமாறு, தலைச்சென்று = முன் படையெடுத்துச் சென்று, அடல் குறித்தன்றே = வெல்லுதல் குறித்ததாகும் வஞ்சி.

இவ்வஞ்சித்திணை - பதின் மூன்று துறைகளைப் பெற்றுள்ளது. எல்லாத் துறைகளும் போர் வேந்தர் படையெடுத்துச் செல்லுங்கால் எல்லா நாடுகளிலும் நிகழக் கூடியனவே. ஆயினும் அவற்றுள் மூன்று துறைகள் பண்டைத் தமிழர்களின் நாகரிகப் பண்பாட்டு மேம்பாட்டையும் கருமச் சூழ்ச்சித் திறனையும் எடுத்துக் காட்டவல்லன. அவை மாராயம் பெற்ற நெடுமொழி, பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை, அழிபடை தட்டோர் தழிஞ்சி என்பனவாம்.

**மாராயம் பெற்ற நெடுமொழி :** வேந்தனால் சிறப் பெய்திய அதனால் தானேயாயினும் பிறரேயாயி னும் கூறும் மீக்கூற்றுச் சொல் ஆகும். அரசன் படை வீரர்கட்கும் படைத் தலைவர்க்கும் பரிசும் பட்டமும் அளித்துப் பாராட்டுதலும் ஊக்கப்படுத்து தலும் அக்காலத்திலும் நிகழ்ந்துள்ளன. இவ்வாறு அளிக்கும் சிறப்புக்கே மாராயம் என்று பெயர்,

"நெடுமொழி"யாவது உயர்த்திக் கூறும் மொழி. நெடிது நிலைத்திருக்கும் புகழ் மொழியாகும். நாட்டுக்காக உயிரையும் கொடுக்கவிருக்கும் போர் வீரர்க்கு இச் சிறப்புச் செய்யும் நாகரிக வழக்கு நம் முன்னோரும் கொண்டிருந்தனர்.

**பிண்டம் மேய பெருஞ் சோற்று நிலை:** அரசன், படை வீரர்கட்குப் பெருவிருந்தளித்து, அவ்விருந்தில் தானும் கலந்து கொள்வதாகும். இக்காலத்தில் அரசர்க்கு மதிப்பில்லைதான். பல நாடுகளில் அரசர் மரபே அழிந்துவிட்டது. உள்ள நாடுகளிலும் அரசரும் பொதுமக்களோடு பொதுமக்களாகக் கலந்து விட்டார். அன்று அப்படியன்று. அரசரே காணும் கடவுள். அரசரைக் கண்டால் கடவுளைக் காண்பதற்கு ஒப்பாகும் என்று கருதியிருந்தனர். அவ்வரசரே தம்முடன் உண்ணவும் தமக்கு உணவு வழங்கவும் வருவாரேயானால் அச்சிறப்பினைப் பெறும் வீரர்கள்தாம் பிறவி பெற்றதன் பயனைப் பெற்று விட்டதாகத் தானே கருதுவார்கள். உயிர் வழங்கி, நாட்டின் நல் மானம் காக்க நாளும் முன்வராது என் செய்வர்?

**அழிபடை தட்டோர் தழிஞ்சி:** பிறர் புகழும் வகையில் போர் செய்து மடிந்துபோன போர் வீரர்கட்கு அவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்த பிறகும் பட்டங்கள் வழங்கியும் பரிசுகள் அளித்தும் சிறப்பிக்கும் வழக்கம் இன்று நடைமுறையில் இருக்கக் காண்கின்றோம். இம்முறை அன்றும் இருந்துள்ளது. இவ்வாறு இறந்த பின்னர் சிறப்புச் செய்வதைத் தழிஞ்சி என்று அழைத்தனர். போரிற் பொருது மடிந்தாலும் மடியாது உறுப்புக் குறையுற்றோ, உடலில் விழுப்புண்பட்டோ பிழைத்திருந்தாலும், அரசர்களால் சிறப்புச் செய்யப் பெறுவர்.

இவை மூன்றினாலும் தமிழர்கள் ஒன்றுமறியாக் காட்டுவாழ் மக்கள் அல்லர்; இருபதாம் நூற்றாண்டு நாகரிகத்தினை இயல்பாகவே கொண்டிருந்தனர் என்று தெளிதல் கூடும். இம்முறைகள் ஆங்கொன்றும், ஈங்கொன்றுமாக ஏதோ ஓர் இடத்தில் யாரோ ஒருவரால் செய்யப்பட்டனவாக இராமல் அமைப்பு முறைகளாக அமைந்து யாவராலும் போற்றப்பட்டு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"உழிஞை" என்பது ஒரு நாட்டை வென்று அகப்படுத்துவதற்காக அந்நாட்டின் மதிலை வளைத்து முற்றுகையிடுவது. வானஊர்தியும் அணுகுண்டுகளும் தோன்றியுள்ள இக்காலத்தில் மதிலால் பயனில்லை. வில் அம்பினால் போர் செய்த அக்காலத்தில் மதிலுக்குப் பயனும் மதிப்புமிருந்தன. தலைநகர்கள் எல்லாம் மதில் சிறப்புடையனவாகவே இருந்தன. அம்மதில்களை முற்றுகையிடுங்கால் உள்ளிருக்கும் அரசன் கோட்டைக் கதவடைத்து உள்ளிருந்தே போர் புரிவான். வெளியே இருப்பவன் உள்ளே செல்லவும், உள்ளே இருப்பவன் வெளியில் வரவும் முயலும் நிகழ்ச்சியாகக் காட்சியளிக்கும். தலைவனிடம் ஊடல் கொண்டுள்ள தலைவியானவள் கதவை அடைத்துக்கொண்டு உள்ளிருக்கவும், தலைவன் உள்ளே செல்ல முயல்வான். தலைவன் தன் முயற்சியில் தோல்வியுற்று அகன்ற பின்னர் தலைவி வெற்றிக் களிப்போடு வெளி வருவாள். ஆதலின் உழிஞை மருதத்திற்குப் புறனாயிற்று. மருதம் என்பது ஊடலும் அதற்குரிய செயல்களும் ஆகும். "உழிஞை" இருபது துறைகளைப் பெற்றுள்ளது. பிற்காலத்தார் தனியாகப் பிரித்த நொச்சியும் உழிஞையின் பகுதியாகும்.

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது; முடியவில்லை. செர்மன்நாடு தோற்றுவிடும் போல் தோன்றியது. தோல்வியைப் பெற்றுவிடவில்லையாயினும் சர்ச்சிலும், சுடாலினும், உருசுவெல்ட்டும் கூடி வெற்றிக்குப் பின்னர் யார் யார்க்கு எது எது என்று ஆராயத் தொடங்கித் தமக்குள் பங்கிட்டுக்கொண்டு ஒப்பந்தமும் செய்து கொண்டுவிட்டனர். இம்முறையைத் தொல்காப்பியர் " கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்" என்பர். "பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான்போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி" என்று பொருள் கூறி, "இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது" என்று மொழிவர் நச்சினார்க்கினியர்.

நூற்றாண்டுகள் சென்றாலும் மக்கள் உளநிலை மாறிடாது போலும். உடை மாறலாம், உணவு மாறலாம், படைக் கருவி மாறலாம், போர் முறை மாறலாம். ஆனால் உள்ள இயல்பு அன்றுமின்றும் என்றும் ஒன்றுதான் போலும்.

"தும்பை" என்பது இருபெருவேந்தரும் எதிரெதிராக நின்று படைகள் புடைசூழப் போரிடுவது ஆகும். "போர் என்றால் சாவுதானே." கணவரையிழந்த மனைவியரும், தந்தையரை இழந்த மக்களும், காதலரை இழந்த காதலியரும் மக்களை இழந்த பெற்றோரும், கண்ணீர் வடிப்பதுதானே போரின் விளைவு. இரக்கம், இரங்கல் என்பனவே போர்க்குரியன. அகத்திணையில் நெய்தல் என்பதும் இரங்கல்தானே. தலைவனைப் பிரிந்த தலைவி அவன் பிரிவினை ஆற்றாது இரங்குதல் ஆதலின் "தும்பை தானே நெய்தலது புறனே" என்றார்.

*"போர்" — தம் வலியினை உலகு அறிவிக்கப் பொருவதும் — போர்தான். மண்ணாசை கொண்டு பொருவதும் போர்தான். தன்னைக் காத்துக் கொள்ளப் பொருவதும் போர்தான். மண்ணாசை கொண்டு பிறர் நாட்டைக் கவரவும், தத் தம் வலியினை உலகுக்கறிவிக்கவும் தருக்கிப் படையெடுக்கும் மன்னனுடன் போர் செய்தல் அறப்போர் ஆகும். பிறரைக் கொன்று குருதி வெள்ளத்தில் நீந்திப் பெரு வீரன் பெரு மன்னன் என்று உலகறியச் செய்யும் நிகழ்ச்சி, உலகெங்கணும் நிகழ்ந்துள்ளன. ஆசிரியர் அப்போரைக் குறிப்பிட்டாரிலர். போர் ஒழிய வேண்டும் என்பதுதான் அவர் கொள்கையும். ஆனால் வலிய வரும்போரை விட்டுவிடல் கூடாது. அவ்வாறு விடுதல் தன்மானத்திற்கு இழுக்காகும். எல்லா வலிகளும் மிக்குளோம் என்று எவரேனும் ஒரு நாட்டின் பகுதியில் கால் அடி வைப்பரேல் அவரை ஒறுத்துத் துரத்ாது, "அருள் கருதி இருப்போம்" என்று கூறுதல் அச்சத்தின் அறிகுறியே யன்றி ஆண்மையின் அறிகுறி ஆகாது. ஆதலின் வலிமை காரணமாகப் போர் தொடுக்கும் அரசரை எதிர்த்துச் சென்று பொருது அழித்தலே சிறப்புடைத்தாகும். ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறு பொருதல்தான் போர்; அப்போர் சிறப்பாகப் பாராட்டுதற்குரியது என்று முழங்குகின்றார்.*

**"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**
**சென்று தலையழிக்கும் சிறப்பிற்று என்ப"**

மைந்து பொருளாக = வலிமையையே முதன்மையாகக் கொண்டு, வந்த வேந்தனை = படையெடுத்து வந்த அரசனை, சென்று தலையழிக்கும் = எதிர்த்துப்போய் அவன் கருதும் வீரத்தின் தலைமையினைக் கெடுக்கும், சிறப்பிற்று என்ப = சிறப்பினையுடையது தும்பை என்று சொல்வார்கள்.

ஆசிரியர் தொல்காப்பியர் "அமைதியை நிலைநாட்டப் போர் புரிதலை இலக்கியங்களில் பாராட்டலாம். இலக்கியப் பொருளாகக் கொள்ளலாம். காரணமின்றி வலிமை யொன்றே கருதிப் போரிடும் கயவர்களை இலக்கியங்களின் பொருளாகக் கொண்டு இலக்கியம் இயற்றுதல் கூடாது." என்று வழிகாட்டியுள்ளார். இங்கும் இருபதாம் நூற்றாண்டின் உயர் கொள்கையாகக் கருதப்படும் பகை தணிவினைப் போரைத் தொல்காப்பியர் கூறியுள்ளமையால் தமிழர் உயர் நாகரிகச் சிறப்பு மலை விளக்காய் இலங்குகின்றதை எண்ணி மகிழலாம். தமிழன் என்று சொல்லலாம். தலைநிமிர்ந்து நிற்கலாம். அமைதியை நிலை நாட்டும் போர் என்றும் வேண்டியதுதான். அமைதியை அழிக்கும் போர் மறைய வேண்டியதுதான். போர் ஒழிக்கும் புதுமை இலக்கியம் போற்றுக. தும்பைத் திணை பன்னிரண்டு துறைகளுடையது. பன்னிரண்டு துறைகளும் பண்டைத் தமிழகப் படை மறவரின் ஆண்மை மிகு வீரத்தை அழகுற விளக்குகின்றன. அக்காலத்தில் தேர்ப்படை இல்லை போலும். "தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலவும்" என்னுமிடத்தில் தேர் குறிப்பிடப்பட்டிலது. தேர் தானே இயங்காது குதிரையால் இழுக்கப்பட வேண்டியிருந்தமையான், குதிரைப் படையுள் அடக்கிவிட்டனர் எனக் கருத இடமுண்டு. அக்காலப் போர் முறையுள் வேந்தரும் படைத் தலைவரும் முன்னின்று போர் நடத்தி வெற்றி பெறுவாரே யன்றி, இக்காலம் போல் படையை முன்னிறுத்திவிட்டுத் தாம் தக்கதோர் காவலிடத்தில் வீற்றிருந்து கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்திலர். ஆதலின் போர் வெற்றி முழுவ

தும் முன்னின்று நடாத்தும் வேந்தரையோ படைத் தலைவரையோ சார்ந்திருந்தது. படைகளுள் தார்ப் படை, தூசிப் படை, கூழைப் படை என்பனபோன்ற பலவகைப் பிரிவுகள் ஒழுங்குறப் பொருந்தியிருந்தன. போர்ச் செயலுள் தனியாண்மை காட்டிய வீர மறவர் வழியில் வந்த தமிழ்ப் பெருமக்களைப் படைக்குரிய ராக ஆங்கிலேயர் மதியாது இருந்தமை வருந்தத் தக்கது.

போரின் இறுதி வெற்றி, பொருகின்ற இரு பகுதி யினருள் ஒருவர் வெற்றிபெற்றுத்தானே ஆதல் வேண் டும். வெற்றியின் அடையாளம் வாகைசூடுதல். ஆனால் ஆசிரியர் தொல்காப்பியர் போர் வெற்றியை மட்டும் வாகை யென்று சுட்டவில்லை. போர் ஒழிய வேண்டும் என்ற கொள்கையையுடைய அவர் வெற்றியைப் பாட மட்டும், இலக்கணம் வகுக்க மாட்டார் அன்றே. ஆயினும் அவர் காலத்தில் போர் முற்றிலும் ஒழிந்துவிடவில்லை. ஒழியவேண்டு மென்ற கொள்கை வெற்றி பெற்று விடவும் இல்லை. ஆதலின், ஆசிரியரும் போர் வெற்றி பற்றிப் பாடும் சில துறைகளைக் குறிப்பிடவேண்டிய நிலையில் உள்ளார்.

" வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப. "

வாகையைப் பாலைக்குப் புறமாகக் கூறியது ஏன்? பாலை என்பது பிரிவு. பிரிவு முதலில் துன்பமாயினும் பின்பு இன்பம் பயக்கும். பிரிந்து சென்ற தலைவன் போர் வெற்றி பெற்றோ, பொருளீட்டிக் கொண்டோ, புதுக் கல்விச் சிறப்பு எய்தியோ வீட்டுக்குத் திரும்பி வருங்கால் தலைவியின் இன்பம் முன்னிலும் பன்மடங்காகும். வாகையிலும் தலைவன் தலைவியை

விட்டுப் பிரிந்து சென்று கடமைகள் ஆற்றும் நிலைமைகள் உண்டு. பாலையால் தலைவியிடம் காதல் மிகுதல் போல், வாகையால் தாம் மேற்கொண்டுள்ள கடமைகள்பால் காதல் மிகும். பாலைக்கும் நிலவரையறையில்லை. வாகைக்கும் நிலவரையறையில்லை. ஆதலின் பாலைக்கு வாகை புறனாயிற்று.

வாகை என்பது யாது? குற்றமற்ற கொள்கையாகத் தாம் கொண்டுள்ள குறிக்கோளைப் பலவகையாலும் சிறப்புறப் பெருக்குதலாகும். தாம் கொண்டுள்ள வாழ்வியற் குறிக்கோள் குற்றமற்றதாக இருத்தல் வேண்டும். பிறர்க்குத் தீமை பயக்கக் கூடியதாக இருத்தல் ஆகாது. ஆதலின் 'தாவில் கொள்கை' எனும் அடை கொடுத்துச் சிறப்பித்தார்.

வெற்றி பிறருடன் உறழ்ந்தும் (போட்டியிட்டும்) பெறலாம்; தாம் மேற்கொண்டுள்ள ஒன்றுள் தாமே வீறு பெற்று உயர்ந்தும் பெறலாம். நச்சினார்க்கினியர் பிறரோடு உறழ்ந்து பெறும் வெற்றியை வாகையென்றும் தாமாகத் தம் துறையில் மேம்படு வென்றியை முல்லையென்றும் அழைப்பர். ஆனால் ஆசிரியர் முல்லை யென்ற ஒன்றைச் சுட்டிக் கூறினரிலர். நாவலர் பாரதியார் அவர்கள் "உறழ்பவரின்றி ஒரு துறையில் ஒப்புயரும் பரிசும் வாகையே யாகும்" என்றனர். இவ்வகை எழு வகைப்படும்.

1. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
2. ஐவகை மரபின் அரசர் பக்கமும்
3. இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
4. மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
5. நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்

6. பாலறி மரபின் பொருநர் கண்ணும்
7. அனைநிலை வகையோடு ஆங்கு எழுவகையில்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.

இந்நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் வட நூல்களைத் தழுவி உரைத்துத் தமிழர்க்குப் பொருந்தா வாழ்வினைத் தம் புலமை நுட்பத்தால் பொருந்தச் செய்ய முயன்றுள்ளார். "தமிழ் மரபு கருதாது வடநூல் கூறும் வருண வேறுபாடுகளை அவரவர்க்கு அறுதியிட்டு வகுத்த தொழில் தொகுதியுடன் இங்குக் குறிப்பன போலக் கொண்டு பொருந்தாப் பொருள் கூறி இடர்ப்படுதலை" எடுத்துக் காட்டி நாவலர் பாரதியார் அவர்கள் தமிழ் மரபுக்கேற்ற விளக்கவுரை கூறியுள்ளார்கள். (தொல்காப்பியர் பொருட் படலம்—புறத்திணையியல் உரை—பக்கம் 100—106.)

வாகையென்பது தாம் கொண்டுள்ள வாழ்வியற் குறிக்கோளில் வெற்றிபெறுதல் என்று குறிப்பிட்டோம். அவ்வாறு வெற்றி பெறுகின்றவர்கள் யாவர் என்று தெரிய வேண்டும். அக்கால மக்களிடையே வருண வேறுபாடு கிடையாது. தொழில் வகையால் பிரிவுகள் இருந்திருக்கலாம். எல்லா நாட்டிலும் உண்டு. எக்காலத்திலும் இருக்கும். பண்டைத் தமிழகத்திலும் பிரிவுகள் தொழில் வகையால் இருந்தன.

நூல்களை ஆராய்கின்ற பார்ப்பார், நாட்டை ஆளுகின்ற அரசர், நான்கு திணைக்குமுரிய ஆயர், வேட்டுவர், உழவர், பரதவர், ஒரு திணைக்கென உரிமை பெறாது எல்லாத் திணை நிலங்கட்கும் உரிய வினைவலர், ஏவலர், குற்றமில்லாச் செயல்களை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலங்களிலும் செவ்வனே நடைபெறச் செய்து வருகின்ற அறிவர்கள், எண்

வகை வழக்கினையுடைய நோன்பிற்குரிய நீத்தார்கள், தத்தம் பகுதித்துறைகளை நன்கறிந்து போர் செய்யும் வீரர்கள், இன்னும் குறிப்பிடப்படாத, நாட்டுக்குப் பயன்படும் துறைகளில் ஈடுபடும் மக்களும் தமிழ் நாட்டில் இருந்துள்ளார்கள். அவர்கள் அடையும் வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் இயற்றிஞல் அவை வாகைத் திணையின் பாற்படும் என்பதாம். வாகைத் திணையின் வகைகள் பதினெட்டு எனவும் "கூதிர் வேனில்" என்று தொடங்கும் நூற்பாவால் பிரித்துரைக்கின்ருர். அப்பதினெட்டுள் மற(வீர) வகைக்கு ஒன்பதும் அறவகைக்கு ஒன்பதும் இடம் பெற்றுள்ளன.

மறத்துக்குரியன :-

1. குளிர் காலம் கோடைக்காலம் எனப்படும் காலங்களில் போர் விருப்பமுடையோராய்ப் பாசறையிலிருந்து போர்க் கடன் ஆற்றுதல்.
2. உழவர்கள் நெற்போர்க் களத்திலும் வீரர்கள் போர்க் களத்திலும் வீறு பெற்றுயர்தல்.
3. வென்ற மன்னனின் தேர்முன் நடைபெறும் குரவைக் கூத்து.
4. வென்ற மன்னனின் தேரின்பின் நடைபெறும் குரவைக் கூத்து.
5. தம்மினும் பெரிய பகைவரை வெல்லும் ஆற்றல்.
6. தடுத்தற்கரிய பகைவர் படையைத் தடுத்து நிறுத்தல்.
7. பொருந்தாத நிலையற்ற வாழ்வில் காட்டப் படும் வலிய ஆண்மையை வெளிப் படுத்துதல்.

8. பகைவரும் நாணுமாறு தாம் கூறியுள்ள வஞ்சினத்திற்கேற்ப உயிர்க் கொடை ஆற்றல்.
9. பகைவரை அன்பு நெறியால் வென்று சேர்தல்.

அறத்திற்குரியன :-

1. காளைமாட்டாற் சிறப்பெய்தும் உழவரும் பசுவால் சிறப்பெய்தும் ஆயரும் தம் தொழிலில் வெற்றி பெறுதல்.
2. அரசு கட்டிலை (அரியணையை)த் துறந்து செல்லுதல்.
3. எண் வகைச் சிறப்புக்களும்[1] பொருந்தி அவை உறுப்பினராய் இருத்தல்.
4. இடையறவின்றி வள்ளிய புகழை வளர்க்கும் கொடை.
5. தவறிழைத்தோரைப் பொறுக்கும் காவற் சிறப்பு.
6. மெய்ப்பொருள் பற்றி ஆராயும் திறல்.
7. நூல்களில் வரையறுத்துக் கூறியுள்ளவாறு ஒழுகுதல்.
8. பிறர்க்குத் தொண்டு செய்யும் அருள் உணர்வோடு மேற்கொண்ட துறவு வாழ்க்கை.[2]
9. எவற்றினிடமும் பற்றின்றி வாழும் உள்ளத் துறவு.[3]

---

1. எண் வகைச் சிறப்புக்கள் : ஒழுக்கம், கல்வி, குடிப்பிறப்பு, வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை, அவாவின்மை, அழுக்காறுமை என்பன. இவையுடையோரே அவை யுறுப்பினராய் இருந்து அறம் கூறும் தகுதி யுடையார் ஆவார்.
2. இல்லறத்தை விட்டுப் பொது நலப் பணியில் ஈடுபடும் துறவு.
3. இல்லறத்திலிருந்து கொண்டே பற்றின்றி பிறர்க்குப் பயன்பட வாழ்தல்.

இவைகளால் பண்டைத் தமிழரின் நாகரிகச் சிறப்பும் பண்பாட்டு உயர்வும் தெற்றெனப் புலனுகின்றன. மறத்திலும் அறத்திலும் உயர்ந்த தமிழர் வாழ்வியலை உலகத்தார் அறிந்திலரே. உலக மன்றில் தொல்காப்பியம் தன் பொருள் நலம் குன்ருது அரியணை அமருங் காலத்தில்தான் அறிதல் கூடும்.

காஞ்சி யென்பது உலக நிலையாமையை உணர்த்துவது. உலகில் தோன்றுவனவெல்லாம் அழியக் கூடியனவே. உலகம் பல சிறப்பியல்புகளைப் பெற்றுள்ளது. உலகம் சிறப்புற அறிவாற் சிறந்த சான்ருேர் பலவற்றை ஆக்கிக் கொண்டேயுள்ளனர். புதியன புதியன கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. என்ன புதியன தோன்றினுலும் உலக அழிவைத் தடுக்கும் ஆற்றல் பெற்றில. மனிதன் நூற்றிருபது ஆண்டுகட்குமேல் வாழ்ந்தானில்லை. இன்று தோன்றிவரும் அறிவியல் முன்னேற்றத்தால் மனிதன் சாவா நிலையை அடைவான் என்று எண்ணலாம். புகழுடம்பால் சாவா நிலையை அடையலாமேயன்றிப் பூதங்களால் ஆன இவ்வுடம்பு பல நூறு ஆண்டுகள் நிலைத்திருக்க முடியாது. இவ்வுண்மையை அறியாததனுலும் அறிந்தும் மறந்ததனுலும் உலகில் நிகழ்ந்த கொடுமைகள் பல. 'இளமையும் நில்லாது; யாக்கையும் நில்லாது; வான் பெருஞ் செல்வமும் நில்லாது' என்ற உண்மைகளை மனிதன் அறியத் தொடங்கும் நாளே அவன் உண்மையான அறிவைப் பெறும் நாளாகும். இவ்வுண்மையைத் தன் முதுமையில்தான் தெள்ளத் தெளிய அறிய முடிகின்றது. ஒவ்வொரு இனமும் பலவகையாலும் முதிர்ச்சியுற்ற நிலையில்தான் இவ்வுண்மையை அறிய முடியும். தமிழினம் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே

இவ்வுண்மையை உணர்ந்துவிட்டது. இவ்வுண்மையை அறிந்ததன் பயனாய் ஆன்று அவிந்து அடங்கி வாழத் தலைப்பட்டுவிட்டது.

நிலையாமை உணர்ச்சி நாளும் ஆற்றும் முயற்சிக்குத் தடையாக இராதோ எனின்; இராதவாறு அறிவு நலம் பெறுதல் வேண்டும். என்றும் நிலைத்திருப்போம் என்று எண்ணி ஏமாற்றமுறுவதைவிட நாம் என்றாவது இறப்போம் என்று அறிந்திருப்பது நன்மையை விளைக்கக் கூடியதே.

பொருள் மிகுதியாலும், படைப் பெருக்காலும், உடல் வலிமையாலும், சிறந்திருப்போர் நிலையாமை அறிவைப் பெற்றால் அன்றி அறநெறியில் செல்லார். மக்களை அறநெறிப்படுத்தி நல்வாழ்வு வாழச் செய்ய இந்நிலையாமை உணர்வு இன்றியமையாததே.

நிலையாமை உணர்வுபற்றிப் பாடும் முறைமையைக் 'காஞ்சி' யென்று அழைத்தனர் ஆசிரியர். புறத்திணையில் காஞ்சி என்பது அகத்திணையின் பெருந்திணைக்குப் புறனாகும் என்றனர். பெருந்திணைக்கு நிலவரையறை யில்லை; பொழுது வரையறை யில்லை. காஞ்சிக்கும் இவ்விரண்டு வரையறையுமில்லை. பெருந்திணையில் காதல் வரையறை கடந்து மிஞ்சிச் செல்லும். காஞ்சியில் மறம் வரையறை கடந்து வீறுபெறும்.

இக்காஞ்சித் திணை இருபது துறைகளையுடையது. முதலில் கூறப்படும் பத்தும் பெருமை விளைப்பன. பின்னர்க் கூறப்படும் பத்தும் துன்ப நிலையைத் தோற்றுவிப்பன. நாவலர் பாரதியார் அவர்கள் விழுப்ப வகை பத்தென்றும் விழும வகை பத்தென்றும் வகைப்படுத்தியுள்ளார்கள். இத்துறைகளால் பண்டைத் தமிழ் மக்களுடைய

வீரம் இன்னவாறு இருந்ததென அறியலாம்; வாழ்வியல் செயல் முறைகளும் வெளிப்படுகின்றன.

மனைவி கணவனொடு இறத்தல், காதலியை இழந்த காதலன் மீண்டும் மணம் செய்யாது தனித்து வாழ்தல், காதலனை இழந்த மனைவி நோன்பு மேற்கொண்டு வாழ்தல், கணவனோடு ஈம நெருப்பில் மனைவி உயிர்விடுதல், தன் மகன் படையழிந்து மாறினன் என்று கேள்வியுற்ற தாய் தன்னுயிரைவிட முனைதல் போன்ற செய்திகளை அறிவிக்கின்றன இக்காஞ்சியில் வரும் துறைகள்.

இனி, இறுதியாக வரும் திணை பாடாண் திணை எனப்படும். பாடாண் திணை என்பதற்குப் பாடப் படும் ஆண்மகனது ஒழுகலாறு என்பர். சிறந்தோ ரைப் பாடுதல் புலவர் இயல்பு. பாடப்படுவோர் விரும்பினும் விரும்பாவிடினும் புலவர் பாடுவார். ஆதலின் ஒருமருங்கு பற்றிய காதலாம் கைக்கிளைக் குப் புறனாயிற்று. முன்பு கூறப்பட்ட ஆறு திணை களையும் அடிப்படையாகக் கொண்டும் குற்றமற்ற காதல் பற்றியும் பாடப்படும். இஃது எட்டு வகைப் படும் என்பர்.

எட்டு வகையாவன நச்சினார்க்கினியர் கூற்றுப் படி பின் வருமாறு: இப்பாடாண் திணைக்கு ஓதுகின்ற பொருட்பகுதி பலவும் கூட்டி ஒன்றும், இரு வகை வெட்சியும், பொதுவியலும், வஞ்சியும், உழிஞையும், தும்பையும், வாகையும் காஞ்சியுமாகிய பொருள் ஏழுமாகிய எட்டுமாம்.

நாவலர் பாரதியார் கூற்றுப்படி "கொடுப்போ ரேத்தி" என்னும் நூற்பாவால் குறிக்கப்பட்ட எட்டுமாகும்.

தேவர்களைப் பற்றிப் பாடும் அறுமுறைவாழ்த்து அல்லது போர் வீரர்களைப் பற்றிப் பாடும் அறுமுறை வாழ்த்து, விரும்பிய பொருளைக் கடவுள்பால் வேண்டிக் கூறும் பகுதி, தலைவனை வாழ்த்தல், புகழ்தல் பொருந்திய பகுதி, அறம் பொருள் இன்பம் சார்பாக முன்னோர் கருத்துரைக்கும் பகுதி முதலி யனவும் பிறவும் எல்லாம் பாடாண் பகுதிகளே. இவைகளில் சில இசைப்பாக்களாலும் இயற்றப் படும். குழவியிடத்து அன்பு தோன்றப் பாடும் பிள்ளைத் தமிழ் வகைகளும், தலைவன் ஊர் பிறப்பு முதலிய கூறிப் புகழும் உலாவகைகளும், இத் திணையுள் அடங்கும்.

செய்யுள் வழக்கொடும் உலக வழக்கொடும் பொருந்தும் முறைகள் எல்லாம் கொள்ளப்படும்.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

எனும் இந்நூற்பாவுக்கு உரைகள் பலவாகக் கூறப்படுகின்றன. கொடி நிலையை ஞாயிறு என்றும், கந்தழியைப் பற்றுக் கோடின்றி நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்றும், வள்ளியைத் திங்கள் என்றும், கடவுள் வாழ்த்தை அமரர் வாழ்த்து என்றும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

நாவலர் பாரதியார் அவர்கள் 'கந்தழி' என்னு மிடத்துக் காந்தள் என்றே இருக்க வேண்டுமென்று கூறி, 'கொடிநிலை' என்பதற்குக் கொடி பிடித்துச் செல்லும் நிலை என்றும், காந்தள் என்பதற்கு வெட்சி வகை முருகக் கடவுள் வாழ்த்து என்றும், வள்ளி என்பதற்குப் பெண்டிர் முருகக் கடவுளைப் பாடும் வள்ளியென்னும் வாழ்த்து என்றும் கூறிப் போர்த்

தொடக்கமாம் வசையற்ற வெட்சியின் மூன்று துறை களும் கடவுளைப் பரவுதலுடன் பொருந்தி வரும் என்றனர். இருவர் உரைகளும் ஆராயத்தக்கன. ஆசிரியர் கருத்து என்னவென விளங்கவில்லை.

"கொற்ற வள்ளை ஓரிடத் தான" என்பதற்கு நச்சினார்க்கினியர் வெட்சி முதல் வஞ்சியீருகிய பாடாண் கொற்ற வள்ளை தேவர் பகுதிக் கண்ணது அன்றி, மக்கட் பகுதிக்கே வரும் என்று கூறுகின்றார் நாவலர் பாரதியார் அவர்கள். வஞ்சி வகைக் கொற்ற வள்ளையும் ஒரோவழிக் கடவுள் வாழ்த்தொடு வரும் என்று கூறுகின்றார். இருவர் கருத்துக்களும் ஆராயற்பாலனவே.

புலவர்கள் எவ்வெவ்வாறு பாடல் வேண்டுமென்ப தற்குப் பல துறைகள் வகுத்துக் கூறுகின்றார். அவற் றுள் ஒன்று "கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தல்" என்பதாகும். கொடுப்போரைப் புகழ்ந்து கொடாதவரைப் பழிக்கலாமா? இது புல வர் பெருமக்களுக்குப் பொருந்துமா என்பர் சிலர்.

நல்லோரைப் புகழ்தல் வேண்டும்; அல்லோரைத் திருத்துதல் வேண்டும். திருத்துதல் என்பது அவர் குற்றம் எடுத்துரைத்துப் பழித்தலே. செல்வத்தின் பயன் யாது? ஈதலே யன்றோ? செல்வர்கள் தம்மைச் செல்வத்தின் காப்பாளர்களாகக் கருதி ஊருணி போன்று உலகுக்குப் பயன்படுதல் வேண்டும். பயன்படாத செல்வர்கள் உலகுக்குக் கேடர்களாக அமைந்து விடுகின்றார்கள். ஆகவே அவர்களை இடித்துரைத்துத்தானே திருத்துதல் வேண்டும். இன்று செய்தி இதழ்கள் அத்தொண் டைச் செய்து வருகின்றன.

புலவர்கள் தாம் அக்காலத்து அரசர்தம் அறிவுரையாளர்கள்; மக்களை நல்வழிப்படுத்தும் விதிகள் பல அமைக்கும் சட்ட மன்றம் போன்றவர்கள். அரசரேயாயினும் யாவரே யாயினும் நெறிதவறிச் சென்றால் அதனை எடுத்துக்காட்டி நேர்வழி நடக்க அறிவுரை கூறுவார்கள். இக்காலத்து மக்களாட்சி அரசு மக்களுக்குக் கேடு பயக்கும் நெறி முறைகளை மேற்கொள்ளத் தொடங்கினால் எதிர்க் கட்சிகள் எதிர்த்து நின்று அரசின் குற்றங்களை எடுத்து இயம்புகின்றன. அக்காலத்தில் கட்சி முறையில் ஆட்சி இல்லை. ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் இல்லை. ஆகவே புலவர்களே அப்பணியையும் ஆற்றி வந்தனர்.

''செவியறி வுறூஉ'' ''வாயுறை வாழ்த்து'' என்பன புலவர்கள் பிறரைத் திருத்துவதற்காகப் பாடுவனவே.

மேனாட்டில் அரசியலறிஞர்கள் பலர்-உரூசோ, காரல் மார்க்சு, பெயின், மெக்காலே போன்றவர்கள் — அவர்தம் காலத்து அரசைத் திருத்துவதற்காக எழுதப்பட்ட கட்டுரைகள், நூல்கள், இன்று பேரிலக்கியங்களாய்த் திகழ்கின்றன. அவ்வாறே, தமிழ் நாட்டிலும் அரசைத் திருத்த — நல்வழிப்படுத்த — செங்கோலாட்சி புரியக் கூறிய கருத்து நிறைந்த பாடல்கள் பேரிலக்கியப் பகுப்பினுள் அடங்குவனவாய் உள்ளன. புலவர்கள் பொருள் கருதிப் புகழ்ந்து பொய்வாழ்வு நடாத்தினர் என்று கருதுதல் கொடிது. இடித்துரைத்து மக்களுக்கு ஏமம் நாடும் காவலர்களாய் இலங்கினர், அவர்கள் பாடல்கள் இலக்கண ஆசிரியர்களால் துறைகள் வகுக்கப் பெற்றுப் பின்வரும் புலவர்கட்கு முன் மாதிரியாய்த் திகழும் நிலை பெற்றன. அவ்வாறு தோன்றிய இலக்கியங்களைக் கொண்டுதானே ஆசிரியர் தொல்

காப்பியர் திணையும் துறையும் வகுத்துச் செல்கின்றார். ஆகவே பாடாண்திணை என்பது வெறும் புகழ்ச்சிக்குரிய திணை என்று கருதாது நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் கருத்துக்கள் பல கொண்ட நல்லிலக்கியம் தோன்றுவதற்குரிய திணை என்று கருதுதல் வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் அக்காலத்துக்குரியன மட்டும் கூறிஞரிலர்; அரசியல் தலைவர்கள் போன்று. முக்காலத்துக்குரியனவும் கூறினர் அரசியல் அறிஞராய்.

"ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றெடு கண்ணிய வருமே"

(உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியின் அடிப்படையில் மூன்று காலத்துக்குரியன கருதிப் பாடப்படும்.)

# 6. மெய்ப்பாட்டு இயல்

"மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப் படுதல்." இவ்வாறு பேராசிரியர் கூறியுள்ளார். உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கேற்ப உடலில் தோன்றும் வேறுபாடு என்பதுதான் "மெய்ப்பாடு" என்பதன் பொருள். புளியை உண்டால் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கேற்ப முகம் சுளிக்கின்றது. எதிர் பாராத விதமாக அருகில் அரவம் இருக்கக் கண் டால் அஞ்சுகின்றோம். அவ்வச்சத்தால் ஏற்படும் உணர்ச்சிக்கேற்ப உடல் நடுங்குகின்றது. இலக்கியத் தைப் படிக்கும்போதும் இலக்கியத்தின் இயல்புக் கேற்ப நம் உள்ளத்தில் உணர்ச்சி உண்டாகின்றது. அவ்வுணர்ச்சிக்கேற்ப நம் முகத்தில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. கவிச்சுவையும் இலக்கியச் சுவை யும் நம் உள்ளத்தில் உணர்ச்சியைத் தோற்றுவிக்கின் றன. இயல், இசை, நாடகம் எனும் மூன்றில் நாட கத்தில் நடிப்போரும் உணர்ச்சியை வெளிப்படுத்து வார். காண்போரும் உணர்ச்சிக்கு ஆளாவார். இசைத் தமிழ் பாடுவோரும் உணர்ச்சி வேறுபாட்டு டன் பாடுவார். கேட்போரும் உணர்ச்சி வயப்படுவர். இயல் தமிழ் ஒன்றே தாமாகப் படித்தும் உணர்ச்சி பெறத் துணையாவது. ஆதலின் மெய்ப்பாட்டா

ராய்ச்சி இயற்றமிழ் இலக்கியங்களோடு தொடர்புடையதேயாகும்.

இலக்கியங்களில் கூறப்படும் சுவை எட்டாகும். அவையாவன:- நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

இவ்வெட்டையும் முப்பத்திரண்டாகவும், பதினாறாகவும் காண்பர்.

சுவைக்கப்படும் பொருள், அதனை நுகர்ந்த பொறியுணர்வு, அது மனத்துட்பட்டவழி உள்ளத்து நிகழும் குறிப்பு, குறிப்பு உண்டானவுடன் கண்ணீர் தோன்றல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் போன்ற உடம்பின்கண் வரும் வேறுபாடு என நான்கு ஒவ்வொரு சுவைக்கும் உண்டு. ஆகவே எட்டுச் சுவைக்கும் முப்பத்திரண்டாகும். நகைச்சுவைக்குப் பொருள்கள் ஆரியர் கூறும் தமிழும், குருடரும் முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன என்பர் பேராசிரியர். வேற்று நாட்டார் தமிழ் பேசினால் தமிழர்க்கு நகைச்சுவை உண்டாக்குவதுபோல், தமிழர் வேற்று மொழியைப் பேசினால் அம்மொழியாளர்க்கு நகைச்சுவையை உண்டாக்கலாம். ஆனால் தமிழர் தாம் கற்கும் வேற்று மொழியை அம்மொழிக்குரியவரை விடத் திருத்தமாகப் பேசும் கருத்தும் ஆற்றலும் பெற்றவர் என்பது உலகறிந்த ஒன்று அன்றோ. ஆதலின் தமிழர் கூறும் வேற்று மொழியை நகைக்குரியதாகக் கூறிலர் போலும்.

இங்குக் கூறப்பட்ட முப்பத்திரண்டும் பதினாறாகவும் ஆகும். சுவைப் பொருளும் சுவையறிவும் பொறியும், வேறுவேறாக நின்றால் சுவை என்பது ஒன்றுதோன்றாதே. இரண்டும் கூடியவழியே சுவை

தோன்றலின் இரண்டும் ஒன்றாய்ப் பதினாறு ஆகும்.

உள்ளக் குறிப்பும் உடலில் தோன்றும் வேறுபாடும் கூடியவழியே மெய்ப்பாட்டை அறிகின்றோம். இவை இரண்டும் ஒன்றாய் எட்டாய் அடங்கும். இரண்டு வகை எட்டும் பதினாறாகிவிடுகின்றன. இவ்வாறெல்லாம் வகைப்படுத்திக் காண்பது நாடக நூலார்க்குரியதாம்.

இனி ஆசிரியர் கூறும் எட்டு மெய்ப்பாடாவன:

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று**
**அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப,"**

என்னும் நூற்பாவால் அறியலாம். இவ்வெட்டும் ஒவ்வொன்றும் நான்கு வகைப்படும்.

1. நகை: எள்ளல், இளமை, பேதைமை, மடன். இந்நான்கின் வழியே நகை தோன்றும்.
2. அழுகை: இளிவு, இழவு, அசைவு, வறுமை. இவை நான்கின் வழியே அழுகை தோன்றும்.
3. இளிவரல்: மூப்பு, பிணி, வருத்தம், மென்மை. இவை நான்கின்வழியே இளிவரல் தோன்றும்.
4. மருட்கை: புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம். இவை நான்கின் வழியே மருட்கை தோன்றும். 'மருட்கை' என்றால் வியப்பு.
5. அச்சம்: அணங்கு, விலங்கு, கள்வர், இறை. இவை நான்கின்வழியே அச்சம் தோன்றும்.
6. பெருமிதம்: கல்வி, தறுகண், இசைமை, கொடை. இவை நான்கின்வழியே பெருமிதம் தோன்றும். பெருமிதம் என்பதற்கு வீரம் என்று பொருள் கூறியுள்ளனர் பேராசிரியர்.

7. வெகுளி: உறுப்பறை, குடிகோள், அலை, கொலை. இவை நான்கின் வழியே வெகுளி தோன்றும். உறுப்பு அறை-கை குறைத்தலும் கால் குறைத்தலும். குடிகோள்-மனைவியும் சுற்றமும் குடிப் பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல்.

8. உவகை: செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு-இவை நான்கின் வழியே உவகை தோன்றும். உவகை: மகிழ்ச்சி, செல்வம்: செல்வ நுகர்ச்சி, புலன்: கல்விப் பயனாகிய அறிவுடைமை.

இவை முப்பத்திரண்டேயன்றி இன்னும் முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் உள. அவை வருமாறு: உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கம் என்பனவாம். *இவ்வறு பத்து நான்கு மெய்ப்பாடுகளும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக நிகழக் கூடியன.

அகத்திற்குரிய மெய்ப்பாடுகளும் உள. அவை எழுபதாக விரியும். அவற்றுள் களவுக்குரியவையும், கற்புக்குரியவையும், கூட்டத்தின் பின் நிகழக்கூடியனவும், தலைவனுக்கும் தலைவிக்கும் உரிய ஒப்பின் வகையால் தோன்றுவனவும் அடங்கியுள்ளன. இவைகள் காதல் பற்றி நூல் எழுதுவோரும், காதலர்களாக நடிப்போரும் நன்கு அறிந்துகொள்ளத் தக்

---

* இவைகளுக்குரிய பொருள் விளக்கங்கள் பேராசிரியரால் தரப்பட்டுள்ளன [பேராசிரியர் உரை — 808 — 811] ஆண்டுப் படித்து இன்புறுக.

கள. திரைக் காட்சி இயக்குநர்கள் இவைகளைக் கற்றுப் படங்களை இயக்குவரேல் அப்படங்கள் உண்மையொடு பொருந்தியனவாய் யாவராலும் பாராட்டப்படும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

இலக்கிய மாந்தர்கள் உள்ள உணர்ச்சியால் உந்தப்படுகின்ற காலை எவ்வாறு சொல்லோவியப் படுத்துதல் வேண்டும் என்பதற்கு மெய்ப்பாட்டியல் மிகவும் துணைபுரியும். இவ்வகையான ஆராய்ச்சி வேறு எம்மொழிகளிலும் இல்லை என்றே கூறலாம். வடமொழியில் நடனம் பற்றிய மெய்ப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. அவையும் தமிழ் நூல்களைப் பின்பற்றியனவேயாம். இலக்கியப் படைப்புக்கும் இலக்கிய ஆராய்ச்சிக்கும் உரியனவாகக் கூறப்பட்டுள்ள மெய்ப்பாடுகள் பற்றிய இவ்வியல் முழுதும் கிடைக்கப் பெற்றிலதோ என்று ஐயுற வேண்டியுள்ளது. ஒவ்வொரு இயலிலும் சொல்ல எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றிய விளக்கம் கூறிய பின்னர், வகை கூறத் தொடங்குவது ஆசிரியர் தனிச் சிறப்பு. இவ்வியலில் அவ்வாறு கூறப்பட்ட நூற்பா காணப்பெறவில்லை. கரையானுக்கு இரையாகி விட்டது போலும்.

உண்மைக் காதலுக்குரிய ஒப்புமைப் பகுதிகளும் உண்மைக் காதலுக்கு வேண்டாத பகுதிகளும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. காதல் மணம்புரிய விரும்புவோர் உளத்தில் கொள்ள வேண்டியவை அவை.

இம்மெய்ப்பாட்டு ஆராய்ச்சியானது கண்டும் கேட்டும் அறியும் உணர்வுடைய மாந்தர்க்கே முற்றிலும் உரியதாகும். உணர்வுடை மாந்தராய் தமிழிலக்கியச் சுவையை நுகர்ந்து இன்புறல் தமிழ் மாந்தர் கடனாகும்.

# 7. உவம இயல்

தம் உள்ளத்தெழுந்த கருத்துக்களைச் சிதைவின்றி உள்ளத்து எழுந்தவாறே பிறர்க்கு அறிவிக்கும் ஆற்றல் உள்ளவரே சிறந்த புலவராவார். அவ்வாறு அறிவிப்பதற்கு உறுதுணையாய் நிற்பனவற்றுள் அணியும் ஒன்ருகும். அணிகளுள் தலைமையானது உவமையாகும். ஒன்றை அறியாதார்க்கு அதனை அறிவிக்க விரும்பும் புலவர், அறிந்த ஒன்ரேடு ஒப்பிட்டு அறிவிக்க முயல்கின்ருர். ஒன்றனேடு ஒன்றை ஒப்பிட்டுக் காணுதலே உவமையணியாகும். இவ்வுவமை அணிகளிலிருந்தே பிற அணிகள் எல்லாம் தோன்றியுள்ளன. ஆதலின் ஆசிரியர் தொல்காப்பியர் அணிகளின் அன்னை எனப்படும் உவமை பற்றி விளக்குகின்ருர்.

ஒன்றனைப் பிறிதொடு ஒப்பிட்டுக் கூறுங்கால் வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் ஒப்பிடப்படும். ஆதலின் உவமை நான்கு வகைப்படும்.

'புலியன்ன வீரன்' என்று கூறுங்கால் பாய்வதில் வீரன் புலியைப்போல் பாய்வான் என்பதாம். இது வினை உவமமாகும்.

'மாரியன்ன பாரி' என்னுங்கால் பாரி மழையைப் போல் பயன் கருதாது கொடுக்கக் கூடியவன். அடை

யப்பெறும் பயனும் கொடையைக் கருதுமிடத்து பாரி மாரிக்கு ஒப்பானவன் என்று கூறுவதனால் இது பயன் உவமமாகும்.

'துடி இடை' என்னுங்கால் துடி (உடுக்கை) இருபுறமும் உயர்ந்து நடுவில் சுருங்கி இருப்பது போல் மகளிர் இடையும் சுற்றளவால் குறுகி இருப்பதை அறிவிப்பதனால் இது மெய் உவமம்.

'பொன் அன்ன மேனி' என்னுங்கால் உடலின் தோற்றம் (மேனி) பொன்னிறத்தை ஒத்திருக்கின்றது என்று அறிவிக்கின்றது. ஆகவே இது உரு உவமம். மெய் என்பது பருப்பொருளாம் வடிவம் ஆகும். உரு என்பது அருவப் பொருளாம் நிறம், அழகு முதலியனவற்றைச் சுட்டுவது.

பொருளை ஒப்பிட்டுக் கூறுங்கால் கூறப்பட்ட நான்கனுள், ஒன்றுபற்றியே ஒப்பிட்டுக் கூறவேண்டு மென்பதின்று. இரண்டும் மூன்றும் பற்றியும் ஒப்பிடலாம்.

"காந்தள் அணிமலர் நறுந்தாது ஊதும்தும்பி கையாடு வட்டின் தோன்றும்" என்று கூறுங்கால் தும்பி வட்டிலோடு ஒப்பிடப்பட்டுள்ளது. தும்பிக்கும் வட்டிலுக்கும் ஒற்றுமை தொழில், வடிவம், வண்ணம் எனும் மூன்றினும் அமைகின்றது. தும்பி வட்டிலைப்போல் உள்ளது என்று கூறுங்கால் வினை, மெய், உரு மூன்றும் குறிக்கப்படுகின்றன.

உவமை கூறுங்கால் உவமையாகவரும் பொருள் உவமிக்கப்படும் பொருளைவிட உயர்ந்ததாக இருத்தல் வேண்டும்.

ஒப்பிட்டுக் கூறுவதற்குரிய காரணங்கள் என்ன? சிறப்பு, நலன், காதல், வலி என்பன பற்றியே ஒப்

பிட்டுக் கூறல் இயலும். ஆதலின் இவை நான்கையும் உவமை தோன்றுதற்குரிய நிலைக்களன் என்றனர். இழிபு காரணமாகவும் ஒப்புமை தோன்றலாம்.

பொருள்களை முதல் என்றும் சினை என்றும் பாகு படுத்துவதுண்டு. உவமிக்குங்கால் முதற் பொருளோடு முதற்பொருளும் சினைப் பொருளோடு சினைப் பொருளும் உவமிக்கப்படல் வேண்டும். இருந்தாலும் காலப் போக்கில் முதலுக்குச் சினையும், சினைக்கு முதலும் உவமைப் பொருளாக வந்துள்ளன. ஆகவே எதனோடு எதனை உவமித்தாலும் மரபு கெடாமல் உவமித்தல் வேண்டும்.

உவமை கூறுங்கால் இரண்டுக்கும் [ உவமைக்கும் பொருளுக்கும்] உள்ள பொதுப் பண்பை எடுத்துக் கூறியும் உவமிக்கலாம்; எடுத்துக் கூறாதும் உவமிக்கலாம். பவளம் போன்ற சிவந்த வாய் என்று கூறும்போது பவளத்திற்கும் வாய்க்கும் உள்ள பொதுப்பண்பாம் சிவப்பு நிறம் எடுத்துக் கூறப்படுகின்றது. அவ்வாறு இன்றி பவளவாய் என்றும் கூறலாம். ஒப்புமை என்ன என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம். இது சுட்டிக்கூறா உவமம் எனப்படும். உவமை கூறுங்கால் உலகத்தார் உள்ளங் கொண்டு மகிழுமாறு கூறுதல் வேண்டும். ஒப்புமை தானே என்று எதற்கும் எதனையும் கூறிவிடுதல் கூடாது. மயில் தோகை போலும் கூந்தல் என்பது தான் பொருந்துமேயன்றி காக்கைச் சிறகன்ன கருமயிர் என்பது பொருந்தாது. ஒற்றுமைக்குப் பாலும் நீரும்போல் என்பதுதான் பொருந்துமேயன்றி 'காஃபியும் டிக்காசனும்' என்பது பொருந்தாது. இருளன்ன கருங்கூந்தல் என்பது பொருந்துமேயன்றி தார் அன்ன கூந்தல் என்பது பொருந்தாது.

உவமையாக வரும் பொருள்கள் உவமேயமாக வும் உவமேயமாக வரும் பொருள்கள் உவமையாக வும் வருதல்உண்டு. தாமரை போன்ற முகம் என்பது போல் முகமன்ன தாமரை என்றும் கூறுவதனுல் குற்றமின்று. முகத்தைச் சிறப்பிக்க வேண்டிய இடத்தில் முகம் பொருளாகவும் தாமரையைச் சிறப் பிக்க வேண்டிய இடத்தில் தாமரை பொருளாகவும் வரும்.

உவமைகள் பொருள்களை (உவமேயங்கள்) விட மிகமிகப் பெரியனவாகவும் மிகமிகச் சிறியனவாகவும் அமைதலும் உண்டு. அவ்வாறு அமையுங்கால் வெளிப்படுத்தக் கருதிய சிறப்பினின்றும் நீங்காதன வாய் அமைதல் வேண்டும்.

"மாக்கடல் நடுவண் எண்ணுட் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்" *

கூந்தலுக்கு அருகே விளங்கும் நெற்றிக்கு உவமை யாகக் கடலும் அதில் தோன்றிய எட்டாம் நாள் தேய் பிறையும் கூறப்பட்டுள்ளன. கடல் போலும் கூந்தல் என்பதும் திங்கள் போலும் நுதல் என்பதும், மிகப் பெரியவற்றோடு உவமிக்கப்பட்டனவே. ஆயினும் அவ்வாறு உவமிப்பது வழக்காதலின் சிறப்பி னின்றும் நீங்காவாம்.

"சோறு வாக்கிய கொழுங்கஞ்சி
ஆறு போலப் பரந்தொழுகி
ஏறு பொரச் சேறாகித்
தேரோடத் துகள் கெழுமி"

என்னும் 'பட்டினப் பாலை' அடிகளில் சோறு வடித்த கஞ்சி ஆறு போலப் பரந்து ஓடிற்று என்று

---

* குறுந்தொகைப் பாடல்—129

கூறுவது உண்மை நிலையை மிகுத்துச் சொல்லப் பட்டதேயாயினும் இலக்கிய வழக்குக்குப் பொருந் துவதே. இவ்வாறு கூறும் வழக்கு மிகுந்து பிற் காலத்தார் கூறிய உயர்வு நவிற்சி தோன்றிக் கற்பனை எல்லையைக் கடந்து விட்டது.

உவமைகளைக் கூறுங்கால் உவமையையும் பொருளையும் பொருத்துவதற்கு இடையில் ஒரு சொல் வேண்டும். அச்சொல்லுக்கு உவம உருபு என்று பெயர். அவ்வாறு வரும் சொற்களில் முப்பத் தாறினைத் திரட்டிக் கூறிப் பிறவும் வரும் என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர். அன்ன, போல, ஒப்ப, அனைய என்பன பெருவழக்காக வரக்கூடியன. இவைகளுள், இன்னின்ன வினையுவமத்திற்கும் இன்னின்ன பயன் உவமத்தற்கும் வரும் என்று வகுத்துரைப்பது அக்காலத்தில் இவைகளைப் பயன் படுத்துவதில் கொண்டுள்ள ஒழுங்கு முறையை அறிவிப்பதாகும்.

உவம உருபுகள் இன்றியும் வரும். அவ்வாறு வந்தால் உவமத்தொகை எனப்படும். 'பவளத்தன்ன வாய்' என்பது உவமவிரி; 'பவள வாய்' என்பது உவமத் தொகை.

உவமையும் பொருளும் அடையடுத்து வருதலும் உண்டு. பொன்னை உரசிப்பார்க்கும் கட்டளைக் கல் போன்ற புன்காய்ப்பொடி பொருந்திய மார்பு. இங்கு கட்டளைக் கல்லும் மார்பும் அடை யடுத்து வந்துள்ளன. இவ்வுவமை அடிப்படையில் உள்ளுறை உவமம் தோன்றும். வெளிப்படையாகக் கூறப்பட்டதிலிருந்து மறைவாகத் தோன்றும் பொருளை அறிதல் வேண்டும்.

" கரும்பு நடுபாத்தி கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர "

எனும் ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகளில் கரும்பு நடுவதற்கு அமைக்கப்பட்ட பாத்தியுள் தானுக வளர்ந்த தாமரை, வண்டுகளின் பசியை நீக்குகின்றது என்று கூறப்பட்டுள்ளது. தெரிவிக்க விரும்பிய பொருள் இதுவன்று.

வீடு காதற் பரத்தைக்கும் இல் பரத்தைக்கும் அமைக்கப்பட்டது. அதில் தலைவி வந்து இருந்து கொண்டு இல்லறக் கடன்பூண்டு ஒழுகுகின்ருள் என்பதே தெரிவிக்க விரும்பிய பொருள். தனக்கு உரிமை இல்லை யென்றும் பரத்தைக்கே இவ்வீட்டில் உரிமை இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டித் தலைவனைத் திருத்த விரும்பியவள் அதனை வெளிப்படையாகக் கூறுதல் நன்றன்று என்று இவ்வாறு மறைத்துக் கூறுகின்ருள். கூறப்பட்டுள்ள பொருளிலிருந்து கருத்திஞல் கொள்ளவேண்டியது. இவ்வாறு வருவதே " உள்ளுறை உவமம்". இஃது உவமப்போலி எனவும் அழைக்கப்படும். இது ஐந்து வகைப்படும். வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்பனவற்றின் வழியே தோன்றும் ஐந்தும் அவ்வகையாகும்.

இவ்வுள்ளுறை உவமம் செய்யுளின்பத்தைப் பெருக்குவதாகும்.

இதனைக் கூறுவதற்குப் பல விதி முறைகள் உள. தலைவன், தோழி, செவிலி முதலியோர் கூற்ருக அமையுங்கால் சில வரையறைக்கு உட்படும்.

உவமைகளில் தடுதாறுவமம், நிரல்நிறை போன்ற உவமைகள் சிறப்புடையன. பிறவெல்லாம் பொருள் கோளில் அடங்கும்; அணியெனப்படா.

பிற்காலத்தார் அவற்றையும் அணியென்று வழங்குப. இவ்வுவமைகள் புலவரின் சூழ்நிலைக்கேற்ப அமைந்து கற்போர்க்குக் கழிபேரின்பம் நல்குவதாகும்.

# 8. மரபியல்

செய்யுளுட்படும் பொருள்களையும் அவற்றை விளக்குவதற்குப் பயன்படும் உவமைகளையும் அறிந்த புலவர் சொற்களையும் அவற்றின் மரபினையும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். சொற்களுக்கும் வாழ்வு உண்டு; வளமுண்டு; தாழ்வு உண்டு; சாவு உண்டு. சொற்களின் வாழ்வும் தாழ்வும் மக்களையே சார்ந்துள்ளன. அவைகளைப் படைப்பவர்களும் காப்பவர்களும் அழிப்பவர்களும் மறைப்பவர்களும் வெளிப்படுத்துபவர்களும் புலவர்களே.

சொற்களைப் பயன்படுத்தி வருகின்ற வழக்கத்தால் சொற்களுக்கும் தனித் தன்மைகள் ஏற்பட்டுவிடுகின்றன. உண்டான் என்பதும் தின்றான் என்பதும் பொருளால் ஒன்றேயாயினும் சோறு உண்டான், கறி தின்றான் என்றுதான் கூற வேண்டுமேயன்றி, சோறு தின்றான் என்றும் கறி உண்டான் என்றும் சொல்லுதல் மரபு அன்று. குட்டி என்பதும் கன்று என்பதும் விலங்குகளின் இளமைப் பெயர்தாம் என்றாலும் குரங்குக் கன்று என்றும் பசுக் குட்டி என்றும் சொல்லுதல் மரபு அன்று. குரங்குக் குட்டி, பசுக் கன்று என்றுதான் சொல்லுதல் மரபு. ஆதலின் வழக்கிலும் செய்யுளி லும் சொற்களின் மரபு அறிந்து பயன்படுத்துதல் தவிர்க்க முடியாத தொன்று. தன் கருத்தைத் தான்

கருதியவாறு கேட்போரும், கற்போரும் அறிந்து கொள்ளக் கூறுகின்றவரே சிறந்த புலவராவார். இதனை நன்கு தெளிந்த ஆசிரியர் தொல்காப்பியர் சொற்களின் மரபுகளை இவ்வியலில் விளக்கியுள்ளார்.

மரபுகளை விளக்கும் இம்மரபியல் ஆசிரியர் கூறிப்போந்தவாறு நமக்குக் கிடைத்திலது என்று எண்ண வேண்டியுள்ளது. தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கட்டுக்கோப்புக்குட்படுத்திச் சொல்லும் ஆற்றல் பெற்றுள்ள ஆசிரியர் போக்குக்கேற்ப மரபியல் அமைந்திலது. முறை பிறழ்ந்து கிடக்கின்றது. ஆசிரியர் கருத்துக்குப் பொருந்தாத செய்திகள் கூறப்பட்டுள்ளன. இடைச் செருகல் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு நிற்கின்றது.

மரம் செடி கொடி முதலிய நிற்பன பற்றிய சொற்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன முதலிய இயங்குவன பற்றிய சொற்கள் யாவும் புலவர் தெரிந்திருத்தல் வேண்டும். மக்களைப் பற்றியும் அவர்களைச் சார்ந்தவற்றைப் பற்றியும் பிற இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. அங்ஙனமிருந்தும், விலங்குகளைப் பற்றியும், மரங்களைப் பற்றியும் கூறுமிடத்தில் எவ்விதத் தொடர்புமின்றி வருண வேறுபாடுகளைக் குறிக்கும் செய்திகள் கூறப்படுகின்றன. இங்ஙனம் கூறும் பதினைந்து நூற்பாக்களும் (மரபியல் 71 முதல் 85 முடிய) பின்னுள்ளோரால் இடையில் நுழைக்கப்பட்டனவே என்பதில் ஐயமே இன்று. "வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" என்ற நூற்பாவும், "வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல் என மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்ற நூற்பாவும் குன்றின் விளக்கெனத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றன.

நூல்களைப் பற்றியும் அவற்றின் வகை பற்றியும் செய்யுளியலில் ஆசிரியர் கூறுகின்றார். கூற வேண்டுவனவற்றை ஆங்கே கூறாமல் மரபியலில் கூறத் தலைப்பட்டதன் பொருத்தம் விளங்கவில்லை. உலகியல் மரபினையும் செய்யுளியல் மரபினையும் இங்கு விளக்குகின்றார் என உரையாசிரியர்கள் உள்ளதற்கு அமைதி கூறும் வகையில் உரைத்துள்ளனரேனும் நுணுகி ஆராய்வார்க்கு உண்மை வெளிப்படுதலில் தவறாது. 'சூத்திரம்' என்ற சொல்லும் 'உத்தி' என்ற சொல்லும் தாம் இடையில் புகுத்தப்பட்ட தன்மையை எளிதே புலப்படுத்துகின்றன. ஆதலின் நூறு முதல் நூற்றுப் பன்னிரண்டு முடிய உள்ள நூற்பாக்கள் ஆசிரியருடையனவல்ல என்பது அங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகின்றது.

நூற்பாவின் இறுதியில் நூலின் புறனடையாக உரைக்கப்பட்டிருப்பது ஏனைய புறனடைகளோடு ஒப்பிடுமிடத்துத்தான் பின் வந்த பேதைப் புலவன் படைப்பெனப் பேசா நிற்கின்றது.

இனி எஞ்சியுள்ள நூற்பாக்களால் அறியத் தக்கன. நிற்பன, நடப்பன, பறப்பன பற்றியும் அறிவு வளர்ச்சியால் உயிர்களின் வகை பற்றியும் ஆம். நிற்பன பற்றியும் நடப்பன பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ள அளவு பறப்பன பற்றி விரிவாக ஆராய்ந்திடக் காணோம். ஆராய்ந்த பகுதி அழிந்து விட்டது போலும்.

'மரபு' என்பது தொன்று தொட்டு வருவது. அறிவான் உயர்ந்தோரால் உண்டாக்கப்பட்டு வழங்கி வருவதாகும். மொழியை உருவாக்கு கின்றவர் புலவரும் பொதுமக்களும். பொது

மக்களுக்கும் வழிகாட்டக் கூடியவர் புலவரே. புலவர் வழக்கைத்தான் பொதுமக்கள் பின்பற்ற வேண்டுமேயன்றி, பொதுமக்கள் வழக்கைப் புலவர்கள் பின்பற்றல் ஆகாது. பிற துறைகளில் எவ்வாறு இருப்பினும் மொழித் துறையில் புலவர்க்குத்தான் முதன்மையளித்தல் வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் அதனை நன்கு வலியுறுத்தி உள்ளார்.

> "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட்டு ஆக லான,"

'நூல்' என்பது உயர்ந்த பேரறிவு உற்றோரால் எழுதப்பட வேண்டும். உலகச் சூழ்நிலையில் சிக்குண்டிருந்தாலும் புலவர் அதனில் அகப்படாமல், விடுபட்டுக் காய்தல் உவத்தலின்றி நடுநிலைக் கண்ணோட்டத்துடன் புதிய கருத்துக்கள் பொதுள திறமான புலமையின் பயனாய் நூல் எழுதுதல் வேண்டும். அந்நூல் உலகத்திற்கே முதல் நூலாக முதலில் வெளிவந்ததாக இதுவரை வெளி வராததாக உலக நூல்களில் முதன்மை பெறக் கூடியதாக விளங்குதல் வேண்டும்.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்."

இம்முதல் நூலைத் தொகுத்தும், விரித்தும், சில பகுதிகளைத் தொகுத்தும், சில பகுதிகளை விரித்தும், இரண்டும் உடன்சேரவும், மொழி பெயர்த்தும் நூலியற்றலாம் என்றார். மொழி பெயர்க்குங்கால் நாட்டின் மரபுக்கேற்பத் தழுவி இயற்றப்படல் வேண்டும். வேற்று நாட்டுக்குரிய மரபை வேற்று மொழியில் உள்ளவாறு தமிழ் நாட்டுக்குத் தமிழ் மொழியில் தருவதால் பெரும்பயன் விளையாது. தமிழ் வழக்கும் சிதைவுறும். நாட்டுக்குப் பொருந்

தாத வழக்கை நாட்டு மக்கள் வெறுப்பர். மொழி பெயர்க்கப்பட்ட நூல் எவராலும் விரும்பப்படாது. வீணே கிடந்து மறையும். ஆதலின் ஆசிரியர் தொல்காப்பியர், "மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்" என்றார். மொழி பெயர்த்து நூல் செய்தலையும் ஆசிரியர் குறிப்பிட்டதனால் "அறிவு எங்கிருப்பினும் கொள்ளுதல் வேண்டும். நம் நாட்டில் தோன்றிய அறிவுதான் நமக்கு வேண்டுமென்று இருத்தல் அறிவுடைமையாகாது" என்பதனைத் தெளிந்திட வேண்டும். பிற மொழிகளைக் கற்று அம்மொழியில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் தொண்டினையும் புலவர்களும் அரசும் மேற்கொள்ளுதல் வேண்டும். அரசு அதற்கெனத் தனித்துறை யொன்று அமைத்துப் பிற மொழிகளில் வெளிவரும் உயர்ந்த நூல்களை அவ்வப்போது தமிழில் மொழி பெயர்த்திடச் செய்தல் வேண்டும்.

நூல்களில் மரபு நிலை திரியாதவாறு சொற்களை ஆளுதல் வேண்டும். மேனாட்டு இலக்கிய ஆராய்ச்சியாளரும் இதனை வற்புறுத்துகின்றனர்.

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னானே ;
மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்"

மரபு நிலையைக் கூறப் புகுந்தவர் நடப்பன, பறப்பனவற்றின் பெயர்களை இளமைப் பெயர் என்றும், ஆண்பால் பெயர் என்றும், பெண்பால் பெயர் என்றும் வகுத்துக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் உரியவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

இளமைப் பெயர்களாவன :— பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி. பார்ப்பும் பிள்ளையும் பறப்பனவற்றினும் தவழ்வன

வற்றினும் இளமைத் தன்மையுடையனவற்றைக் குறிக்கும் என்று கூறியுள்ளார். இவை இரண்டும் இக்காலத்தில் மக்களுள் இளமைத்தன்மை உடைய குழந்தைகளைக் குறிக்கின்றன. 'பார்ப்பு' என்பதிலிருந்து தோன்றியதே 'பாப்பா' என்பது. இவை இரண்டும் 'உயர்பொருட்பேறு' என்ற பொருள் மாற்றத்துக்கு ஆளாகியுள்ளன.

மூங்கா, வெருகு, எலி, அணில் என்பனவற்றின் சிறியனவற்றைக் குட்டி என்றும் பறழ் என்றும் அழைக்கலாம்.

குருளை, பறழ், குட்டி என்பன நாய், பன்றி, முயல், நரி என்பனவற்றின் சிறியனவற்றைக் குறிக்கும். பிள்ளை என்பது நாய் ஒழிந்த பிறவற்றின் சிறியனவற்றைக் குறிக்கும். ஆனால் இக்காலத்தில் பறழ், பிள்ளை என்பன அவ்வாறு வழக்கில் இல்லை.

மறி என்பது ஆடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் என்பனவற்றின் குட்டிகளைக் குறிக்கும். மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்பன குரங்குக் குட்டியைக் குறிக்கும். இக்காலத்தில் மக்களினத்துக்கே உரிய மகவும் பிள்ளையும் குரங்குக்கு உரியனவாக இருத்தல் சிந்திக்கத்தக்கது. குரங்கிலிருந்தே மனிதன் தோன்றினான் என்ற கொள்கைக்கு அரண் செய்வதாகும்.

கன்று என்பது யானை, குதிரை, கழுதை, கடமை, எருமை, மரை, மான், ஒட்டகம், கவரி, கராம் என்பனவற்றின் குட்டிகளைக் குறிக்கும். தொல்காப்பியர் காலத்திலிருந்தே ஒட்டகம் தமிழ் நாட்டிலிருந்து வந்துளது குறிப்பிடத்தக்கது. பாலைவனக் கப்பல் எனப்படும் அது, பாலைவனம் இல்லாத் தமிழ் நாட்டில் வளர்க்கப்பட்டுள்ளது.

குழவி என்பது இன்று மக்களுக்கு உரியதாய் இருப்பினும், யானை, ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் என்பனவற்றின் குட்டிகளைக் குறித்துள்ளது.

குழவி, மகவு எனும் இரண்டே அக்காலத்தில் மக்களினக் குழந்தைகட்கு உரியனவாய் இருந்தன. பிள்ளை என்பது தற்கால வழக்கு.

> "குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
> கிழவ வல்ல மக்கட் கண்ணே"

பிள்ளை, குழவி, கன்று, போத்து என்பன நெல்லும் புல்லும் ஒழிந்த ஓரறிவு உயிர்கட்கும் உரியன.

ஆண்பாற் பெயர்களாவன :- ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் முதலியன.

களிறு என்பது யானை, பன்றி முதலியவற்றிற் குரியது.

ஒருத்தல் என்பது புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம், யானை, பன்றி, எருமை முதலியன வற்றின் ஆணைக் குறிக்கும்.

ஏறு என்பது பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை, சுறு என்பனவற்றின் ஆணுக்குரியது.

போத்து என்பது பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய் என்பனவற்றிற்கும், நீர்வாழ் உயிர்கட்கும் மயிலுக்கும் எழாலுக்கும் உரியது.

இரலை, கலை என்பன புல்வாய்க்கு உரிய. கலை என்னும் சொல் மானிற்கும் முசுவிற்கும் உரியதே.

போத்தை, தகர், உதள், அப்பர் என்பன ஆட்டிற் குரிய ஆண்பாற் பெயர்கள்.

**சேவல்** என்பது மயில் ஒழிந்த பறவைகளின் ஆண் பாலைக் குறிக்கும்.

**ஏறு** என்பது ஆற்றலால் சிறந்த ஆண்பாலுக் கெல்லாம் உரியதாம்.

**பெண்பாற் பெயர்களாவன** :— பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி முதலியன.

**பிடி** என்பது பெண்யானையைக் குறிக்கும்.

**பெட்டை** என்பது ஒட்டகம், குதிரை, கழுதை, மரை என்பனவற்றின் பெண்ணைக் குறிக்கும். பறவை களிலும் 'பெட்டை' என்ற சொல்லுக் குரியன உள.

பேடை, பெடை என்பனவும் பெட்டை போன்றனவே. மூன்று சொற்களும் ஒரே பொருளன.

**அளகு** என்பது கோழி, கூகை, மயில் என்பன வற்றிற்குரியது.

**பிணை** என்பது புல்வாய், நவ்வி, உழை, கவரி என் பனவற்றின் பெண்பால் பெயர்.

**பிணவு** என்பது பன்றி, புல்வாய், நாய் என மூன்றிற்குரியது.

**பிணவல்** என்பது மேற்கூறிய மூன்றிற்கும் உரியது.

**ஆ** என்பது பெற்றம், எருமை, மரை என்பன வற்றின் பெண்பால் பெயர். ஆனால் இக்காலத்தில் 'பசு' என்பதையே குறிக்கின்றது. இது **பொருட் சுருங்குதல்** என்னும் நியதிக்கு உட்பட்டுவிட்டது.

பெண், பிணை என்ற இரண்டும் மக்களின் பெண் பாலைக் குறிக்கும். **நாகு** என்பது எருமை, மரை, பெற்றம் என்பனவற்றிற்கு உரியது. நீர் வாழ்வன

வற்றுள் நந்துக்கும் உரியது. மூடும் கடமையும் ஆட்டுக்கே உரிய பெண்பால் பெயர்கள். பாட்டி என்பது பன்றி, நாய், நரி என்பனவற்றின் பெண் பாலைக் குறிக்கும் என்றார் ஆசிரியர். ஆனால் இன்று மக்களில் வயது முதிர்ந்த பெண்ணையும், பெற்றோ ரின் தாயையும் குறிக்க வழங்குகின்றது. இச்சொல் உயர்பொருட்பேறு என்னும் நியதிக்கு உட்பட்டுவிட்டது.

மந்தி என்னும் சொல் குரங்கும் மூசுவும் ஊகமும் ஆயவற்றின் பெண்பாலைக் குறிக்கும். இன்னும் சிற் சில பகுதிகளில் சிற்சிலவற்றிற்கு வழங்கிவந்த பெயர் களைக் குறிப்பிடுகின்றார். அவை பின்வருமாறு :

" குரங்கின் ஏற்றினைக் ' கடுவன் ' என்றலும்,
மரம் பயில் கூகையைக் ' கோட்டான் ' என்றலும்,
செவ்வாய்க் கிளியைத் ' தத்தை ' என்றலும்,
வெவ்வாய் வெருகினைப் ' பூசை ' என்றலும்,
குதிரையுள் ஆணினைச் ' சேவல் ' என்றலும்,
இருள்நிறப் பன்றியை ' ஏனம் ' என்றலும்,
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்,
முடிய வந்த அவ்வழக்கு உண்மையின்
கடியல் ஆகாக் கடன்அறிந் தோர்க்கே."

இந்நூற்பா எவ்வளவு தெளிவாகவும் எளிதாகவும் இனிதாகவும் அமைந்துள்ளது. ஆங்காங்கு வழங்கி வருகின்ற பெயர்களைத் தொகுத்துத் தந்துள்ளார். இலக்கியம் கற்போர்க்கும், இலக்கியம் இயற்று வோர்க்கும் மிகமிகப் பயன்படும் அன்றோ?

மரம் செடி கொடி முதலியனவற்றை இரண்டு வகையாகப் பிரித்துள்ளார். வெளிப்பக்கம் வைரம் பொருந்தியனவற்றைப் ' புல் ' என்றும் உட் பக்கம் வைரம் பொருந்தியனவற்றை 'மரம்' என்றும் அழைத்துள்ளார். ' புல் ' என்னும் பிரிவுக்கு உட் பட்டனவற்றிற்குரியனவாய் அவற்றின் உறுப்புக்

களைக் குறிப்பன. தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை முதலியனவாம்.

'மரம்' என்னும் பிரிவுக்குட்பட்டவைகளின் உறுப்புக்களைக் குறிப்பன: இலை, தளிர், முறி, தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை, காய், பழம், தோல், செதிள், வீழ் முதலியனவாம்.

தமிழின் சொல்வளம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எண்ணி மகிழ்மின். ஏனைய மொழிகளில் இவ்வாறு காணக் கூடுங்கொல்?

இவ்வாறு புறம்பே காணக்கூடியவற்றின் வேறுபாட்டுப் பெயர்களை விளக்கிய ஆசிரியர் அறிவு வகையால் உயிர்களின் ஏற்றங்களை விளக்கியுள்ளமை இன்னும் போற்றுதற்குரியது. மரம் செடி கொடிகட்கு உயிர் உண்டு என்று அண்மைக் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சிலர் அறைவர். தொல்காப்பியர் காலத்தில் தமிழர்கள் மரம் செடி கொடிகட்கும் உயிர் உண்டு என்பதை அறிந்திருந்தனர். உயிர் மட்டும் அன்று; அறிவும் பெற்றிருந்தன என்பதை அறிந்திருந்தனர். அறிவு வகையால் உயிர்களைப் பிரித்திருந்தனர். அப்பிரிப்பு இக்காலத்தில் உயிர் நூல் அறிவுக்குப் பொருத்தமானதாகவும் அமைந்துள்ளது.

புல்லும் மரனும் ஓர் அறிவை உடையன. அவ்வோரறிவு என்பது தொட்டால் அறியக்கூடிய ஆற்றல்.

நந்தும் முரளும் இரண்டு அறிவுகளை உடையன. இரண்டு அறிவுகள் தொட்டால் அறிவதும், நாவால் சுவை அறிவதும் ஆம்.

சிதலும் எறும்பும் மூன்று அறிவு உடையன. மூன்று அறிவாவன தொட்டால் அறிவது, நாவால் அறிவது, மூக்கால் மணம் அறிவது.

எறும்புக்குக் கண் இல்லை என்று அறிவித்துள்ளார். இற்றைநாள் உயிர்நூல் புலவர்களும் அவ்வாறு கூறியுள்ளனர்[1].

நண்டும் தும்பியும் நான்கு அறிவுகளை உடையன. நான்கு அறிவுகளாவன உற்றறிதல், சுவையறிதல், மணம் அறிதல், கண்டு அறிதல். இவைகட்குச் செவியறிவு இல்லை.

விலங்குகள் ஐயறிவு உடையன. உற்றறிதல், சுவையறிதல், மணமறிதல், கண்டு அறிதல், கேட்டறிதல் முதலியன ஐந்து அறிவுகளாம்.

மக்கள் இவ்வைந்து அறிவுகளோடு பகுத்தறிவும் உடையவர்கள். மக்களில் பகுத்தறிவற்றும் இருப்பார்கள். அவர்களை மாக்கள் என்று அழைத்தல் வேண்டும் என்பர் ஆசிரியர். விலங்குகளிலும் பகுத்தறிவு உடையன உள என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னர் இவ்வாறெல்லாம் ஆராய்வதில் தமிழர்கள் தலைப்பட்டிருந்தனர் என்பது தமிழர்தம் அறிவாற்றலைச் சிறப்பிப்பதாகும்.

உயிர்களைப்பற்றி ஆராய்ந்த ஆசிரியர் உலகம் எவ்வாறு உண்டாயிற்று என்பதையும் குறிப்பிட்டுள்ளார். நிலம், தீ, நீர், வளி, விசும்பு எனும் ஐந்தால் ஆனது உலகம் என்று கூறியுள்ளார். இவ்வைந்தின் ஆராய்ச்சியே இன்றைய உலக வாழ்வின் உயர்நிலை

---

1. The Ants and Men — Page 28.

யாகும். இவ்வாராய்ச்சிக்குக் கால்கோளிட்டவர் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவார்.

> "நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம்"

வேற்று நாட்டார் எல்லாரும் இவ்வைந்தினையும் ஆட்படுத்தி விசும்பு வெளியையும் தமதாக்கி வீறு கொண்டு உலவுகின்றனர். தொல்காப்பியர் வழிவந்த தமிழரோ தொல்காப்பியரையும் அறியாது தொல் மெய்ப்பொருள் ஆராய்ச்சியுமின்றித் துன்ப வாழ்வில் துயில் கொண்டு இன்பவுலகு என்று காண்போம் என்று ஏங்கி நிற்கின்றனர். உறக்கம் நீங்கி உண்மை காண்பார்களாக! தொல்காப்பியம் துணை செய்வதாக!

## 9. செய்யுள் இயல்

முன்புள்ள எட்டு இயல்களிலும் இலக்கியத்திற்குரிய பொருள்கள் பற்றியும், இலக்கிய இயல்பு பற்றியும், இலக்கியத்தின் வாயிலாய் கருத்து வெளிப்படுத்துவதற்குத் துணை செய்வன பற்றியும் ஆராய்ந்தோம். இனி இவ்வியலில் இலக்கியம் இயற்றப்படும் முறைமை பற்றியும் அதன் வகைகள் பற்றியும் ஆராயப்புகுகின்றோம்.

இலக்கியத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுள் என்று அழைத்துள்ளனர். 'செய்யுள்' என்றால் புலவரால் 'செய்யப்படுவது' என்று பொருள்.

புலவர் உயர்ந்த கருத்துக்களை உலகுக்கு அறிவிக்கும் பொழுது உயர்ந்த முறையில்தான் அறிவித்தல் வேண்டும் என்று கொண்டனர். அம்முறை படிப்படியாகப் பண்புற்றுக் கேட்போர்க்கும் படிப்போர்க்கும் இன்பம் தரும் வகையில் உருப்பெற்றுள்ளது. செய்யுளில் கூறப்படும் பொருளேயன்றி செய்யுளும் இனிமையும், எழிலும் பொருந்தி இன்பம் பயக்கும் இயல்பைப் பெற்றிருத்தல் வேண்டும்.

உயிர் ஒப்புயர்வற்றது தான். அவ்வுயிரும் எழிலுறு உடலில் இருக்கப் பெற்றால் தான் எல்லாராலும் போற்றப்படும் நிலையை எளிதில் எய்தும், பொருளை அளிக்கும் கருவிதான் செய்யுள். ஆயினும்

அக்கருவியும் அழகும், பண்பும் அமையப் பெற்றிருந்தால் தான் அகத்திற்கு மகிழ்வுதரும். ஆதலின் செய்யுள் வடிவாலும் (Form) பொருளாலும் (Content) இன்பம் பயக்கும் வண்ணம் அமைவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிந்தனர் நம் முன்னோர். ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே செய்யுள் முப்பத்து நான்கு உறுப்புக்களைப் பெற்றுள்ளது. அம்முப்பத்துநான்கு உறுப்புக்களையும் அழகிய நூற்பாவில் அமைவுறக் கூறுவதைக் காணுமின்,

" மாத்திரை, எழுத்தியல், அசைவகை எனாஅ,
யாத்த சீரே, அடி, யாப்பு எனாஅ,
மரபே, தூக்கே, தொடைவகை எனாஅ,
நோக்கே, பாவே, அளவுஇயல் எனாஅ,
திணையே, கைகோள், கூற்றுவகை எனாஅ,
கேட்போர், களனே, காலவகை எனாஅப்
பயனே, மெய்ப்பாடு, எச்சவகை எனாஅ,
முன்னம், பொருளே, துறைவகை எனாஅ,
மாட்டே, வண்ணமொடு யாப்பு இயல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நால் ஐந்தும்;
அம்மை, அழகு, தொன்மை, தோலே,
விருந்தே, இயைபே, புலனே, இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல் இசைப் புலவர் செய்யுள் உறுப்புஎன
வல்லிதின் கூறி வகுத்துரைத் தனரே "

இந்நூற்பாவே பன்முறையும் படித்தின்புறத்தக்கது. 'எனாஅ' என்பது எண்ணிக்கையை அறிவிக்கும் இடைச்சொல். அடிதோறும் வருவதால் அஃதும் இன்பம் பயந்து நிற்கின்றது.

'இருபத்தாறு' என்பதை வெளிப்படையாகக் கூறாமல், " ஆறுதலையிட்ட அந்நாலைந்து " எனச் செய்யுள் நலம் தோன்றக் கூறியுள்ளார்.

முப்பத்து நான்கினையும் ஒருங்கே தொகை கொடுத்துக் கூறாமல் 'இருபத்தாறு' என ஒரு பிரிவும், 'எட்டு' என மற்றொரு பிரிவுமாகக் கூறியது காரணம் பற்றியே யாகும். இருபத்தாறு உறுப்புக்களும் செய்யுளில் தவறாது ஒருங்கே அமையும் உறுப்புக்கள். ஏனைய எட்டும் ஓரோர் செய்யுட்கு ஒரோ வொன்றே யும் வரும் என்பதற்கும், அவையும் செய்யுள் பல தொடர்ந்த வழியே உறுப்பாக வரும் என்பதற்கும் ஆகும்.

தொல்காப்பியம் முழுவதும்—எழுத்து—சொல்—பொருள்—பரந்து கிடந்தவற்றை இந்நூற்பாவில் தொகுத்துக் கூறியுள்ளார். மொழியைக் கற்று இலக்கியம் இயற்றுவதற்குப் பயன்படும் நூலாகவே தொல்காப்பியம் ஆக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பான் மொழிந்துள்ளார் ஆசிரியர்.

இலக்கியமாம் செய்யுள் பாட்டு என்றும், உரை என்றும் இருவகைப்படும்.

பாட்டில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன இன்றியமையாது அமையப் பெறுவன. எழுத்தைப்பற்றி எழுத்துப் படலத்தில் அறிந்தனவே ஆம். அசை நேர் என்றும், நிரை என்றும் இருவகைப்படும். குற்றிய லுகரம் அடுத்து வருங்கால் நேர்பு என்றும், நிரைபு என்றும் பெயர் பெறும். பிற்காலத்தில் இவை வழக்கு வீழ்ந்து விட்டன. சீர் அது பயின்று வரும் பாமுறைக்கு ஏற்ப, ஆசிரிய உரிச்சீர் என்றும், வெண்பா உரிச்சீர் என்றும், வஞ்சி உரிச்சீர் என்றும் பெயர் பெறும். தளையும் சீர் இரண்டும் சேருங்கால் அமைவதே யாயினும் பாவிற் கேற்பப் பெயர் பெறும்.

அடிகள் எழுத்துக்களைக் கொண்டே வகுக்கப் பட்டன. அடிகளில் ஒற்று நீங்கிய எழுத்தே எண்ணப்படும். நான்கு எழுத்து முதல் ஆறு எழுத்து முடிய வரின் குறளடியாம். ஏழு முதல் ஒன்பது எழுத்து முடிய வரின் சிந்தடியாம். பத்து முதல் பதினான்கு முடிய எழுத்துக்களிருப்பின் நேரடியாம். பதினைந்து முதல் பதினேழு எழுத்து முடிய நெடிலடி யாம். பதினெட்டு முதல் இருபது எழுத்து முடிய கழிநெடிலடியாம்.

பிற்காலத்தார் சீர்களைக் கொண்டே அடிகளை வகுத்தனர். பாக்களுக்குரிய அடி, தொடை முதலி யன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பாக்கள் ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ் சிப்பா, மருட்பா, பரிபாடல் எனக் கூறப்படும். இவைகளுக்கு அடி வரையறை உண்டு.

"எழுத்து முதலா ஈண்டிய அடியின் குறித்த பொருளை முடிய நாட்டல் யாப்பு என மொழிப யாப்பு அறி புலவர்" என்று கூறி, "பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே, அங்கதம், முதுசொல்" என்பன வாம் ஏழு வகையிலும் அந்த யாப்பு முறை வரும் என்று கூறுகின்றார். இம் முறையே தமிழகத்தில் தொன்றுதொட்டு வருவது என்று வரையறுத் துள்ளார். உரையும் யாக்கப்படுவதால் (செய்யப் படுவதால்) யாப்பு எனப்பட்டது. ஆதலின் உரை நடை இயற்றுவோரும் புலவரே என மதிக்கப்பட் டனர். இவைகள் அறம் பொருள் இன்பம் என்பன வற்றையே விளக்குதற்குரியன என்றார்.

**" அங்கிலை மருங்கின் அறம் முதலாகிய**
**மும்முதற் பொருட்கும் உரிய என்ப "**

அறத்திற்கு முதன்மை கொடுத்தலே தமிழர் வாழ்வியற் சிறப்பு. "பயன் மட்டும் கருதினுல் போதாது; பயன் வரும் வழியையும் கருதுதல் வேண்டும்" என்ற அடிப்படைக் கொள்கையிலேயே வாழவேண்டும். இலக்கியம் இலக்கியத்திற்காகவா? மக்களுக்காகவா எனின்? இலக்கியம் மக்களுக்காகவே என்பது தொல்காப்பியர் துணிபு. மக்களுக்காக இயற்றப்படும் இலக்கியம் அறநெறியைப் புகட்டுவதாகவே இருத்தல் வேண்டும். அறநெறியைக் கூருதன இலக்கியம் ஆகா. அறநெறி கூருத இலக்கியம் இயற்றுவோர் புலவரும் ஆகார்.

மேலே நாட்டு இலோவெல் என்பாரும் பிரௌணிங்கு என்பாரும் இக் கருத்தையே வலியுறுத்துகின்றனர்.[1] "மெய்யுணர்வின் உண்மையைக் கூருத பாவின் புலவரை நான் மதிக்க மாட்டேன்" என்றும், "மெய்யுணர்வே முதலில் கருதத் தக்கது. மெய்யுணர்வின் பயனுய்த் தோன்றிய பாவைப் பற்றிய ஆராய்ச்சி அதன் பின்னர் தான்" என்றும் கூறியுள்ளனர். (An Introducton to the study of Literature—Hudson—Page 94.)

புலவர்கள் மக்களையும் மன்னரையும் வாழ்த்துதல் முன்னிலையாகக் கொண்டு அவர்கட்கு அறிவுரை கூறினர். அவ்வாறு அறிவுரை கூறுதல் புலவர்களின் தலையாய கடமையாகும். (We welcome the poet as teacher and moralist; because we know that in his hands the truths of life and conduct will acquire a higher potency and value — Hudson). அவ்வாறு அறிவுரை

1. No poem ever makes me respect its authors which does not in some way convey a truth of philosophy. — Lowel.

Philosophy first and poetry which is its highest outcome, afterwards — Browning.

கூறுவனவும் சிறந்த இலக்கியங்களாக அமையும். அவை புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவை யடக்கியல், செவியுறிவுறூஉ என அழைக்கப்படும்.

*புறநிலை வாழ்த்து :—*

> "வழிபடு தெய்வம் நின்புறங் காப்ப
> பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
> பொலிமின்" என்னும் புறநிலை வாழ்த்தே
> கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ."

ஆசிரியப்பாவினாலும், வெண்பாவினாலும் கூறப்படும் புறநிலை வாழ்த்து. தெய்வம் புறத்தே (பக்கத்தே) நின்று காப்ப என்று வேண்டியதனால் இப்பெயர் பெற்றது போலும்.

*வாயுறை வாழ்த்து :—*

> "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
> வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
> தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று
> ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே."

வாய் உறை என்பதற்கு வாய் மொழியாகிய மருந்து என்றார் பேராசிரியர். அறிவுரையானது உளப் பிணியைப் போக்குதலின் மருந்து எனப்பட்டது. மருந்து இனிப்பாக இருத்தல் அரிது. அறிவுரையும் வேம்பும், கடுக்காயும் போலும் கசப்பினைத் தரக் கூடியதே. முன்பு கசந்தாலும், பின்பு இன்பம் தருவ தாம் வெஞ்சொல் போலத் தோன்றும். ஆனால் அவ் வெஞ்சொல் பின்னர் வாழ்வில் நலம் பயக்கும். இம் முறையில் தோன்றிய பாடல்கள் பல நல்ல இலக்கியங் களாக அமைந்துள்ளன.

*அவை அடக்கியல் :—*

**" அவை யடக்கியலே அரில்தபத் தெரியின்
வல்லார் கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே"**

*புலவர் தம் அடக்கமுடைமையை அறிவித்துப் பிறரை அடக்கிவிடும் ஆற்றல் பெற்றவர்கள். தாம் அடங்கினால் பிறரை அடக்கலாம் என்ற பேருண்மை பொதிந்து கிடப்பதே இவ்வுலக இலக்கியம். தொண்டரே தலைவராவார் என்பது வாழ்வுக்கு இன்றியமையாத உண்மையாகும்.*

*செவியுறை:—*

**" பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே."**

*செவியுறை என்பதும் செவி மருந்து எனப் பொருள் படும். பெரியோரிடை அடங்கியிருக்கும் ஆற்றல் யாவர்க்கும் வேண்டியது. பெரியாரைத் துணைக் கொள்வோரே பெரிதும் நலமுடன் வாழ்வர். பெரியாரைத் துணைக்கொள்ளக் கருதின் பெரியார் நடுவில் அடங்கியிருத்தல் கடனாகும்.*

*இந் நான்கும் வாழ்வுக்கு நலம் பயப்பதோர் இலக்கிய வகைகளாகும். இவைகளுக்குரிய பாக்கள் இன்னவென்றும் குறிப்பிட்டுக் கூறுகின்றமை நோக்கத்தக்கது.*

*பரிபாடல் என்பது கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் உறுப்புக்களுடன் காதல் பற்றியே கூறுவதற்கு உரியது. கைக்கிளை என்பது வெண்பாவும், ஆசிரியப்பாவும் கலந்து முடிவதற்குரியது. அங்கதம்* (Satire) *வசையும், நசையும் பொருந்தி வரும் இயல்பினது.*

பாக்கள் அடி வரையறை யுடையன எனவும் அடி வரையறை இல்லன எனவும் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அடி வரையறை இல்லாதன, நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்பு என்பனவாம். இவை களைப் பற்றிய இலக்கணங்கள் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. 'மந்திரம்' என்பது தமிழ்ச் சொல்லே. தமிழுக்குரியதே. 'பண்ணத்தி' என்று ஒரு வகை கூறப்படுகின்றது. அது பாட்டிடைக் கலந்த பொருளோடு வரும் எனப்படுகின்றது. இதனைப் பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு கூறி யுள்ளார்.

"மெய் வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப என்பது. அவை யாவன நாடகச் செய்யுளாகிய பாட்டு மடையும், வஞ்சிப் பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதே போலப் பாட்டென் றுரையினர். நோக்கு முதலாயின உறுப்பின்மையின் என்பது. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க."

பேராசிரியரே வல்லார் வாய்க் கேட்டுணர்க என்று வாளாவிடுப்பரேல் அவர் காலத்தில் பண் ணத்தி வழக்கற்றுப் புலவர்களும் அறிந்து கொள்ள முடியாத நிலையை அடைந்துவிட்டது என்று தான் கருதுதல் வேண்டும்.

உரைநடை பற்றி உரைத்துள்ளார். தொல்காப் பியர் காலத்தில் நான்கு வகையான உரைநடைகள் வழக்கில் இருந்துள்ளன போலும். உரைநடை விரி வாக எழுதவேண்டிய ஒன்று. பனை ஓலையில் எழுத் தாணியால் எழுதிய காலத்தில் விரிவாக எவரும் எழுத

விரும்பியிரார். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாக்களையே விரும்பியிருக்கக்கூடும். ஆதலின் உரை நடை வளர்ச்சி ஓங்கிப் பெருகுவது தடைப்பட்டிருத்தல் கூடும். அச்சுக்கூடம் வந்த பின்னரே உரைநடை நூல்கள் பெருகின.

ஆசிரியர் காலத்தில் வழக்கிலிருந்த நால்வகை உரைநடைகள் "பாட்டிடை வைத்த குறிப்பு" என்றும், "பாவினின்று தோன்றிய கிளவி" என்றும், "பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி" என்றும், "பொருளொடு புணர்ந்த நகைமொழி" என்றும் அழைக்கப்பட்டன.

இவ்வாறு உரையாலும் பாட்டாலும் கூறப்பட்ட பொருள்கள் காதல் வாழ்வும் கற்பியல் வாழ்வுமே.

மக்களைப் பற்றியும், அவர்களைச் சூழ்ந்துள்ள இயற்கையைப் பற்றியும் இலக்கியப் பொருள்களாகக் கொண்டு, கற்பனையும், உணர்ச்சியும் வெளிப்பட நூல்கள் இயற்றுவதே புலவர் தொழிலும் இயல்பும் கடனுமாக இருந்தன. கற்பனையும் உணர்ச்சியுமே இலக்கியத்தைச் சுவைப் படுத்தும். ஆகவே புலவர்,

"ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே,
கடலே, கானல், விலங்கே, மரனே,
புலம்புறு பொழுதே, புள்ளே, நெஞ்சே,
அவையல பிறவும், நுதலிய நெறியான்
சொல்லுந போலவும், கேட்குந போலவும்
சொல்லி யாங்கு அமையும்"

வகையில் இலக்கியங்களை யாத்தல் வேண்டும் என்றனர் ஆசிரியர். "பாடல் என்பது கற்பனையும், உணர்ச்சியும் என இரண்டின் வாயிலாய் வாழ்க்கையை விளக்குவது; (Poetry is an interpretation of life through the imagination and the feelings) மொழி

கருவியாக வாழ்க்கையை வெளிப்படுத்துவதே இலக்கியம்" என்று ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியாளர் அட்சன் கூறுவது போன்று ஆசிரியரும் கூறியுள்ளமை அறிந்து இன்புறத் தக்கது.

இருபது வண்ணங்களும் எட்டு வனப்புகளும் இலக்கியங்களின் உறுப்புக்களாய் இலங்கின பான்மை எடுத்துக் கூறுகின்றமையால் அன்று தமிழிலக்கியம் எவ்வாறு வளம்பெற்று வாழ்ந்தது என்பதைத் தெற்றென அறியலாம். பெரும்பாலான வண்ணங்கள் எழுத்துக்களின் சேர்க்கை பற்றிய முறையினாலேயே அமைந்துள்ளன. எழுத்துக்களை அமைக்கும் ஒழுங்கால் ஓசை தோன்றி இன்பம் பயப்பது இலக்கியத்தின் இயல்புகளுள் ஒன்றாகும். இவ்வியல்பில் தமிழ் நன்கு முற்றுப் பெற்றுள்ளது.

வண்ணங்களாவன :—

"பாஅ வண்ணம்; தாஅ வண்ணம்;
வல்லிசை வண்ணம்; மெல்லிசை வண்ணம்;
இயைபு வண்ணம்; அளபெடை வண்ணம்;
நெடுஞ்சீர் வண்ணம்; குறுஞ்சீர் வண்ணம்;
சித்திர வண்ணம்; நலிபு வண்ணம்;
அகப்பாட்டு வண்ணம்; புறப்பாட்டு வண்ணம்;
ஒழுகு வண்ணம்; ஒரூஉ வண்ணம்;
எண்ணு வண்ணம்; அகைப்பு வண்ணம்;
தூங்கல் வண்ணம்; ஏந்தல் வண்ணம்;
உருட்டு வண்ணம்; முடுகு வண்ணம்"

என இருபதாம்.

அவற்றுள்,

1. பாஅ வண்ணம் சொற் சீர்த்தாகி நூற்பால் பயிலும். இது நூற்பாவினுள் - சூத்திரங்களில் - சொற்சீர் பெற்றுவரும் பெற்றியது.
2. தாஅ வண்ணம் இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.
3. வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப் பயிலும்.
4. மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.
5. இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.
6. அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.
7. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.
8. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப்பயிலும்.
9. சித்திர வண்ணம் நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே.
10. நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்.
11. அகப்பாட்டு வண்ணம் முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.
12. புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியாததாகும்.
13. ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்.
14. ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்.
15. எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.
16. அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்.
17. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

18. ஏந்தல் வண்ணம் சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

19. உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்.

20. முடுகு வண்ணம் முடிவறியாமல் அடியிறந் தொழுகி அதனோரற்றே.

பொருள் மிக எளிதாக விளங்குகின்றது. விரிவு விளக்கம் வேண்டியதின்று. 'பா' என்பது ஓசையால் உருவானது. இன்னோசை தருவதே இவ்வண்ண முறை. இவ்வண்ணங்கள் பயில இக்காலத்தில் பாக்கள் இயற்றுவார் யாருமிலரே. இவைகளைப் பெயரளவில் அறிந்தோரும் மிகச் சிலரே.

இனி வனப்பெனப் படும் எட்டும் வருமாறு :—

1. அம்மை : சிலவாய மெல்லிய சொற்களால் இடையிட்டு வந்த பனுவல் இலக்கணத்தோடு குறை அடிகளால் வருவது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும் என்பர். திருவள்ளுவர் செய்த திருக்குறள் இவ் வனப்பைக் கொண்டு இலங்குகின்றது.

2. அழகு : வழக்குச் சொல்லின்றிச் செய்யுட்கே உரிய செந்தமிழ்ச் சொற்களால் சீர்கள் அமைய இயற்றப்படுபவை. அக நானூறு முதலிய தொகை நூல்களை எடுத்துக் காட்டாகக் கூறுவர்.

3. தொன்மை : உரைநடையால் இயற்றப்பட்ட பழமையான வரலாறுகள், கதைகள் முதலியன. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறிப் பெருந் தேவனாரால் செய்யப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன எடுத்துக் காட்டென்பர் பேராசிரியர். "உரையொடு புணர்ந்த" என்பதற்கு

உரையொடு கலந்த என்று பொருள் கொண்டு விட்டார்.

4. **தோல்:** மென்மை மிக்க இனிய சொற்களால் வாழ்வுக்குச் சிறப்புத்தரும் பொருள்கள்பற்றி இயற்றப்படும் நூலும், சுருங்கச் சொல்லலின்றி, விரித்துச் சொல்லிப் பல அடிகளால் இயற்றப்படும் நூலும் இவ் வனப்புக்குரியன. பத்துப் பாட்டும், சிலப்பதிகாரமும் போன்றன எடுத்துக் காட்டுக்கள் ஆம். 'தொன்மொழிப் புலவர்' கூறுவர் என்று நூற்பாவில் வருகின்றது. பழமையான மொழி நூலறிஞர் என்று பொருள் கொள்ளாது "பழைய கதையைச் செய்தல் பற்றித் தொன்மொழி என்றார்" என்று பேராசிரியர் கூறியுள்ளார். கதைதான் கூறவேண்டுமென்ற குறிப்பு நூற்பாவில் இல்லை.

5. **விருந்து:** புதியனவாகப் பாக்களால் இயற்றப் படும் நூல். பழைய முறையில் மட்டும் இயற்றினால் இலக்கிய வளர்ச்சி சிறப்புறாது. புதுப்புது முறைகளும் பொருள்களும் பொருந்தும் இலக்கியங்களும் இயற்றப்படல் வேண்டும்; பண்டு இயற்றப்பட்டன. இன்று போற்றுவார் இலரே. முத்தொள்ளாயிரம், அந்தாதி, கலம்பகம் முதலியன மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன.

6. **இயைபு:** ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்ற பதினொரு மெய்யெழுத்துக்களுள் ஏதேனும் ஒன்று தொடர்ந்து காதை முடிவில் நிற்க நூல் இயற்றுவது. மணிமேகலையை நோக்கின் காதை தோறும் 'ன்' என்று முடிவதைக் காணலாம். ஞ், ங், வ், என்பன சில சொற்களில்தான் இறுதியாக வரும். அவையும் இக்காலத்து வழக்கொழிந்து விட்டன.

ஆங்கில மொழியில் அடியிறுதியில் ஒரே எழுத்தே வருமாறு இயற்றுதல் போலத் தமிழிலும், அடிகள் தோறும் ஒரே எழுத்துப் பயின்றுவரப் பாடுதலும் இயைபாகும்.

7. புலன்: மக்களுக்கு விளங்கும் முறையில் அவர்கள் உரையாடுகின்ற வழக்கு மொழியில் கொச்சைச் சொல், இழிவழக்கு முதலியன இன்றி வெளிப்படையாகப் பொருள் தோன்றும் வகையில் இயற்றப்படுவது புலன் ஆகும். தொல்காப்பியர் காலத்தில் பலர் சேர்ந்து வாழும் இடம் சேரி எனப்பட்டது. பிற்காலத்தில் சில வகுப்பார் வாழுமிடத்தைச் சுட்டுவதற்கு மட்டும் பயன்பட்டு விட்டது. 'சேரி மொழி' என்று இந்நூற்பாவில் சுட்டப்படுவது வழக்கு மொழியாகும். மொழியை வழக்கு மொழி என்றும், செய்யுள் மொழி என்றும் ஆசிரியர் பகுத்துக்கொண்டலான் இங்கு வழக்கு மொழியால் மட்டும் நூல் இயற்றுவதைக் குறிப்பிட்டுள்ளார். செய்யுள் மொழியால் செய்யப்படுவதை 'அழகு' என்று குறிப்பிட்டுள்ளமை போல வழக்கு மொழியால் செய்யப்படுவதைப் புலன் என்றார். புலன் பொது மக்களுக்காகச் செய்யப்பட்ட நூல் போலும். 'விளக்காதார் கூத்து' என்னும் நாடக நூலைப் பேராசிரியர் எடுத்துக் காட்டாகக் கூறுவதிலிருந்தும் புலன் பொது மக்களுக்கு உரியது என்று கொள்ளலாம். இன்று ஆங்கிலத்தில் பொது மக்களுக்கு என எளிய மொழியில் நூல்கள் வெளி வருகின்றமை போல அன்று தமிழகத்திலும் எளிய தமிழில் நூல்கள் வெளி வந்தன போலும்.

8. இழைபு: வல்லெழுத்துக்கள் ஒற்றும் உயிர் மெய்யுமாக வந்து - தனி வல்லெழுத்துக்களாக வந்து

- வல்லோசை தாராது, குறளடி முதலாக கழிநெடிலடி ஈருக ஐந்து அடிகளிலும் ஒலி உயர்ந்த சொற்களால், 'புலன்' என்னும் வகைபோல் பொருள் விளங்க எளிமையாக இன்னோசைபட இயற்றப்படின் இழைபு ஆகும். இசைப் பாடல்களாக வருவன இவை. இவைகளில்தான் சொற்களை நீட்டி ஒலிக்க வேண்டும்.

கலியும், பரிபாடலும் எடுத்துக் காட்டுகளாகக் கூறப்பட்டுள்ளன.

இயற்றமிழ்க்குரியன வெல்லாம் கூறி இறுதியில் இசைத் தமிழுக்குரியதைக் கூறியுள்ள அமைப்பு முறை போற்றத்தக்கது. அன்றியும் இசைத் தமிழுக்குரிய பாடல்கள் இலக்கியமாம் தன்மைக்கு உரியனவாகவும் இருத்தல் வேண்டும் என்று உணர்த்தியமை போற்றத்தக்கது. இன்றைய திரைப் படப் பாடல்களில் பலவும், இசையரங்கில் பாடப்படுவன பலவும், இலக்கியமாம் சிறப்புடையனவாக இருப்பதைக் காணலாம். இசைப் பாடல்கள் இனிய தமிழாகவே இருத்தல் வேண்டும்; வேற்றுமொழிப் பாடல்களாக இருத்தல் பொருந்தாது என்பதையும் இந்நூற்பா உணர்த்துகின்றது.

ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் தமிழிலக்கியம் செழித்து வளர்ந்துவந்த நெறிகளையும், இயல்பினையும் தொல்காப்பியம் சுட்டி அறிவிக்கின்றது. தொல்காப்பியப் பொருட் படலம் இலக்கியம் விளக்கும் இலக்கணமாகும் (science of Literature) என்பதை அறிந்து போற்றிப் பயில்வோமாக. இலக்கியச் செழிப்பு இனிதே மலர்தல் வேண்டும். மலர்க இலக்கியம்; வாழ்க தமிழ் மொழி.

## முடிப்புரை

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்கு நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களுள் தொல்காப்பியமே முதன்மையானது. மக்கள் வரலாற்றை அறிவதற்குத் துணை புரிவனவற்றுள் மொழியே முதலிடம் பெறுவது. மொழியானது மக்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்து ஒன்றுபட்டுள்ளது. மக்களின்றி மொழிக்கு வாழ்வில்லை; மொழியின்றி மக்களுக்கு வாழ்வு இல்லை ஆதலின் மொழியின் துணைகொண்டு மக்கள் வாழ்வை அறிதல் இயலும்.

தமிழ் மொழியின் துணையால் தமிழ் மக்கள் வாழ்வைத் தட்டின்றி அறியலாம். தமிழ் மொழியைப் பற்றியும் தமிழ் மக்களைப் பற்றியும் அறிவிப்பதே தொல்காப்பியம்.

'தொல்காப்பியம்' என்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று. ஆக்கியோர் பெயர் தொல்காப்பியர். தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம் என அழைக்கப்பட்டது என்பர் ஒரு சாரார். தொல்காப்பியரால் ஆக்கப்பட்ட நூல் தொல்காப்பியம் என்று அழைக்கப்பட்டது வடமொழி மரபாகும். அம்மரபு தமிழிற்கு இல்லை. தொல்காப்பியரால் ஆக்கப்பட்ட நூலைத் தொல்காப்பியர் என்று கூறுவதேதமிழ் மரபு. ஆதலின் "தொல்காப்பியம்"

என்ற பெயரே தவறுடைத்து என்பர் பிறிதொரு சாரார்.

நூலின் பெயரென்ன? நூலை இயற்றிய ஆசிரியர் பெயரென்ன? என்று அறியவேண்டியது நமது கடனாகும். நூலின் பெயர் தொல்காப்பியம்; தொல்காப்பியம் எனும் நூலை இயற்றிய பின்னர், இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியர் என அழைக்கப்பட்டார் என்பதே நமது கருத்து. இவ்வாறு கூறுவதுதான் பொருத்த முடைத்து என்பதனைப் பனம்பாரனார் பாயிரமும் பகர்கின்றது.

"தொல்காப்பியன்" எனத் தன் பெயர் தோற்றி என்று கூறுவதை நோக்குக. அதன் பொருள் என்ன? 'தொல்காப்பியன்' எனத் தன் பெயரைத் தோன்றச் செய்து என்பதன்றோ அவ்வடிக்குப் பொருள். தொல்காப்பியத்தை இயற்றுவதற்கு முன்னர் வேறு பெயர் பெற்றிருந்த ஆசிரியர், தொல்காப்பியத்தை இயற்றிய பின்னர் தொல்காப்பியன் என அழைக்கப்பட்டார். செல்வத்துக்குரியவன் செல்வன் எனப்படுவதுபோல் தொல்காப்பியத்துக் குரியவன் தொல்காப்பியன் எனப்பட்டான். செய்யுளில் தொல்காப்பியன் என்று கூறுவதே மரபு. வழக்கில் தொல்காப்பியர் என்று கூறுவதுதான் மரபு. இம் மரபினைத் தொல்காப்பியரே அறிவிக்கின்றார்.

**"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கி னாகிய உயர்சொற் கிளவி**
**இலக்கண மருங்கின் சொல்லா றல்ல."**

ஆதலின் பனம்பாரனார், செய்யுளில் தொல்காப்பியன் எனக் கூறியிருப்பினும் நாம் வழக்கில் தொல்காப்பியர் என்று அழைத்தலே மரபு. தொல்காப்பியம்

இலக்கணமன்றோ? அதனைக் காப்பியம் என்றது ஏன்? தொல் என்ற அடைகொடுத்து அழைத்தது ஏன்? எனும் வினைக்கள் எழலாம்.

தொல்காப்பியர் (அவரின் முன்னைய இயற்பெயர் அறியோம். ஆதலின் நாமும் தொல்காப்பியர் என்ற பெயரால் அழைக்கின்றோம்) நூல் இயற்றியது எழுத்தும் சொல்லும் பொருளும் அறிந்து காப்பியம் கற்பதற்கும் இயற்றுவதற்குமேயாகும். காப்பிய இலக்கணம் கூறும் நூலைக் காப்பியம் என்று அழைத்தல் தமிழ் மரபுக்கு ஒத்ததுதான். எழுத்து இலக்கணம் கூறும் நூலை எழுத்து என்பதும், சொல்லிலக்கணம் கூறும் நூலைச் சொல் என்பதும் இயல்பன்றோ? அவ்வாறே காப்பிய இலக்கணம் கூறும் நூலைக் காப்பியம் என்றனர். 'தொல்' என்ற அடைமொழி எற்றுக்கு? காப்பியம் என்றலே பொருந்துமே எனவினவலாம். அவர் கூறும் காப்பிய இலக்கணங்கள் தமிழகத்தில் அவர்க்கு முன்பே தொன்றுதொட்டுப் பயின்று வருவன. அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுகின்றார். ஆதலின் தொன்மையாக வருகின்ற காப்பிய இலக்கணங்களைக் கூறும் நூல் என்று உணர்த்தவே தொல்காப்பியம் என்று பெயர் சூட்டியுள்ளார்.

தொல்காப்பியம் எனும் சொல்லுக்கு இன்னொரு பொருளும் உண்டு. தொன்மையான இலக்கிய மரபுகளைக் காத்து நிற்பது என்பதே அது. இலக்கிய மரபுகள் என்பதும் காப்பிய இலக்கணம் என்பதும் வேறுபட்டன அன்றே. ஆதலின் நூலின் பெயர் தொல்காப்பியம்; அதனை ஆக்கியோன் தொல்காப்பியன் எனப்பட்டான். தொல்காப்பியன் என்ற பெயர் வழக்கில் வர இயற்பெயரை மறந்து விட்டனர்.

இவ்வாறு சிறப்புப் பெயர் வந்து இயற்பெயரை மறக்கச் செய்தமைக்குச் சான்றுகள் தமிழில் ஒன்ரு? இரண்டா? பற்பல உளவே.

(பேராசிரியர், உரையாசிரியர், சேக்கிழார், தொடித்தலை விழுத்தண்டினர்).

தொல்காப்பியத்தின் எழுத்தும் சொல்லும் மொழி நூல் (Science of Language) என்றும், பொருள் இலக்கியம் பற்றிய நூல் (Science of Literature) என்றும் கூறி அவ்வகையில் தொல்காப்பியத்தை ஆராய்ந்தோம். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் தமிழ் மொழியின் நிலையும் தமிழ் இலக்கிய நிலையும் எவ்வாறு இருந்தன என்பதை அறிந்தோம். இவ்வாறு அறிவதும் தமிழ் மக்கள் வரலாற்றின் ஒரு பகுதிதானே. மொழியினல் உருவாகிய மக்கள் இனத்தை அறிவதற்கு முன்னர் மக்களினத்தால் உருவாகிய மொழியைப்பற்றி அறிவதும் வேண்டியதுதானே. மொழி நூலறிஞன் வரலாறு அறிய வேண்டும்; வரலாற்று அறிஞன் மொழி நூல் அறிய வேண்டும். தமிழக மக்களின் வரலாற்றை அறிவதற்குத் துணையாகத் தமிழ்மொழி பற்றியும் தமிழ் இலக்கியம் பற்றியும் அறிந்தோம். ஏனைய மொழிகளில் இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் (Criticism of Literature) உண்டு; ஆனல் இலக்கிய இலக்கணம் (Science of Literature) இவ்வளவு விரிந்த முறையில் தனியாகச் செய்யப்பட்டிலது. தமிழில்தான் உண்டு என்பதை அறிந்தோம். அதனல் தமிழ் மொழியின் சிறப்பும் ஏற்றமும் வளமும் தெற்றெனப் புலனுகின்றன.

இந்திய மொழிகளுள் ஆரியமல்லாத பிறவெல்லாம் கி. பி. எட்டாம் நூற்ருண்டுக்குப் பிறகே இலக்கியத் தோற்றத்தைப் பெற்றுள்ளன. ஆரியமும் இந்

நாட்டிற்கு வந்து பழந்தமிழோடு தொடர்பு கொண்ட பிறகுதான் எழுதும் முறையை ஆக்கிக்கொண்டது. தமிழோ ஆரியத்தோடு தொடர்பு கொள்வதற்கு முன்பே தனக்கென எழுத்தையும் நூலையும் பெற்றுள்ளது. ஏன்? இந்திய மொழிகளின் தாயே தமிழ்தான். ஆரியம் இந்நாட்டுக்கு வரும் முன்பு இமயம் முதல் குமரிவரை வழங்கிய மொழி தமிழே. ஆரியமும் தமிழும் கலப்புற்றதனுல் விளைந்ததே இந்திய மொழிகளின் தோற்றம். மொழியின் அமைப்பும் அடிப்படையும் தமிழாய் இருக்க, சொற்கள் ஆரியத்திற்குரியனவாய் இருக்கின்றன.

ஆதலின் இந்திய மொழிகளை ஆரியக் குடும்ப மொழிகள் என்றும் தமிழ்க் குடும்ப மொழிகள் என றும் இருவேறு இனமாகப் பிரித்துள்ளனர் மொழியாராய்ச்சியாளர்கள். தமிழ்க்குடும்ப மொழிகளைத் திராவிடக் குடும்ப மொழிகள் என்பர். 'திராவிடம்' என்ற சொல்லிலிருந்தே 'தமிழ்' என்ற சொல் தோன்றியது என்ற கருத்து பிழைபட்டது என்று நிலைநாட்டப்பட்டு விட்டது கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னர் இயற்றப்பட்ட தொல்காப்பியத்தில் 'தமிழ்' எனும் சொல் பயின்றுள்ளது. 'திராவிடம்' என்ற சொல்லின் தோற்றம் கி. பி. மூன்ரும் நூற்ருண்டுக்குப் பிந்தியது.

தமிழ்க் குடும்ப மொழிகள் திருத்த முற்றன ஆறு; திருத்த முருதன ஆறு எனப் பன்னிரண்டு மொழிகள் இன்றும் உள்ளனவாக அறிஞர் கால்டுவெல் அவர்கள் ஆராய்ந்து நிறுவியுள்ளனர்.

ஆரியத்தின் வருகையால் தமிழ் சிதைவுற்றுக் கிளைகளாகப் பிரிந்து தொல்காப்பியர் காலத்தில் வடவேங்கடம் தென்குமரியாயிடை மட்டும் வழங்

யது. தெற்கே பூமையக் கோடுவரை பரவியிருந்த தமிழ் மாநிலம் கடல்கோளால் மறைந்து இலங்கையெனும் சிறு தீவும் ஏற்பட்டு இன்றுள்ள குமரி முனை தென் எல்லையாகிவிட்டது. தொல்காப்பியப் பாயிரம் சுட்டும் தென்குமரி இக்குமரிமுனை யன்று என்பர். இலங்கைக்குத் தெற்கே இருந்த குமரி மலை என்பர் ; குமரிக்கடல் என்பர்.

கடலாலும் ஆரிய மொழியாலும், வழங்கிவரும் பரப்பளவில் தமிழ் சுருங்கிவிட்டது. பரந்த நிலப் பரப்பில் வழங்கிவரும் மொழி காலப்போக்கில் கிளை மொழிகளாகப் பிரிந்து, கிளை மொழிகளாக உரு வெடுத்து வேற்று மொழிகளாக வளர்ந்து விடுவது மொழி வரலாறு அறிவிக்கும் உண்மையே யாயினும், ஆரியம் இந்நிலை மாற்றங்களை விரைவுபடுத்தி விட்டது என்பதனை மறுத்தல் இயலாது. ஆரியம் தமிழ் வழங்கும் பரப்பளவினைச் சுருங்கச் செய்த தோடுமட்டும் நின்றுவிடவில்லை. பயன்படுவகை யிலும் சுருங்கச் செய்துவிட்டது. ஆரியமே இந் நாட்டின் பண்பாட்டு உயர்மொழியென்றும் கடவுள் மொழி என்றும் விளம்பரப்படுத்தப்பட்டு கல்வி, சமயம், கடவுள் வழிபாடு, சடங்கு முதலிய மக்கட்குப் பயன்படு துறைகளில் எல்லாம் ஆரியமே ஆட்சி பெற்றுவிட்டது ; தமிழகத்தில் பல்லவர் காலத்தில் அரசியலிலும் முதன்மைபெற்று ஆட்சி மொழியாகி விட்டது தமிழ் வீட்டளவில் சுருங்கிய முறையில் பயன்படுத்தப் பட்டாலும் அத்தமிழ் ஆரியமொழிச் சொற்களை மிகுதியாகக்கொண்டு விளங்கியது. அத் தமிழில் பேசுதலும் தம் உயர்நிலை சுட்டாது எனக் கருதினர். கலப்புத்தமிழைக் கண்டவர்கள் அதனை ஆரியத்தின் சிதைவுமொழி எனக் கருதினர். தமிழ்ப்

புலவர்களும் அவ்வாறே கருதினர் எனின் தமிழ் மொழி நிலையை என்னென்பது?

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. ஆட்சி மொழியும், கல்வி மொழியும், உரையாட்டு மொழியும் ஆங்கில மாகிவிட்டது. தமிழர்கள் ஆங்கிலம் ஒன்றையே கற்று, அதற்கே ஆக்கையும் ஆவியும் விட்டுத் தாங் களும் அயலவராகித் தமிழின் தொடர்பற்றுப் போனார்கள். தமிழில் உரையாடலும் தாழ்வெனக் கருதினர்.

இன்று நிலைமை மாறிவிட்டது; நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உரிமை வேட்கையும் எவருக்கும் உரிய இன்றியமையா இயல்புகள் ஆகிவிட்டன. ஆங்கிலேயர் ஆட்சியால் ஒரே மாநிலமாய் ஆளப்பட்ட இந்தியா மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு இன்று ஆளப்படுகின்றது. ஆட்சி மொழியும் கல்வி மொழியும் மாநில மொழிகளாகவே இருத்தல் வேண்டும் என்ற கொள்கை வெற்றிபெற்றுவிட்டது. தமிழ் நாட்டின் எல்லாத் துறைகளிலும் தமிழே பயன்படுமொழியாக இருத்தல் வேண்டும் என்பதை மறுப்பார் இலர். மொழி வளர்ச்சி என்பதும் மக்களுக்கு எல்லாத்துறைகளிலும் மொழி பயன்படு தலில்தான் சார்ந்துள்ளது. மக்கள் தொடர்பின்றி மொழி வளர்தல் ஏது? (It is quite wrong to think of a language as an ideal entity evolving independently of men and pursuing its own ends. Language does not exist apart from the people who think and speak it; its roots go deep into the consciousness of each one of us; thence it is that it draws the sustenance enabling it to blossom in speech. Vendryes - Language - Page 359.)

மக்களுக்குப் பயன்படும் முறையாலேயே மொழி வளர்கின்றது என்றாலும், அதன் வளமும் செழிப்பும் செறிவும் அதன் இலக்கியத்தினாலேயே பெறவேண்டியுள்ளது. ஒரு மொழியின் வளர்ச்சிப்போக்கில் மாறுதலுற்றுப் பிரிந்து சிதைந்து மறைந்து போகாமல் இருப்பதற்குத் துணைசெய்வது இலக்கியமே. மொழியிலிருந்து தோன்றுவது இலக்கியம்; இலக்கியத்தால் வளம்பெறுவது மொழி. ஆதலின் தமிழின் வளத்தைப் பெருக்குவதற்குத் தமிழில் இலக்கியங்கள் பெருகிக்கொண்டே இருத்தல் வேண்டும்.

இன்று தமிழ் நாட்டில் எழுத்தாளர்களும் புலவர்களும் பெருகி வருகின்றனர். மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் எனத் தம்மை அழைத்துக்கொண்டு சிலர் கட்டுரைகள் எழுதுகின்றனர்; பாடல்கள் இயற்றுகின்றனர். அவர்கள் தமிழிலக்கண மரபை அறியாமலும் தமிழிலக்கிய மரபைப் புறக்கணித்தும் கருத்துச்செறிவின்றி நடையழகு இன்றி எழுதிக் குவிக்க முற்படுகின்றனர். முன்னோர் எழுதிய இலக்கண இலக்கியங்களைக் கற்றாலன்றி நடையழகும் பொருட்செறிவும் பெறுதல் இயலாது.

( No writer will ever become a master of prose unless his style is rooted in the past. It is in the acknowledged masterpieces of the past that the manners of writing are learnt, and it is through acquaintence with them that words come to have a rich burden of associations beyond their precise meaning. Literature, both in the matter and in its manner, hands down a tradition and the writer who is not in touch with that traditions likely to be a parvenu both in his use of words and in his judgment of contemporary work — Robert Lynd. )

ஆற்றலின் எழுத்தாளராகவும் புலவராகவும் ஆக விரும்புவோர் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் பிற இலக்கியங்களையும் நன்கு கற்றல் வேண்டும். கற்றதன் பயனால் நல்ல இலக்கியங்களைப் படைக்க இயலும்.

இன்று தமிழ் நாட்டில் இலக்கிய வறுமை இனிதே ஆட்சி புரிகின்றது. பிற நாட்டார் தலைவணங்கும் இலக்கியங்கள் சில நூற்றாண்டு களாகத் தோன்றவே இல்லை. பிற துறைகளில் உண்டாகும் வறுமையைப் பிற நாட்டினர் துணை கொண்டு போக்கிக்கொள்ள இயலும். ஆனால் இலக்கிய வறுமையைப் போக்கப் பிற நாட்டினர் துணை பயன்படாது. இந்நாட்டில் உள்ளவர் களிடையே இனிய புலவர்கள் தோன்றுதல் வேண்டும். தோன்றும் புலவர்கள் தொல்காப்பியத் தைக் கற்று அதன் மரபினை அறிந்துகொள்ளுதல் வேண்டும். அறிந்து அகமும் புறமும் வண்ணமும் வனப்பும், நூலும் உரையும், ஆற்றுப்படையும் பாடாண் பாட்டும் மீண்டும் மலரச் செய்தலில் ஊக்கம் காட்டுதல் வேண்டும்.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட நூலாயினும் இன்னும் கற்பதற்குரிய நிலையிலே உள்ளது தொல்காப்பியம். அயல் மொழிகள் வந்தன; ஆட்சி புரிந்தன. ஆனால் என்றுமுள தென்தமிழை முழுதும் அழித்துவிட இயலவில்லை. சில பகுதிகளில் உருமாறி வேற்றுப் பெயர்களால் அழைக்கப்பட்ட போதிலும் தமிழின் அடிப்படை அமைப்பும் இயல்பும் மறைந்துவிட வில்லை. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

"பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந்து ஒழிந்து சிதையா உன்
சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே"

என்று கூறும் தமிழ் வணக்கத்தில் இக்கருத்தைத் தான் வெளிப்படுத்தியுள்ளார்கள். 'என்றும் உள தென் தமிழ்' என்று கம்பர் கூறியதும் இதனாலேயாம்.

தமிழை என்றும் உளதாகச் செய்வதற்கு அதனை மக்களுக்குப் பயன்படும் மொழியாக ஆக்குதல் வேண்டும். பயன்படு மொழியாகுங்கால் வீட்டிலும், ஊரிலும், நகரத்திலும், நாட்டிலும், உலகத்திலும் அதனை விரும்பிக் கற்குமாறு செய்தல் வேண்டும்.

இன்று அது நாட்டுமொழியாகும் நிலையை அடைந்துள்ளது. அஃதாவது நாட்டாட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உயர் கல்வி கற்கும் ஊடுமொழி (Medium of instruction) யாக இன்னும் ஆகவில்லை. அறிவியற் கலைகளும் பிறவும் தமிழால் கற்பிக்க முடியாது என்று இன்னும் தமிழர்களே ஐயுறுகின்றனர். தமிழால் ஆளமுடியாது என்றனர். பல்லாயிரம் ஆண்டுகளாகப் பலரும் புகழ நாடாண்ட தமிழ், ஏன் ஆளமுடியாது என்று கேட்டு இன்று ஆளத்தொடங்கியுள்ளது. அதுபோல பல கலைகளும் வளர்வதற்குக் கருவியாய் இருந்த தமிழ் அறிவியற் கலைகளுக்கும் மனித இயல் கலைகளுக்கும் ஏற்ற ஊடுமொழியாக அமையும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

தமிழர் தமிழால் எல்லாவற்றையும் கற்கும் போதுதான் உண்மையான கல்வியைப் பெற்ற

வரீவார். அவ்வாறு கற்காத காரணத்திலுல்தான் இந்நாட்டில் அறிவியற் பேரறிஞரும் கலையியற் பேரறிஞரும், இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலத்தைக் கற்றும் தோன்றும் நிலை ஏற்படவில்லை தாய்மொழி வாயிலாக உயர் கல்வியைக் கற்ற நாட்டில் ஆங்கிலத்தின் உதவியின்றியே உலகம் போற்றும் உயர் அறிஞர்கள் தோன்றியுள்ளனர். ஆதலின் ஆங்கிலம் அகன்ருல் அறிவியல் வளராது என்ற தவருன எண்ணம் நம்மை விட்டு அகலுதல் வேண்டும். பிற நாடுகளைப் போன்றே நம்நாடும் எல்லா நிலைகளிலும் நம்மொழியைப் பயன்படுத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் நம் தமிழ் என்றுமுள—எதற்கும் பயன்படுமொழியாக இலங்கும்.

தமிழ் அவ்வாறு தொல்காப்பியர் காலத்தில் விளங்கியது. தொல்காப்பியர் காலத்துத் தமிழ் மிகவும் வளம்பெற்று இருந்தது. அதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றது தொல்காப்பியம். தொல்காப்பியத்தால் மொழி நிலை — இலக்கியநிலை மட்டுமன்று; அக்கால மக்கள் நிலையும் அறியலாகும். இவ்வாராய்ச்சி நூல் தொல்காப்பியர் கால மொழியின் சிறப்பையும் இலக்கியவளச் சிறப்பையும் எடுத்துக் காட்டும். தொல்காப்பியர் கால மக்கள் வாழ்வு பற்றித் தனியாக ஒரு நூலில் ஆராய எண்ணியுள்ளோம். தமிழ் மக்கள் வரலாறு அறிவதற்குத் தமிழ் மொழியும் இலக்கியமும் பெருந்துணையாக உள்ளன. பண்டைத் தமிழ் மக்கள் வரலாற்றை அறிவதற்கு இவையன்றிப் பிற சான்றுகளை நாம் பெற்ருேம் இல்லை. எனவே தமிழக வரலாற்றின் முதற் பகுதியே இந்நூல் எனக்கொள்ளுதல் தகும்.

# குறிப்பு அகராதி

*(எண்கள் பக்கங்களைக் குறிப்பன)*


## அ

அகத்திணையியல் 129
அகத்தியம் 17
அகத்தியர் 15, 16
அகப்பொருள் 149
அகம் 129, 130, 212
அங்கி 184, 185
அசைநிலை 117
அசையெழுத்து 58, 75, 118
அசோகன் 38, 45
அடிமறி 117
அண்ண இனம் 67
அதங்கோட்டாசான் 17, 18
அதர்வணம் 18, 19
அந்தணர் 66
அம்மை 271
அய்யன் 50
அரங்காச்சாரியார். வி. 31
அவை அடக்கியல் 265
அவ்வை 50
அளபெடை 62, 63, 72
அழகு 271
அறத்தொடு நிற்றல் 204
அரைவுயிர் 68
அந்தாதி 272

## ஆ

ஆங்கில எழுத்துக்கள் 47
ஆங்கில நூலார் 129
ஆங்கிலம் 41, 51, 53
ஆங்கிலேயர் 224
ஆசுரம் 155
ஆடி 137
ஆண்டு 136
ஆபர்குரோம்பி 201
ஆயர் 140
ஆய்தத்தொடர் 78
ஆய்தம் 49, 61
ஆராய்ச்சிக் கல்வி 195
ஆரிடம் 154
ஆரியம் 26, 42, 44, 51, 116
ஆரிய நெடுங் கணக்கு 42
ஆரிய மொழி 19, 26, 27, 41, 54
ஆரியர்கள் 27, 30, 31, 66
ஆவணி 137

## இ

இசை இயல் ஒலிக்கும் முறை 69
இசைத் தமிழ் 49
இசை நுணுக்கம் 17
இடைச் சொல் 112, 113, 114
இடைத் தொடர் 78
இதழ்ப் பல்லினம் 68
இத்தாலி 41
இந்தி 97
இந்திய மொழிகள் 45
இந்திரன் 20, 135
இந்தோ-ஐரோப்பிய மொழிகள் 85
இமயம் 66
இயக்குநர்கள் 240
இயற்சொல் 116
இயைபு 272
இரவுக்குறி 168

இராகவ ஐயங்கார் மு. 182
இராகவ ஐயங்கார் இரா. 20
இராக்கதம் 155
இராமன் 116, 221
இருக்கு 18
இலக்கியம் 123, 125, 126, 127, 141, 146, 148, 149, 204
இலக்கியப் படைப்பு 124
இலக்கிய இலக்கணம் 124
இலக்கிய மரபு 163
இலக்கிய விளக்க நூல் 124
இலக்குவன் 29
இலங்கை 221
இலோவெல் 264
இளங்கோவடிகள் 20, 132
இளம்பூரணர் 99
இழைப்பு 273
இறைச்சி 208, 209
இற்பரத்தை 187

ஈ

ஈரெழுத்து ஒருமொழித் தொடர் 78

உ

உடன்படு மெய்கள் 73, 74
உடன்பாட்டு வினை 106
உடன்போக்கு 179
உயர்பொருட் பேறு 253, 256
உயர்ந்தோர் 144
உயிர் எழுத்துக்கள் பிறக்கும் முறை 67
உயிர் ஒருவகைப் படுதல் 71
உயிர்த் தொடர் 78
உயிர் நூல் 142
உரி 84, 133
உரிச்சொல் 108, 113
உரிப் பொருள் 139
உருபியல் 76
உருசுவெல்ட் 221
உருசோ 234
உரைமொழி 115
உரையாசிரியர்கள் 50, 135, 144, 145, 193, 195
உலகக் கண்ணோட்டம் 134
உலக முதன்மொழி 37
உவம இயல் 128
உவம உருபு 13
உவமம் 150
உழிஞை 220
உள்ளுறை உவமம் 150, 152, 249

ஊ

ஊடல் 139
ஊழ்வினை 162

எ

எகிப்தியர் 126
எகிப்து 142
எச்சவியல் 115
எச்சவினை 105
எடுத்தலோசை 75
எதிர் மறைவினை 106
எல்லிசு 39
எழுத்தமைப்பு முறை 46
எழுத்திலக்கணம் 55
எழுத்து 64
எழுத்துப் படலம் 93
எழுத்துப்பேறு 74
எழுத்து முறை 38
எழுவாய் வேற்றுமை 94
எற்பாடு 136

ஏ

ஏவலர் 141
ஏவல் வினை 106

ஐ

ஐந்திணை 130, 132
ஐந்திரம் 17, 19, 23, 24 25, 27, 31
ஐந்திர வியாகரணம் 20
ஐம்பால் 50
ஐயர் 66, 181, 182
ஐரிஷ் 97
ஐரிஷ்காரர் 51
ஐரோப்பிய மொழிகள் 79

ஒ

ஒப்பினது வகை 160
ஒலிகள் 80
ஒலிப்பு உகரம் 79
ஒலி மாற்றம் 70
ஒலியிடைமாறுதல் 71
ஒலி வடிவம் 36, 40, 45
ஒலிவரி வடிவங்கள் 39
ஒஸ்டியாக் 97

ஓ

ஓத்து 195
ஓரின ஒலிகுன்றல் 71
ஓவியம் 126

க

கடவுட் கொள்கை 136
கணபதி 135
கந்தருவர் 184, 185
கந்தழி 232
கரணம் 172, 176
கரு 133
கருப்பொருள் 137
கலம்பகம் 272
கல்வி முறை 192
களவியல் 128
களவு 152, 153
கற்பியல் 128
கற்பில் கூற்று 183
கம்பர் 284
கன்னன் 117
காடுறை உலகம் 133, 134
காட்சி 216
காத்தியாயனர் 21
காந்தருவம் 155
காமக்கிழத்தி 187
காரல்மார்க்சு 234
கால்கோள் 216
கால்டுவெல் 37, 39, 42, 68, 74, 80, 88, 90, 91, 92, 106, 107, 279
கிளவியாக்கம் 83
கிரீசன் 68
கிளை மொழி 116
கிரேக்கர் 129
குமரி ஆறு 9
குமரி மலை 9, 289
குமரி நாடு 9
குறிக்கோள் 125
குறித்து வருகிளவி 72
குறிப்பு வினை 94, 108
குறில் எழுத்து 47
குறுக்கல் 118
குறைச் சொற்கிளவி 107
குற்றியலுகரப் புணரியல் 75

குற்றியலுகரம் 49, 61, 78, 79
குற்றெழுத்துக்கள் 48
கூழைப் படை 224
கைக்கிளை 130
கொடி நிலை 232
கொடுந்தமிழ் 116
கொண்டுதலைக் கழிதல் 143
கொற்ற வள்ளை 233

ச

சங்க இலக்கியம் 54
சமதக்கினி 15, 16
சமசுகிருதம் 41
சர்குடின் 97
சர்ச்சில் 221
சாதிகள் 179
சாத்திரி 182
சாம வேதம் 18
சாரியை 74
சார்பெழுத்து 60
சித்தியமொழி 97
சித்திரை 137
சிறப்புக் கல்வி 193
சிறு பொழுது 136
சினை வினை 106
சுடாலின் 221
சுண்ணம் 117
சுந்தரம் பிள்ளை 283
சுந்தரனார் 115
சுப்பிரமணிய சாத்திரியார் 18, 63, 90, 91, 100, 105, 114, 115
சுப்பிரமணிய பிள்ளை கா. 20
செங்குட்டுவன் 20
செயப்பாட்டு வினை 106, 108
செய்யுள் இயல் 260
செய்யுள் மொழி 200
செர்மன் 41, 53
செவியறியுறூஉ 234
செவியுறை 266
சேக்கிழார் 163, 278
சேயோன் 135
சேரிப்பரத்தை 187
சேனாவரையர் 96, 99, 100

ஞ

ஞண்டு 57
ஞமலி 57
ஞாலம் 57

த

தடுமாறு புணர்ச்சி 71
தத்தர் 19, 31
தமிழ் எழுத்துகள் 28
தமிழ் நெடுங்கணக்கு 42, 45, 50, 51
தமிழ் மறை 148
தமிழ் மொழி நூலார் 50
தமிழக வரலாறு 127
தலைவகாரம் 18
தழிஞ்சி 219
தாத்தாரி 97
தரர்ப்படை 224
திசைச் சொல் 116
திணை தொறும் மரீஇய பெயர் 140
திராவிட மொழிகள் 37, 39, 108
திருமங்கையாழ்வார் 149
திருமணச் சடங்கு 177, 182
திருவள்ளுவர் 145, 186, 203
திருவாசகம் 54

தும்பை 221
தூசிப்படை 224
தெய்வம் 137, 138, 154
தெலுங்கு 79
தென்குமரி 11, 136, 181
தேவாரம் 54
தை 137
தைத்திரியம் 18
தொகைச் சொற்கள் 118
தொன்மை 271
தொன்மொழிப் புலவர் 272
தோழியிற் கூட்டம் 168
தோல் 272

ந

நச்சினார்க்கினியர் 17, 18, 19, 58, 99, 130, 136, 144, 146, 157, 161, 163, 164, 172, 182, 184, 186, 194, 195, 212, 221, 226, 231
நரம்பின் மறை 49
நரம்புக் கருவி 49
நற்றாய் 143, 202, 203
நன்னூலார் 98, 100
நன்னூல் 22, 23, 48, 88, 90, 97, 98, 100
நாலாயிரப்பிரபந்தம் 18
நால்வகை வருணம் 145
நாவலர் பாரதியார் 225, 230 231, 232, 233
நாவினம் 67
நாழிகை 136
நாழிகை வட்டில் 137
நான்மறை 17, 18, 19
நிருத்தம் 114
நிலநூல் 142
நிலைமொழி 71, 74, 77
நிலந்தருதிருவின் பாண்டியன் 17
நிறுத்த சொல் 72
நீர்ப்படை 216
நூல் மொழி 115
நெஞ்சொடு கிளத்தல் 203
நெடிற்றொடர் 78
நெடுங்கணக்கு 41, 42
நெடுமொழி 218, 219
நெய்தல் 132, 133

ப

பகற்குறி 168
பங்குனி 137
பட்டினப்பாலை 244
படுத்தலோசை 75
பரசுராமர் 15
பரணர் 20
பரத்தமை 192
பரத்தையர் 151
பரவையார் 163
பல்லினம் 68
பவணந்தியார் 44, 47, 57, 63. 88, 90, 92, 93, 95, 96, 97, 102
பனம்பாரனர் 16, 17, 27, 181
பாங்கற் கூட்டம் 168
பாட்டு 210
பாணினி 21, 23, 31, 114
பாணினீயம் 20, 24
பாண்டியன் மாகீர்த்தி 17
பாயிரம் 17
பாரத நாடு 54
பாரி 241, 242
பாலைவனக் கப்பல் 253
பிண்டம் 219

பிரசா பத்தியம் 154
பிரம்மம் 154
பிராமணர் 146, 182
பிரெஞ்சு 41, 53
பிரௌனிங்கு 264
பிறப்பியல் 66
புத்தர் 31
புரட்டாசி 137
புராண நூல் 135
புலுதம் 63
புள்ளி மயங்கியல் 77
புறத்திணை 212
புறத்திணையியல் 212
புறம் 212
புறநிலை வாழ்த்து 265
பூங்கா 197
பூத புராணம் 17
பூப்பு 191
பெயின் 234
பெரிய திருமடல் 149
பெருந்திணை 130, 131
பெரும் படை 216
பெரும்பொழுது 136
பெர்னுட்சா 51
பேச்சியல் ஒலிக்கும் முறை 69
பேராசிரியர் 236, 237
பைசாசம் 155
பொதுக் கல்வி 192
பொதுவுடைமை 208
பொருட்படலம் 125
பொருளொடு புணர்தல் 118
பௌடிகம் 18

ம

மகரக்குறுக்கம் 47
மடலேறல் 148
மணிமேகலை 272
மதியுடம் படுத்தல் 169
மரபியல் 128, 248
மருத்துவம் 193
மரூஉ மொழிகள் 73
மலையாளம் 79, 102, 116
மறை 66
மறையோர் 154
மாக்சுமுல்லர் 21
மாத்திரை 47
மாசி 137
மாபாரதம் 156
மாபுராணம் 17
மாயோன் 135
மாராயம் 218
மார்கழி 137
மிடற்றினம் 67
முதல் 49, 106. 133
முதல் வேற்றுமை 90
முத்தொள்ளாயிரம் 272
முந்நீர் 147
முருகன் 46, 135
முல்லை 132, 133
முன்னிலைப் பெயர் 86
முன்னிலை வினை 105
மூக்கினம் 69
மூவேந்தர் 213
மெக்காலே 234
மெய் எழுத்துக்கள் 47
மெய் எழுத்துக்கள் பிறக்கும் வகை 57
மெய் ஒன்றுதல் 70
மெய் பிறிதாதல் 72
மெய்ப்பாட்டியல் 128, 236
மெய்யறிவு நூல் 142
மென்தொடர் 78

மேல்நாட்டுப் பெரியார் 190
மொழி இடைதோன்றல் 70
மொழி இறுதி எழுத்துக்கள் 58
மொழி இறுதி தோன்றல் 71
மொழி முதல் எழுத்துக்கள் 55
மொழி முதல் தோன்றல் 70
மொழி நூல் 124

ய

யசு 18
யாசுகர் 114
யாப்பிலக்கணம் 142
யாமம் 176
யாழ் 49, 138
யோவான் 83

வ

வஞ்சி 217, 218
வட இந்தியா 9
வட எழுத்து 29
வட சொல் 29, 116, 138
வடமொழிச் சொற்கள் 53
வண்ணங்கள் 269
வரி வடிவம் 36, 41, 46, 53, 61
வருண வேறுபாடுகள் 179
வண்ணங்கள் 269
வருணன் 135
வரு மொழி 77
வரைதல் 174
வரைவில் மகளிர் 174, 189
வர்ணம் 158
வல்லின மெய் 79
வழக்கு 48
வழக்கு மொழி 200
வள்ளி 232
வள்ளுவர் வாய்மொழி 160
வன்தொண்டர் 63
வன்தொடர் 78
வாகை 224
வாயில் 188
வாய்பாடுகள் 107
வாயுறை வாழ்த்து 234, 265
வாரம் 136
வாழ்வரசி 177
விரவுப் பெயர் 86
விருந்து 272
விளி மரபு 89,102
வினை முதல் 94
வீடணன் 117
வீரமாமுனிவர் 47
வெண்டிரீசு 41, 85
வேண்டிய கல்வி 194
வேதம் 195
வேதவியாசர் 18, 19
வேதாந்தம் 194
வேர்ச்சொல் 108
வேறினப் படுதல் 71
வேற்றுமை இயல் 89
வேற்றுமைத் தொகை 93
வேற்றுமை மயங்கியல் 89
வேற்று மொழி 115
வைசிகன் 249
வையாபுரிப் பிள்ளை 21, 22, 24